# தமிழரசு

திங்கள் இருமுறை பிப். 16-1972 35 காசு



# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



# தமிழரசு

மலர் 2] 16—2—1972 [இதழ் 16



## இந்த இதழில்

பேறு (கவிதை)
கடவுளைக் கண்டேன்
அதிசயக் கிச்சிலி
வெண்பாப் போட்டி
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
இராமநாதபுர மாவட்டச் செய்தித் தொகுப்புகள்

### முதல்வரின்

தமிழால் வளர்ந்தோம்
தமிழை வளர்ப்போம்!



### முகப்பில்

இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த மண்டபத்திலுள்ள அரசு படகு கட்டும் நிலையத்தில் உருவாகும் படகுகளின் அணிவகுப்புக் காட்சி.





# தமிழால் வளர்ந்தோம் தமிழை வளர்ப்போம்!

முதல்வர் டாக்டர் கலைஞர்

தமிழை வளர்க்க வேண்டும். அதனுடைய வலிவை, பொலிவை நாடு அறியச் செய்ய வேண்டும். தமிழால் வளர்ந்தவர்கள் நாம்—தமிழால் செழித்தவர்கள் நாம்—அந்தத் தமிழை வளர்ப்பதிலும் செழிக்க வைப்பதிலும் நமக்கு நீங்காத கடமை உணர்ச்சி உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாக, ஆளுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களுக்குப் பின் அவர் வழி நின்று அவரது பொன்னான கொள்கைகளை நிறைவேற்றச் சூளுரைத்துச் செயல்படுகின்ற நாங்களும் எங்களால் இயன்ற அளவு தமிழைத் தமிழகத்திலும், வேறு பிற இடங்களிலும் பரப்புவதற்கு முனைந்து முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதற்கு ஒரு சிறு எடுத்துக் காட்டாகத்தான் பல நாட்களாக ''ஃபோர்ஷோர் எஸ்டேட்'' என்று அழைக்கப்பட்டபகுதி "பட்டினப் பாக்கம்" என்ற புதிய—அல்ல—பழைய தமிழ்ப் பெயரைப் பெற்றதாகும்.

பாக்கங்கள் என்பது தமிழ் நாட்டில் பண்டை நாட்களில் மக்கள் வாழ்கின்ற குறிப்பிட்ட பகுதிக்கு வைக்கப்படுகின்ற பெயர்களாகும்.

குப்பங்கள் என்றும்—பாக்கங்கள் என்றும் அந்த நாளில் தமிழர்கள் தாங்கள் வாழுகிற இடங்களுக்குப் பெயர்களை அமைத்துக் கொண்டார்கள். பெரும்பாலும் கடற்கரை ஓரங்களில் வாழுகிற தமிழ்ப் பெருங்குடிமக்கள் அப்பகுதியைப் பாக்கம் என்றே அழைத்தார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில்—மருவூர்ப்பாக்கம் என்ற அழகிய தமிழ்ச் சொல் அப்பகுதியில் கடற்கரையோரத்தில் மக்கள் வாழுகிற பகுதிக்கு இடப்பட்டிருந்ததைச் சிலப்பதிகாரம் மூலம் அறியலாம்.

ஆகவே கடற்கரைப் பகுதியில் இருக்கிற பகுதிக்குப் பட்டினப் பாக்கம் என்னும் பெயரை வைப்பது, சொல் பொருத்தம் என்று இந்த அரசு கருதுகிறது. பலபேர், இது. புரியுமா, என்று கேட்டனர் இது, வாயில் நுழையுமா? என்று சிலர் வினா எழுப்பினார்கள். வழக்கத்திற்கு இது வருமா? என்றார்கள்.

அதைப் போலவே கெல்லிஸ், கிள்ளியூர் ஆகியது. பாரிஸ் பாரிமுனை ஆகியது. இதெல்லாம் இன்று வழக்கத்திற்கு வந்து விட்டன. இதுபோலவே மற்ற இடங்களின் பெயர்களையும் மாற்றிட வேண்டும் என்கிற எண்ணம் இன்றையத் தினம் மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தமிழுக்குப் பொற்காலம் ஒன்றிருந்தது. அதன் பிறகு கற்காலம்—அது நாம் தமிழைக் கவனிக்காமலிருந்த காலம். இப்போது மீண்டும் தமிழுக்குப் பொற்காலம் வந்து விட்டது.

குழந்தையைக் கோகிலமே என்று கொஞ்சு— மழலையை மாணிக்கமே என்று கொஞ்சு என்று தாயிடத்திலே சொல்லுவது எவ்வளவு நகைப்பிற்குரியதோ, அதே போன்றதுதான் தமிழனிடம் தமிழை ஓம்பு, தமிழைக் காப்பாற்று என்று கூறுவதுமாகும்.

முத்தமிழ், முக்கடல், மும்முரசு என்றெல்லாம் பழம் பெருமையை நாம் அவனிக்குச் சொல்லிச் சொல்லி வீங்குபுகழ் பெற்ற நாடு நம்முடைய நாடு என்ற அந்தப் பழம் பெருமையை நாம் கொண்டிருக்கிறோம். ஆனால் பேசுவதோடு விட்டால் நம்முடைய தமிழ் வெறும் காப்பியத் தமிழாக- இலக்கியத் தமிழாக- செய்யுள் தமிழாக-இந்த அளவோடு முடங்கி விட்டால் போதாது என்பதற்காகத்தான் தமிழ் பயிற்று மொழியாக வர வேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

தமிழில் விஞ்ஞானச் சொற்கள் வந்தாக வேண்டும். அறிவு உலகில் விரைந்து நடைபோடக் கூடிய அளவில் தமிழில் புதிய புதிய சொற்கள் வளர்ந்தாக வேண்டும்; அவைகள் கண்டு பிடிக்கப்பட்டாக வேண்டும்.

ஆங்கிலம் என்றால் —உலகத் தொடர்புக்கு—அனைத்து நாடுகளின் தொடர்புக்குத் தேவை. அதே நேரத்தில் நம்முடைய நாட்டில் நம்முடைய தாய் மொழி வளர்ந்திடல் என்பது இன்றியமையாத ஒன்று. ஆகவே தான் இன்றிருக்கின்ற ஆட்சியின் கட்சி, ஆளுகிற அரசின் கட்சி இருமொழிக் கொள்கையை வலியுறுத்துகிறது.

நமது மாநிலத்தில் தேவையானது தமிழ். மற்ற மாநிலத்தோடு தொடர்பு கொள்ளவும், பிற நாடுகளோடு தொடர்பு கொள்ளவும், அனைத்து உலகிற்கும் தேவையானது ஆங்கிலம்.

ஆகவே, இந்த இரண்டு மொழி போதும் என்கிற வலிமை மிகுந்த வாதத்தை நமது தமிழக அரசு எப்போதும் எடுத்துச்சொல்லிவருகிறது.

சிலர் வாதிடுகிருர்கள்.

தமிழ்நாட்டுக்குத் தமிழ்—

இந்தியாவிற்கு இந்தி—

அனைத்து உலகிற்கு ஆங்கிலம் என்று வாதிடுகிருர்கள்.

வாதிடுவது சுலபம்; ஏனென்ருல் வாதிடுபவர்கள் அவைகளைப் புதிதாகக் கற்றுக் கொள்ளப் போவதில்லை. அவைகளெல்லாம் இளம் தலைமுறையினரின் தலைகளில் சுமத்தப்படுவதை நாம் மறந்து விடக்கூடாது.

தமிழ், இந்தி, ஆங்கிலம்— இந்த மூன்றையும் இளம் குழந்தைகள் படித்திட வேண்டும்— அவர்களுடைய மூளையில் திணிக்கப்பட்டாக வேண்டும் என்ற முயற்சியை நாம் மேற்கொள்ளுவோமேயானுல் யாருக்கு அதில் அதிகப் பயன் ஏற்படுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இரண்டு மொழி தான் படிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இருந்து கொண்டு மொழிப் பிரச்சினையால் பதவிகளைப் பறிகொடுத்த ஒரு வயதான பெரியவர், தான் இனி மேல் படிக்கத் தேவையில்லை என்றுகருதி, இந்தி இந்தியாவுக்கு —தமிழ் தமிழ் நாட்டுக்கு—ஆங்கிலம் அகில உலகத் தொடர்புக்கு என்று பேசுகிற நேரத்தில் தமிழ்நாட்டிலிருக்கிற நம் வீட்டுப் பிள்ளைகள் நம் மாநிலப் பயனுக்காகத் தமிழையும், இந்தியத் தொடர்புக்காக இந்தியையும், அகில உலகத் தொடர்புக்காக ஆங்கிலத்தையும் ஆக மூன்று மொழியைப் படிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகிருர்கள்.

அதே நேரத்தில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிற உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ, பீகாரைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ படிக்க வேண்டியது தனது தாய்மொழியான இந்தி; அடுத்தது ஆங்கிலம். இரண்டே மொழிதான். அதோடு அவர்களுடைய சுமை முடிகிறது.

நம்முடைய பிள்ளைகள் மூன்று மொழிகளைப் படித்து, இரண்டு மொழி படித்தவர்களோடு போட்டி போட வேண்டி யிருக்கிறது.

தாய்மொழியான இந்தி மொழியைப் படிக்கிறவர்களோடு நாம் பிற மாநில மொழியான இந்தியைப் படித்துப் போட்டி போடவேண்டியிருக்கிறது.

இதைச் சொன்னுல், அனைத்துலகத்திற்கு ஆங்கிலம் இருப்பதைப் போல—தமிழ் நாட்டிற்குத் தமிழ் இருப்பதைப் போல—பிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ள இந்தி வேண்டாமா என்று கேட்கிருர்கள்.

ஒரு வேடிக்கையான கதை, ஒரு பெரிய விஞ்ஞானியின் வீட்டில் நடைபெற்றதாகச் சொல்லுவார்கள்.

அந்த மகத்தான விஞ்ஞானி ஓர் அழகான பூனை வளர்த்தான். அது உள்ளே வந்து போவதற்காகக் கதவில் ஒரு பெரிய ஓட்டையைச் செய்தான். அந்தப் பூனையும் அதன் வழியே வந்து போய்க் கொண்டிருந்தது. சில நாளில் அந்தப் பூனை ஒரு குட்டி போட்டது.

அந்தப் பெரிய விஞ்ஞானி, பெரிய துவாரத்தினருகே இன்னெரு சிறிய ஓட்டையைப் போட்டான். இது எதற்காக? என்றனர் அவனுடைய நண்பர்கள்.

'குட்டி வந்து போவதற்காக' என்ருன் அந்த விஞ்ஞானி.

பூனைக்காக உள்ள பெரிய ஓட்டையிலே குட்டியும் வந்து போக முடியாதா என்று அவர்கள் கேட்ட பிறகு தான், 'ஆகா, இந்த யோசனை நமக்கில்லாமல் போயிற்றே, என நினைத்தானும் அந்த விஞ்ஞானி.

அதைப் போல அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் பொது மொழி என்ருல், பக்கத்திலிருக்கிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ளவும் அந்த ஆங்கிலம் போதுமா, போதாதா ?

பூனை போகிற அந்தத் துவாரத்தில் அதன் குட்டியும் போகுமா, போகாதா? இதுதான் இன்று நாம் எழுப்புகிற வாதம். இந்த வாதத்தை அவர்களும் புரிந்து கொண்டிருக்கிருர்கள். ஆனுல், ஏற்கனவே சொல்லிவிட்டோமே, இந்தி இந்தியாவில் இருக்க வேண்டும் என்று, அதிலிருந்து எப்படிப் பின் வாங்குவது என்ற சங்கடம்.

இரண்டாவதாக, இரு மொழி போதுமென்று சாதாரணமானவர்கள் சொல்கிருர்களே, அதைக் கேட்பது நம்முடைய கௌரவத்திற்கு இழுக்காகும் என்று நினைப்பதால்தான் இன்று மீண்டும் இந்தி நுழைக்கப்பட



வேண்டும் என்று கருதுகிருர்கள். அவர்களுடைய முயற்சிகள் வலிவு பெறுவதற்கான வேலைகள் இன்று நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய சமுதாயத்திற்கு, நம்முடைய, மொழிக்கு மொழி உரிமைக்குத் தங்களுடைய எதிர்காலத்திற்கு ஏற்படவிருக்கின்ற அந்த விபத்துக்களை யெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

# சென்னையில் குடியரசு நாள் விழா



"நான் ஏழெட்டு வருசமா குடியரசுநாள் ஊர்வலம் பார்த்துக்கிட்டு வர்றேன். இந்த வருசம் போல இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பார்த்ததில்லை.''

''உண்மைதான். விமான அணி வகுப்பு என்று செய்தி வந்ததாலே இருக்கலாம்.''

"நாம பாகிஸ்தானை முறியடிச்ச வெற்றியிலே உண்டான பெருமையும் காரணமா இருக்கலாம். எல்லாவற்றையும் விட நமது அரசாங்கம் செஞ்சிருக்கிற ஏற்பாடுகள் பிரமாதம்''

"எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற உரிமையை நமக்குத் தந்த நாளாச்சே இது.... அப்பாடா நாமதான் ஆறு மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்பிட்டோம்னு நினைச்சேன் ..நமக்கு முன்னாலே எவ்வளவு கூட்டம்!''

இந்த உரையாடல் குடியரசு நாள் விழா அணிவகுப்பைப் பார்க்க வந்த இரண்டு பெரியவர்களுடையது.

அவர்கள் பேச்சு எவ்வளவு உண்மை! இதுவரை சென்னை நகரில் நடைபெற்ற குடியரசு நாள் விழாக்களில் இவ்வளவு பெரிய மக்கள் திரளை யாரும் கண்டதில்லை.

சென்னை தெற்குக் கடற்கரைச் சாலையிலிருந்து கோட்டை வரை இருமருங்கிலும் மக்கள் வெள்ளம்.

சென்னைக் கடற்கரையில் உள்ள காந்தியடிகள் சிலை அருகே குடியரசுநாள் விழா அணிவகுப்பை ஏற்றுக்கொள்ள வருகைதந்த ஆளுநரை முதல்வர் கலைஞர் அவர்களும் தலைமைச் செயலாளரும் வரவேற்றார்கள்.

முதல்வர் அவர்கள் சென்னையிலுள்ள முப்படைத் தலைவர்களையும் மாநிலக் காவல் துறை அதிகாரிகளையும் ஆளுநருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆளுநர் நாட்டுக் கொடியை ஏற்றி வைத்த பின்னர் மரபியல் அணிவகுப்புத் தொடங்கியது.

முதலில் அணிவகுப்புத் தளவாய் செல்ல, பின்னால் படைப் பிரிவுத் தளவாய்கள் சென்றனர்.

சென்னைப் படையணித் தளம், உள்நாட்டுப் படை, இந்தியக்





கடற்படை, இந்தியவான் படை, கடற்படை, கடலோரப் பிரிவு, முன்னாள் படைஞர், குதிரைப் படைக் காவலர், சென்னை மாநகரக் காவலர் படை பாண்டு, சென்னை மாநகரக் காவலர் படை, தமிழ்நாடு சிறப்புக் காவலர் படைகள், ரயில்வே பாதுகாப்புப்படை, தேசிய மாணவர் படையின் கவச வண்டித் தொகுதி, தேசிய மாணவர் படையின் பீரங்கி வண்டித் தொகுதி, சென்னைப் படையணித்தளம், தேசிய மாணவ மாணவியர் படைகளின் பல பிரிவுகள், ஊர்க்காவற் படையின் பல பிரிவுகள், சிரணியினரின் பல பிரிவுகள், செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படை, பாரத சாரணர், சாரணீயர் படைகள், கடல் சாரணர்-சாரணீயர் படைகள், திருத்தப் பள்ளி மாணவர் படைகள், தீயணைப்புப் படை போன்ற பல படைப் பிரிவுகள் அணிவகுத்துச் சென்றன.

அந்தப் படைகளைத் தொடர்ந்து இந்திய விமானப்படையின் ஹார் வார்டு விமானங்கள் ஆறும், எச். டி. ஜெட் விமானங்கள் ஆறும் அணிவகுத்துச் சென்றன.

நாட்டினைக் காத்திட இன்னுயிர் ஈந்த ஆற்றல் மறவர்களுக்கு அரசு அளிக்கும் சலுகைகளை விளக்கும் பொதுத்துறை அலங்கார ஊர்தி முன் செல்ல, ஊர்திகளின் அணிவகுப்புத் தொடங்கியது.

பொதுத்துறை ஊர்தியைத் தொடர்ந்து, செய்தி-மக்கள் தொடர்புத் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, சென்னை மாநகராட்சி, கல்வித்துறை, தமிழ்நாடு மின் வாரியம், வேலைவாய்ப்பு-பயிற்சித்துறை, மீனளத்துறை, வனத் துறை, கைத்தறி நெசவுத் துறை, அரிசன நலத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறையின் இரண்டு ஊர்திகள், இந்திய விமானப்படையின் 'நாட்விமானம்', நெடுஞ்சாலை [illegible] பணித்துறை, வீட்டுவசதி வாரியம், தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில்துறை, கதர் கைத்தொழில் வாரியம், காவல் துறையின் இரண்டு ஊர்திகள், பொதுப்பணித்துறை, ஊர் வளர்ச்சி - உள்ளாட்சித்துறை, சிறுசேமிப்புத் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், போக்குவரத்துத் துறை, கால்நடை மருத்துவம், ஆராய்ச்சித் துறை, குடிநீர் வடிகால் துறை, மகளிர் நலத்துறைகளைச் சேர்ந்த அலங்கார ஊர்திகள் அணிவகுத்துச் சென்றன.

பனிமலை அருகே பகைவனின் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய 'கன்னர்' ஆறுமுகத்தின் வீரச் செயலை விளக்கும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் ஊர்தி முதல் பரிசும், கைத்தறி நெசவுத்துறையின் ஊர்தி இரண்டாவது பரிசும், காவல் துறையின் ஊர்தி மூன்றாவது பரிசும் பெற்றன.


நமது கோரிக்கை

முதல்வர் கலைஞரின் சட்டப்பேரவை மேலவைப் பேருரை இந்த இதழுடன்

இலவச இணைப்பு

# பாண்டிய மண்டலத்தில்

## பாண்டியன் போக்குவரத்துக் கழகம்

தமிழக அரசு பல துறைகளிலும் புரட்சிகரமான மாறுதலைச் செய்து வருகிறது என்பது உலகறிந்த உண்மை.

பல தொழில்களை—மக்களுக்குப் பயன்படும் தொழில்களை—நாட்டுடைமையாக்குவதில் தமிழக அரசு முன்னணியில் நிற்கிறது.

பள்ளிப் பாடப் புத்தகங்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தில் தமிழக அரசு பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. அதைப்போலவே பேருந்துகளை நாட்டுடைமை ஆக்குவதிலும் வெற்றிநடை போட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போது 75 மைல் தொலைவுக்கு மேல் உள்ள பேருந்துத் தடங்களை அரசுடைமை யாக்கி, ஒரு புரட்சிகரமான நடவடிக்கையை நிறைவேற்றினார்.

அவரது மறைவுக்குப் பின் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களும், நாட்டுடைமையாக்கும் திட்டங்களில் மிகுந்த நாட்டம் உடையவராகத் திகழ்கிறார்; 10 பேருந்துத் தடங்களுக்கு மேல் வைத்திருக்கும் தனியாரின் பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, புதிய 'வரலாற்றை உருவாக்கும்போது பழைய வரலாற்றையும் அவர் மறப்பதில்லை. அதன் விளைவுதான், நாட்டுடைமையாக்கப்படும் பேருந்து நிறுவனங்களுக்குப் பல்லவா, பாண்டியன் சோழன், சேரன் ஆகிய பழந்தமிழ் மன்னர்களின் பெயர்கள் சூட்டப்படும் உணர்ச்சி மிக்க நிகழ்ச்சிகள்.

சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களின் பேருந்து வழித் தடங்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு, 'பல்லவா போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் 3–1–'72-ல் முதல்வரால் தொடங்கி வைக்கப்பெற்றது.

அதையடுத்து 23–1–72-ல் மதுரையில், டி. வி. எஸ். நிறுவனம் 172 தடங்களில் ஓட்டிக் கொண்டிருந்த 346 பேருந்துகள் நாட்டுடைமை யாக்கப்பட்டு விட்டன. 'பாண்டியன் போக்குவரத்துக் கழகம்' என்ற அமைப்பில் அவை மாற்றப்பட்டிருக்கின்றன. தனியார் உடைமைகளை நாட்டுடைமையாக்கும் அரிய திட்டம், செயல் வடிவில் நிறைவேறத் தொடங்கியிருப்பது மதுரை மாநகரத்தில்தான் என்றால் அது மிகையாகாது.




பல்லவா போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்த முதல்வர், பாண்டியன் போக்குவரத்துக்கழகத்தையும் தொடங்கி வைத்திருக்கிறார். அண்ணா அவர்களைப் பெற்றெடுத்த பல்லவ நாட்டின் வேந்தர்களது பெயரால் அமையப் பெற்ற போக்குவரத்துக் கழகத்தை எவ்வளவு மகிழ்வுடன் தொடங்கி வைத்தாரோ, அவ்வளவு மகிழ்வுடன் சங்கத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களின் பெயரால் அமையப் பெற்ற போக்கு வரத்துக் கழகத்தையும் தொடங்கி வைத்திருக்கிறார் முதல்வர்.

இந்தத் துவக்க விழாவிற்குக் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமை ஏற்றார்.

"சேர, சோழ, பாண்டியர்களும் பல்லவர்களும் நாட்டைச் சிறப்புற ஆண்டது போல், அவர்களின் பெயரால் அமைந்து வரும் போக்கு வரத்துக் கழகங்களும் சிறப்புற மக்களுக்குப் பயன் அளிக்கப் போகின்றன.

என்று தலைமையுரையில் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்.

மதுரை நகரத் தந்தை, எஸ். முத்து எம். எல். ஏ. அவர்கள் ''மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் டி. வி. எஸ் நிறுவனத்தின் நல்ல சேவையை மறக்க முடியாது. ஊழியர்கள் அதே ஒழுக்க உணர்ச்சி, நாணய உணர்ச்சி இவற்றோடு, இதிலும் பணியாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கெண்டார்.

டி. வி. எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த திரு கிருஷ்ணா கூறினார்:

''எங்கள் நிறுவனத்தின் பெருமைக் கெல்லாம் காரணம் இதன் ஊழியர்களின் கடமையுணர்ச்சிதான். அவர்களை விட்டுச் செல்வது ஒன்றுதான் மனத்தாங்கலாக இருக்கிறது'' என்று!

போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் கூறினார்;

''உடைமைகள் ஒரு சிலரிடையே குவிந்திருக்கக் கூடாது. அவை பரவலாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கலைஞர் அவர்களால் இந்தத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இந்த நிறுவனத்தின் உரிமைதான் மாற்றப்படுகிறதே தவிர—உருவம் மாற்றப்படவில்லை''

மின்துறை அமைச்சர்— திரு ஓ. பி. இராமன் அவர்கள்,

''போக்கு வரத்து, தேசிய மயமாக்கப்படுவது மனித சமுதாயத்தில் நசித்துவிட்ட மக்களுக்குக் கிடைக்கும் வெற்றி'' என்றார்.

இறுதியாகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தைத் துவக்கி வைத்தார். மதுரையிலிருந்து திண்டுக்கல் செல்வதற்கான பயணச்சீட்டு ஒன்றை மதுரை மாநகராட்சித் தலைவர் அவர்களிடம் தந்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொண்டார்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 25 ஆயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதிக்குத் தரப்பட்டது. அதை மன மகிழ்ச்சியுடன், வாங்கிக் கொண்டு, முதல்வர் சிறப்புரையாற்றத் தொடங்கினார்.

முதல்வரின் உரை:

''திரு கிருஷ்ணா அவர்கள் பேசும்போது 40 ஆண்டுகள் சிரமப்பட்டு வளர்த்த நிறுவனத்தை உங்களிடம் ஒப்படைக்கிறோம் என்றார். ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணை அவள் தந்தையும், தாயும் மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பும்போது ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எப்படிச் சொல்லுவார்களோ, அந்தப் பற்றும் பாசமும் அவரது பேச்சில் வெளிப்பட்டது.

நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன். இது உங்களிடமிருந்து எடுத்துக் கொண்டோ, கவர்ந்து கொண்டோ சென்றதல்ல.

நாங்கள் காதல் திருமணத்தை வரவேற்கின்றவர்கள்தான் என்றாலும், பெற்றோர்கள் பார்த்துச் செய்யும் திருமணத்துக்கும் உடன்பாடானவர்களே! அப்படி உடன்பாட்டுடன் நடந்த திருமணம்தான் இது.

அரசாங்கமே மாப்பிள்ளை என்றாலும், ஒரு பெண்ணைத் தானே கட்ட வேண்டும் என்று கேட்கலாம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளைப் பொறுத்த மட்டில் இராமனைப் போல ஏக பத்தினி விரதனாக இராமல், தசரதனைப் போல 60 ஆயிரம் பேரைக் கட்டிக் கொள்ள வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. இது புராணம் அறிந்த மக்களுக்குப் புரியும்.

''நாட்டுடைமையாக்கப்பட்ட இந்தப் பேருந்துத் துறைக்குத் தொழிலாளர், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு நிச்சயம் இருக்க வேண்டும்— இருக்கும்.

தொழிலாளர்களாகிய உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்களை டி.வி.எஸ். நிறுவனத்தார் எவ்வளவு அன்போடும் அக்கறையோடும் நடத்தினார்களோ — உங்களது உரிமைக்குக் காது கொடுத்துக் கேட்டுத் தேவைகளை நிறைவேற்றச் செயல்பட்டார்களோ, அதில் கிஞ்சிற்றும் குறையாமல் நடந்து கொள்வோம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''

பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்படுவதன் இன்றியமையாமையை முதல்வர் இவ்வாறு எடுத்துரைத்தார்.

சமதர்மச் சமுதாயத்தை நோக்கி நடைபோடும் தமிழகத்தின் அரும்பயணத்தின் இன்னொரு கல் கடந்ததாகவே இந்நிகழ்ச்சியை அனைவரும் கருதினர்.




இராமேஸ்வரம் தீவிலுள்ள பல்வேறு கிராம மக்கள் தங்கள் கிராமத்திற்கு மின் இணைப்புக் கொடுக்கும்படி நீண்ட நெடுநாட்களாகக் கேட்டுவந்தனர். இந்த நீண்ட நெடுநாள் கோரிக்கையைத் தமிழக அரசு இப்போது நிறைவேற்றி வைத்திருக்கிறது.

ஓலைக்குடா, சுடுகாட்டம் பட்டி, கந்தமாதனபர்வதம், ஓர்காடு, செம்மடம், கரையூர், மாங்காடு, சம்பை, இராமேஸ்வரம்—பர்வதம்ரோடு முதலிய பல்வேறு பகுதிகளுக்கும் இப்போது மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு, இருள் கப்பிக் கிடந்த மேற்குறித்த பகுதிகள் ஒளி பெற்று விளங்குகின்றன. அப்பகுதி மக்கள், இருளகற்றி ஒளி விளங்கச் செய்த தமிழக அரசினை இதயமாரப் பாராட்டி மகிழ்கின்றனர்.


இராமநாதபுரம் மாவட்டம்
0 5 10 15 20 Km
திருச்சிராப்பள்ளி
திருச்சி மாவட்டம்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
மதுரை
திருப்பத்தூர்
திருப்பத்தூர்
சாக்கோட்டை
காரைக்குடி
கல்லல்
தேவகோட்டை
சிவகங்கை
சிவகங்கை
திருவாடானை
திருவாடானை
திருப்புவனம்
மானாமதுரை
பரமகுடி
பரமகுடி
காரியாபட்டி
அருப்புக்கோட்டை
அருப்புக்கோட்டை
திருச்சுழி
நரிக்குடி
கமுதி
முதுகுளத்தூர்
முதுகுளத்தூர்
கடலாடி
இராமநாதபுரம்
இராமநாதபுரம்
திருப்புல்லாணி
மண்டபம்
ராமேஸ்வரம்
பாக் ஜலசந்தி
மன்னார் வளைகுடா
ஸ்ரீ வில்லிபுத்தூர்
ஸ்ரீவில்லிபுத்தூர்
ராஜபாளையம்
சாத்தூர்
சாத்தூர்
சிவகாசி
விருதுநகர்
வெம்பக்கோட்டை
வைப்பாறு
கேரளம்
திருநெல்வேலி
குறிப்பு
மாநில எல்லை
மாவட்ட எல்லை
வட்ட எல்லை
பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லை
வட்டத்தலைநகர்
பஞ்சாயத்து ஒன்றிப்பு தலைநகர்
தேசிய நெடுஞ்சாலை
மாநில நெடுஞ்சாலை
இதர சாலைகள்
இருப்புப்பாதை (மீ.கே.)
ஆறு, ஓடை
இதர கிராமங்கள்
மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை.




"யாதும் ஊரே யாவரும் கேளிர்"—என்னும் உலக ஒருமைப் பாட்டுக் கருத்தினை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே உலகுக்களித்த கணியன் பூங்குன்றனார் தோன்றியதும், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலிலே மூன்றும் தமிழ்ச் சங்கம் அழிந்துபட்ட பின்னர் இன்றைக்குள்ள நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத்தேவர் பிறந்து வளர்ந்து நல்லாட்சி புரிந்ததும், கிழக்குக்கும் மேற்குக்கும் ஓர் ஒப்புயர்வற்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டுப் பாலத்தை உருவாக்க முனைந்த விவேகாநந்தப் பெருந்தகையை முதன் முதலாகத் தன் செலவிலேயே அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்து, அவர் திரும்பி வந்தபோது தன் பெருந்தேரில் ஏற்றித் தக்க முறையில் வரவேற்பளித்துச் சிறப்பித்த சேதுபதி மன்னர் ஆட்சி புரிந்ததும், சின்னமருது, பெரிய மருது, வேலுநாச்சியார் போன்ற வீரத்திரு விளக்குகள் வெற்றி ஒளி பரப்பியதும், இத்தகைய வேறுபல பெருமைகளுக்கும் இலக்காகத் திகழ்வதும் சேதுநாடு என்றும், பாண்டிய நாடு என்றும், முகவை என்றும் பலவாறாகச் சிறப்பித்துக் கூறப் பெறுவதும் இராமநாதபுர மாவட்டமே ஆகும்.

இராமநாதபுர மாவட்டம், (இப்போது உள்ளது) இற்றைக்கு 62 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, 1910-ல் உருவாக்கப் பட்டதேயாகும். முன்பு பழைய மதுரை மாவட்டத்தில் இணைந்திருந்த இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டங்களையும், பழைய நெல்லை மாவட்டத்தில் இணைந்திருந்த திருவில்லிப்புத்தூர், சாத்தூர் ஆகிய வட்டங்களையும் ஒருங்கிணைத்தே இன்றைய இராமநாதபுர மாவட்டம் உருவாக்கப்பட்டது.

இராமநாதபுர மாவட்டத்தின் வடக்கில் மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களும் தெற்கில் மன்னார் வளைகுடா, நெல்லை மாவட்டம் ஆகியவையும், கிழக்கில் பாக் வளைகுடாவும் உள்ளன. மேற்கில் கேரள மாநிலப் பகுதி, மாவட்ட எல்லையின் ஒரு விளிம்பைத் தொட்டு நிற்கிறது. இவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வங்காள விரிகுடா வரை பரந்து காணப்படும் இராமநாதபுர மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 4,828·358 சதுர மைல்கள். இந்த மாவட்டத்தில், திருவில்லிபுத்தூர் சாத்தூர், அருப்புக்கோட்டைத் வட்டங்களும் இராமநாதபுரம் வருவாய்க் கோட்டத்தில் முதுகளத்தூர், இராமநாதபுரம் வட்டங்களும் சிவகங்கை வருவாய்க் கோட்டத்தில் சிவகங்கை, பரமக்குடி வட்டங்களும் அடங்கியுள்ளன.

மேற்குத் தொடர்ச்சிமலை திருவில்லிப்புத்தூர் வட்டத்தின் வடக்கு மேற்குப் பகுதிகள் வழியாகச் செல்கிறது; மற்றும், திருப்புத்தூர் வட்டத்தில் உள்ள பிரான்மலை முல்லைக்குத் தேரீந்து ஒல்காப் பெரும் புகழ் ஈட்டிய வள்ளல் பாரியின் எல்லையில்லாச் சிறப்பினை எடுத்துக்காட்டி வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும்.

இராமநாதபுர மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள், சமணர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் முதலிய பல்வேறு மதத்தினரும் வாழ்கின்றனர். இது போல, தமிழ், தெலுங்கு, கன்னடம், சௌராஷ்டிரம், உருது, மலையாளம், மராத்தி, இந்தி, குஜராத்தி முதலிய பல்வேறு மொழிகளும் வழங்கப் படுகின்றன.

இராமநாதபுர மாவட்டம் வானம் பார்த்த பூமியே தவிர, வற்றாத ஆறுகள் பாயும் வளமிக்க மாவட்டமல்ல! மாவட்டத்தில் பாயும் முக்கியமான ஆறு வைகையாறு ஒன்றுதான். அது மேற்குத் தொடர்ச்சி மலையில் பிறந்து, மதுரையில் தவழ்ந்து, இராமநாதபுர மாவட்டத்திற்குள் நுழைகின்றது. வெள்ளம் வந்தாலொழிய வைகை கடல் முகம் காண்பதில்லை. இராமநாதபுர மாவட்டத்திலுள்ள இதர சிற்றாறுகள் ஓடைகளில் அர்ஜுன நதி, வைப்பாறு, முடங்கியுள்ளது. விரைய நதி, மன்னார் கோட்டை நதி, குண்டாறு, கானல் ஓடை, மணிமுத்தாறு, வேணாறு, விரிச்சலையாறு ஆகியன குறிப்பிடத்தக்கவை. இத்தனை ஆறுகளும் ஓடைகளும் இருந்தாலும் இம்மாவட்டம், வறண்ட மாவட்டமே. இங்கு ஏரி, குளம், கிணறு முதலியன ஓரளவு பாசனத்திற்கு உதவுகின்றன.

இராமநாதபுர மாவட்டத்தின் தென்பகுதியில் அனைத்திந்திய யாத்திரைத் தலமாக உள்ளது இராமேஸ்வரம் தீவு. வடக்கே கங்கைக் கரையிலுள்ள காசியோடு சேர்த்து இதனைக் காசி—இராமேஸ்வரம் என்று பக்தர்கள் பாராட்டுவர். இந்தியாவின் கிழக்கு, மேற்கு வடக்கு ஆகிய எப்பகுதியினரும் இங்கு வந்து போவதால் இதனை இந்நாட்டின் ஒருமைப்பாட்டுத் தலமாகவே பாராட்டுவதில் தவறில்லை. இராமேஸ்வரம் கோயிலின் சுற்றுப் பாதை 4 ஆயிரம் அடி நீளமுடையது. உலகத்திலேயே மிக நீளமான சுற்றுப்பாதையுள்ள கோயில் இது தான்.

இராமநாதபுர மாவட்டம் பவளத்தீவு முதலிய பல்வேறு தீவுகளைக் கொண்டு திகழ்வது;

## பாலம் அமைத்தோம்!

இராமநாதபுர மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் 75 பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள் ளன. அவற்றிற்கான மொத்தச் செலவு ரூ. 14,37,681.

## பள்ளி அமைத்தோம்!

இராமநாதபுர மாவட்டத் தில் கடந்த நான்காண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள தொடக்கப் பள்ளிகள் 49.

புதிதாகத் திறக்கப்பட்ட நடு நிலைப் பள்ளிகள் 9.

புதிதாகத் திறக்கப்பட்ட உயர் நிலைப் பள்ளிகள் 6.

புதிதாகக் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் 16 ; ஈட்டு மானியத் தில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் 27.

பள்ளிகளுக்குக் கட்டப்பட்ட அறிவியல் கூடங்கள் 18.

## ஒளி பெருகியது!

இராமநாதபுர மாவட்டத் தில் கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 2,360 கிராமங்களுக்கு மின் ஒளி வசதி செய்து கொடுக் கப்பட்டுள்ளது.

இதுபோல், கடந்த நான் காண்டுகளில் விவசாயத்திற்கு உதவும் 10,113 பம்பு செட்டு களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதம் பாலமும் பாம்பன் கால்வாய் முதலியனவும் சிறப் பானவை.

திருவில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, திருப்புத் தூர், சிவகங்கைப் பகுதிகள் சுண்ணாம்புப் பாறையும், கிரா பைட் போன்ற தாதுப் பொருள் களும் மிகுதியுள்ள பகுதிகள். ஜிப்ஸம், இல்மைட் முதலிய தாதுப் பொருள்களும், பலரகச் சுண்ணாம்புக் கற்களும் இங்கு மலிந்து காணப்படுகின்றன.

சாத்தூர், திருவில்லிப்புத்தூர், அருப்புக்கோட்டைவட்டங்களில் பெரும்பாலும் கரிசல் மண், தான் அதிகம். இம் மண் மிளகாய், புஞ்சைப் பயிர்களுக்கு ஏற்றது. பொதுவாக, இம் மாவட்டம் பருத்தி விளைச்ச லுக்கு மிகவும் வாய்ப்பான தாகும். கோடைக் காலத்தில் இம்மாவட்டத்தில் கம்போடியா பருத்தி மிகுதியும் பயிராகின் றது. பருத்தி ஆராய்ச்சிக்காகத் திருவில்லிப்புத்தூரில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் உள்ளது. சாத்தூர் மிளகாய் தனிச்சிறப்புப் பெற்றது.

சிவகங்கை, திருப்புத்தூர், திருவாடானை வட்டங்கள் செம் புறை மண் நிறைந்த பூமி. படிவப்பாறைகளும் நிறைந் துள்ளன. திருவாடானை, முது குளத்தூர், இராமநாதபுர வட் டங்களில் வண்டல் மண் பகுதி யும் உள்ளது. கடற்கரையும் இராமேஸ்வரமும் வெண் மணற் பரப்புக்கள்—வெறும் பரப்புக் கள்—விளைச்சலுக்குப் பயன் அற்றவை.

தமிழ்நாட்டு மாவட்டங்களி லேயே 160 அடி நீளமுள்ள மிக நீண்ட கடற்கரையையுடைய மாவட்டம் இராமநாதபுர மாவட்டமே! இங்குக் கடற்கரை வெப்பத்தைத் தணித்திடும்; கடற்கரைப் பகுதியைத் தவிர, பிற பகுதிகளெல்லாம் வெப்பம் மிகுதியுடையன. இங்கு வெப்ப நிலை 94° (எப்)-க்கும் வெப்பம் அதிகமாக இருக்கும். குறைந்த வெப்பநிலை 68° (எப்) ஆகும்.

இராமநாதபுர மாவட்டத்தில் காடுகள் மிகுதி; சாத்தூர், அருப்புக்கோட்டை, திருவில்லிப் புத்தூர் ஆகிய வட்டங்களில் பனைமரங்கள் மிகுதி; இராமநாத புர வட்டத்தில் கடற்கரை யோரத்தில் தென்னை மரங்கள் மிகுதி. வைகைக் கரையோரங் களில் மாவும், பலாவும் புழ மரங்களும் மிகுதி. சவுக்கு மரங் கள் நன்கு வளர்கின்றன. இரா மேஸ்வரத்தில் புளிய மரங்கள் நன்கு வளர்கின்றன. இங்குத் தென்னை மரங்களும் ஏராளமாக உள்ளன. மலைப்பகுதிகளில் உத்த ரத்திற்கு உதவும் மரங்கள் வளர்கின்றன.

தீக்குச்சி, மத்தாப்பு, பட்டாசு போன்றவற்றிற்கும், அழகான காலண்டர்கள், லேபிள்கள், சுவரொட்டிகள் முதலியவற்றிற் கும், மருத்துவமனைகளில் புண் ணுக்குக் கட்டத் தேவைப்படும் பாண்டேஜ் துணிக்கும் இந்த மாவட்டம் பேர்பெற்றது. இவை யாவும், இந்தியாவிலும் இந்தி யாவுக்கு வெளியிலுள்ள நாடு களிலும் புகழ் பெற்றுள்ளன.

இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் ஷார்க் போன்ற மீன் வகைகள் உள்ளன; கடல் ஆமைகள், சிப்பிகள், சங்குகள், முதலியன மன்னார் வளைகுடா வில் மிகுதி. இங்கு வாழ்வோர் வாழ்வில் வளம் கூட்டுவது மீன் பிடித்தல், சங்குக் குளித்தல் போன்ற தொழில்களே!

இத்தகு இராமநாதபுர மா வட்டம் பல்வகையாலும் பின் தங்கிய மாவட்டமே யாகும். எனவே, தமிழ்நாடு அரசு உழவும் தொழிலும் வளரப் பல்வேறு சலுகைகளையும் ஏரா ளமான உதவிகளையும் அளித்து, இம் மாவட்டத்தைப் பலவகை யாலும் முன்னேற்றி, மக்கள் வாழ்வில் செம்மையும், செழு மையும் சிறக்கத் தக்க முறையில் பாடுபட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இம் மாவட்டம் துறைதோறும் கண்டுள்ள முன் னேற்றமும் வளர்ச்சியும் பெரி தும் வியந்து போற்றத்தக்கன.




வெப்ப மண்டலத்தில் மட்டுமே வளரும், கிளையில்லாத பனை இன மரங்களில் தென்னை மிகவும் முக்கியமானது. இதன் வேர் முதல் நுனி வரையுள்ள எல்லா உறுப்புக்களும் ஏதாவது ஒரு வகையில் மனிதர்களுக்குப் பயன்படுகின்றன. ஆண்டு தோறும் இந்தியாவில் 530 கோடி தேங்காய்களும், அதில் தமிழ் நாட்டில் மட்டும் 79 கோடி தேங்காய்களும் உற்பத்தி ஆகின்றன. நாட்டில் விளையும் தேங்காய் நமது சுயதேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இல்லை. அருகிலுள்ள தென்னை வளரும் நாடுகளிலிருந்து பலகோடி ரூபாய் பெறுமானமுள்ள தேங்காய்களும், கொப்பரையும் இறக்குமதி செய்யப்படுகின்றன. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்காகச் செலவிடப்படும் அந்நியச் செலாவணியை மிச்சப் படுத்துவதற்கும், நமது சுய தேவையை நிறைவு செய்வதற்கும் இரண்டு வழிகள் உள்ளன. அவை, புதிய தோப்புகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ளதோப்புகளின் மகசூலை அதிகரித்தல் ஆகியன.

தென்னை வளர்வதற்கான தட்ப, வெப்ப நிலையும், ஏராளமான தரிசு நிலங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. புதிய தோப்புகளில் தரமான தென்னங் கன்றுகளை நட்டால்தான் பிற்காலத்தில் நல்ல மகசூல் கிடைக்கும். இராமநாதபுரத்தில் ஏற்படும் புதிய தோப்புகளுக்குத் தேவையான தென்னங் கன்றுகள் சிங்கம்புணரி, அரசினர் தென்னை நாற்றுப் பண்ணையில் கிடைக்கின்றன. இது, நமது மாநிலத்திலுள்ள நாற்றுப் பண்ணைகளில் முதலிடம் வகிக்கிறது. இப்பண்ணை சிங்கம்புணரியிலிருந்து வடக்கே ஒரு மைல் தொலைவில் காரைக்குடி-திண்டுக்கல் நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது. இதற்கு அருகில் ஏராளமான தென்னந் தோப்புகள் இருப்பதால் இந்த இடத்திற்கு வந்தவுடன் 'நாம் கேரளத்தில் இருக்கிறோமோ' என்றே எண்ணத் தோன்றுகிறது. நாற்றுப் பண்ணையும், பார்ப்பதற்கு மிக அழகாகவும், அமைதியாகவும் உள்ளது. இந்த நாற்றுப் பண்ணைக்குள் நாம் நுழைந்தவுடன் இது இராமநாதபுர மாவட்டத்தில்தான் உள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

இப்பண்ணை மொத்தம் 2 ஏக்கர் 79 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்குச் செங்கோட்டை, நாகர்கோவில், சிங்கம்புணரி, கொட்டாம்பட்டி, நத்தம் ஆகிய இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நெற்றுகளிலிருந்து, 40,000 உயர் ரகக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்கன்றுகள் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள உழவர்களுக்கு நேரடியாகவும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. ஒரு கன்றின் விலை ரூ. 1-50. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக வாங்கும்பொழுது, 25 சதவீதம் குறைந்த விலையில் கன்றுகள் வழங்கப்படுகின்றன. இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டுமே கன்றுகள் விநியோகம் செய்யும் நோக்கத்துடன் இப் பண்ணை ஆரம்பிக்கப் பட்ட போதிலும், திருச்சி மாவட்டம், பொன்னமராவதி, திருமயம் ஊராட்சி ஒன்றியங்களில் வாழும் மக்களும் நேரடியாக வந்து கன்றுகளை வாங்கிச் செல்கின்றனர். கன்றுகள் நன்றாக வளர்ந்து பயன் கொடுப்பதால் ஒருமுறை இப்பண்ணையிலிருந்து கன்றுகளை வாங்கியவர்கள் மறுபடியும், மறுபடியும் வந்து வாங்கிச் செல்கின்றனர். தற்போது உற்பத்தி செய்யும் 40,000 தென்னங் கன்றுகள் ஆர்வத்துடன் இங்கு வரும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. பெருகி வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இந்த ஆண்டு முதல் 10,000 தென்னங் கன்றுகள் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இந்தப் பண்ணை தொடர்ந்து இலாபகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

நாற்றுப் பண்ணையிலிருந்து விநியோகம் செய்யப்பட்ட கன்றுகளை, விஞ்ஞான முறைப்படி நடவும், பராமரிக்கவும், ஏற்கெனவே வளர்ந்துள்ள

மரங்களின் மகசூலை அதிகரிக்கவும், ஆவன செய்வதற்காக மற்றொரு துணை வேளாண்மை அலுவலர், சாத்தூரை மையமாகக் கொண்டு இம்மாவட்டத்தில் பணியாற்றி வருகிறார். நீர் பாய்ச்சுதல், உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், மகசூலை அதிகரித்தல் ஆகிய காரியங்களில் இந்தத் துணை வேளாண்மை அலுவலரும், அவருடைய உதவியாளர்களும் உதவி வருகின்றனர்.

இத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்குப் பாதி விலையில், மருந்து தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. உரமிடுதல், உழுதல், பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல் போன்ற காரியங்களினால் அதிக மகசூல் கிடைக்கிறது என்பதைப் பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டுத் தனியார் தோப்புகளில் செயல்விளக்கத் தளைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

புதிய தென்னந் தோப்புகள் அமைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும், தனி நபருக்கு அதிகப் பட்சம் ரூ. 3,000 வரையும் நீண்ட காலக் கடன் வழங்கப் படுகிறது. இத் தொகை 11-வது ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளில் வட்டியுடன் வசூல் செய்யப் படுகின்றது. உழவர்கள் எப்பொழுது அழைத்தாலும், அவர்களுடைய தோப்பிற்குச் சென்று மரங்களைப் பார்வையிட்டுத் தக்க அறிவுரைகள் வழங்குவதற்கு இப்பணியாளர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர்.

தென்னை ஓலையிலுள்ள பசுமையை (பச்சையத்தை) 'கருந்தலைப் புழு' என்ற சிறிய பூச்சி சுரண்டிச் சேதப்படுத்துகிறது. இதனால், மட்டை பசுமையை இழந்து காய்ந்துவிடும். மரத்தின் மகசூலும் குறைந்துவிடும். இந்தப் பூச்சியைப் புழு நிலையிலும், கூட்டுப் புழு நிலையிலும் தாக்கக் கூடிய ''குளவி'' இனத்தைச் சேர்ந்த பகைப் பூச்சிகள் உள்ளன. இவைகள் ஒட்டுண்ணிகள் (பாரசைட்) என்று அழைக்கப்படுகின்றன.

இராமநாதபுரத்தில் இப்பூச்சிகளை வளர்க்கும் ஒட்டுண்ணி நிலையம் ஒன்று ஒரு துணை வேளாண்மை அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான ஒட்டுண்ணிகள் வளர்க்கப்பட்டு உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. தேவைப்பட்டால் அஞ்சல் மூலமாகவும் இப்பூச்சிகள் அனுப்பப்படுகின்றன.

மேலே கூறிய 3 திட்டங்களும், மதுரையில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (தென்னை) அவர்களின் மேற்பார்வையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கிழக்கு இராமநாதபுரம் விவசாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மிகவும் பின் தங்கிய பிரதேசமாகும். மழை பரவலாக இல்லாததாலும், வற்றாத ஆறுகளும், பெரிய குளங்களும், இல்லாததாலும், வேளாண்மையிலிருந்து குறைந்த வருவாயே கிடைக்கின்றது.

> விண்ணோ நிலவால்
> விளக்கம் அடைந்தது;
> தண்கடல் முத்தால்
> தனிச்சிறப் புற்றது;
> தரையோ தானறிந்தது
> பிறர்க்குச் சாற்றும்
> அருமை மக்களால்
> பெருமை பெற்றது.
>
> பாவேந்தர் பாரதிதாசன்

இங்குள்ள மண்வகை நீண்ட காலம் பலன்தரும் தென்னை மரங்கள் வளர்வதற்கு ஏற்றதாக உள்ளது. இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இலங்கை, பர்மாவிலிருந்து வந்துள்ள தமிழர்களுக்கும், நிலமில்லாதாருக்கும் நிலம் வழங்கத் தென்னை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஒரு தனித் துணை வேளாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அவரின் கீழ் தென்னை நாற்றுப் பண்ணைகளை நிருவகிப்பதற்கும், வளர்ச்சி வேலைகளைச் செய்வதற்கும் துணை வேளாண்மை அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஒரு தனி வட்ட ஆட்சியாளரும், தனித்துணை வட்ட ஆட்சியாளரும், 5 வருவாய் ஆய்வாளர்களும் கடன் மனுக்களைப் பரிசீலிக்கின்றனர்.

இத்திட்டத்திற்குத் தேவையான தென்னங் கன்றுகள் தேவிப்பட்டினம், தொண்டி, உச்சிப்புளி ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### தரிசுநிலத்தில் தங்கப்புதையல்

கிழக்கு இராமநாதபுரக் கடற்கரைப் பகுதியில் அரசினருக்குச் சொந்தமான தரிசு நிலங்கள், நிலமில்லாத ஏழைகளுக்கும், இலங்கை, பர்மாத் தமிழர்களுக்கும், ஒரு குடும்பத்திற்கு 5 ஏக்கர் வீதம் வழங்கப்படுகின்றன. இதில் 3 ஏக்கர்களில் தென்னை சாகுபடி செய்ய வேண்டும். மீதமுள்ள 2 ஏக்கர் பரப்பளவில் அக்குடும்பம் தங்களுக்குத் தேவையான உணவு தானியமோ, காய்கறிகளோ, உற்பத்தி செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 6 ஆண்டுகளில் ரூ. 5,030 வட்டியில்லாத கடனுகை வழங்கப்படுகிறது. தென்னங் கன்றுகள் நடப்பட்ட 11-வது ஆண்டிலிருந்து பல தவணைகளில் இத்தொகை திரும்பவும் வசூலிக்கப்படும். 26 வருடங்கள் கழித்துக் கடன் தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட பின்பு, அக்குடும்பத்தாருக்கு 5 ஏக்கருக்கும் உரிய நிரந்தரப் பட்டா வழங்கப்படுகிறது.

சிறு பட்டாதாரர்கள் முதல் பெரிய நிலக்கிழார்கள் வரை இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். தென்னை சாகுபடி செய்வதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் கடன் வழங்கப்படுகிறது. இது தவிர, 4·50 ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி செய்தால் ஒரு கிணறு வெட்டுவதற்கு ரூ. 1,000 வீதம் கடன் வழங்கப்படுகிறது. இதில் ரூ. 250 மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மீதி ரூ. 750 கடனுகை வசூலிக்கப்படும்.

தேங்காய் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாள் விரைவில் வரும் என்பது உறுதி !

# சிறு தொழில் வளர்ந்து வரப் பெருகியுள்ள வாய்ப்புக்கள்!

மக்கள்தொகைப் பெருக்கமும் பெரும் பாசனத் திட்டங்கள் போன்ற பிற திட்டங்களை மேன்மேலும் நிறைவேற்றினும் வேளாண்மைக்காக நமக்குக் கிட்டும் குறைந்த அளவு நிலப் பரப்பும், இம்மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான தொழில் வளர்ச்சியை எதிர் நோக்கி நிற்க வேண்டிய நிலையில் தமிழகம் உள்ளது. தொழில் வளர்ச்சி விரைவாகவும், சமநிலையிலும் அமையும் வண்ணம் பொருளாதார நடவடிக்கைகளைப் பல கால்களாகப் பிரிப்பதன் வாயிலாகவே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதியாக உயர்த்த முடியுமென்றும், அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இயலுமென்றும் நாளும் வளர்ந்துவரும் மக்கள்தொகைப் பெருக்கம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இக்குறிக்கோளைக் கருத்திற் கொண்டு, மாநில அரசு தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. மூலப் பொருட்கள் முதலியன கிட்டும் இடத்திற்கு அண்மையில் போக்குவரத்து வசதி, நீர் வசதி, மின்சார வசதி, தொழிலாளர் வசதி இவை நிரம்பியிருத்தல், சந்தைக்கு அருகில் அமைந்திருத்தல் போன்ற தொழில் நுட்பப் பொருளாதாரக் கூறுகளே தொழில்களை ஓரிடத்தில் அமைப்பதற்குப் பின்பற்றப்படும் வாயில்களாகும்.

எனவே, இராமநாதபுர மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவுபடுத்த வேண்டி, விருதுநகர் காரைக்குடி, சிவகங்கை முதலிய நகர்களில் தொழிற்பேட்டைகளை அமைத்திருப்பதன் மூலம் சிறு தொழிலைத் துவக்குபவர்களுக்கு, உடனடியாகத் தொழில் தொடங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிகிறது. இந்தத் தொழிற்பேட்டைகளில் சிறுதொழில் அதிபர்களுக்குக் குறைந்த வாடகையில் தொழிற் கூடங்கள் தண்ணீர், மின்வசதி, சாலை வசதிகளுடன் அளிக்கப்படுகின்றன. காரைக்குடியில் மத்திய அரசு உதவியினால் ''மத்திய மின்-இரசாயன ஆய்வுக் கூடம்'' ஒன்று அமைக்கப் பெற்று நல்ல முறையில் இயங்கி வருகிறது. அந்த ஆய்வுக் கூடத்தின் பல புதிய கண்டுபிடிப்பின் மூலம் சிறப்பாக மின்-இரசாயனத் தொழில்கள் புதிதாகத் தொடங்குவதற்குச் சிறுதொழில் அதிபர்கள் நல்ல முறையில் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

இராமநாதபுர மாவட்டத்தின் உட்பகுதிகளில் வைகை நதியோரங்களிலும், கடற்கரையோரங்களிலும், இராமேஸ்வரம் தீவுப் பகுதிகளிலும் ஏராளமான பரப்பளவில் தென்னை வளர்க்கப்படுகின்றது. ஈரம் பதப்படுத்தப் படாத தென்னை மட்டையிலிருந்து இயந்திர முறையில் கயிற்றுநார் உரிப்பதற்கான தொழில் பிரிவுகளைத் தனியார் துறையில் நிறுவ இம்மாநிலத்தில் 20 தொழில் முனைவர்களுக்கு நிதி வசதி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும் கயிற்றுநாருக்கு, மாநில விற்பனை வரியிலிருந்து மாநில அரசு விலக்களித்துள்ளது. இந்த மாவட்டத்தில் ஈரப்பதப்படுத்தும் வசதிகள் போதுமான அளவில் இல்லை. ஆகையால் இயந்திர முறை கயிற்று நார் தொழிற்சாலையின் (ஈரப்பதப்படுத்தாத தென்னை மட்டைக்காக) மேம்பாட்டினுக்கு அரசு அளித்துவரும் மேற்படி உதவியினைப் பயன்படுத்தித் தொழில் தொடங்க முனைவோர் முன்வரலாம்.

இம்மாவட்டத்தில் முந்திரிப் பழத் தோட்டங்கள் அமைப்புக்கு நல்ல சீதோஷ்ண நிலைமையும், விளைச்சலுக்கேற்ப நிலப் பரப்பும் இருப்பதால் அவைகளின் வளர்ச்சிக்கு அமோக வாய்ப்புகள் உள்ளன. முந்திரிப் பழத்தோட்ட அமைப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு இம்மாவட்டத்தில் ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படும் போது இம்மாவட்டத்தின் முந்திரி உற்பத்தி அதிகமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இப்பழ உற்பத்தித் திறனைக் கருத்திற் கொண்டு, இம்மாவட்டத்தில் முந்திரி எண்ணெய் எடுப்பதற்கான தொழிற்கூடங்களின் அமைப்பிற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் வட்டத்தின் கடற்கரை ஓரங்களில் ''கடற்பாசி''ச் செடிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவைகளிலிருந்து ''சோடியம் ஆல்ஜினேட் உப்பு'' என்ற பொருளினை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்கூடம் ஒன்று அமைப்பதற்கும் வாய்ப்புகள் நிரம்ப உள்ளன. கீழக்கரை, இராமேஸ்வரம் தீவினை ஒட்டிய இடங்களில் கிடைக்கும் சங்குகள், தற்போது மேற்கு வங்காள மாநிலத்திற்குப் பெருவாரியாக அனுப்பப்படுவதாகத் தெரியவருகிறது. அங்கு

## தியாகத் தழும்பைத் தழுவிய மலை

இராமநாதபுர மாவட்டம் முழுவதுக்குமாக, முதன் முதலில் சுதந்தரப் போராட்டத்திற்குக் கால்கோள் செய்த இடம் பூலாங்குரிச்சிதான். அதைத்தொடர்ந்தே திருவாடானை, தேவகோட்டை முதலிய ஊர்களில் போராட்டம் துவங்கியது. முதன்முதலில் இயந்திரச் சுழல் துப்பாக்கிகொண்டுசுட்டதும் அங்குதான். போராட்ட வீரர்கள் துரத்தியடிக்கப்பட்டபோது, அவர்கள் அனைவரும் பூலாங்குரிச்சி மலையின் மீதேறி நின்றுகொண்டு வந்தேமாதரம் என்று முழங்கினர். கீழேயிருந்து துப்பாக்கியால் சுட்ட போது, சுடுபட்ட வீரர்கள் பக்கத்துக் காடு ஒன்றில் போய் விழுந்து கிடந்து பின்னர் கண்டு பிடிக்கப்பட்டனர். மலையில் சூடுபட்டு வெடித்து விழுந்த இடம், அம்மலை பெற்ற நிலையான தியாகத் தழும்பாக இன்றும் காட்சியளிக்கிறது.

# போலிகிரா:ப் இயந்திரம் உள்ள ஒரே கூட்டுறவு அச்சகம்



அரசாங்கத் தொழில் வணிகத் துறையின் கீழ் சிவகாசி தொழில் கூட்டுறவு அச்சகம் கடந்த 6—8—1970-ல் திறக்கப்பட்டுள்ளது. பெரிய அளவில் வார்னிஷ் பூசும் ரூ. 2,05,000 மதிப்புள்ள பாலிகிராப் ஆப்செட் அச்சுப் பொறியுள்ள ஒரே கூட்டுறவு அச்சுக்கூடம் இதுதான்.

இங்கு, தீப்பெட்டி லேபிள்கள், அழகான நாட்காட்டிகள், வண்ணச் சுவரொட்டிகள் எல்லாமே அச்சிடுகின்றனர். விரைவில், இதனை ஏனைய எல்லா வசதிகளுமுடைய ஒரு முழுநிறை அச்சுக் கூடமாக ஆக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அச்சகத்திற்கெனச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு 5 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. கட்டட வேலைகள் விரைவில் தொடங்கும்.

இவைகள் ''சங்கு வளையல்கள்'' தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன. மேற்படி மூலப் பொருளினைக் கொண்டு ''சங்கு வளையல்கள்'' இம்மாவட்டத்திலேயே தயாரித்து மேற்கு வங்காளத்திற்கு அனுப்பிடும் வாய்ப்புகளும் உள்ளன. இம்மாவட்டத்திற்குத் 'தொலைதூரக் கடற்கரைப் பகுதியிருப்பதால் உப்பு உற்பத்தித் தொழில்களும் மற்றும் அது சம்பந்தப்பட்ட துணைத் தொழில்களும் தொடங்க வாய்ப்புகள் உள்ளன.

இம்மாநிலத்தில் நடைபெறும் சாயத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களில் ஒன்றான ''ஹைட்ரோ சல்பேட்'' என்ற இரசாயனப் பொருளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், டயர் உற்பத்திக்கான பெரிய தொழிற்சாலை ஒன்றும், மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான 'பிஸ்டன்' களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் வெகு விரைவில் இம்மாவட்டத்தில் நிறுவப்படவிருக்கின்றன. மேற்கூறிய மூன்று பெரிய தொழில்களுக்குத் தேவையான துணை சிறு தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் நிரம்ப உள்ளன.

இம்மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு உதவி செய்யவும், அதுபோன்ற பிற தொழில்களைத் திறம்பட வளர்ச்சியுறச் செய்து அவற்றிற்கு வழி காட்டவும் வேண்டித் ''தமிழ் நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம்'' அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிறுவனம் இவ்வட்டாரத்தில் உள்ள சிறுதொழிலுக்குத் தேவையான மூலப் பொருள் பங்கீடு, பொறியியல் இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழில் முனைவோருக்கு விற்பது, தொழிற்கூடங்களைக் கட்டி அவற்றை தவணைக்கொள் முதல் அடிப்படையில் தொழில் முனைவோருக்கு ஒதுக்குதல் போன்ற பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனம் சிறு தொழில் அதிபர்களுக்கும், தொழில் தொடங்க முனைவோருக்கும் சீரிய முறையில் பணியாற்ற இந்த உதவிகளை அளிக்கவும் ஏற்பாடு செய்து வருகிறது.

(1) தொழில் நுட்பச் சாத்தியக் கூறு குறித்த அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.

(2) சிறு தொழிற்சாலைகள் தயாரித்த பொருள்களின் ஏற்றுமதிக்கும், விற்பனைக்கும் உதவுதல்.

(3) சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளித்தல்.

மத்திய அரசு திட்ட ஆணைக் குழு இம்மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ள எட்டு மாவட்டங்களில் இராமநாதபுர மாவட்டமும் ஒன்று. எனவே, இம்மாவட்டத்தில் புதிய தொழில் முனைவர்கள் அமைக்கவிருக்கிற நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளின் உற்பத்தி விற்பனையின் மூலம் செலுத்த வேண்டிய வரிக்குச் சலுகைகள் கிடைக்கும். தொழில் துறையில் மேம்பாடு அடையாத பகுதிகளாகக் கிழக்கு இராமநாதபுரம் பகுதி முழுவதையும், தொழில் தொடங்குவோர் மத்திய அரசிடமிருந்து ஒரு மொத்த மானியம் அல்லது உதவித்தொகை பெறத் தகுதி உடைய பகுதிகளாகத் திட்ட ஆணைக் குழு அறிவித்துள்ளது. மாநில அரசும் மத்திய அரசும் அளித்து வரும் வசதிகளைப் பயன்படுத்தித் தொழில் துறை மேலும் பல மடங்கு வளர— தொழில்வளம் பெருகப் பாடுபடுவோமாக!

(தொழில் வணிகத் துறை மண்டலத் துணை இயக்குநர் அளித்த விவரங்களின் தொகுப்பு)

# சங்குத் தொழிற் சங்கம்!

இராமேஸ்வரத்தில் சங்குகள் மற்றும் கிளிஞ்சல்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. எனவே, சங்குத் தொழில், வீடுகள் தோறும் நடைபெறுகிற நல்லதோர் — சிறப்பு மிக்க குடிசைத் தொழிலாக விளங்குகிறது.

இத் தொழிலை மேலும் நல்ல முறையில் வளர்த்து இத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் வளமூட்டி ஒளி பெருக்க, இராமேஸ்வரம் சங்கு மற்றும் கிளிஞ்சல் பொருள் உற்பத்தித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. தொழிலாளர்களுக்கு மூலப்பொருள் கிடைப்பதற்கும், உற்பத்தி செய்த பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும் இச்சங்கம் நல்ல முறையில் பணியாற்றிவருகிறது. ஆண்டொன்றுக்குசுமார் 25,000 ரூபாய்க்கு விற்பனை வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது. இங்குச் செய்யப்படுகிற மாலைகளுக்கும், விளக்குகளுக்கும், பெயர்கள்— வண்ண ஓவியங்கள் தீட்டப் பெறும் சங்குகளுக்கும் நல்ல வரவேற்பு உள்ளது. தமிழக அரசுதற்போது, சங்கு குளிப்பவர்களே கிடைக்கும் சங்குகளை அனுபவித்துக் கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால் இத்தொழிலும், இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் நல்ல முன்னேற்றம் அடையலாம் என்பதில் ஐயமில்லை.

25-1-1972-ல் இச்சங்கத்தின் சார்பில் புதியதொரு விற்பனைக் கூடம் திறக்கப்பட்டுள்ளது. சங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்டிக் கொள்ள 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ரூ. 15,000 மானியமாக வழங்கியிருக்கிறது. கட்டடம் கட்டும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

# சீரணித் தொண்டர்கள் செய்த திருப்பணி

இராமேஸ்வரத்தின் உட்பகுதியில் கரையூர் என்று ஒரு சிற்றூர் உள்ளது. அந்த ஊர் குன்றுபோல் குவிந்த மணல் திட்டுகளின் நடுவே உள்ளது. அங்குப் போவோரும் வருவோரும் பல மணல் மேடுகளை நடந்துதான் கடக்க வேண்டும். வேறு போக்குவரத்து வசதியோ, சாலைகளோ கிடையாது.

கரையூரின் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பின்வருமாறு : ஆண்கள் 599 ; பெண்கள் 569 ; பள்ளியில் பயிலும் வயது வந்த சிறுவர்கள் 76 பேர்; சிறுமியர் 69 பேர் ; எனினும், அவ்வூரில் பள்ளிக்கூடமில்லை.

தமிழக அரசு அங்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அனுமதித்து, அதற்குரிய தொகையையும் வழங்கியது. எனினும், அந்த மணல் திட்டுகளுக்கிடையே பள்ளி கட்டுவதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்வதற்கு வழியில்லாக் காரணத்தால் கட்டடம் கட்ட ஒப்பந்தக்காரர்கள் யாரும் முன்வரவில்லை. எனினும், சென்ற ஆண்டு, மண்டபம் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் பெரு முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் அவ்வூரிலுள்ள சீரணித் தொண்டர்களும், பொதுமக்களில் சிலரும் செங்கல், சிமெண்டு, மரச் சாமான்கள் இதர கூரைச் சாதனங்கள் ஆகியவற்றைத் தலைச்சுமையாகவே சுமந்து சுமார் 2½ மைல் தூரம் அம் மணல் மேடுகளில் ஏறி இறங்கி வந்து பள்ளிக் கட்டடத்தைப் பாங்குறக் கட்டி முடித்துள்ளனர். இன்று, அந்தத் தொடக்கப் பள்ளியில் இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். கடல் கடந்த தீவில் குன்றுபோல் உயர்ந்த மணல் மேடுகளுக்கு நடுவில் எழுந்துள்ள பள்ளி, அங்கு அறியாமை இருள் போக்கும் ஒளி விளக்காக விளங்குகிறது.



# மக்கள் குறை தீர்க்த மனுநீதித் திட்டம்

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மனுநீதிச் சோழனின் ஆட்சிக் காலத்தில் மக்கள் மன்னனைத் தேடிச் சென்று குறைகளை முறையிட்டுக் குறைநீங்கப் பெற்றனர். ஆனால், தமிழக முதல்வரும், பேரறிஞர் அண்ணாவின் வழித் தோன்றலுமாகிய கலைஞர் அவர்கள், மக்கள் இருக்கும் இடந்தேடி அவர்களின் இதயத் தவிப்பையும், குறைகளையும் கேட்டறிந்து, முறையீடுகளை நிறைவேற்றிக் குறை களையும் நோக்கத்தோடு, தமிழகத்தில் மனுநீதித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மனுநீதித் திட்டத்தினால், இராமநாதபுர மாவட்ட மக்களின் குறைகள் பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளன. பல தலைமுறைகளாகவும், பல ஆண்டுகளாகவும் தீர்க்கப்படாதிருந்த குறைகள், மனுநீதித் திட்டம் துவங்கிய முதலாண்டிற்குள்ளேயே தீர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

காரைக்குடித் துணைவட்டத்தில் கோட்டையூர் கிராமத்தில் 1864-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட நிலத்தில் 1933-ஆம்ஆண்டு முதல் தகராறுகள் ஏற்பட்டு, வழக்குகள் நடைபெற்று நாட்டார்களுக்குச் சொந்தமான சுமார் 600 ஏக்கர் நிலம் 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்கள் தனிப் பட்டா இல்லாமல் இருந்தனர். அரசினர் வரி வசூலிக்கச் சிரமப் பட்டனர். மனுநீதித் திட்டத்தின் கீழ் கோட்டையூரில், 5—12—1969 அன்று அலுவலர்கள் மக்களின் குறைகேட்க வந்தனர். அப்பொழுது நாட்டார்கள் தனிப்பட்டா கொடுக்கும்படி, கோரிக்கை விடுத்தனர். அந்த நிலத்தை 578 பகுதிகளாகப் பிரித்துத் தனிப்பட்டாவாக்கி 10—3—1970 அன்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

அரண்மனைச் சிறுவயல் கிராமத்தில் 30 ஆண்டுகளாக உழவர்கள் அனுபவித்து வந்த நிலத்திற்குப் பட்டா கொடுக்கப்படாததால் பல்வேறு தொல்லைகளை அனுபவித்து வந்தனர். அந்த நிலத்தைப் பிரித்து 160 பேர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டது. இதன் மூலம் 30 ஆண்டுகளாக இருந்த குறை தீர்ந்தது.

சாத்தூர் வட்டம் நாரணபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கே. வி. ராமசாமி ஓர் அரசியல் தியாகி, தனது மகளுக்கு வேலை தேடிக்கடந்த பல ஆண்டுகளாக அவர் முயற்சி செய்து வந்தும் பயனில்லை. அவர் 25—7—1970-ல் இதுபற்றி மனு ஒன்றைக் கொடுத்தார். மனுநீதி நாளில் கொடுத்த மனுவை ஏற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அன்றையத் தினமே திரு கே. வி. ராமசாமியின் மகளுக்குச் சிவகாசி உதவி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தட்டச்சராக வேலை கொடுத்தார்.

மனுநீதித் திட்டத்தின் கீழ் 1971 ஜனவரி முதல் நவம்பர் முடிய இந்த மாவட்டத்தில் ஓர் சாதனையே ஏற்பட்டுள்ளது என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

வரப்பெற்றமனுக்கள் 29,239; அனுமதிக்கப்பட்டு, சாதகமாக ஆணை பிறப்பிக்கப்பட்ட மனுக்கள் 20,318 ; நிராகரிக்கப்பட்ட மனுக்கள் 6,941 ; வேறு துறைகளுக்கு, முடிவான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்ட மனுக்கள் 1,913 ; நவம்பர் 1971 முடிவில் நிலுவையில் இருந்த மனுக்கள் 67.

இப்படிப் பல்வேறு குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு மனுநீதித் திட்டமே வழி செய்தது.

## இராமநாதபுர மாவட்டத்தில் ஒப்படை விவரங்கள்

1960-61 முதல் 1966–67-ஆம் ஆண்டு முடிய ஏழு ஆண்டுகளில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற தரிசு நிலங்களில் 5,116 ஏக்கர் நிலங்களை 2,137 நபர்களுக்கும், 35 ஏக்கர் பரப்பளவு கொண்ட வீட்டு மனைகளை 709 நபர்களுக்கும் உரிமை செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1967–68-ஆம் வருடம் முதல் 1970ஆம் வருடம் முடிய நான்கு ஆண்டுகளில் சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலங்களில் 63,861 ஏக்கர் நிலங்களை 27,382 நபர்களுக்கும் வீட்டு மனையைப் பொறுத்த வரையில் 120 ஏக்கர் பரப்பளவு கொண்ட வீட்டு மனைகளை 2,874 நபர்களுக்கும் உரிமை செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பது அரசின் மாபெரும் சாதனையாகும்.

1960–61 முதல் 1970–71 முடிய தரிசு நிலங்கள், வீட்டு மனைகள் ஒப்படை செய்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1960–61 முதல் 1966–67 வரையுள்ள ஏழு ஆண்டுகளில் வழங்கப்பட்ட சாகுபடி நிலங்களுக்குரிய பட்டாக்கள் 2,137. வழங்கப்பெற்ற நிலத்தின் பரப்பு 5,116 ஏக்கர் ; வீட்டு மனைப் பட்டாக்கள் 711 ; பரப்பளவு 35 ஏக்கர்.

1967–68 முதல் 1970–71 வரை நான்காண்டுகளில் வழங்கப்பட்ட சாகுபடி நிலங்களுக்குப் பட்டாக்கள் 27,382 ; வழங்கப்பெற்ற நிலத்தின் பரப்பு 63,811 ஏக்கர்கள். வீட்டு மனைப் பட்டாக்கள் 2,872 ; பரப்பளவு 120 ஏக்கர்கள்.

இது தவிர, இவ்வாண்டு மேலும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், படை வீரர்களுக்கும் வழங்கத் திட்டமிட்டுத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயக் பெருங்குடி மக்கள் இத்திட்டத்தின் மூலம் மேலும் பயனடைவார்கள் என்பது உறுதி.

# வண்ண மயில் கூட்டம் வாழும் வீரசோழம்



வண்ணக் கலாப மயிலை வனிதையரோடு ஒப்பிட்டுக் காட்டுவார்கள் கவிஞர்கள். நாம் சுதந்தரம் பெற்ற பிறகு நமக்கென ஒரு தேசியப் பாடலையும், தேசியக் கொடியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டது போல, 'தேசியப் பறவை' யாக மயிலையும் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

மயில், காடுகளிலும் மலைகளிலும் வாழ்பவை. பல கோயில்களிலும் மசூதிகளிலும், காட்சிச் சாலைகளிலும் மயில்கள் வளர்கின்றன. எனினும் பெரும் அளவில் இல்லை.

தமிழகத்தில் வனவிலங்குகளுக்காக ஒரு முதுமலைக் காடும், மான்களுக்காக ஒரு கிண்டி மான் பூங்காவும், பறவைகளுக்காக ஒரு வேடந்தாங்கலும் உள்ளன; இவைபோல் மயில்களுக்காக 'ஒரு வீரசோழமும்' இருக்கிறது என்பது பலருக்குப் புதிய செய்தியாகவே இருக்கும். வீரசோழம் இராமநாதபுர மாவட்டம் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூரில் பெரும்பாலானவர்கள் முஸ்லீம்கள். 5,000 மக்கள் தொகையுடைய ஒரு கிராமம் இது. இவ்வூரின் முக்கியத் தொழில் விவசாயம். ஊரைச் சுற்றிலும் பல்வேறு காடுகள் உள்ளன. இக்காடுகளில் ஏராளமான மயில்கள் வாழ்கின்றன. அவை பெரும்பாலும் வீரசோழத்திற்கு வந்து அவ்வூரில் பரவலாக உலவுகின்றன.

வீரசோழத்தில் இஸ்லாமிய உறவின் முறைச்சங்கம் ஒன்றின் பராமரிப்பில் ஒரு பள்ளி வாசல் உள்ளது. அங்கு, மயில்கள் பல நூற்றுக் கணக்கில் வருகின்றன. அங்குள்ள புதர்கள் சிலவற்றில் அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. அந்த மயில்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை ராகி, நெல், கம்பு, வரகு முதலிய தானியங்கள் போடப்படுகின்றன. இப்போது இதற்கென ஒரு சிப்பந்தி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சங்கத்தின் அறங்காவலர்களை இதுபற்றிக் கேட்டபோது அவர்கள், 1914-ஆம் ஆண்டில் 4 பெண் மயில்களோடும் ஒரேயொரு ஆண் மயிலோடும் இந்த மயில் வளர்ப்புப்பணி ஆரம்பமானதாகவும், தொடர்ந்து அவை பல்கிப் பெருகி வளர்ந்து வருகின்றன என்றும் கூறுகிறார்கள். மேலும் அவர்கள் கூறியதாவது:

''மயில்களுக்கான உணவுக்கும், சிப்பந்திச் சம்பளத்திற்கும் ஆகும் செலவுக்காகப் பர்மாவில் உள்ள எங்கள் ஊர்வாசிகள் முன்னர் பணம் அனுப்பினார்கள். இப்போது அவர்கள் பணம் அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. தமிழ்நாடு அரசினர் ஆண்டுதோறும் 500 ரூபாய் மானியம் தருகிறார்கள். இது தவிர நாங்கள் மகமை வசூல் மூலமும், தானியம் சேகரிப்பது மூலமும், அப்பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம்'' என்றார்கள்.

''முதலில் இந்த மயில்களை வளர்க்க வேண்டும் என்ற



எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டபோது ''மயில்களின் நடமாட்டத்தினால் பாம்புகளும், இதர நச்சுப் பூச்சிகளும் ஒழியும் என்றும், ஊருக்கு அழகு ஏற்படும் என்றும் மயில்கள் நடமாடுவது நல்லது என்றும் கருதியே மயில்களை வளர்க்கத் தொடங்கினோம்'' என்றார்கள்.

தற்போது கோரிக்கைகளின் பேரில் இரண்டு மயில்களுக்குப் 'பிடி கூலி' யாக 10 ரூபாயும் அனுப்பும் செலவுகளுக்காக ஒரு சிறு தொகையும் பெற்றுக் கொண்டு, மயில்களைப் பிடித்து அனுப்புகிறார்கள்.

கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகை, விழுப்புரம், கரூர் நகராட்சிகள், எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், பாபநாசம் பவர் அவுஸ், சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கும், பள்ளிவாசல்களுக்கும், சில தனிநபர்களுக்கும் அவர்கள் மயில்கள் அனுப்பியுள்ளனர். மயில்கள் தேவையெனத் தினமும் பல கடிதங்கள் வந்த வண்ணமிருக்கின்றன.

மயில்கள் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் முட்டையிடுகின்றன. ஒவ்வொரு தடவையும் 9 முதல் 11 முட்டைகள் வரை இடுகின்றன. மூன்று மாதம், மயில் அடை காப்பதாகவும், குஞ்சு பொரித்ததும் மயில் அதனைத் தன் சிறகுக்குள் வைத்துத் தாங்கிக் கொண்டு பறந்து செல்லும் என்றும், பொரித்த சிறு குஞ்சை நாம் கையால் தொட்டால் அல்லது பிடித்தால் அக்குஞ்சு இறந்துவிடும்—சிறு அதிர்ச்சியைக் கூட அதனால் தாங்கிக் கொள்ள முடியாது என்றும் கூறுகிறார்கள்.

மயிலைப் பிடிக்கும்போது எச்சரிக்கையாகப் பிடிக்க வேண்டும்



16-2—3

...ரும், அருகமாக விரட்டிப் பிடித்தால் அதனுடைய மெல்லிய இதயத்தின துடிப்பு நின்று பல சமயங்களில் இறந்து விடுவதும் உண்டு என்றும் கூறுகிருர்கள்.

மயிலின் முட்டை, ஒரு சிறு தேங்காயின் அளவுடையதாகவும் கரும்புள்ளிகளையுடைய வெளிறிய பச்சை நிறமானதாக இருக்கிறது. முட்டையைப் பலர் சாப்பிடுவதாகவும், அது கோழி முட்டையை விடச் சுவையாக இருக்கும் என்றும் கூறுகிருர்கள்.

மயில் தோகைகள் இரண்டு வகையானவை. ஒன்றைக் கண்ணுடித்தோகை என்றும், இன்னென்றை வாள் தோகை என்றும் கூறுகிருர்கள். மயிலின் கண் போல உள்ள வண்ணத்தோகை கண்ணுடித்தோகை; மற்றது வாள்போலிருக்கும்வாள்தோகை. மயில் ஆடும்போது சில தோகைகள் உதிர்கின்றன. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தோகைகளின் பெரும் பகுதியும் உதிர்ந்து மீண்டும் முளைக்கத் தொடங்கும்.

மயில் இறந்துவிட்டால் அதன் தோகைகளையும் காலையும் மட்டும் எடுத்துக் கொண்டு, அதன் உடலைப் புதைத்துவிடுவதாகக் கூறுகிருர்கள். 'மயில் கறி' உண்பவர்களும் இருக்கிருர்கள்.

மயில் காலிலிருந்து மயில் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதன் பெயர் 'மயில் கால் தைலம்'. சுளுக்குகள், தசைவலி, இரத்தக்கட்டு, தலைவலி, பச்சை வாதம் முதலியவற்றிற்கு இந்தத் தைலம் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது.

மயில் தோகைகளைக் காவடிகளிலும், தூரிகைகளிலும் பயன்படுத்துவதோடு விசிறி முதலியன செய்யவும் உபயோகிக்கிருர்கள். தோகையில் உள்ள நீளமான—வெள்ளை நிறத்தண்டினை நெட்டித் தட்டைபோலமீன்பிடிக்கப் (மிதப்பாக) பயன்படுத்துகின்றனர். அத்தண்டினைச் சுட்டுத் தேனில் குழப்பிக் குழந்தைகளின் நாக்கில் தடவினுல் வாந்தி வயிற்றுப் போக்கு முதலியன நீங்கும்.

# நாடு காக்கும் பணியில் நல்லுயிர் ஈந்தோர்!

அண்மையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற போரில் ஈடுபட்டு இறந்தவர்களில் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 7 பேர். அவர்களின் விவரம் வருமாறு :—

(1) திரு அலங்காரம் செபஸ்தியான், நெடுங்குளம்.

(2) திரு டி. ஏ. தேவதாசன், கோட்டைப்பட்டி ;

(3) திரு லஸ்கர் ஜோசப், சாத்தரசன்பட்டி ;

(4) திரு முத்தையா, நடைநேரி ;

(5) திரு எஸ். பி. சாமி, கஞ்சம்பட்டி ;

(5) திரு எஸ். சீனிவாசன், கல்லமநாயக்கன்பட்டி ;

(7) திரு வெங்கடசாமி ராதாகிருஷ்ணன், அளகாபுரி.

இவர்களில் திரு டி. ஏ. தேவதாசன், திரு வெங்கடசாமி ராதாகிருஷ்ணன் ஆகியோரைத் தவிர மற்றவர்கள் குடும்பங்கட்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசு 5,000 ரூபாய் உதவித்தொகையாக வழங்கியுள்ளது. இது தவிர தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தவணை வைப்புத் தொகையாக ஒவ்வொரு குடும்பத்திற்கு ரூ. 2,500 வழங்கினுர். அலங்காரம் செபஸ்தியனின் அடுத்த உறவினரான அவரது மனைவி திருமதி செல்லம்மாளுக்கு சிவகங்கை வட்டம் நெடுங்குளம் கிராமத்தில் 3 ஏக்கர் புஞ்சை நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு தேவதாசின் அடுத்த உறவினர் ஜபல்பூரில் இருப்பதால் உதவித்தொகை இன்னும் சேர்ப்பிக்கப் பெறவில்லை.

திரு வெங்கடசாமி ராதாகிருஷ்ணனுக்கு அடுத்த வாரிசுதாரரின் சான்றிதழ் அளிக்கப்படும்வரை உதவித்தொகையை நிறுத்திவைக்குமாறு சென்னை ஜெனரல் கமாண்டிங் அலுவலர் எழுதியுள்ளதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



1-6-1963-க்குப் பின்னர் தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்களுக்கும், 1-11-1964-க்குப் பின்னர் தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்கும் இராமநாதபுர மாவட்டத்தில் உதவிகள் அளிக்கப் பட்டுள்ள விவரம் :

1. ஒவ்வொரு குடும்பத் தலைவருக்கும் ரூ. 5,000 வரை தொழில் கடன் கொடுக்கப் படுகிறது.

2. தொழில் கடன் பெற்ற இலங்கை பர்மாத் தமிழர்களுக்கு வீடு கட்டக் கடன் அளிக்கப்படுகிறது.

3. தொழில் கடன் வாங்காத குடும்பத் தலைவருக்கு 3 ஏக்கர் புஞ்சை நிலமோ, அல்லது 1½ஏக்கர் நன்செய் நிலமோ கொடுத்து நிலக் குடியமைப்புத் திட்டத்தின் கீழ் குடி யமர்த்தப்படுகிறார்கள்.

4. குடும்பத்தலைவருக்குத் திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலத்தில் ரூ. 65 பயிற்சி உதவிப்பணம் கொடுக்கப் படுகிறது. பயிற்சி முடிந்த பின்னர் ஆலையில் நிரந்தரமாக வேலைக்குஅமர்த்தப்படுகிறார்கள். மொத்த வேலை வாய்ப்பு 200 பேர்—இதுவரை வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் 163 பேர்.

5. பர்மா, இலங்கைத் தமிழர்களுக்குச் சிறுதொழில் நடத்த நகராட்சி எல்லைக்குள் பெட்டிக்கடைகள் கட்டிவிடப்பட்டுக் குறைந்த வாடகையில் அவர்களுக்கு ஒதுக்கப்படு கின்றன.

(2) 1966-ல் இருந்து தாயகம் திரும்பிய பர்மா, இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை உதவித் தொகை முதலியன.

1—6—1963 முதல் 1966 வரை தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்கள் 4,809 பேர்.

1966-ஆம் வருடம் வரை பர்மாத் தமிழர் கட்கு வியாபாரக்கடன்வழங்கப்பட்ட தொகை ரூ. 9,14,753.

(3) 1971 வரை தாயகம் திரும்பிய பர்மா, இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை, அவர் களுக்கு அளித்த உதவித் தொகை முதலியன:

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்களின் எண் ணிக்கை 20,383 பேர்.

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்கட்கு வழங்கப் பட்ட கடன் தொகை—(1) வியாபாரக் கடன் ரூ. 69,69,978 ; (2) வீட்டுக்கடன் ரூ. 13,15,000.

1967 முதல் 1971-ஆம் ஆண்டு வரை தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்கள் எண் ணிக்கை 2,368 பேர்.

1967 முதல் 1971-ஆம் ஆண்டு வரை தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர் கட்கு வழங்கப்பட்ட கடன் தொகை —(1) வியாபாரக்கடன் ரூ. 5,32,650 ; (2) வீட்டுக்கடன் ரூ. 1,50,500.

இலங்கை, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ள தமிழர்களுக்காகத் தமராக்கி, இடையமேலூர், கீழப் பருத்தியூர் ஆகிய ஊர்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றுக் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் பயன்படுத்துவதற்காக 33 கிணறுகள் வெட்டப் பட்டுள்ளன. வீடுகளுக்கு உரியவர்கள் வந்ததும் குடியமர்த்தப்படுவதற்கு வேண்டிய முன்னேற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒ. புதூர், இடையமேலூர் திட்டத்திற்கு மேலும் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்தியா வந்து சேர்ந்தவுடன் ஒதுக்கப்பட்டுள்ள திட்டத்தில் குடியமர்த்தப்படுவார்கள்.

குடும்பம் ஒன்றுக்கு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமும், சாகுபடி செய்வதற்கு 4,350 ரூபாயும் கொடுக்கப் படுகிறது. மேலும் வீடு கட்டிக் கொள்வதற் காகக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1,850 கொடுக் கப்படுகிறது. வீடு கட்டிக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் தொகையில் கடனாக ரூ. 1,250-ம் மானியமாக ரூ. 600-ம் கொடுக்கப்படுகிறது.

1967-ஆம் ஆண்டிற்கு முன்னர் தொழில் கடன் தாயகம் திரும்பிய தமிழர்கட்கு மூன்று தவணையாகக் கொடுக்கப்பட்டு வந்தது. 1968--ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொழில் கடனை ஒரே தவணையில் கொடுப்பதற்கு அரசு ஆணையிட்டது. மேலும் 1970-ஆம் ஆண்டில் அரசு தொழில் கடனை ரூ. 2,000 த்திலிருந்து ரூ. 5,000 மாக உயர்த்தியுள்ளது.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இலங்கை, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் முன்பெல்லாம் 'அகதிகள்' என்றே குறிப் பிடப்பட்டார்கள். இப்போது, அகதிகள் என்ற சொல்லே ஒழிக்கப்பட்டு, தாயகம் திரும்பிய தமிழர்கள் என்றே குறிக்கப்படுவது சிறப்பான செய்தியாகும்.

## பர்மா, இலங்கைத் தமிழர்களுக்கு பயனுள்ள திட்டங்கள்!

# இராமநாதபுர மாவட்டத்தில் பசுமைப் புரட்சி



அந்நியர் ஆட்சியை எதிர்த்து அடிமைத்தளையை அறுத்தெறிய ஆர்த்தெழுந்த கட்டபொம்மனுக்கு அடைக்கலம் அளித்த வரலாற்றுச் சிறப்புமிகு இராமநாதபுர மாவட்டம்—பருவமழை அடிக்கடி தவறியதால் பஞ்சம் பிழைக்க தஞ்சைக்கும் பிற மாவட்டங்களுக்கும் தனது மக்களை அகதிகளாய் அனுப்பிவிட்டு, துயருற்றுத் தாழ்ந்து நின்றது. காரணம், எழில்மிகு இம் மாவட்டத்தில் ஏற்றவண்ணம் மழை பொழிவதில்லை; இங்கு வற்றாத ஆறுகளோ வளைந்தோடும் ஜீவநதிகளோ இல்லை. மாறாக, வானமிழ்தம் தான் வேண்டி மோனத்தவங்கிடக்கும் வறண்ட நிலங்களும், வளமற்ற காடுகளும் இங்கு நிறைய உண்டு: நீர்வளமற்ற இம்மாவட்டத்தில் பொதுவாக நிலவளமும் மிகக் குறைவு. ஆகவே பயிர்த்தொழில் இங்கு சுவையாக அல்ல சுமையாக, போராட்டமாக நடப்பது இயல்பு. பற்றாக்குறை என்பதும் —பசி பட்டினி, பஞ்சம் என்பதும் —பிழைக்க வழி தேடிக் குடிபெயர்தல் என்பதும் இம்மாவட்டத்திற்கே இயல்பானது என்ற இழிநிலை. இத்துயர்தரு நிலை போக்கத் தமிழக அரசு எண்ணாத நேரமில்லை; எடுக்காத திட்டமில்லை. பயிர்த் தொழிலே வாழ்க்கை நெறியாக அமைந்துவிட்ட இம்மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களே வெற்றிக்கு அடித்தளம் என்பதை நன்குணர்ந்த நமது தமிழக அரசு பல புதிய தீவிரத் திட்டங்களைச் செயல்படுத்த வேளாண்மைத் துறைக்கு ஆணையிட்டது. எத்திட்டத்தையும் ஏற்புடன் செயல்படுத்தத் தங்களை முழுதுமாக ஈடுபடுத்திக் கொள்ளும் ஆற்றலும், அறிவும் தொழில் நுட்பத் திறனும் படைத்த வேளாண்மை விரிவினைப் பணியாளர்களின் அயராத பணி தொடங்கியது. இதன் பலன் தான் இன்று இந்த மாவட்டத்தில் முகிழ்த்தெழுந்த பசுமைப் புரட்சி. இந்தப் பசுமைப்புரட்சி இயற்கையையும் ஓரளவு வென்று எழுந்த அமைதிப் புரட்சி.

இந்தப் பசுமைப் புரட்சி—கத்தியின்றி, ரத்தமின்றி, நடந்த புரட்சி; பரபரப்போ சலசலப்போ இன்றி அமைதியாக நடந்த புரட்சி; அங்கிங்கெனாதபடி விவசாயப் பெருமக்களின் வயல்களெங்கும் நடந்த புரட்சி; போர்க்களத்தில் அல்ல—கதிரடிக்கும் களங்களில் நிகழ்ந்த புரட்சி; இந்தப் புரட்சிக்கு ஆதரவாளர்கள் நமது விவசாயப் பெருமக்கள்; புரட்சிக்கு 'யுக்தி' அளித்தவர்கள்—தொழில் நுட்ப உதவி தந்தவர்கள் விவசாய விரிவினைப் பணியாளர்கள்; புரட்சியை நிகழ்த்திய ''தளபதிகள்'' நமது வணக்கத்துக்கும் வாழ்த்துக்குமுரிய வேளாண்மை அறிவியல் தந்த நன்முத்துக்கள்—அமுதசுரபி, அள்ளக்குறையா மகசூல் தரும், வறட்சியிலும் புரட்சி செய்யும் அதிசய நெல் ஐ.ஆர். 8, களம் நிறைக்கும் கருணா, வெற்றி தரும் ஜெயா, பத்மா, சன்னரகப் புதிய வித்து ஐ. ஆர் 20, 22, 'அண்ணா நெல்' என அழைக்கின்ற பெருமை பெற்ற மானாவாரிக்கு ஏற்ற குறைந்த வயதும், குறையாத மகசூலும், தருகின்ற 'அன்னபூரணா' ஆகியவைகள். 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'' அதனாலன்றோ 1967–68 ஆம் ஆண்டில் 76 ஏக்கரில் தொடங்கிய ஐ. ஆர். 8 நெல் சாகுபடி 1968–69-ல் 612 ஏக்கரிலும், 1969–70-ல் 14,863 ஏக்கரிலும் வளர்ந்து விரிவடைந்து, 1970-71 1,65,499 ஏக்கரில் சாதனையாக மிளிர்ந்து அமோக விளைச்சலை அள்ளித்தந்திருக்கின்றன. இலக்குகள் வழிகாட்டிகளே—இறுதியானவை அல்ல என்பதையுணர்ந்து இலக்குகளை மிஞ்சும் அரிய சாதனை 1971–72-ல் ஏறத்தாழ 5,01,294 ஏக்கரில் இதோ அங்கு நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது. இந்தப் புதுமைப் புரட்சியை வாழ்த்த வந்த இயற்கை அன்னை அண்மையில் மாமழை தூவினாள். மகிழ்ச்சிப் பெருக்கால்; ஊருணிகள், கண்மாய்கள் நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றை நிரப்பிதனது கடமையைச் செய்தாள். இதனால் ஒரு போக நெல் சாகுபடி இரு போகமாக ஆக ஏற்றதொரு வாய்ப்புக் கிடைத்தது. இனிய வாய்ப்பைப் பயன்படுத்தி மிகு விளைச்சல் தருகின்ற மேன்மை மிகு வித்துக்களை, குறுகிய காலத்தில் விளைச்சலைக் குவிக்கின்ற அரிய ரகங்களாம், கருணா, பத்மா, அன்னபூரணாவை இரண்டாம் போகமாய்ப் பயிரிட ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கேரள மாநிலத்திலிருந்து கூட ஏறத்தாழ 2,000 மூட்டை அன்னபூரணா விதை நெல் கொணர்ந்து விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்றது.

மிகு விளைச்சல் ரகச் சாகுபடித் திட்டத்தின் கீழ் நெல் வித்துக்களில் மட்டுமின்றி சிறுதானிய வித்துக்களிலும் சிரிய ரகங்கள் விளைச்சலை இரு மடங்கு மும் மடங்காய் உயர்த்தும் உயர்வள வித்துக்கள் சி.எஸ். எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு சோளம் புஞ்சையிலும் புரட்சி செய்யும் புதுக்கம்பு எச்.பி. 3 இவையெல்லாம் இறவையிலும் மானாவாரியிலும் ஏற்றவிடங்களிலெல்லாம் பயிரிடப்பட்டு 1970, 71-ல் 48,601 ஏக்கர்களிலும், 1971–72-ல் இதுவரை 1,17,993 ஏக்கரிலும் சாதனையாக மிளிர்கின்றன. அமோக விளைச்சல் ரகங்கள் தங்கள் அரிய சாதனைகளை நிகழ்த்த, விளைச்சலை வியத்தகு வண்ணம் குவிக்க, அவைகளை முறைப்படி பயிரிட வேண்டும்; உகந்த உரமிட்டுத், தகுந்த நீர் பாய்ச்சி, பயிர்ப்பாதுகாப்பைப்பக்குவமாய்ச் செய்து, கட்டுக்கோப்புக்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி பூஞ்சாள மருந்துகள் மற்றும் கடன் வசதி ஆகிய தேவைகளை உரிய காலத்தில் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளன. பாசன நீர்ப்பற்றுக்குறையை நீக்க, குறிப்பாக கிழக்கு இராமநாதபுர மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், புதுக்கிணறுகள் தோண்டியும் தரைமட்ட நீரூற்றுக்களைப் பயன்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பரந்து கிடக்கும் கடற்கரையோர மணற்பகுதியைப் பயன்படுத்தி இராமநாதபுரம், திருவாடானை வட்டங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வந்தவர்களுக்கு வாழ்வளிக்கத் தென்னந்தோப்பு வளர்க்கும் திட்டம் 1961-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகின்றது.

இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் நிலம் வழங்கி, தோப்பு வளர்க்கக் கடன் தந்து, தென்னை பலன்தரும்வரை, வாழ்க்கை உதவி நிதியீந்து, உதவி செய்யப்படுகின்றது. கடன் தென்னை நட்ட 11-ஆம் ஆண்டிலிருந்து தவணைகளில் வசூலிக்கப்படுகின்றது. மேலும் தனிப்பட்ட விவசாயிகள் தென்னை வளர்க்க ஏக்கருக்கு ரூ. 300 வீதம் ரூ. 3,000 வரை நீண்ட காலக்கடன் வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த இராமநாதபுரத்திலே தனித்துணை வேளாண்மை இயக்குநர் பணிபுரிகின்றார். இதுவரை ஏறத்தாழ 600 ஏக்கரில் தென்னை பயிரிட ரூ. 1,80,000 கடன் வழங்கப்பட்டுள்ளது.

கள்ளியும் முள்ளும் சூழ்ந்து கன்னிநிலமாய் பயனற்றுக் கிடந்த கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில், வளமற்ற நிலத்திலும் வளர்ந்தோங்குகின்ற, வறண்ட நிலத்தையும் தனக்கு வாய்ப்பாக்கிக் கொள்ளுகின்ற அந்நியச் செலவாணிதரும், விந்தை மிகு முந்திரி பயிரிடும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் முந்திரிச் சாகுபடி செய்வோருக்கு ஏக்கருக்கு ரூ. 150 விதம் ரூ. 3,000 வரை கடன் வழங்கப்படுகின்றது. 1970-71-ல் 2,827 ஏக்கருக்கு ரூ. 3·75 லட்சமும், 1971–72-ல் நவம்பர் முடிய 900 ஏக்கருக்கு 0·90 லட்சமும் கடன் வழங்கப்பட்டுள்ளது. காடாய், களராய்க் கிடந்த நிலங்களில் முந்திரி பூத்து ஓங்கி முறுவல் பூத்து நிற்பது கிழக்கு இராமநாதபுரத்தில் இன்று கண்கொள்ளாக்காட்சியாகும்.

இம்மாவட்டத்தில் நிலவும் பருத்திக்கு உகந்த வெப்பநட்ப நிலையைப் பயன்படுத்தி ஏக்கருக்கு ரூ. 250 விதம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வழங்கி, பருத்திச் சாகுபடியை விருத்தி செய்ய இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1970-71–ல் 27,000 ஏக்கர்களில் இறவைப் பருத்தி சாகுபடி செய்ய ரூ. 0·72 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சாத்தூர் திருவில்லிபுத்தூர் வட்டாரங்களில் மானாவாரிப் பருத்தி சாகுபடி செய்வோருக்கு உதவும் திட்டம் 1971-ஆம் ஆண்டு முதல் செயல்படுகின்றது.

1971–72-ல் 50,100 ஏக்கரில் மானாவாரிப் பருத்தி பயிரிட ரூ. 5·82 லட்சம் கடன் அளிக்கப்பட்டுள்ளது.

1971-ஆம் ஆண்டு தொடங்கிச் செயல்படுத்தப்படும் இத்திட்டம் நிலக்கடலை பயிரிடுவோருக்கு விதை, உரம், பூச்சி மருந்துகள், சாகுபடிச் செலவுத்தொகை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்க வழி செய்கின்றது.

இதைப்போன்ற கரும்பு வளர்ச்சித் திட்டம், பழத்தோட்டங்கள் அமைக்கக் கடன் வழங்கும் திட்டம், காய்கறி அபிவிருத்தித் திட்டம், ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. தரமுள்ள உயர்வள வித்துக்கள் தரவும், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள் அளிக்கவும், விண்ணின்று மருந்து தெளித்துப் பயிர்களை கண்ணின் மணிகளாய்க் காக்கவும், சிறப்பான திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. களர் நிலங்களும், அமில நிலங்களும் மிகுந்துள்ள இம்மாவட்டப் பகுதிகளில் நிலச் சீர்த்திருத்தமே பயனுள்ள பயிர்த்தொழிலுக்கு வழிகோலும் என்பதை உணர்ந்து, களர் நிலங்களைச் சீர்திருத்தத் தேவையான ஜிப்சமும், மிதமுள்ள 50 சதவிகிதம் கிரையம் கடனாகவும், இம்மாவட்ட விவசாயிகளுக்கு அமில நிலங்களைச் சீர்திருத்த வேண்டிய சுண்ணாம்பும் 50 சதவிதம், மானிய விலையிலும்




இராமநாதபுர மாவட்டம் மத்தாப்பையும், நெருப்புப்பெட்டியையும் நினைவுறுத்துவது மட்டுமல்ல வண்ண வண்ணப் படங்கள் தாங்கிய நாட்காட்டிகளையும் நினைவூட்டுகின்றன. உள்ளத்தை அள்ளும் ஓவியங்களையுடைய நாட்காட்டிகள் இங்கு இலட்சக்கணக்காக அச்சடிக்கப்படுகின்றன. இவை வடஇந்திய மக்களையும் கவர்கின்றன. அன்றியும் கடல்கடந்து மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, அரேபியா நாட்டு மக்களிடையேயும் இம்மாவட்ட நாட்காட்டிகள் இடம் பெறுவது நமக்குப் பெருமை அளிப்பதல்லவா?

அளிக்கப்படுகின்றது. சீர் திருத்த வேண்டிய நிலங்களில் ஒருங்கிணைந்த 100 ஏக்கர் பகுதியைத் தேர்ந்து அதற்கு ஜிப்சம், சுண்ணாம்பு, நிலச் சீர் திருத்தப் பொருட்களை இலவச மாக வழங்கி, விளக்கப் பண் ணையொன்று அமைக்கும் திட் டம், சாத்தூரில் செயல்படுத் தப்படுகின்றது. பரமக்குடியில் செயல்படும் மண் பரிசோதனை நிலையம் வேளாண் குடியின ருக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

மேலும் பின்தங்கியுள்ள இம் மாவட்டத்தின் நலன் கருதி, சென்னை வேளாண்மை இயக்க கத்தில் வேளாண்மை வளர்ச்சி கருதி தனித்துச் செயல்படும் திட்டக்குழு, இம்மாவட்டத்தில் ஒரு டிராக்டர் பழுதுபார்க்கும் நிலையம் அமைக்கவும், ஒரு நட மாடும் மண் பரிசோதனை ஊர்தி ஏற்படுத்தவும், தஞ்சையில் நடத்தியதுபோல், இங்கும் தரை மட்ட நீரூற்றுக்களைக் கண்டுபிடித் துப் - பாசனப் பற்றுக்குறை யைப் போக்கப் - பயன்படுத்த வும், நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகின்றது. இவை களைச் செயல்படுத்தும் காலம் விரைந்து வந்து கொண்டிருக் கின்றது. சிறு விவசாயிகளே சிறப்பாக மிகுந்துள்ள இம் மாவட்டத்தில் இத்திட்டங்க ளெல்லாம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்களாக விரைவில் அமையும். வறட்சி யிலும் வெற்றி பெற்ற பசுமைப் புரட்சி, இராமநாதபுர மாவட்டத்தை நன்னிறைவு பெறச் செய்து, தனது மக்களை அகதிகளாக அனுப்பிய துயர்தரு நிலை துடைத்து, இலங்கை போன்ற இடங்களிலிருந்து அகதி களாகத் திரும்பும் நமது மக்களுக்குத் தஞ்சமளித்து தலை நிமிர்ந்து நிற்கின்ற காட்சியை இன்று நாம் காணுகின்றோம்.

''தள்ளா விளையுளும் தக்காரும்
தாழ்விலாச்
செல்வரும் சேர்வதுநாடு''

என்ற இலக்கணத்திற்கு இந்த மாவட்டம் இன்று ஏற்றம் பெற்றிருக்கின்றது. இதைப் பார்க்கின்ற நம் உள்ளமெல் லாம் பரவசமடைகின்றது; இந்த வெற்றியை நினைக்கின்ற நெஞ்ச மெல்லாம் இனிக்கின்றது.

''பாலைவனம் சோலைவனம் ஆக
வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட
வேண்டும்''

என்ற கவிமணி கண்ட கனவு தமிழக அரசின் சாதனையால் நன வாகின்றது.

வளர்க ஐ. ஆர். 8 வாழ்க பசுமைப்புரட்சி!

(மண்டல வேளாண்மைத் துறை துணை இயக்குநர் அளித்த விவரங் களின் தொகுப்பு.)


# நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைடு போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தி யாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங் களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரி யைப் பயன்படு த்தும் வகையில் கீழ்த்திசையி லேயே இந் நிலையம்தான் முதலாவது.

கட்டிக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லிக்கோ லிடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படு வதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசை யையும் ஏந்தித் தர வல்ல இன்சுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஏவுனி, ரப்பர், ...

ரசாயனப் பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார் பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸைல் ...

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—1

# அரிசன பிற்பட்ட இனங்களுக்கு

இராமநாதபுர மாவட்டத்தில் 1971–72 நிதியாண்டில் அரிசன நலத்துறையிலும், பிற்பட்டோர் நலத்துறையிலும் 1971-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் முடிய, துறை தோறும் ஆற்றியுள்ள சாதனைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இம்மாவட்டத்தில் அரிசன நலத்துறையினரால் 13 அரிசன நல ஆரம்பப் பள்ளிகளும், 3 அரிசன நல உயர்தர ஆரம்பப் பள்ளிகளும் மலைவாழ் சாதியினரின் குழந்தைகளுக்கான 1 ஆரம்பப் பள்ளியும், மேலும் கள்ளர், விமுக்த வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக 6 ஆரம்பப் பள்ளிகளும், ஒரு உயர் தர ஆரம்பப் பள்ளியும் ஆக 24 பள்ளிகள் நடத்தப் படுகின்றன. இவைகளில் 2,909 மாணவர்களும், 1,628 மாணவியரும் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பள்ளிகளின் பராமரிப்பிற்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3,43,250-ல் இதுவரை ரூ. 2,23,470.25 செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இம்மாவட்டத்தில், அரிசனம், விமுக்த வகுப்பினர் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கான 73 விடுதிகள் நடைபெற்று வருகின்றன. இவைகளில் 4,201 மாணவ மாணவியர் தங்கிப் பயனடைகின்றனர். இவைகளின் பராமரிப்பிற்காக இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11,01,675ல் இதுவரை ரூ. 7,04,303 செலவிடப் பட்டுள்ளது.

அரிசன விமுக்த பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் கல்வி உயர்விற்காக, அரசு உபகாரச்சம்பளம் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் இதுகாறும் 24,430 அரிசன மாணவ மாணவியரும், 15,804 விமுக்த வகுப்பினரும், 17,269 பின் தங்கிய வகுப்பு மாணவ, மாணவிகளும் உபகாரச்சம்பளம் பெற்றுக் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 54,09,418.

அரிசன நல பிற்பட்டோர் நலத்துறையினராலும் மற்றும் பஞ்சாயத்து, இதரப் பள்ளிகளிலும் கல்வி கற்கும் 14817 அரிசன சிறுவர், சிறுமியருக்கு மதிய உணவு அளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,08,900. செலவிடப்பட்ட தொகை ரூ. 3,50,308.

இவ்வாண்டில், சிவகெங்கை, முதுகுளத்தூர், வட்டங்களில் வாழும், 22 அரிசன ஏழை விவசாயிகளுக்கு உழவுமாடுகள் வழங்கப்பட்டன. இதற்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11,000. இது செலவிடப்பட்டுள்ளது

அரிசனங்களுக்கு விவசாயக் கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 71,000 ஒதுக்கப்பட்டதில் இதுவரையில் 43,500 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 63 கிணறுகள் வெட்டப்படுகின்றன.

இவ்வாண்டில் அரிசனங்களின் குடி தண்ணீர் வசதிக்காக 66 கிணறுகள் வெட்டப்படுகின்றன. இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,60,000; இதுவரை செலவான தொகை ரூ. 1,00,016.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ரூ. 60,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5 கிராமங்களில் 64 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வீடு ஒன்று ரூ. 940 மதிப்பீட்டில் மலிவான வீடு கட்டும் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டப்படுகின்றன.

அரிசன விடுதிகளில், தங்கிக் கல்வி பயிலும், மாணவ மாணவியருக்கு உடைகள் வழங்குவதற்காக ரூ. 1,03,010, ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 2,104 மாணவிகளுக்கும், தீபாவளிக்கும், பொங்கலுக்கும் 1,402 மாணவருக்கு உடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 1,01,856

இம்மாவட்டத்தில் 3 சமுதாய நல மன்றங்கள் செயல்படுகின்றன, அவைகளுக்காக ஆண்டுதோறும் ரூ. 20,000 செலவிடப்படுகிறது.

## அரசு செய்துள்ள அரும்பணிகள்

# பி.ஆர்.எஸ்-72

சம்பா அல்லது தாளடி நெல் அறுவடை முடிந்த பிறகு, கோடையில் நிலத்தைத் தரிசாகப் போடாமல் ''பி.ஆர்.எஸ். 72'' என்ற ரகப் பருத்தியைப் பயிரிட்டால், உழவர் பெருமக்களின் வருவாய் பெருகும். அத்துடன் நம் நாட்டில் தற்பொழுது நிலவி வரும் பருத்திப் பற்றுக்குறையும் ஓரளவிற்கு நீங்கி, அந்நியச் செலாவணியும் மீதமாகும்.

''பி. ஆர். எஸ். 72'' என்ற நன்செய் தரிசுக்கு ஏற்ற பருத்தியை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கோயம்புத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தினர் கண்டுபிடித்து, 1966 ஆம் ஆண்டில் சாகுபடி செய்வதற்காக வெளியிட்டனர். இந்த ரகத்தின் வயது 120 முதல் 130 நாட்களாகும். இந்த ரகப் பருத்தியைக் கொண்டு 40-ஆம் எண் நூல் வரை நூற்க முடியும். இதன் அரைவைத் திறன் 36 சதமாகும். பி.ஆர்.எஸ். 72 பருத்திச் சாகுபடி செய்ய, நெல் அறுவடைக்குப்பின் உழவு செய்ய வேண்டிய அவசியமில்லை. நெல் அறுவடைக்குப் பின், உடனடியாக வயலில் ஈரம் இருக்கும் போதே விதைகளை நேரடியாக ஊன்றி விடலாம். இவ்வாறு செய்வதால் பி. ஆர். எஸ். 72 பருத்தி சாகுபடி செய்ய ஆரம்பச் செலவும் மீதமாகிறது.

**விதைத்தல்.**

ஒரு ஏக்கருக்கு 9 கிலோ விதைகளை ஊன்ற வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் அக்ரசான் மருந்து வீதம் கலந்தபின்பே விதைகளை ஊன்ற வேண்டும். விதைகளை வரிசை வரிசையாக ஊன்ற வேண்டும். வரிசைக்கு வரிசை 1½ அடி இடைவெளியும், வரிசையில் குழிக்குக் குழி 9 அங்குலம் இடைவெளியும் விட்டு, குழிக்கு 3 விதைகள் வீதம் இட்டு ½ அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். நெல்வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே விதைகள் முளைத்துவிடும். நிலம் காய்ந்திருக்குமானால் தண்ணீர் விட்டு, அதன்பின் விதைகளை ஊன்ற வேண்டும்.

**15-ஆம் நாள் :** 220 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 150 மில்லி லிட்டர் மெட்டாசிஸ்டாக்ஸ் அல்லது எக்காடின் அல்லது ரோகார் மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, கையால் இயக்கும் தெளிப்பான் மூலம்தெளிக்கவேண்டும். விசைத் தெளிப்பானுக்கு 50 லிட்டர் தண்ணீரில் மேற்கூறப்பட்ட அளவு மருந்தைக் கலக்க வேண்டும்.

**21-ஆம் நாள் :** வயலைக் களைக் கொட்டால் கொத்திவிட்டு, களை எடுத்த பின்பு, ஏக்கருக்கு 30 கிலோ டை அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களைக் கலந்து செடிகளைச் சுற்றிலும் இட்டு, மண் அணைத்து நீர்பாய்ச்ச வேண்டும்.

**25-ஆம் நாள் :** 50 மில்லி லிட்டர் என்டிரின் மருந்தையும், 30 மில்லி லிட்டர் டைமெக்ரான் மருந்தையும், 280 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பானுக்கு 70 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்கவும்.

**31-ஆம் நாள் :** தண்ணீர் பாய்ச்சவும்.

**40-ஆம் நாள் :** 1·200 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 600 கிராம் கந்தகத் தூளையும் 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளித்தல் வேண்டும்.

**45-ஆம் நாள் :** இரண்டாம் முறையாகக் களை எடுத்து, ஏக்கருக்கு 31 கிலோ யூரியா வீதம் இரசாயன உரமிட்டு, மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**55-ஆம் நாள் :** 600 மில்லி என்ட்ரின் மருந்தையும், 2.160 கிலோ தாமிரக் கலவை மருந்தையும், 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

**60-ஆம் நாள் :** தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**70-ஆம் நாள்:** 1·200 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 240 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தையும், 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

**75-ஆம் நாள் :** தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**85-ஆம் நாள் :** 1·200 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 600 கிராம் நீரில் கரையும் கந்தகத் தூளையும், 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

**90-ஆம் நாள் :** தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 95-ஆம் நாட்களுக்குப் பிறகு தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விட வேண்டும்.

**100-வது நாள் :** 1·400 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 280 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தையும், 560 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 140 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

அறுவடை : வாரம் ஒரு முறை காலை நேரத்தில், பருத்தியை எடுக்க வேண்டும். சேகரித்த பருத்திகளை தூசு நீக்கி, காய வைத்துச் சேமிக்கவேண்டும். 120 முதல் 130 நாட்களில் பருத்தி எடுப்பது முழு அளவில் முடிந்து விடும். அறுவடை முடிந்த பின் பருத்திச் செடிகளை மடக்கி உழுது, அடுத்துப் பயிரிடவிருக்கும் குறுவை நெல்லுக்குத் தழை உரமாக்கி விடலாம். ஒரு ஏக்கரிலிருந்து குறைந்தது 400 கிலோ பருத்தி கிடைக்கும். ஒரு ஏக்கர் பி. ஆர். எஸ். 72 பருத்தி மூலம் சராசரியாக ரூபாய் 400 வரை நிகர இலாபம் கிடைக்கக் கூடும். எனவே, சம்பா அல்லது தாளடி நெல் அறுவடைக்குப் பிறகு மேற்கூறிய முறையில் பி. ஆர். எஸ். 72 பருத்தி பயிரிட்டு பலனடையுமாறு வேண்டுகிறோம்.




தமிழகத்து மாவட்டங்களிலேயே மிக நீண்ட கடற்கரையுள்ள மாவட்டம் இராமநாதபுர மாவட்டமேயாகும். இதன் கடற்கரையின் நீளம் 160 மைல். உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பு சுமார் ஏறத்தாழ 78,000 ஏக்கர்.

இராமநாதபுர மாவட்டத்தில் முக்கிய தொழில்களில் மீன் பிடிக்கும் தொழிலும் ஒன்று. இத்தொழிலில் ஏறத்தாழ 25,000 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. தமிழக அரசு அந்த மீனவர்கள் தொழில் நடத்துவதற்கும் தொழிலுக்குத் தேவையான கருவிகள் வாங்குவதற்கும் கூட்டுறவு முறையில் கடன்களும், மானியங்களும் வேறுபல உதவிகளும் அளிக்கின்றது. தொழிலுக்குத் தேவையான துணைக்கருவிகள் வாங்குவதற்கும் பத்தாண்டுத் தவணைகளில் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடன்களையும் ஐந்தாண்டுகளில் செலுத்தக்கூடிய குறைந்த காலக் கடன்களையும் அரசு தாராளமாக வழங்குகின்றது. இப்படிக் குறைந்த காலக் கடனாக, 1966–67ல், ரூ. 67,000; நீண்ட காலக் கடனாக ரூ. 20,300; 1967–68ல் நீண்டகாலக் கடனாக ரூ. 27,000; 1968–69ல் குறைந்த காலக் கடனாக ரூ. 5,000; நீண்டகாலக் கடனாக ரூ. 63,000; 1969–70ல் நீண்டகாலக் கடனாக ரூ. 10,000; 1970–71ல் நீண்டகாலக் கடனாக ரூ. 5,000; மீனவர்கள் வாழ்வில் ஏற்றம்பெறத் தக்கவகையில் வழங்கியுள்ளது. அரசு, இவ்வாறு அனுமதிக்கும் கடனை, மீனவர்கள் தாங்கள் உறுப்பினராக உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகப் பெறுகின்றனர். கடன் பெற்ற மீனவர்களிடமிருந்து மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கூட்டுறவுச் சங்கங்கள் வசூலித்து, ஆண்டுக்கு ஒரு முறை அவை அரசாங்கத்திற்குச் செலுத்துகின்றன.

கடலையே நம்பி வாழும் மீனவர்களுக்கு அரசு இவ்வாறு கடன்கள் உதவுவதோடு, தீ விபத்து, புயல், கடற்கொந்தளிப்புப் போன்ற எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டால், வீடிழந்தோர் வீடு கட்டிக் கொள்ளவும், வலைகளை இழந்தோர் புது வலைகள் வாங்கிக் கொள்ளவும் அரசு, மானியம் வழங்குகிறது.

> **மீன்வளம்**
>
> தமிழகத்தில் ஆண்டு தோறும் 3,00,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இந்தியாவெங்கும் ஆண்டு தோறும் பிடிக்கப்படும் மீன்களின் அளவு 14,00,000 டன்கள். இந்தியாவில் பிடிக்கப்படும் மொத்த மீன்களில் தமிழகத்தில் பிடிக்கப்படும் மீன்களின் அளவு சுமார் 21 சதவிதம்

கடலில் மீன் பிடிக்கும்போது அவர்கள் இறந்துவிட்டால், அவர்தம் குடும்பத்திற்கு 300 ரூபாய் உதவி வழங்கப்பட்டு வந்ததைத் தமிழக அரசு 1970–71 லிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது.

1970–71ல் தீ விபத்தின் காரணமாக வீடிழந்த 50 மீனவர்கள் குடும்பங்கட்கு ஒரு குடும்பத்திற்கு 100 ரூபாய் வீதம் 5,000 ரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளது.

1967ல் ஏற்பட்ட புயலில் நூல் வலை இழந்தவர்கள் புதிய வலைகள் வாங்கிக் கொள்வதற்காக ரூ. 1,60,387 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதுபோல் நைலான் வலையிழந்தவர்களுக்கு ரூ. 1,96,584 மானியமாக வழங்கப்பட்டது. இதே விபத்தில் படகுகளை இழந்தவர்கள் புதிய படகுகளை வாங்கிக் கொள்ள ரூ. 42,700 வழங்கப்பட்டுள்ளது.

1970–71ல் விபத்துக்குள்ளாகி உயிரிழந்த 6 பேர்களின் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 1,000 ரூபாய் வீதம் 6 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது.

இவ்வாறு விபத்தில் பொருள்களை இழந்தவர்களுக்கு உடனடி நிவாரணமாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 50 வீதம், 2,03,600 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்குத் தேவையான விசைப் படகுகளைத் தயாரிப்பதற்காக இந்திய நார்வே திட்டம் என்னும் பெயரில் மண்டபத்தில் ஒரு படகு கட்டும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தொழிற்சாலை 1966–67ல் உற்பத்தி தொடங்கி 1970–71 வரை 32' நீளமுள்ள 136 விசைப் படகுகளையும், 43' நீளமுள்ள 3 விசைப் படகுகளையும் தயாரித்துள்ளது. இந்த விசைப் படகுகளை இயக்குவதற்காக மீனவர்களுக்கு 10 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தலா 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.





மற்றும், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களைப் பதப்படுத்தி இரண்டு மூன்று நாட்கள் வரைகூடப் பாதுகாத்து வைப்பதற்காகக் குளிர் பதன அறைகள் மண்டபம், இராமேஸ்வரம், கீழக்கரை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் மீனை வைத்துக் கொள்வதற்காக அரசு மிகக் குறைந்த வாடகையை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது.

கடந்த நான்காண்டுகளில் மீனவர்களுக்கு 73 விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. 4 அல்லது 5 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவிற்கும் இவ்வாறு படகுகள் கடனாக வழங்கப்படுகின்றன. கடனாக வழங்கும் படகுகளை, அரசு தருகிற மானியத்தின் பயனாக, 48,000 ரூபாய் மதிப்புள்ள படகை 32,000, ரூபாய்க்கும், 68,000 ரூபாய் மதிப்புள்ள படகை 43,000க்கும் 75,000 ரூபாய் மதிப்புள்ள படகை 47,000-க்கும் மீனவர்கள் பெறுகின்றனர்.

முன்னர் சங்குக் குளிப்பதை அரசே ஏற்று நடத்திக் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுத்து வந்தது. இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 5 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்து வந்தது. தற்போது, 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து உரிமத் தொகையாகத் தலா 10 ரூபாய் மட்டும் கட்டுகிற எல்லா மீனவர்களும் சங்குக் குளித்து, கிடைக்கும் முழுப்பயனையும் அவர்களே அனுபவித்துக் கொள்ள ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வளவு வசதிகளையும் செய்து தந்துள்ள அரசு, மீனவர் குடியிருப்புக்கென 1970–71ல் 30 குடியிருப்புகளுக்கு ரூ. 30,000 அனுமதித்து வீடுகட்டும் வேலை நடைபெற்று வருகிறது. ஒரு வீடு கட்டுவதற்கு அனுமதித்துள்ள 1,000 ரூபாயில், 300 ரூபாய் மானியம் மீதி 700 ரூபாய் நீண்டகால வட்டியில்லாக் கடன்.

மீனவர்கள் பயனுள்ள முறையில் பொழுது போக்கவும், புயல் முன்னறிவிப்புப் போன்ற செய்திகளை அறிந்து கொள்ளவும் பயன்படும் வகையில், ரூ. 60,000 செலவில் மூன்று வெவ்வேறு ஊர்களில் மன்றங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்களில், புயல் முன்னறிவிப்புச் செய்திகளை முன்கூட்டியே அறிவிக்கும் அபாயச் சங்குகளும், வானொலிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, கடலில் பயணம் செய்கின்றபோது விபத்து ஏற்பட்டால் தற்காத்துக் கொள்ள உயிர் காப்புச் சாதனங்களாகிய ரப்பர் வளையங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மீன், கருவாடுகளை நீண்ட தூரங்களுக்கு அனுப்ப, மீன் வளத்துறையின் சார்பில் இரண்டு உந்துகள் விலைக்கு வாங்கப்பட்டுத் தேவைப்படும் போது மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கெனக் குறைந்த வாடகை வசூலித்துக் கொள்ளப்படுகிறது.

இது தவிர, மீன் வளத்திற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள இராமநாதபுர மாவட்ட மீன் வளப்பிரிவு, கடற்கரையல்லாத உள்நாட்டுப் பகுதிகளில் மீன் வளர்க்க—மீன் வளத்தை அதிகரிக்கப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.



ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக ஊராட்சிகளின் மீன் வளர்ச்சிக்கும், ஊராட்சி மீன் பண்ணைகளுக்கும் ஆண்டுதோறும் மானியம் வழங்குவதோடு, புது இன மீன் குஞ்சுகளையும் வழங்குகிறது.

தனியார்களுக்கு மீன் குஞ்சுகள் தேவைப்பட்டால், குறைந்த விலையில் மீன் குஞ்சுகள் வழங்குவதோடு, வளர்ப்பு முறைகளும் கற்பிக்கப்படுகின்றன.

இவை தவிர, இராமநாதபுர மீன்வளப் பிரிவுக்குச் சொந்தமான காளையார்கோயில், காரைக்குடி, விருதுநகர், கல்லல் ஆகிய ஊர்களில் உள்ள சுமார் 10 குளங்களில் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு, அங்கு, புது இன மீன்கள் வளர்க்கப்படுகின்றன. அவை, பொது மக்களுக்குக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

இராமேசுவரத்தில் 12 லட்சம் ரூபாய் செலவில் மீன்பிடி துறையொன்று கட்டப்பட்டுள்ளது. மேலும், மண்டபத்தை மீன் அபிவிருத்திக் கேந்திரமாகவே மாற்ற மாபெரும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பல கோடி ரூபாய் செலவாகும் எனினும், விரைவில் வேலைகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மண்டபத்தில் ரூ. 3.5 லட்சம் செலவில் 50 அடி நீளமுள்ள விசைப்படகு ஒன்று கட்டப்பட இருக்கிறது. மேலும் 43½ அடி நீளமுள்ள மீன் பிடி விசைப்படகு மூன்றும் கட்டப்பட இருக்கின்றன.

அடுத்து, மண்டபத்திலிருந்து, பாம்பனுக்குத் தற்போதுள்ள பாலத்திற்கு இணையாக ஒரு நடை பாதைப் பாலம் அமைக்க அரசு ரூ. 6 கோடி அனுமதித்துள்ளது. இந்த வேலை இவ்வாண்டு தொடங்கப்படும். சாலைப் போக்குவரத்து இல்லாத இராமேசுவரத்திற்கும் மண்டபத்திற்கும் இடையே அமையப்பெற விருக்கும் இந்தப்பாதையின் மூலம் இரண்டுக்குமிடையே சாலைப் போக்குவரத்துத் தொடங்கும்—போக்குவரத்து இன்னும் பன்மடங்கு பெருகும் என்பதிலும், இந்த மாவட்டத்தில் மீன் வளம் மிகச் சிறந்து, மீனவர் வாழ்வு மேலும் நல்ல முறையில் உயர்ந்து செழிக்கும் என்பதிலும் ஐயமில்லை!

## விலங்குச் சாலையில் வேலை



ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் விலங்குச் சாலையில் வேலைபார்க்க விரும்புகிறவர்களுக்கு மூன்று ஆண்டுப் பயிற்சி தரப்படுகிறது. அதன் பிறகு, யானையின் நகங்களை அரத்தினால் தேய்த்து மெருகிடும் தேர்வு வைக்கிறார்கள். அந்தத் தேர்வில் வெற்றி பெற்றால்தான் வேலை கிடைக்கும்.

## வெண்பாப் போட்டி-29

முறிப்பு:

காரம் இனித்திடுமே காண்

முடிவு நாள்: 1—3—1972

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி).
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு—

நேரிசை வெண்பாக்களே அனுப்பப்படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

# உள்ளொளி பெருக்கும் வெள்ளிவிழாக் கல்லூரிகள்



காரைக்குடி அழகப்பா கல்லூரி

இராமநாதபுர மாவட்டத்தில் இவ்வாண்டில் மூன்று முதல்தரக் கலைக்கல்லூரிகள் வெள்ளிவிழாக் காண இருக்கின்றன.

1947-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை இராமநாதபுர மாவட்டத்தில் கல்லூரி ஏதும் இல்லை. பிற துறைகளைப் போலவே உயர்கல்வித் துறையிலும் இம் மாவட்டம் மிகப் பின்தங்கியே நின்றது. திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்களில் அமைந்த கல்லூரிகளை நாடியே இம்மாவட்ட மாணவர்கள் செல்ல வேண்டியதாயிற்று. நாடு உரிமை பெற்றதைத் தொடர்ந்து, உயர் கல்வி பெற வேண்டுமென்ற நாட்டமும் ஊட்டம் பெறத் தொடங்கியது. ஆனால், அரசாங்கமே கல்லூரிகளை ஆங்காங்கு நிறுவும் அளவுக்கு நிதி வசதி இடம் தரவில்லை. எனவே, கல்விப் பணியில் ஆர்வமிக்க நல்லன்பர்களும், நிறுவனங்களும், கல்லூரிகளை நிறுவ முன் வந்தால் பல்கலைக்கழகம் ஆன உதவிகளை அளிக்கும் என்றார் முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார். இந்த அறைகூவலை ஏற்று மாவட்டத்தின் மூன்று பகுதிகளில் மூன்று கல்லூரிகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இராமநாதபுர மாவட்டத்தின் வடபகுதியில் பெரு நகரமான காரைக்குடி, சிவகங்கை, கிழக்குப் பகுதியில் வணிகநகரமாகிய விருதுநகர் எனுமிடங்களில் இக் கல்லூரிகள் தோன்றின.

கல்வித் துறைக்கே தன் செல்வமனைத்தையும் அள்ளி வழங்கிய வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார்—காரைக்குடியில் நிறுவிய கல்லூரி அழகப்பா கலைக்கல்லூரி. ஏறத்தாழ மூவாயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் 1947-ல் கால்கோளிடப்பெற்ற இக்கலைக் கல்லூரி, பல்துறைச் சிறப்புக்களைக் கொண்டு விளங்கியது. நிறுவப்பெற்ற ஒருசில ஆண்டுகளுக்குள்—தன் வழியாகவே பல கல்வி நிலையங்கள் சூழ்ந்தமைய இக்கலைக்கல்லூரி இடம் தந்தது. அழகப்பா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, அழகப்பா பொறியியற் கல்லூரி, அழகப்பா தொழில் நுணுக்கப்பள்ளி, அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி என்பனவும், மத்திய மின்சார ரசாயன ஆராய்ச்சிக் கூடமும் அடுத்தடுத்துத் தோன்றின. காரைக்குடியையே ஒரு கலை வளர் பண்ணையாக்கிய அழகப்பா கலைக்கல்லூரியில் மட்டும் இப்போது இரண்டாயிரம் மாணவர்க்கு மேல் பயில்கின்றனர். பட்ட வகுப்பில், கலையியல்—அறிவியல் துறைப்பிரிவுகள் அனைத்தும் உள்ளன. முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் தமிழ் வணிகம் என்பன கற்பிக்கப்படுகின்றன. அழகப்பா பொறியியல் கல்லூரி கடந்த சில ஆண்டுகளாக அரசினர் கல்லூரியாக இயங்கி வருகின்றது.

வீரம் விளைத்த நிலம்—சிவகங்கைச் சீமை. பாரம்பரியமாக மறக்குல மக்கள் வீறுபெற விளங்கிய இப்பகுதி—கல்வித் துறையில் கடைநிலையில் உழன்றது. இக்குறையினைக் களைய முன் வந்தார் சிவகங்கை மன்னர் சண்முகராஜா அவர்கள். அவரது தந்தையார் ராஜா துரைசிங்கம் அவர்கள் நினைவாகத் துவக்கப்பெற்ற இக் கல்லூரி 1951 வரை 'கௌரி விலாசம்' எனப்படும் அரண்மனையிலேயே இயங்கி வந்தது. 1951-ல் புதிய கட்டடங்கள் அமைந்தன. ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் பயிலும் இக்கல்லூரியில் வரலாறு, வணிகம், பொருளாதாரம் முதலிய கலையியற் பாடங்களும் எல்லாவகை அறிவியற் பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. மிகப் பின்தங்கிய பிராந்தியம் ஒன்றில் உயர்கல்வி அளிப்பதை ஒரு தொண்டாகக் கருதிப் பணியாற்றுவதில் இக்கல்லூரி முன்னிடம் பெறுகிறது.

வாணிகப் பெருநகரமாக வளர்ந்து வந்த விருதுநகர்ப் பகுதியில் கல்லூரி ஒன்றில்லாக் குறையைக் களைய அன்பர் பலர்

முன்வந்தனர். 1947-ல் கோவில்பட்டியில் கூடிய நாடார் மகாஜன சங்கத்தில் கல்லூரி நிறுவ இரண்டு இலட்ச ரூபாய் களை நன்கொடை தருவதாக உயர்திரு செந்திக்குமார நாடார் அறிவிக்க திரு வி. வி. ராமசாமி, திரு டபிள்யு. பி. ஏ. சந்திரசேகரன் முதலியோர் செயற்குழு அமைக்க, விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி எழுந்தது. அருப்புக்கோட்டை நெடுஞ்சாலைக்கருகில் உள்ள பெரியதொரு இடத்தில் கட்டடங்கள் கட்டப் பெற்றன. 1951-ல் கல்லூரி பொலிவு பெற்றது. புகுமுக வகுப்பு முதல் முதுநிலை வகுப்பு வரை, ஆராய்ச்சித் துறைகளுடன் அமைந்த இப்பெருங் கல்லூரியில் 2,500 மாணவர் வரை பயில்கின்றனர்.



சிவகங்கை அரசர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி

வெள்ளிவிழாக் காணும் இம்மூன்று முதனிலைக் கல்லூரிகளும், இராமநாதபுர மாவட்டத்தின் மூன்று முக்கிய பகுதிகளில் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆற்றிய அரும்பணியின் விளைவாக அப்பகுதியில் உயர்கல்வி பெறுவாரின் எண்ணிக்கைமிகவும் பெருகியுள்ளது. இதன் பயனைத் திறமான கல்விபெற்ற புதிய தலைமுறை ஒன்று உருவாகியுள்ளது. இவ்வகையில் நற்பணி யாற்றிவரும் இந்தக் கல்லூரிகள் மூன்றும், வரும் ஆண்டுகளில் புதிய புதிய கலைத் துறைகளை மேற்கொண்டு, பல்லாற்றானும் பயன்தந்து பொன் விழாக்கோலம் பூணுமாறு வாழ்த்துவோமாக!

## இராமேஸ்வரத்தில் பனை ஓலைத் தொழில்

இராமேஸ்வரத்தில் பனை மரங்கள் மிகுதி; எனவே பனை ஓலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் மிக அதிகம். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பனை ஓலைத் தொழிலாளர்கள் ஏற்கெனவே '**கண்ணிப்பெட்டி**' எனப்படும் ஒருவகைப் பெட்டிகளை மட்டுமே செய்து வந்தனர். இவர்களுக்குத் தொழில் நுணுக்கப் பயிற்சியளித்து, நல்வாழ்வு நல்கும் நோக்கத்தோடு தமிழக அரசு, கடந்த 1968 ஏப்ரல் திங்களில் 'அரசினர் பனை ஓலைப் பயிற்சி நிலையம்' என்னும் பெயரில் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தது. இங்கு, ஒவ்வோராண்டும் 20 பேருக்கு ஓராண்டுக் காலப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்குத் தலா 50 ரூபாய் உபகாரச் சம்பளம் பெறுகின்றனர்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த பெண்கள், இங்கேயே ஒய்வு நேரங்களில் பல்வேறு பனை ஓலைக் கூடைகளும், அழகுப் பொருள்களும் செய்கின்றனர். இவர்கள் மாதம் ஒன்றுக்குத் தலா 75 ரூபாய் வரை சம்பாதிக்கின்றனர்.

இந்நிலையத்தில் செய்யப்படுகிற பனைஓலைப் பொருள்கள், உள்ளூரில் விற்பனையாகின்றன. இவை தவிர, டில்லி முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இராமேஸ்வரம், அரசினர் பனைஓலைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் பலரும் சேர்ந்து, பனை ஓலை உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். இச்சங்கம் இன்னும் சில வாரங்களில் செயல்படத் தொடங்கும். இதனால் இராமேஸ்வரத்தில் பனை ஓலைத் தொழில் மேலும் சிறப்பான முறையில் வளரும் என்பதோடு, பனை ஓலைத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெறும் என்றும் உறுதியாக நம்பலாம். இது போன்று, மறவமங்கலம், கமுதி, இராமநாதபுரம், தேவகோட்டை முதலிய ஊர்களிலும் பனை ஓலைத்தொழிலாளர்களுக்குச் சங்கங்கள் உள்ளன.



# செல்வி கண்ணுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

**தங்கள் ஓய்வு நேரத்தைப்** பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெறலாமே ! **ஆமாம் செல்வி கண்ணு** தனது ஓய்வு நேரத்தைச் **சிறுசேமிப்பு முகவராகப்** பணியாற்றுவதில் செலவிட்டார்.

**மேலே உள்ள படத்தைப் பாருங்கள்.** 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி **சுசிலா ரோஹட்கி** யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கண்ணுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறிவீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
**தேசிய சேமிப்பு நிறுவனம்**
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
தமிழ்நாடு அரசு



# தமிழ்நாடு அரசின் தரமான 'சிமெண்ட்' ஆலை

தமிழகத்தில் உள்ள 7 சிமெண்ட் தொழிற்சாலைகளில் இரண்டு தொழிற்சாலைகள் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளன. அவற்றுள் அரசுத் துறையில் அமைந்த முதல் சிமெண்ட் தொழிற்சாலை இராமநாதபுர மாவட்டம் ஆலங்குளத்தில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ்தான்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

இந்தத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 1,200 டன் சிமெண்ட் தயாரிக்ககிறது. இப்போது அங்கே 762 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். உற்பத்தித் திறனை 4 லட்சம் டன்களாக உயர்த்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

அரசுத்துறையில் அமைக்கப் பெற்ற முதல் சிமெண்ட் தொழிற்சாலை தரமே உருவான-தரத்தில் உயர்ந்த சிமெண்டை உற்பத்தி செய்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இப்பொழுது இங்கு தயாராகும் சிமெண்ட் கேரளா, மைசூர், டெல்லி, கல்கத்தா முதலிய பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை தயாரிக்கும் அரசு சிமெண்ட்டுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல—முதல் ஆண்டிலேயே இலாபம் சம்பாதித்துள்ளது தமிழ்நாடு சிமெண்ட்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு சிமெண்ட், தொழிற்சாலையில் சிமெண்ட் குழாய்கள் தயாரிக்கத் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இதனால் மேலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

---

## இராமநாதபுர மாவட்டத்தில் கோயில்கள்












ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அதன் விவசாய உற்பத்தியும் தொழில்வளமுமே முக்கியம். தமிழ்நாடு பெரும்பாலும் விவசாய நாடே என்பதை நாமறிவோம். எனவே, தமிழ்நாடு உயர வேண்டுமெனில் விவசாயம் செழித்தோங்க வேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற நிலம் உழவனுக்குச் சொந்தமாய் இருக்க வேண்டும் என்பது அடிப்படை உண்மை.

நிலமில்லாத ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சாகுபடிக்குரிய நிலங்களை உரிமையாக்குவதும் குடியிருக்க மனையற்றோருக்கு வீட்டு மனைகள் வழங்குவதும் தமிழக அரசின் தலையாய கொள்கைகளாகும்.' இக்கொள்கைகளின் அடிப்படையில் அரசும், அதன் அலுவலர்களும் தீவிரமாகச் செயலாற்றியதன் பயனாக நிலம் ஒப்படை செய்யப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் விவரங்களை இம்மாவட்டத்தில் மாதந்தோறும் அச்சிடப்பெற்று வெளியிடப்படும் புத்தகங்கள் எடுத்துக் காட்டும்.

தமிழக அரசு, நிலமற்ற ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தரிசாய்க் கிடக்கின்ற புறம்போக்கு நிலங்களை விரைவாக ஒப்படை செய்ய வேண்டுமென்று பணித்தது. அத்துடன் ஏழைக் குடிமக்கள் குடியிருக்க வீட்டு மனைகளும் வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இப்பணிகளை விரைவாகவும், நல்ல முறையிலும் செயல்படுத்தத் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பெற்று அவர்கள் 1969-ஆம் வருடம் மே மாதம் முதல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

---




இராமநாதபுர மாவட்டத்தில் முனைப்புக் குடும்ப நலத் திட்ட இயக்கம் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி துவங்கி நவம்பர் மாதம் 22-ஆம் தேதி முடிவடைந்தது. அக்டோபர் 1-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை கிராமங்களில் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட்டது. அக்டோபர் 16-ஆம் தேதி முதல் நவம்பர் 22-ஆம் தேதி முடிய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. இம்மாவட்டத்தில் உள்ள 32 அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் எல்லா அரசினர் மருத்துவ மனைகளிலும் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. 38 நாட்களில் 9,294 ஆண்களுக்கும், 991 பெண்களுக்கும் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. இது தவிர, 657 பெண்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டது.

இந்தத் தீவிர இயக்கத்தின் போது சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 1,038 ஆண்களுக்கும், 56 பெண்களுக்கும் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, 48 பெண்களுக்குக் கருத்தடை வளையமும் பொருத்தப்பட்டுத் தமிழ் நாட்டிலேயே மாபெரும் சாதனையை முதன்முதலில் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# உருவிலே சிறியது உலகிலே சிறந்தது!

தமிழரின் சாதனைக் கோர் எடுத்துக் காட்டாகத்திகழ்கிறது மினி - மின்சாரக் கணக்கிடும்கருவி (Mini —Electronic Calculator). அதிசய மனிதர் திரு ஜி. டி. நாயுடு அவர்களின் அற்புதப் படைப்புகளில் ஒன்றுதான் இது!

எட்டு இலக்கம் வரை கூட்டலா, கழித்தலா, பெருக்கலா, வகுத்தலா, எந்தக் கணக்கானாலும் சரி, $\frac{2}{10,00,000}$ விநாடி நேரத்தில் கணக்கிட்டுக் கொடுத்து விடுகிறது இந்த அதிசயக் கருவி. உலகிலேயே மிகச்சிறிய கணக்கிடும் கருவி இதுவரை, இதுதான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஒரு சிகரெட் பெட்டியை விடச் சற்றே பெரிய அளவில் இருக்கிறது இக்கருவி. மிகவும் சிறியதாகவும், குறைந்த எடையுள்ளதாகவும் இருப்பதால் இக்கருவியைச் சட்டைப்பையிலேயே எளிதில் வைத்துக் கொள்ளலாம். இக்கருவி 120×76×24 மில்லி மீட்டர் அளவில் அமைந்துள்ளது. இதன் எடை 200 கிராம்.

இந்தக் கருவியைக் கோயம்புத்தூரில் உள்ள யு.எம்.எஸ். ரேடியோ பேக்டரி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் தயாரித்து வருகிறது. உலகில் வேறெங்கும் இதுபோன்ற கருவி தயாரிக்கப்படாததால், இக்கருவிக்குப் பெரும் ஏற்றுமதி வாய்ப்பு உள்ளது. இரண்டாண்டு உற்பத்தி முழுவதையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வாங்கிக் கொள்ள முன் வந்துள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

### இக்கருவியின் முக்கிய சிறப்புகள்

1. வங்கிகளின் செயல்முறைக்குப் பயன்படும் 'ரவுண்டிங் ஆப் டிவைஸ்' (Rounding off device) இதில் அடங்கியுள்ளது.

2. பெரிய அளவு கணக்கிடும் கருவிகளில் இல்லாத, எதிர் இலக்கம் (Negative digit) கணக்கிடும் வசதியும் இதில் இருக்கிறது.

3. தேவையில்லாத பூஜ்யங்களை மறைத்துவிடும் வசதி இதில் உள்ளதால், சரியாக ஒரே பார்வையில் அறிந்துகொள்ள முடியும்.

4. அதிகமாகி எஞ்சி நிற்கும் அளவைக் காட்டும் ( Over flow indication) வசதியும் கொண்டுள்ளது.

5. 2 அல்லது 4 இலக்க தசாம்ச முறைவரை கணக்கிட இயலும்.

6. வேலை செய்யாத போது பூட்டி விடும் வசதியும் (Locking facility) இக்கருவியில் உள்ளது.

7. எந்த இலக்கத்தையும் அதன் மடங்காக்கலாம் (Square of any digit)

8. எவ்விதச் சத்தமும் ஏற்படுத்தாமல் இக்கருவி வேலை செய்கிறது.

9. மீண்டும் சக்தி ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய மின்கலன்களால் (Rechargeable batteries) இயங்கக் கூடியது.

**தமிழகத்தில் தயாராகும் சின்னஞ் சிறிய கணக்கிடும் கருவி**

### இயக்கும் முறை

உதாரணமாக 123-ஐ 123 உடன் கூட்ட வேண்டுமானால், முதலில் இக்கருவியில் உள்ள 'C' என்ற பட்டனை அழுத்த வேண்டும். பின்பு 1, 2, 3 என்ற பட்டன்களையும், அதன்பின் '+ =' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்தவும். திரும்பவும் 1, 2, 3 என்ற பட்டன்களை அழுத்திக் கடைசியில் '+ =' என்ற குறியுள்ள பட்டனை அழுத்தவும். அப்பொழுது விடையைக் காட்டும் அலகு (indicator) கூட்டுத் தொகையான 246-ஐக் காட்டும்.

உதாரணமாக 123-லிருந்து 23-ஐ கழிக்க வேண்டுமானால், முதலில் 'C' என்ற பட்டனையும், பின்பு 1, 2, 3 என்ற பட்டன்களையும், அதன் பிறகு '—=' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்த வேண்டும். அடுத்து 2, 3 என்ற பட்டன்களை அழுத்தி விட்டுக் கடைசியாக '—=' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்தினால், விடையைக் காட்டும் அலகு 100-ஐக் காட்டும்.

உதாரணமாக 123-ஐ, 2-ஆல் பெருக்க வேண்டுமானால் முதலில் 'C' பட்டனையும் பிறகு 1, 2, 3 என்ற பட்டன்களையும், அடுத்து '×' என்ற குறியுள்ள பட்டனையும், பிறகு 2 என்ற பட்டனையும், கடைசியாக '+ =' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்தினால் 246 கிடைக்கும்.

உதாரணமாக 123-ஐ, 2-ஆல் வகுக்க, முதலில் பெருக்கலுக்குச் செய்தது போலவே செய்து '×' என்ற பட்டனுக்குப் பதிலாக '÷' என்ற குறியுள்ள பட்டனை அழுத்த வேண்டும்.

தசாம்ச முறையில் கணக்கிடுவது எப்படி என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றீர்களா? பின்கண்ட முறையைப் பின்பற்றலாம்.

ஒரு பொருளின் விலை ரூபாய் 123·50 என்று வைத்துக்கொள்ளுங்கள். 2 பொருளின்விலையைக்

கணக்கிட முதலில் தசாம்ச இலக்கத்தைத் தேர்ந்தெடுக்கும் அலகை '4-ல்' வைக்க வேண்டும். பின்பு 'C' பட்டனை அழுத்தி விட்டு, 'K பட்டனை' 'K' நிலையில் வைக்கவேண்டும். பின்பு 1,2,3,·, 5, 0 என்ற பட்டன்களையும் அழுத்தி விட்டு, அதன் பிறகு '×' என்ற பட்டனையும் 2 என்ற பட்டனையும் அழுத்தி விட்டுக் கடைசியாக '+ =' என்ற பட்டனை அழுத்தினால் 247·0000 என்ற பெருக்குத் தொகை கிடைக்கும்.

அடுத்து மேற்கூறிய பொருளுக்கு 2 சதவீதம் தள்ளுபடி உண்டென்று வைத்துக் கொள்ளுங்கள். அதைக் கணக்கிடுவதற்குக் குறிப்பிட்ட



எந்தப் பட்டனையும் மாற்றாமல் மேற்கூறிய நிலையில் இருக்கும் போதே ·,0,2 என்ற பட்டன்களை அழுத்திய பின்பு '+ =' என்ற குறியுள்ள பட்டனை அழுத்தினால் தள்ளுபடித் தொகை ரூபாய் 2·4700 எனக் கிடைக்கும். இது போல் 4 தசாம்சம் சுத்தமாகக் கணக்கிடலாம்.

இந்தியாவில் செய்யப்பட்ட 90 சத பாகங்களையும், மூன்றே மூன்று இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களையும் கொண்டு முழுக்க முழுக்க இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் இக்கருவி, வளரும் இந்தியாவின் திறமைக்குச் சான்றாக விளங்குகிறது.


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லாப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



தி என்பீல்டு இந்தியா லிமிடெட்
சென்னை-19

FDSEI-1573TM

"ஐ.ஆர். 8 நெல்லின் அரிசி பெரியது; சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல; விற்பனைக் கூடங்களில் நல்ல விலைக்கு விற்க முடியவில்லை'' என்று கூறிக்கொண்டிருந்தவர்களின் குறையை அகற்றப் பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம் -'ஐ.ஆர்.20' என்ற புதிய ரகத்தை 1969—ஆம் ஆண்டில் வெளியிட்டது.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ரகங்களில் ஒன்றான -'ஒட்டுக் கிச்சிலி' அல்லது 'சன்ன சொர்ணவாரி' எனப்படும் 'டி.எம்.கே. 6' (திரூர் குப்பம்—6) ரகத்தையும், ஐ.ஆர். 262—24—3 என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதே ஐ.ஆர். 20. இந்தப் புதிய ரகம், அனைத்து நாட்டு நெல்ஆராய்ச்சி நிறுவனத்தின் மூன்றாவது ரகமாகும். இந்த ரகம் 1965—ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டிருந்தும், பல்வேறு பரிசோதனைகளுக்குப்பின் 1969—ஆம் ஆண்டில் தான் வெளியிடப்பட்டது.

ஐ.ஆர். 8 நெல்லைவிடத் தரமான புதிய நெல் ரகங்களை உருவாக்குவதிலும், வெளிநாட்டுப் புது ரகங்களை வரவழைத்துப்பயிரிட்டுப் பார்த்துத் தமிழ் நாட்டிற்குப் பயனுள்ளதாக இருக்குமா என்று அறிவதிலும் ஆர்வம் காட்டிவரும் தமிழ்நாடு அரசு, ஐ.ஆர். 20 ரகத்தை வரவழைத்துக் கோயம்புத்தூரில் உள்ள நெல் வளர்ப்பியல் பண்ணையில் 1967-ஆம் ஆண்டில் கோடைப் பயிராகச் சாகுபடி செய்து பார்க்க ஆவன செய்தது. அப்பரிசோதனையில் ஐ.ஆர். 20 நெல் 110 செண்டி மீட்டர் உயரம் வளர்ந்து 125 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடியது என்பதும், ஹெக்டேருக்கு 6·5 மெட்ரிக் டன் (ஏக்கருக்குச் சுமார் 2·6 மெட்ரிக் டன்) மகசூல் அளிக்க வல்லது என்பதும் புலனாகியது.




மேலும் இந்நெல் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளது என்பதும் தெளிவாகியது. அப்பரிசோதனையில் கிடைத்த விதைகளைக் கொண்டு, 1969-ஆம் ஆண்டின் முந்திய சம்பா, பிந்திய சம்பா, ஆகிய பட்டங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் ஐ.ஆர். 8 ரகத்துடன் ஒப்பிட்டு நடத்தப்பெற்ற பரிசோதனைகளில் ஐ.ஆர். 20 ரகம் ஹெக்டேருக்குச் சராசரியாக 5,331 கிலோ மகசூல் அளித்தது. ஆனால், அப்பரிசோதனைகளில் ஐ.ஆர். 8 ரகம் சராசரியாக ஹெக்டேருக்கு 5,263 கிலோ மகசூலையே கொடுத்துள்ளது.

காஞ்சிபுரத்திலுள்ள அரசினர் விதைப் பண்ணையில் ஐ. ஆர். 20 நெல் ஹெக்டேருக்கு 7,166 கிலோ (ஏக்கருக்குச் சுமார் 2,900 கிலோ) மகசூல் கொடுத்துள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பிரம்மபுரம் என்ற ஊரில் திரு ஆறுமுகம் என்ற உழவர்பெருமகன் ஐ.ஆர். 20 பயிரிட்டுத் தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருந்தும் கூட-ஏக்கருக்கு 3,347 கிலோ மகசூல் எடுத்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம் காரமடையை அடுத்த மாத்தம்பாளையத்தில் திரு ஏ.ஜி.ரெங்கநாதன் என்ற உழவர் பெருமகன் ஐ.ஆர்.20 பயிரிட்டு ஏக்கருக்கு 3,553 கிலோ வீதம் மகசூல் எடுத்துள்ளார்.

இதிலிருந்து பார்க்கும் போது ஐ.ஆர். 20 நெல் ரகத்தை வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் முறையில் பயிரிட்டால், சராசரியாக ஏக்கருக்கு 2,500 கிலோ முதல் 3,500 கிலோ வரை மகசூல் எடுக்கலாம் என்பது தெளிவாகிறது. ஐ. ஆர் 8 ரகத்தைப் போலவே, ஐ.ஆர் 20 ரகமும் அதிக மகசூல் கொடுப்பதுடன், கீழ்க்கண்ட சிறப்புக் குணங்களையும் ஐ.ஆர். 20 ரகம் பெற்றுள்ளது.

**ஐ. ஆர். 20 ரகத்தின் சிறப்புக் குணங்கள்.**

* ஒட்டுக்கிச்சிலியின் (டி. கே. எம். 6) அரிசியைப் போலவே, ஐ. ஆர். 20 நெல்லின் அரிசியும் சன்னமாகவும், தரம் மிகுந்ததாகவும் உள்ளது.

*ஒட்டுக்கிச்சிலி நெல்லுக்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைப்பது போலவே, ஐ. ஆர். 20 நெல்லுக்கும் நல்ல விலை கிடைக்கிறது.

* குருத்துப் பூச்சியின் தாக்குதலை ஓரளவுக்குத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது.

* கொலைநோய், இலைக்கருகல் நோய் ஆகியவைகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் ஐ.ஆர். 20 ரகத்திற்கு உண்டு.

* ஐ.ஆர். 8 அரிசியில் காணப்படும் வெள்ளையான பகுதி ஐ. ஆர். 20 அரிசியில் இல்லை. ஐ. ஆர். 20 அரிசி படிகம் போன்றே இருக்கும். எனவே, ஐ. ஆர். 20 அரிசியை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

* ஒட்டுக்கிச்சிலியை விட, இருமடங்கிற்கும் மேலாக மகசூல் கொடுக்க வல்லது.

* ஐ. ஆர். 8 ரகத்தைவிட ஐ. ஆர். 20 ரகத்தின் வயது குறைவு.

* ஐ. ஆர். 8 ரகத்தைப் போலவே, அதிக உரமேற்று அதிக மகசூல் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தது ஐ. ஆர். 20.

இத்தகைய சிறப்புக் குணங்களைக் கொண்ட ஐ.ஆர். 20 ரகத்தைப் பயிரிடக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

# முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

## TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனாமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை யேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

## மாவட்டத்தில் நடைபெறும் சிறந்த தொழில்கள்

நூற்பு, துணி ஆலைகள், பஞ்சரைக்கும் ஆலைகள், தீக்குச்சித் தொழிற்சாலைகள், மத்தாப்பு, பட்டாசுத் தொழிற்சாலைகள், நிப் தொழிற்சாலைகள், தகரப் பொருள் உற்பத்திச் சாலைகள், சைக்கிள் உறுப்புகள் உற்பத்திச் சாலைகள் தொழிற்பேட்டைகள், சிமெண்டு தொழிற்சாலைகள்,காப்பித்தூள் உற்பத்திச் சாலைகள் முதலியன இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளன.

### சாகுபடிமுறைகள்

பட்டம்:—

*(1)* நவரைப் பட்டம் (மார்கழி, தை முதல் சித்திரை, வைகாசி வரை) இது ஐ.ஆர்.20 ரகத்திற்கு மிகவும் சிறந்த பட்டமாகும்.

*(2)* சம்பாப் பட்டம் (ஆடி, ஆவணி முதல் கார்த்திகை மார்கழி வரை)

வயது.—நவரைப்பட்டத்தில் 120 முதல் 130 நாட்களிலும், சம்பாப் பட்டத்தில் 130 முதல் 140 நாட்களிலும் அறுவடைக்கு வரும்.

விதையளவு.—ஒரு ஏக்கர் நடுவதற்கு 15 கிலோ நெல்லை நாற்றுவிட வேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல்.—15 கிலோ விதையுடன் 30 கிராம் அக்ரசான் அல்லது காப்டான் மருந்தைச் சேர்த்து விதைகலக்கும் கருவியில் இட்டுச் சுற்றி, விதையுடன் மருந்து நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும். மருந்து கலந்த பின் குறைந்தது 6 மணி நேரம் வைத்திருந்து, பிறகு விதைகளைத் தண்ணீரில் ஊறவைத்து முளைக்கச் செய்ய வேண்டும்.

நாற்றங்கால்.—ஒரு ஏக்கர் நடுவதற்கு 10 சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். நாற்றங்காலை 2 அல்லது 3 முறை நன்கு உழுது, 2 வண்டி தொழு எரு அல்லது 1 வண்டி பசுந்தழை போட வேண்டும். பசுந்தழை மக்கிய பின்பு மறுபடியும் ஒன்று அல்லது இரண்டு முறை உழுது, பரம்படித்து, 8 அடிக்கு ஒரு வாய்க்கால் அமைத்து மேட்டுப் பாத்திகள் அமைக்கவும். பாத்திகள் ஒவ்வொன்றும் ஒரு சென்ட் பரப்பு (8 அடி அகலமும், 54 அடி நீளமும்) உள்ளதாக அமைத்தால் தண்ணீர் பாய்ச்சவும், வடிக்கவும், களையெடுக்கவும், மருந்து தெளிக்கவும் எளிதாக இருக்கும். பாத்திகளை நன்ருகச், சமப்படுத்தி, மூன்ருங் கொம்பு விதைகளை ஒவ்வொரு பாத்திக்கும் பங்கிட்டு ஒரே சீராக விதைக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்.—10 சென்ட் நாற்றங்காலுக்கு 10 மில்லிலிட்டர் பாரத்தியான் அல்லது 20 மில்லிலிட்டர் என்ட்ரின் மருந்தையும், 50 கிராம் டைத்தேன் மருந்தையும் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து நாற்றுவிட்ட 15-ஆம் நாள் தெளிக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு மேலுரமிடல்.—நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக, ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு கிலோ யூரியா அல்லது 2·2 கிலோ அமோனியம் சல்பேட் வீதம் மேலுரம் இடவேண்டும்.

நடவு வயல் தயாரித்தல்.—நடவு வயலை இரும்புக் கலப்பையால் 2முறை உழவு செய்யவும். ஏக்கருக்கு 10 வண்டி தொழுஎரு அல்லது 5 வண்டி பசுந்தழை எரு போடவும். 'பர்மிய சட்டம்' என்னும் கருவியைப் பயன்படுத்தி, தழைமிதிப்பதற்கும், சேறு கலக்குவதற்கும் ஆகும் செலவைக் குறைக்கலாம். தழை மக்கிய பின்பு கடைசி உழவு செய்து சேற்றைக் கலக்கி அடியுரம் இட வேண்டும். அடியுரமிட்டவுடன் பரம்படித்து நடவு செய்ய வேண்டும். நடவு செய்வதற்குப் பத்து நாட்களுக்கு மேற்பட்ட பழைய சேறு கூடாது.

அடியுரம்.—நடவு வயலுக்கு ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து வீதம் கடைசி உழவின்போது அடியுரம் இட வேண்டும் இந்த அளவுச் சத்துக்களை அளிக்க, கீழ்க்கண்ட முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

| | கிலோ |
|---|---|
| 1 டை அமோனியம் பாஸ்பேட் (18:46:0). | 75 |
| அமோனியம் சல்பேட் 155 கிலோ அல்லது யூரியா .. .. | 70 |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் .. | 60 |
| அல்லது | |
| 2 அமோனியம் பாஸ்பேட் (16:20:0). | 175 |
| அமோனியம் சல்பேட் 85 கிலோ அல்லது யூரியா .. .. | 37 |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் .. | 60 |
| அல்லது | |
| 3 அமோனியம் பாஸ்பேட் (20:20:0). | 175 |
| அமோனியம் சல்பேட் 53 கிலோ அல்லது யூரியா .. .. | 22 |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் .. | 60 |
| அல்லது | |
| 4 அமோனியம் சல்பேட் 225 கிலோ அல்லது யூரியா .. ... | 100 |
| சூப்பர் பாஸ்பேட் .. .. | 220 |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் .. | 60 |
| அல்லது | |
| 5 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் (14:14:14) .. .. .. | 250 |
| அமோனியம் சல்பேட் 50 கிலோ அல்லது யூரியா .. .. | 22 |
| அல்லது | |
| 6 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் (15:15:15) .. .. .. | 235 |



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை-1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி 20461. 20462.
எண்கள்: 20463. 20464. 20465.
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

7 அமோனியம் சல்பேட் 50 கிலோ
அல்லது யூரியா .. .. 22

மேற்கண்டமுறைகளில் முதல் முறையே மிகவும் சிக்கனமானது. எனவே, டை-அமோனியம்-பாஸ்பேட் பயன்படுத்தி அடியுரமிடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

நடவு:—நாற்றுவிட்ட 22-ஆம் நாள் நாற்றுகளைப்பறித்து நடவு செய்வதே சிறந்தது. நாற்றுகளை வரிசை வரிசையாக நடவு செய்யவேண்டும். வரிசை கிழக்கு மேற்காக அமைதல் நல்லது. வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடை வெளியும், வரிசையில் தூருக்குத் தூர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டுத், தூருக்கு 2 நாற்றுகள் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும். இந்த அளவு இடைவெளி விட்டால், ஒரு சதுர மீட்டர் பரப்பில் 66 இடங்களில் நடவு செய்ய வேண்டும். நாற்றுகளை ஆழமாக நடாமல், மேலாகவே நடவு செய்தால் விரைவில் பச்சைகட்டி, நன்கு தூர் கிளைக்கும்.

### நடவு செய்த பின் என்ன செய்யவேண்டும்?

நடவு செய்த 1 முதல் 15 நாட்கள் வரை:—இக்காலத்தில் பயிர்களில் புதிய வேர் தோன்றிப் பச்சைக் கட்டும். இக்காலத்தில் உருட்டுத் தண்ணீர் கட்டுவதே போதுமானது. அதிக அளவு தண்ணீர் கட்டக்கூடாது.

நடவு செய்த 15-ஆம் நாள்:—1. இடை உழவுக் கருவியால் களை எடுக்க வேண்டும். இடை உழவுக் கருவி இல்லாவிட்டால், கைகளாலேயே சேற்றைக் கிளறிக் களை எடுக்கவும். களைகள் வயலில் இல்லாவிட்டால் கூடச் சேற்றைக் கிளறி விடவேண்டும். இவ்வாறு செய்தால் அதிக அளவில் தூர் கிடைக்கும்.

2. களையெடுத்தபின், 100 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 200 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 250 கிராம் டைத்தேன் மருந்தையும் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

இராமநாதபுரத்தே 'பனை மரங்கள் மிகுதி; ஏன் வளர்ந்தாய் பனைமரமே' என ஏளனம் செய்யாத வகையில் பனைமரங்கள் இம்மாவட்டத்திற்குப் பெரும் புகழைத் தேடித் தருகின்றன. இங்கு வண்ண வண்ண ஓலைகளில் கண்ணைக் கவரும் பல பொருட்கள் செய்யப்படுகின்றன. இங்குத் தயாரிக்கப்படும் தாஜ்மகால் கூடைகள், மற்றும் பனை ஓலையால் செய்யப்படும் பல்வகைப் பொருட்கள், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.




நடவு செய்த 16-ஆம் நாள் முதல்:— வயலில் தண்ணீரின் அளவை அதிகரிக்க வேண்டும். தொடர்ந்து தண்ணீரின் அளவைப் படிப்படியாக அதிகப்படுத்தி 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) உயரத்திற்குத் தண்ணீர் நிற்கும்படி செய்ய வேண்டும். இந்த ரகத்திற்கு அதிக அளவு தண்ணீர் தேவையில்லை.

நடவு செய்த 25-ஆம் நாள்;— முதல்தடவை மேலுரமிட வேண்டும். ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். இவ்வாறு மேலுரமிடுவதால் அதிக அளவு தூர்கள் கிளைப்பதுடன், ஒரே சீராகவும் தோன்றும். மேலுரமிடும்பொழுது வயலில் அதிக அளவு தண்ணீர் நிற்கக் கூடாது. மேலுரமிட்ட பின்பு வளைகளின் மூலம் வயலில் இருந்து தண்ணீர் வடிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள்:—1. இரண்டாம் முறை இடை உழவுக் கருவியால் அல்லது கைகளால் களை எடுக்க வேண்டும்.

200 மில்லி லிட்டர் பாரத்தியான், அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின், 500 கிராம் டைத்தேன் ஆகியவைகளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 45-ஆம் நாள்:—1. கைகளால் களை எடுக்கவும்.

2. இது கர்ப்பத்தில் கதிர் தோன்றும் சமயமாதலின், இரண்டாம் முறையாக 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். இவ்வாறு மேலுரமிடுவதால் கதிர்கள் நீளமாகவும், மணிகள் அதிகமாகவும், அடர்ந்தும், கனமானதாகவும் இருக்கும்.

3. 250 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 500 மில்லி லிட்டர் என்ட்ரின், 750 கிராம் டைத்தேன் ஆகியவைகளை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் மூன்றாம் முறையாகத் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 65 முதல் 70 நாட்கள் வரை:—கதிர்களில் உள்ள மணிகளில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும், 5 கிலோ பி.எச்.சி 10 சதத் தூளையும் கலந்து தூவான் மூலம் தூவ வேண்டும்.

நடவு செய்த 98 முதல் 118 நாட்கள் வரை அறுவடை:—நவரைப் பட்டத்தில், நடவு செய்த 98 முதல் 108 நாட்களிலும், சம்பாப் பட்டத்தில் நடவு செய்த 108 முதல் 118 நாட்களிலும் அறுவடைக்கு வரும்.

மகசூல்:—ஏக்கருக்குச் சராசரியாக 2,500 கிலோ முதல் 3,500 கிலோ வரை (சுமார் 33 முதல் 46 மூட்டை வரை) மகசூல் கிடைக்கும்.

(குறிப்பு:—இதே பரிந்துரையை ஐ.ஆர். 22 ரகத்திற்கும் மேற்கொள்ளலாம்)

# ஸீமென்ஸ் 'பம்ப்மாஸ்டர்' கூறுகிறார்... SIEMENS




7822-TAM



இந்திய கிராமியச் சூழ்நிலைகளிலே நம்பிககையான இயக்கம் தருவது ஸீமென்ஸ் மோட்டார் ஒன்றுதான். காரணம், கிராமியச் சூழ்நிலைகளுக்கு இணங்க, ஜெர்மன் தொழில்நுட்ப அறிவின் துணையோடு விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது அது. எனவே, மின்சார வோல்டேஜ் ஏற்ற இறக்கங்கள் பெருமளவிலே நிகழ்ந்தாலும், பல்லாண்டுகள் தொல்லையற்ற உழைப்பைத் தருவது ஸீமென்ஸ் மோட்டார். பம்பு செட்டுகளின் எல்லா உறுப்புகளுக்கும் ஒரே பெயர்—ஸீமென்ஸ்.

## ஸீமென்ஸ் இந்தியா லிட்.

● பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● நியூ டெல்லி
● அகமதாபாத் ● பெங்களூர் ● ஹைதராபாத் ● லக்னோ

# ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

## 15. உறுதியான திருமணம்

வெறும் வார்த்தைகளாக அல்ல, இனிப்பையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்த அமுதத் துளிகளாகவே அவை தேன்மொழியின் செவியிலே விழுந்தன; இதயத்தையே விம்ம வைத்தன பூரிப்பினால்.

கடல் அலைகள் மீது படகுப் பயணம் போகின்ற மாதிரி ஓர் உணர்ச்சியின் எம்பல்!

அறிஞர் அண்ணாவின் 'ஓர் இரவு'-படத்திலே ஒலிக்குமே, 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ—இன்பம் சேர்க்கமாட்டாயா?'—என்னும் பாரதிதாசனின் பாடல், அதைக் கேட்டுக் கிறங்குவது போன்ற ஒரு மது மயக்கம்!

வெண்புறாக்களுக்குப் போட்டியாகச் சிறகினை விரித்து, மேக மெத்தைகளிலே மிதந்து பறப்பதைப் போன்ற ஓர் இன்ப மதர்ப்பு!

தேன்மொழிக்குத் தலை காலே புரியவில்லை.

தோல் நோய்களைக் கண்டு பிடிப்பதில் வல்லுநரான அந்தப் பெரிய டாக்டர், தம் முடிவினை வெளியிட்டதும், தன் அருகில் நின்றிருந்த டாக்டர் பூங்கொடியை அப்படியே கட்டித்தழுவிக் கொண்டாள் அவள். உணர்ச்சிப் பெருக்கு, பனித்துளிகளாகி அவளது கண்மலரிலே கருக்கொண்டு மின்னியது.

தன் தோளிலே முகத்தைப் புதைத்து நிற்கும் தன் தோழியின் முதுகை ஆதரவோடு வருடிக்கொடுத்த பூங்கொடி,

''நீங்கள் கொடுத்துவைத்தவர்தான், தேன்மொழி! நேற்று இரவு கூட உங்களைப் பற்றித்தான் நான் கவலையோடு சிந்தித்துக்கொண்டிருந்தேன். 'இப்படியொரு கள்ளங் கவடு இல்லாத ஒரு நல்ல பெண்ணுக்கு ஏன் இந்தக் காதல்—கத்தரிக்காய்—எல்லாம் வந்து சோதனை செய்ய வேண்டும்?' என்று கூட வேதனைப்பட்டேன். நல்ல வேளையாக மாதவனுக்கு எந்த விதமான தோல் நோயும் இல்லை என்று இந்த 'ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்'—(தோல்நோய் வல்லுநர்)—சொல்லி விட்டார். இனிமேல் என்ன? உங்கள் எண்ணம் போலவே திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டியதுதான்!''

—என்று உற்சாகத்தோடு கூறினாள்.

''எல்லாவற்றுக்கும் நீங்கள் அளித்த ஆறுதலும், தன்னம்பிக்கையும், தளராத முயற்சிகளுந்தான் காரணம், டாக்டர். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை.''

—குரல் தழுதழுத்தது தேன்மொழிக்கு.

மாதவனைப் பற்றிய முடிவினை அறிவித்த பின், தம்முடைய பணியாளிடம் ஏதோ செய்தி சொல்லி அனுப்பி விட்டுத் திரும்பிய அந்தத் தோல்நோய் வல்லுநர், தம் எதிரே நிற்கும் பெண்கள் இருவரையும் நோக்கி,

''அப்போ, விரைவிலேயே ஒரு திருமண அழைப்பிதழை நான் எதிர்பார்க்கலாம்''

—என்று சொன்னார் முறுவலித்தவாறே.

''ஓ தாராளமாக! இன்னும் ஒரு மாதத்திற்குள்ளேயே நீங்கள் அதை எதிர்பார்க்கலாம்!''

—என்று காலக் கெடுவும் வைத்துச் சிரிப்பை வழிய விட்டாள் பூங்கொடி.

அதைக் கேட்டதும், தேன்மொழியின் சிவந்திப் பூ முகம் 'குப்'பென்று சிவந்து விட்டது நாணத்தினால்; தளிருடலும் 'சில்'லென்று சிலிர்த்து விட்டது புல்லரிப்பினால்.

கனவுகள் நனவாகும்பொழுது—நம்பிக்கைகள் சிலையாகும் பொழுது—நிறைவேறி நிலைக்கும் பொழுது—இந்த மனித மனந்தான் எவ்வளவு சின்னக் குழந்தையாகித் துள்ளிக் குதிக்கின்றது!

அவளுடைய இதயத் துள்ளலுக்கு மேலும் பன்னீர்த் துளிகளைத் தெளிப்பதைப் போல,



16-2—6



''திருமணம் சென்னையில்தான் நடக்கும் இல்லையா?''

—என்று கேட்டார் அந்தப் பெரிய டாக்டர்.

''கூடியவரை சென்னையில்தான் நடக்கும் என்று நினைக்கிறேன். இல்லையா தேன்மொழி?''

—என்றவாறே தேன்மொழியைத் திரும்பிப் பார்த்தாள் பூங்கொடி.

அவளால் நிமிர்ந்து விடை கூற முடியவில்லை; தலையை மட்டுமே அசைத்தாள்.

''சரி, டாக்டர்! உங்களுக்கு மிகுந்த நன்றி. இனிமேல் மாதவனை வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம் இல்லையா?''

—பூங்கொடி இவ்வாறு கேட்டதும்,

''ஓ, தாராளமாக! இப்போதே அழைத்துச் செல்லலாம்'

—என்று விடை கொடுத்துவிட்டார் அவர்.

• • •

**தோ**ழிகள் இருவரும், மாதவன் படுத்திருக்கும் மருத்துவப் பிரிவுக்குச் சென்றனர் அவனை அழைத்துச் செல்வதற்காக.

வழியிலேயே தேன்மொழி கேட்டாள்,

'' என்ன டாக்டர், இன்னும் ஒரு மாதத்திற்குள்ளேயே அழைப்பிதழ் வரும் என்று அவரிடம் உறுதியாகச் சொல்லி விட்டீர்கள் ? ''

'' ஏன், ஒரு மாதத்திற்குள் முடிக்க முடியாதா என்ன ? இனிமேலும் காலம் கடத்திக் கொண்டு போவது அவ்வளவு நல்லதும் இல்லை.''

''ஆனால், என் அப்பா என்ன சொல்லுவாரோ?''

'' அவர் ஒன்றும் சொல்ல மாட்டார்; அவர் அப்படி மறுப்பு எதுவும் சொல்லாதபடி நானே சிங்கப்பூருக்குக் கடிதம் எழுதுகிறேன் போதுமா?'

'' அதுதான் டாக்டர், நல்ல யோசனை ; நீங்கள் கடிதம் எழுதினால் என் அப்பா மறுக்க

மாட்டார் என்று நானும் நினைத்தேன்; உங்களிடம் அவருக்கு என்னவோ ஒரு தனியான நல்லெண்ணம்— நம்பிக்கை. உங்களைத் தவிர வேறு யார் எடுத்துச் சொன்னாலும் அவர் கேட்கவேமாட்டார். எனக்குள்ள அச்சம் எல்லாம், தம்முடைய செல்வாக்குக்குச் சரியான பொருத்தமாக இருக்கவேண்டுமே என்று யாராவது பணக்காரப் பையனைப் பார்த்து ஏற்பாடு செய்து விடுவாரோ என்பதுதான்.''

தேன்மொழியின் சொற்களைக் கேட்டதும் 'களுக்' என்று சிரித்தாள் பூங்கொடி.

''என்ன டாக்டர் சிரிக்கிறீர்கள்?''

''உங்கள் அப்பாவை இன்னும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லையே என்பதை நினைத்துத்தான் நான் சிரிக்கிறேன். அவருடைய மனநிலை இப்பொழுதெல்லாம் எவ்வளவோ மாறிவிட்டது.''

''நீங்கள் என்ன டாக்டர், சொல்கிறீர்கள்?''

''உண்மைதான் தேன்மொழி! ஒரு காலத்தில் தாம் இலட்சாதிபதி ஆகிவிடவேண்டும் என்கிற பேராசையிலே அவர் செய்யக் கூடாத செயலையெல்லாம் கூடச் செய்திருக்கலாம். அடிக்கக் கூடாத கொள்ளையெல்லாம் கூட அடித்திருக்கலாம். சேரக் கூடாத இடங்களில் எல்லாம் கூடச் சேர்ந்திருக்கலாம். ஆனால், மாதவனைக் கண்டபிறகு—அவரோடு பழகிய பிறகு—அவருடைய பண்புகளையெல்லாம் பார்த்த பிறகு—உன் அப்பாவின் மனமே மாறிவிட்டது. மாதவன் என்னதான் அப்படிச் சொக்குப்பொடி போட்டாரோ? இல்லை அவருடைய உள்ளம் தானாகத்தான் திடீரென்று திருந்திக்கொண்டதோ? சிங்கப்பூர் செல்வதற்கு முன்பு அவர் என்னிடம் பேசிய வார்த்தைகளை இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாக இருக்கிறது. யாருமே அணுக முடியாத எரிமலையாகச் சீறிக் கொண்டிருந்தவரா இப்படிப் பொதிகை மலைப் பூங்காற்றாகக் குளிர்ந்து வீசுகிறார் என்று நானே அசந்து போனேன். அப்புறம் இன்னொரு அந்தரங்கம் உங்களுக்குத் தெரியுமா? தேன்மொழி''

''என்ன டாக்டர்?''

''ஓ! மறந்துபோய் நானும் உளறத் தொடங்கி விட்டேனா? சரி, சரி அந்த அந்தரங்கத்தைப் பிறகு சொல்கிறேன்....ஆனால் ஒன்று மட்டும் உறுதி. உங்கள் திருமணத்திற்குக் குறுக்கே உங்கள் அப்பா குத்துக்கல்லாக வழி மறிக்கமாட்டார். உங்களுக்கு வேண்டியது அவ்வளவுதானே?''

''எனக்கு அது போதும் டாக்டர். நாளைக்கே அப்பாவுக்குக் கடிதம் எழுதி விடுகிறீர்களா?''—ஏக்கத்துடன் கேட்டாள் தேன்மொழி.

''ஏன் ரொம்ப அவசரமா? அப்போ, இன்றைக்கே எழுதி விட்டால் போகிறது.''

**மூன்றிலொரு பங்கு பட்டாசு**

தீக்குச்சிக்கும், தீபாவளி பட்டாசு, மத்தாப்புக்கும் பெயர் போனது சிவகாசி. சின்னஞ் சிறுவர் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ள இந்நகரம் இன்று இந்தியா முழுவதிலும் புகழ் பெற்றுள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் தீக்குச்சியில் மூன்றில் ஒரு பங்கு சிவகாசி, சாத்தூர்ப் பகுதியிலேயே உற்பத்தியாகிறது.

—கேலியாகச் சிரித்தாள் பூங்கொடி.

• • •

பெண்கள் இருவரும் மாதவனின் படுக்கை அருகே சென்றபோது அவன் அங்கே மற்ற நோயாளிகளைப் போலப் படுத்திருக்கவில்லை.

தன்னுடைய கட்டிலுக்கு மூன்றாவது கட்டிலில் அமர்ந்து, அங்கிருந்த நோயாளியின் வாயினுள் ஆரஞ்சுச் சுளைகளை உரித்து ஊட்டிய வண்ணம் இருந்தான்.

அந்த நோயாளிக்கோ உடம்பெங்கும் ஆட்டுக் குடலின் உட்புறம் போல அடை அடையாகப் படை படையாகச் சொறி! சொறிதானே இல்லை வேறு ஏதுவுமோ?

அதைப் பார்க்கவே பொறுமையில்லை, தேன்மொழிக்கு! முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

' இவர் ஏன் அந்த மாதிரி ஆளோடெல்லாம் சேர்ந்து பழகுகிறார்! அந்தப் படுக்கையிலும் உட்கார்ந்து கொண்டு—ஆரஞ்சு சுளைகளையும் உதட்டைத் தொட்டு வேறு ஊட்டிக்கொண்டு—சே.....!'

—அவள் உள்ளத்தினுள் இத்தகைய எண்ணக் கோடுகளும் ஓடத் தவறவில்லை.

தோழிகள் இருவரையும் கண்டதும் மாதவன் தன் கட்டிலுக்குத் திரும்பி வந்தான்.

''உட்காருங்கள் டாக்டர்''

—என்று பூங்கொடியை வரவேற்று அருகில் கிடந்த நாற்காலியை இழுத்துப்போட்டான்.

''பரவாயில்லை; நீங்கள் உட்காருங்கள். ஒரு முக்கியமான சேதியைச் சொல்லத்தான் வந்தோம்''

—என்றாள் பூங்கொடி.

''என்ன முக்கியமான சேதி! செங்கற்பட்டுக்குப் பக்கத்திலுள்ள தொழுநோய் மருத்துவ நிலையத்துக்கு நான் போய்த்தான் ஆக வேண்டும் என்று அந்தப் பெரிய டாக்டர் சொல்லிவிட்டாரா?''

—சிரித்தவாறே கேட்டான் மாதவன்.

பெண்கள் இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்; 'திருதிரு' வென்று விழித்தார்கள்.

'' உங்களுக்கு அந்த நோய் வந்திருப்பதாக யார் சொன்னார்கள்?'' சமாளிக்கப் பார்த்தாள் பூங்கொடி.

'' ஏன் டாக்டர் என்னிடமே காது குத்தப் பார்க்கிறீர்கள்? இரத்தச் சோகையோ இருதய நோயோ வந்திருந்தால் இப்படித் தோல்நோய் டாக்டரிடந்தான் கொண்டு வந்து காட்டுவீர்களா? உப்பிருந்த பாண்டத்தில் யாராவது சர்க்கரையைக் கொட்டி வைப்பார்களா என்ன? அதனால்

எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. தேன்மொழிக்கு என் உடலிலே எந்தவிதக் கொடிய நோயும் இல்லை என்கிற உண்மை தெளிவானால் சரி என்றுதான் நானும் மறுப் பேதும் சொல்லாமல் இங்கே சிகிச்சை பெற ஒப்புக்கொண் டேன். என்னிடம் வெளிப் படையாகத் தோல் நோய் மருத்துவரிடம் சோதித்துப் பார்ப்போம் என்று சொன் னால், நான் எங்கே உள்ளம் ஒடிந்து விடுவேனோ என்று அஞ்சித்தான் இப்படித் தந்திர மாக இங்கே கொண்டுவந்து சேர்த்தீர்கள் என்பதையும் நான் புரிந்துகொண்டுவிட்டேன். இப் போதாவது சந்தேகம் தீர்ந்து விட்டதா ?''

—மாதவன் இவ்வாறு கூறியதும் வெட்கத்தால் தலை குனிந்தாள் பூங்கொடி.

''என்னை மன்னித்து விடுங்கள். தேன்மொழிக்கு உங்கள் மீது ஒரே உயிர்; அதே சமயம், உங்களுடையதமக்கைக்குஇருந்த பெருநோய் உங்களுக்கும் இருந்தால் என்ன செய்வதுஎன்கிற பீதி. அந்தச் சந்தேக முள்ளைத் தொடக்கத்திலேயே கிளறி எடுத்துவிடவேண்டுமென்றுதான் இந்த ஏற்பாட்டை நான் செய்தேன். உங்களிடம் வெளிப் படையாக இதைப்பற்றி விவாதிக்கவும் எங்களுக்கு விளக்க முடியாத ஒரு தயக்கம்.''

—டாக்டர் திணறிக் கூறினாள்.

'' நானேதான் அதை நன்றாக உணர்ந்து கொண்டு விட்டேனே. ஆகையாலே நீங்கள் இதிலே வருத்தப்படுவதற்கு எதுவுமே இல்லை. பார்க்கப் போனால் நீங்கள் செய்தது எல்லாருக் குமே நல்லது; எங்கள் எதிர் காலத்துக்கும் மிகமிக நல்லது. அப்படி இருக்குமோ? இப்படி இருக்குமோ? என்று புழுங்கிக் குழைந்து, புகைந்து நைந்து உள்ளுக்குள்ளேயே பொருமிப் பொருமிச் சாவதை விட இருட்டா, வெளிச்சமா— இனிப்பா, கசப்பா—என்று கரு ராகத் தெரிந்து கொண்டு விடுவது சிறந்தது தானே! ஆமாம், இனிமேல் என்றைக்கு இங்கிருந்து எனக்கு விடுதலை''?

'' இப்போதே கிளம்பலாம்; அதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தோம். ஆமாம் தேன்மொழி ! நீங்கள் இங்கே சிறிது நேரம் தங்கி இருந்து இவரை அழைத்துக் கொண்டு வாருங்களேன் ! நான் கொஞ் சம் முந்திப் புறப்படுகிறேன். இந்நேரம் என்னுடைய நோயாளிகள் எப்படி இருப்பார்களோ?''

—கடமை உணர்வோடு பூங்கொடி மட்டும் தனியே புறப் பட்டுச் சென்றாள்.

* * *

தான், தேன்மொழியிடம் கூறிய வாறே அன்றே பேரின்ப



## உமறுப்புலவர்

தென்னாட்டிலே சிறந்த அத்தர் வியாபாரிகளின் குடும்பத்தில் பிறந்தவர். கடிகை முத்துப் புலவரிடத்தே கல்வி கற்றவர் ; இராமநாதபுரம் மாவட்டக் கீழக் கரையிலே வாழ்ந்தவர் ; இவர் அறம், பொருள்; இன்பம் என்னும் முப்பொருளும் கலந்த சீறாப்புராணம் என்னும் நூலைச் செய்தார் ; அன்றியும் நொண்டி நாடகம், முதுமொழி மாலை என்னும் நூல்களையும் இயற்றினார் ; இவர் வாழ்ந்த காலம் 17–ஆம் நூற்றாண்டு; இவரது கல்லறை எட்டைய புரத்தின் தென்கோடியில் உள்ளது.

முத்துக்குக் கடிதம் எழுதிவிட் டாள் பூங்கொடி!

அவரும் உடனே மறுமொழி வரைந்திருந்தார் ஒப்புதல் தெரிவித்து.

ஆனால், தங்கள் குடும்ப வழக் கப்படி கோவில் சந்நிதியில் தான் திருமணத்தை வைக்க வேண்டுமென்று குறிப்பிட் டிருந்தார்.

மாதவனோ—

செய்து கொண்டால் சீர்திருத் தத் திருமணம், இல்லையென் றால் பதிவுத் திருமணம் என்று அடித்துப் பேசினான்.

'பூங்கொடி எவ்வளவோ எடுத் துச் சொன்னாள். பேரின்ப முத்து இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டதே பெரிய செயல்; அவர்மனம் புண் படும்படி நடக்க வேண்டாம்.' —என்று வற்புறுத்திக் கூறிப் பார்த்தாள்.

தேன்மொழியும் மன்றாடினாள்.

மற்ற எல்லாவற்றிலுமே விட்டுக் கொடுக்கத் தயங்காத மாதவன் இந்தத் திருமண முறை யில் மட்டும் ஒரே பிடிவாதமாக இருந்துவிட்டான்.

அவனது அழுத்தமான போக்கு, தேன்மொழிக்கு அதிர்ச் சியையே அளித்தது. எங்கே தங்களுடைய திருமணமே நிகழாமல் நின்றுவிடுமோ என்று கூட அவள் அஞ்சினாள்.

வேறுவழியில்லாமல், டாக்டர் பூங்கொடி நிலைமையை விளக்கி மாதவனின் பிடிவாதத்தைத் தெரிவித்துப் பேரின்பமுத்துக்குக் கடிதம் எழுதினாள்.

அவரோ, அவர்கள் எதிர் பாராத வகையில்,

''மாதவன் எப்படி விரும்பு கிறானோ அப்படியே திருமணம் நடக்கட்டும்''—என்று தந்தியே கொடுத்துவிட்டார்.

ஆனால், அவரால்முன்கூட்டியே வந்திருந்து திருமண ஏற்பாடு களைக் கவனிக்க இயலவில்லை. எல்லாப் பொறுப்புகளையும் டாக்டர் பூங்கொடியின் தலைமை யிலேயே சுமத்திவிட்டார்.

* * *

அந்தத் திருமணத் திருநாளும் வந்தது.

சென்னையில் ஒரு பெரிய திருமணக்கூடத்தில்தான் மணம் நிகழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அன்று காலை மணம்நிகழும் இடத்திற்குத் தேன்மொழியும் மாதவனும் தனித்தனியே காரில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது ... ... ... ... ?

(வளரும்)

# வெண்பாப் போட்டி

## 26. ஓயா துழைத்துயர் வோம்

போதுமென் றெண்ணாமல் போதெல்லாம் நாமுழைக்கும்
போது, வறுமைக்குப் பொருளுந்தான்—ஏது ?(எ)னவே
மாயாது முன்னேற மந்திரம் யாது? அடா,
ஓயா(து) ? உழைத்துயர் வோம்.

—ந. சுப்பையா, மதுரை-2.

தூங்கா தினிதே துணிவாற்று வோம்; தோழா
மாங்கனிதான் வீழுமோ மந்திரத்தால் ?—ஈங்கினிமேல்
வாயா லுரைப்பந்தல் வேயாமல் தோள்வலியால்
ஓயா துழைத்துயர் வோம்.

—சோமுசா, அதிரை.

சந்திரனைத் தொட்டுச் சரித்திரத்தை மாற்றியநல்
விந்தைச் செயலுக்கு வித்தென்ன ?—சிந்தியுங்கள்
' ஓயா உழைப்பே ' ; உணர்ந்துநாம் ஒன்றுபட்டே
ஓயா துழைத்துயர் வோம்.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

ஏரைப் பிடித்துழுதால் எங்கள்தாய் மண்ணிவளோ
பூரித்து நெல்லாகப் புன்னகைப்பாள்—வாரியிங்கே
காயைக் கனியைக் கிழங்கை வழங்குவதால்
ஓயா துழைத்துயர் வோம்.

—சு. கிருட்டிணன், திருப்பூர்-1.

வேலை நிறுத்தத்தை வேண்டாத வன்முறையை
வேலையாய் எங்கும் விதைத்தொருபால்—மூலையில்
வாயாரப் பேசில் வருமோ சமதருமம் ?
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் துரை. முருகு, திண்டுக்கல்-1.

காட்டைக் கழனியாக்கிக் காவிரியிற் கங்கைநதி
யோட்டத்தைச் சேர்த்திணைத்தே யொன்றாக்கி—நாட்டில்
[நீர்
பாயாத பாழ்வெளியில் பாங்காய்ப் பயிர்வளர்த்(து)
ஓயா துழைத்துயர் வோம்.

—பாக்கியசாமி, சென்னை-3.

வங்கத் திருநாட்டின் வாழ்வுயரத் தோள்கொடுத்(து)
எங்கள் புகழ்மறவர் ஏற்றமுற்றார்—பொங்குபுகழ்
சாயா துயர்ந்திட்ட சத்தியத்துத் தாய்மண்ணில்
ஓயா துழைத்துயர் வோம்.

—திசு. பாலசுப்பிரமணியன், உதகமண்டலம்.

கண்ணால் எறும்புகளைக் கண்டிருந்தும் தேனீக்கள்
பண்ணார்ந்தே யெங்கும் பறந்திருந்தும்—எண்ணாமல்
நீயாதுஞ் செய்யாது நிற்பதுவோ ? பம்பரம்போல்
ஓயா துழைத்துயர் வோம்.

—தா. உலகநாதன், விருத்தாசலம்.

நாட்டிற்குச் சூழ்ந்துள்ள நாற்றிசைக் கேட்டினையும்
ஓட்டிடவும் வேண்டுமன்றோ ஒண்டமிழா ! நாட்டமுடன்
தேயாது மேலும் திருநாடு முன்னேற
ஓயா துழைத்துயர் வோம்.

—சு. ம. சுப்பிரமணியன், மதுரை-18.

உழைப்பை மதியாதே ; உத்தமரை ஏய்க்காதே ;
ஏழை உழைப்பை எருவாக்கி—வாழாதே
நாயாய்ப் பிறர்பொருளை நத்தாதே ; சிற்றெறும்பாய்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் அரிமதி தென்னகன், புதுச்சேரி-1.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—

திரு ந. சுப்பையா,
24, டட்லி இல்லம், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை-2.

போரின் விளைவுகளைப் போரிட்டு நாம்எதிர்க்க
வீரங்குன் றுமல் வினையாற்றித்—தீரமிகு
சாயாத கொள்கையுடன் தாரணியோர் போற்றிடவே
ஓயா துழைத்துயர் வோம்.

—குழ. அண்ணாமலை, கோவை

ஆய கலையும் அருந்தமிழும் வண்மையும்
நேய முடன்வளரும் நேரத்தில்—மேயவரும்
தீயனைய நல்குரவைத் தீய்த்திட நாமெல்லாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—கே. எஸ். பைரோசா, கம்பம்.

பதுங்கும் பகைமீண்டும் பாயவுங் கூடும்
ஒதுங்கிநாம் நின்ருலோ உய்யோம் !—முதுகிட்ட
தீயாரை நாம்கண்டோம் தேயத்தீர் ! ஒன்ருக
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் வேணு. அரங்கநாதன், கோவை-14.

நாடுயர நாட்டின் நலமுயர நாளெல்லாம்
பாடுபட்ட நந்தலைவர் பாங்கினைப்போல்—கேடகலத்
தீயார் நெறிதவிர்த்துத் திண்ணியராய் வன்மையுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் கு. மங்கையர்க்கரசி, திருச்செங்கோடு.

எப்போதும் தப்பாமல் ஈற்றடிக்கோர் பாட்டெழுதி
அப்போதைக் கப்போ தனுப்புகின்றேம்—எப்படியோ
ஓயா தனைத்தும் ஒதுக்கிவிடப் பட்டாலும்
ஓயா துழைத்துயர் வோம்.

—வை. இரத்தினசாமி, திருத்துறைப்பூண்டி.

பொன்னும் பொருளும் பொருந்திய நல்வாழ்வும்
வன்மை யுழைப்பின்றி வந்திடுமோ ?—மின்னிடையாய் !
தீயார்தம் வாழ்வினைப்போல் தேய்ந்தழிந்து போகாமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—தெ. செ. இராமசாமி, எம்.ஏ. ,பி.டி.,
நாமகிரிப்பேட்டை.

பஞ்சம் பசியகலப் பாரின் நலமுயரக்
கெஞ்சிப் பிறருதவி கேளாமல்—வஞ்சியே
தூய கலைவளரத் தொல்வேளாண் மைவளர
ஓயா துழைத்துயர் வோம்.

—குகதாஸ் விசுவநாதன், பங்களாப்புதூர்.

நாடு நலமுறவும் நல்லவர்கள் வாழ்ந்திடவும்
கேடு விலக்கவரும் கீழ்க்கதிர்போல்—நாடோறும்
காயாமல் தென்னவர்நாம் கஞ்சிக்குக் காணிசென்றே
ஓயா துழைத்துயர் வோம்.

—இரா. கணேசன், அரங்கப்பனூர்.

சோற்றுக் கிலையென்று சோம்பிக் கிடந்தோமேல்
மாற்றுநிலை தானாய் மலர்ந்திடுமா ?—ஆற்றலுடன்
சாயா மனந்தாங்கிச் சத்தியத்தின் நல்வழியில்
ஓயா துழைத்துயர் வோம்.

—சு. நாராயணசாமி, தில்லைநகர்.

சோம்பிக் கிடப்பதற்கோ சோற்றுத் திரளையுண்(டு)
ஓம்பி வளர்த்தோம் உடம்பையெலாம்—ஆம்பயனென் !
தேயாத சந்தனத்தால் தேர்வீர் ; வறுமையிலும்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

நாடா வளத்தனவாய் நம்நாட்டை ஆக்குதற்கே
ஓடா யுழைப்போரின் நல்லெண்ணம்—கோடாமல்
காயாகி முற்றிக் கனிவதற்கு நாமின்று
ஓயா துழைத்துயர் வோம்.

—மா. கி. தமிழ்ச்செல்வன், அன்செட்டி

ஏடாஎன் தம்பி !நீ எங்கேடா செல்கின்றுய்?
ஓடாதே நில் ! நாளும் ஊர்சுற்றி—ஓடாகித்
தேயாதே !வாடாநீ ! தோள்வலி கொண்டுநாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

எத்தொழிலைச் செய்தாலும், எவ்வூரில் வாழ்ந்தாலும்
அத்தொழிலை ஆர்வமுடன் செய்திடுவோம்—அத்தொழிலை
வாயார வாழ்த்தி மனமாரப் பாராட்டி
ஓயா துழைத்துயர் வோம்.

—தமிழகரத்னம், மேலூர்

நள்ளிரவில் கல்விகற்று, நற்பகலில் பாடுபட்டு
முள்ளிடைப் பூவேபோல் முன்னேறித்—தொல்லைதரும்
தீய அடிமைகொன்ற ஆபிரகாம் லிங்கனைப்போல்
ஓயா துழைத்துயர் வோம்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி

வல்லரசும் நம்மிடத்தில் வந்து வணங்கிநிற்க
நல்லபடி ஒற்றுமையாய் நாமிருந்து—செல்லனைய
தீயாரை வென்று, செழுமையுற ஊக்கமுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

வரும்பொருள் கண்டுரைக்கும் மாமுதல்வர் சொல்லின்
அரும்பொருள் கண்டுய்வோம் ; ஐந்தாம்—இருட்படை [யின்
மாயா வதந்திகளை மாய்த்திடுவோம் ; துஞ்சாமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் மு. சிக்கந்தர், மதுரை.

வறுமை ஒழிந்திட வாய்ச்சொல்லா போதும்?
அருமை முயற்சி யதற்காம்—கரும்பினிய
தூயோரைப் போற்றித் துயர்களைய நாளும்நாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

கள்ளக் கடத்தல், கலப்படம் செய்துலகில்
கொள்ளை யடித்தல் கொடிதன்றோ!—உள்ளத்தில்
பேயாய்க் குடிகொள்ளும் பேராசை நீக்கிநின்றே
ஓயா துழைத்துயர் வோம்.

—க. தமிழச்செல்வன், மாரியம்மன் கோவில்.

கூவம் மணப்பதுண்டு; கொள்கை சிறப்பதுண்டு;
யாவும் நடப்பதுண்டு நாம்உழைத்தால்—பூவுலகில்
தேயா மலையில்லை சிற்றுளியால்; என்பதனால்
ஓயா துழைத்துயர் வோம்.

—க. பழனிவேலு, மதுரை-5.

இளைஞர் அணிதிரண்டோம் எங்குமொளி சேர்ப்போம்
விளைவைப் பெருக்கிவெறும் வீணர்—களைந்தெறிவோம்
தீயோர் திரள்பகையைத் தீர்த்தெழில் நாட்டிற்கே
ஓயா துழைத்துயர் வோம்.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., பரமக்குடி.

ஆய கலையறிவோம் ஆற்றல் பலபுரிவோம்
தூய மனத்தால் துணிந்திருப்போம்—நேயமொடு
பாயும் பகையினையும் நட்பாக்கிப் பாரினிலே
ஓயா துழைத்துயர் வோம்.

—கோ. உலகநாதன், பி.ஏ.பி.இடி., உடையார்குடி.

கொள்கை வழிநடப்போம்: கொத்தடிமை ஆகிவிடோம்
உள்ளொன்று வைப்பார் உறவுகொளோம்—கள்ளமிலாத்
தாயனைய காந்தி தலைமையின்கீழ்த் தோழியரே
ஓயா துழைத்துயர் வோம்.

—செல்வி பெ. தமிழரசி சோழவந்தான்.

சிறிய குடும்பமே சீர்வாழ்வு நல்கும்
வறுமை யொழித்துவள மாக்கும்—அறியீரோ?
ஓயாமற் கூறுநான் ஒப்பேன்; கருத்தடைசெய்(து)
ஓயா துழைத்துயர் வோம்.

—முத்துச்சோழன், கோயம்புத்தூர்-1.

காடுவெட்டிக் கப்பலுங் கட்டி உயர்ந்தடுக்கு
வீடுகட்டி, வீணர் விரட்டியோட்டிப்—பாடுபட்டே
தேயாத கல்லையும் தேய்க்கும் எறும்பாகி
ஓயா துழைத்துயர் வோம்.

—சாப்டூர் அன்பரசு, தாண்டிக்குடி.

காம விளையாட்டும் கைக்குழந்தைத் தாலாட்டும்
பூமி தனில்நமக்குப் போதுமடி—நாமினிமேல்
தேயாது தேயம் செழிப்புற் றிருக்கநிதம்
ஓயா துழைத்துயர் வோம்.

—மு. சே. தமிழேந்தி, மேலச்சிறுபோது.

வாய்மை நெறிகாத்து வன்பகையைத் தூளாக்கித்
தூய்மை உளம்பூக்கத் தொண்டாற்றித்—தாயகத்தின்
தேயா வளம்பெருக்கித் தேனூறும் வாழ்வமைத்தே
ஓயா துழைத்துயர் வோம்.

—மா. செல்லமுத்து, பி.ஏ., பழனி.

நாட்டின் நலங்கருதி நம்மரசு நாடோறும்
காட்டும் முயற்சிக்குக் கைகொடுத்து—வாட்டமுடன்
மாயாமல் உள்ளம் மலர்ச்சிபெற நாளும்நாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—மாதையூரான், விழுப்புரம்.

நாட்டை வளமாக்கி நாமும் நிலவின்மேல்
வீட்டை அமைத்திட வேண்டாமா?—ராட்டையினை
ஓயாது சுற்றிடினும் ஒப்பற்ற ஆலைகளில்
ஓயா துழைத்துயர் வோம்.

—தமிழ்க்கனல், கோவை-11.

தண்ணீர் நிலநலமும் தக்கோர் குணங்கொடையும்
கண்ணீர்மை மாறாக் கருணையும்—பெண்ணீர்மைத்
தாயாக வந்துற்ற தண்டமிழ் நாட்டுக்கே
ஓயா துழைத்துயர் வோம்.

—ச. நாராயணன், கோவை-1.

வெந்ததைத் தின்று விதிவழியே செல்வதென
நொந்திடும் வாழ்வுமொரு வாழ்வாமோ?—வந்திடுவீர்
மாயா வளம்பலவும் வந்தடைய மாநிலத்தில்
ஓயா துழைத்துயர் வோம்.

—ஆர். கே. மாணிக்கம், திருச்சி-1.

ஏங்கிபல நாட்டோர்கை யேந்திநம் நாடதனில்
தேங்கியே நின்றகதை தேர்ந்திலையோ?—பூங்கொடியே!
சாயாத நம்புகழ்தான் சாய்வதுவோ? சோர்வகற்றி
ஓயா துழைத்துயர் வோம்.

—சீனி. சௌந்தரராசன், திருக்கோயில்பத்து.

ஞாலம் விழிதிறக்கும் நம்கொள்கை போற்றுமொரு
காலம் வருமட்டும் காத்திருப்போம்—சீலமுடன்
மாயாப் புகழ்நிறுத்தும் மாந்தருள் நன்மணியாய்
ஓயா துழைத்துயர் வோம்.

—ச. வெற்றிமணி, மயிலம்.

ஈன்றுள் உயிர்க்கும் இரவாமல் தானுழைக்கும்
ஆன்றோர் பலர்வாழும் அன்புலகில்—தோன்றியநாம்
வாயால் கதைபேசி வாளா இருப்பதுவா ?
ஓயா துழைத்துயர் வோம்.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

சீராரும் பாட்டாளிச் செம்மல்காள் ! வீணுகப்
போராடிக் காலத்தைப் போக்கிடுதல்—சீராமோ ?
மாயா வறுமையினை மாய்த்திடவே ஒன்றுபட்(டு)
ஓயா துழைத்துயர் வோம்.

—சிவ. மு. சிவலிங்கம், III-பி.எஸ்சி., சிவகாசி.

இல்லாமை இந்நாட்டில் இல்லாமை யாவதற்(கு)
எல்லாரும் ஒன்ரு யிணைந்திடுவோம்—பல்லாண்டும்
தேயா வுடலோடு திண்ணையிலே தூங்காமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—செல்வி. எஸ். சுமதி, மதுரை-1.

சாதி மதத்தைச் சாராது மாந்தரெலாம்
நீதிவழி பேதமற்று நேர்படுவோம்—ஓதிடுவோம்
காயா மனம்பெற்றுக் கண்ணியமாய் இன்றுமுதல்
ஓயா துழைத்துயர் வோம்.

—அ. வை. முத்துசாமி, அந்தியூர்.

நாட்டின் நலனென்றே நம்கொள்கை என்றெண்ணி
வாட்டமில் திட்டம் வகுத்திடுவோம்—பாட்டிகதை
வாயாரப் பேசும் வழக்கொழிப்போம் ; ஊக்கமுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—செ. தங்கவேல்சாமி, இராமேச்சுரம்.

இன்று நடக்கும் இனிய தமிழரசால்
நன்று நலவாழ்வை நாமடைவோம்—என்றென்றும்
வாயார வாழ்த்தி வளமோங்க ஒன்றுபட்டே
ஓயா துழைத்துயர் வோம்.

—கோபு, புதுவை-4.

எல்லாரும் கல்விபெற்றூர் ஏற்றதொழில் வாய்ப்புற்றூர்
எல்லாரும் செல்வத்தோ டின்புற்றூர்—வல்லோராம்
தூயோர் எனநம்மைத் தொல்லுலகம் போற்றிடவே
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் த. வாசுதேவன், பி.ஏ., கீழச்செருவாய்.

பிச்சை எடுத்துண்பீர் ! பேரிழிவு போதுமினி ;
இச்சையுடன் ஏற்பீர்நல் லெத்தொழிலும்—நிச்சயமாய்க்
காயாதே நம்வயிற்றைக் காத்தற்கு மானமுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—இ. கண்ணன், எம்.ஏ., திருவாரூர்.

காட்சிக்கு நல்ல கலைக்கூடம், கற்றறிந்த
மாட்சிக்கு வேண்டும் மனைக்கூடம்—ஆட்சிக்குத்
தோயா உழவுந் தொழிலும் நிலைக்கூடம்
ஓயா துழைத்துயர் வோம்.

—வெண்ணெய் வேலன், திருவெண்ணெய் நல்லூர்.

மின்பெருக்கி வேண்டுந் தொழில்பெருக்கி மேனுட்டார்
பொன்பெருக்கி வாழ்ந்து புகழடைந்தார்—முன்பெருமை
வாயா லுரைக்காதே வம்மின் தமிழரெலாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—நா. சுப்பிரமணியன், சேலம்-6.

முன்னேற்றம் காண முழுமூச் சுடனுழைக்கும்
தன்னேரி லாதஎம் தாயகத்தீர் —மின்மினியைப்
போயா ஒளிகேட்போம் ? பொல்லார் உணர்ந்திடவே
ஓயா துழைத்துயர் வோம்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

எந்நாளும் கையேந்தும் ஏற்றமிலா வாழ்வகற்றி
நந்நாட்டு மானத்தை நாம்காக்க—இந்நாளே
பாயும் புலிபோலப் பாய்ந்தே வருவாய்நீ
ஓயா துழைத்துயர் வோம்.

—வங்கனூரான், வங்கனூர்.

பொல்லாத சோம்பலினைப் போக்கி நிலையறிந்து
வல்லாண்மை நாட்டினராய் வாழ்வதற்குப்—பல்லாண்டுச்
சாயா துழைத்திட்டுச் சாற்றுகின்ற சிற்றெறும்பாய்
ஓயா துழைத்துயர் வோம்.

—செல்வி பா. தயாள், எம்.ஏ., முக்கூடல்.

வங்கக் கடலோரம் வார்சிலையாய் நம்மண்ணன்
சிங்கக் குரலெழுப்பும் சேதியிது—தங்கங்காள் !
காயா மரமாகக் காலத்தை யோட்டாமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—கருவை—இயதா, கரூர்.

நாயாய்த் தெருத்தெருவாய் நாளெல்லாம் சுற்றிவிட்டுப்
போயமர்ந்தால் சோற்றைப் புசிப்பதற்குத்—தாயாரும்
வாயார வாழ்த்துவளோ ? ஆதலால் வாலிபனே !
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் மா. லூர்துசாமி, வேம்பார்பட்டி.

வீடுநிறை பிள்ளைகுட்டி வேண்டா ஒருபோதும்
தேடுபொருள் கொஞ்சமேனுஞ் சேமிப்போம்—நாடுயரத்
தீயார்தம் தீங்கறுப்போம் தீந்தமிழ்க்கும் பாடாற்றி
ஓயா துழைத்துயர் வோம்.

—ப. அறவாழி, கோவை.

# கடவுளைக் கண்டேன்!

மாலை நேரம்! மனத்தை மயக்கும் மஞ்சள் வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது! மக்கள் பெரு வெள்ளமெனத் திரண்டிருந்தனர்! காட்டிலே நடைபெறும் திருவிழாவிற்குக் கால்நடையாகவும், கட்டை வண்டி மூலமாகவும் வந்திருந்த மக்களின் பக்தியைக் கண்டு திகைப்புற்றேன். கூட்டத்தில் நுழைந்து கோயிலுக்குச் சென்றேன். கோயிலின் உள்ளே ஒரு பகுதியில், குடும்பத்தினருடன் வீற்றிருந்த இறைவன் இன்முகம் காட்டிப் புன்முறுவல் செய்து '' வாங்க, வணக்கம்!'' என்று கூறி என்னை வரவேற்றார்.

'' என்றைக்கு இங்கு வந்தீர்கள்? நலமாக இருக்கின்றீர்களா? '' என்று இறைவனைக் கேட்டேன்.

'' நாங்கள் வந்து நான்கு நாட்களாகின்றன. நான்கு நாட்களாக நாங்கள் மிகவும் நிம்மதியாக இங்கு இருக்கிறோம்'' என்று இறைவன் புன்னகை தவழப் பதிலளித்தார்.

அந்த ஆண்டவனின் முகத்திலே அன்பு, அறிவு, அமைதி, அடக்கம் ஆகிய அரும்பண்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து காணப்பட்டன. இதுநாள் வரை காணாத கடவுளை இன்று கண்டு விட்ட களிப்பில், நான் இந்த உலகை மறந்து நின்று விட்டேன்.

நான் ஏதும் பேசாமல் நின்று விட்டதைக் கண்ட கடவுள் '' தாங்கள் யாரோ?'' என்று கேட்டார். இறைவன் கேட்ட கேள்வியினால் உணர்வு பெற்ற நான் மீண்டும் இந்த உலகுக்கு வந்தேன். என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது; கடவுளைக் கண்டு விட்ட களிப்பினால் ஏற்பட்ட கண்ணீர் அது!

இப்படியொரு நிகழ்ச்சி 22—1—1972 அன்று நடைபெற்றது. வியப்பாக இருக்கிறதா? விளங்கவில்லையா? விளக்கம் இதோ!

தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நான் கண்ட கடவுள் ஒரு தொழுநோய்ப் பிச்சைக்காரர்! அவர் வாழும் இல்லத்தையே நான் கோயில் என்று குறிப்பிட்டுள்ளேன். தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத் துவக்க விழாவையே திருவிழா என்று கூறியுள்ளேன்!

ஏசுநாதரும், அண்ணல் காந்தியடிகளும் தொழுநோய்ப் பிச்சைக்காரனின் உருவிலே ஆண்டவனைக் கண்டனர்: அவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று வெறுத்து ஒதுக்கப்பட்டுத் திக்கற்றுத்திரியும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குச் சேவை செய்துவருவதையே, ஆண்டவனுக்குச் செய்யும் அரிய சேவையாகக் கருதினார்கள்.

'' கல்லுடைக்கும் தொழிலாளி, வயலில் உழைக்கும் பாட்டாளி, வண்டி இழுக்கும் தொழிலாளி உருவில் கடவுள் இருக்கிறார் '' என்று ' கீதாஞ்சலி ' என்னும் கவிதையிலே குறிப்பிட்டுள்ளார்—உலகு புகழ் நோபெல் பரிசு பெற்ற கவி ரவீந்திரநாத தாகூர்.

இறவாப்புகழ் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் '' என்று கூறி அதற்கான திட்டங்களை உருவாக்க முயன்றார். அண்ணா வழியில் ஆட்சி செய்து வரும் கலைஞர் அவர்கள் ஏழைகளைக் கடவுளாகக் கருதி அவர்களுக்குச் சேவை செய்வதையே தன் இலட்சிய கீதமாகக் கொண்டு, திட்டங்களைத் தீட்டித் திறம்படச் செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களிலேயே தலையாய திட்டம் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டமாகும். அதிலே முதற் கட்டம், தொழுநோய்ப்பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் அமைத்தலாகும்.

### பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம் பிறந்ததெப்படி?

பிச்சைக்காரர்கள் மேல் யாருக்கும் ஏற்படாத பரிவும், பாசமும், கலைஞருக்கு மட்டும் எப்படி ஏற்பட்டது என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது. இதே கேள்வி பலருடைய உள்ளத்தில் ஏற்படக் கூடும் என்று எண்ணியோ என்னவோ உளுந்தூர்ப்பேட்டை தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்திறப்பு விழாவின்போது முதல்வர் அவர்கள் பின்கண்ட விளக்கத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

'' எனக்கு 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முந்திய நினைவு வரத்தான் செய்கிறது. இந்தப் பகுதியிலே — உளுந்தூர்ப்பேட்டை வழியிலே—சேலம் செல்வதானாலும்— திருச்சி செல்வதானாலும் — அல்லது திருச்சி, சேலம் போன்ற இடங்களிலிருந்து சென்னைக்குச் செல்வதானாலும், உளுந்தூர்ப்பேட்டைக் கடைத்தெருவில் நாங்கள் செல்கின்ற கார் கொஞ்ச நேரம் நிற்பதும் —அந்த முக்கூட்டுச் சாலையிலே உள்ள சிற்றுண்டி விடுதிக்கு நாங்கள் சென்று உணவருந்தி விட்டு வருவதும், காரிலே ஏறுகையில் கையேந்திப் பிச்சை கேட்கும் தொழுநோய்ப்



... சந்தப்பதும இன்றைக்கும் என் நினைவிலே இல்லாமல் இல்லை.

"இன்னும் நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அந்தச் சிற்றுண்டி விடுதிக்கு முன்னால், ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள், நான் காலையிலே ஆறரை அல்லது ஏழு மணிக்குச் சிற்றுண்டி அருந்திவிட்டுக் காரிலே ஏறவந்த போது ஒருதாய்—50 வயது மதிக்கத் தக்க ஒரு தாய்—முகமெல்லாம் கந்தல் துணியால் மூடிக் கொண்டு; துணியில் உள்ள ஓட்டையின் மூலம் பார்த்தவாறு கையை நீட்டி 'ஐயா, சாமி பிச்சை' என்று கேட்டபோது, நான் காசை எடுத்து அவர் வைத்திருந்த பாத்திரத்திலே போட முனைந்தேன். அப்போது காற்றடித்த வேகத்தில் முகத்தை மூடியிருந்த துணி கீழே சரிய நான் அவரைப் பார்த்தேன். அந்த அம்மையாருக்கு முகமே இல்லை. சில சதைத் துணுக்குகளும், நீட்டிக் கொண்டிருந்த எலும்புத் துண்டுகளும், பிதுங்கிய கண்களும் தான் இருந்தன. அந்த அளவுக்குத் தொழுநோயால் பாதிக்கப் பட்டு இருந்தார்கள்.

" அந்தக் காட்சியைக் கண்ட அன்றே, இவர்களது வாழ்வைச் சீரமைத்திட வேண்டும் என்ற எண்ணம் அந்தக் காலந் தொடங்கியே எனக்கு இருந்து வந்தது. அப்போதே நீ இந்த மறுவாழ்வுப் பணியைத் தொடங்கி இருக்கக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். அப்போதல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி அமைந்திடவில்லை.

" இப்படிப் பட்டவர்களை—பொட்டுப் பூச்சிகளாய்—புன்மைத் தேரைகளாய்—புழுக்களினும்கேவலமாய்—சமுதாயத்தின் அடித்தளத்திலே வீழ்ந்து கிடக்கும் இவர்களை யார் காப்பாற்றுவது? அதற்கு யார் வழி வகுப்பது என்பது அன்று கேள்விக் குறியாக என்முன் எழுந்தது. 'நீயே இதைச் செய்ய வேண்டும்.' என்று அக்கேள்விக்கான பதில் ஐந்தாறு ஆண்டுகள் கழித்து என்னையே நோக்கிப் பாயும் என்று நான் கருதவில்லை. ஆனால், இன்று அக் கடமையினைச் செய்யும் பெரும் பொறுப்பும்—என் சக அமைச்சர்களுக்கும்—நாங்கள் வீற்றிருக்கும் தமிழக அரசுக்கும் வாய்த்திருப்பதை எண்ணியெண்ணி நாங்கள் பெருமைப் படுகிறோம்" என்றார்.

**பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி**

சென்ற ஆண்டு முதல்வர் அவர்கள் அவருடைய பிறந்த நாள் விழாவின்போது 'பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்க ரூ. 40 இலட்சம்தேவை; அத்திட்டத்திற்கு நிதி உதவுங்கள்' என்று விடுத்த வேண்டுகோளுக்குஇணங்கி, பொதுமக்கள் பிச்சைக்காரர்மறுவாழ்வு நிதிக்கு வாரி வழங்கியுள்ளனர். பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு 17—1—1972 வரை ஒரு கோடியே 3 இலட்சத்து 72 ஆயிரத்து 129 ரூபாயும் 58 காசுகளும் சேர்ந்துள்ளது. இதில், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக ஜூன்-1971-ல் நடத்தப் பெற்ற பரிசுச் சீட்டுக் குலுக்கல் மூலமாகக் கிடைத்த 43,27,200 ரூபாயும் அடங்கியுள்ளது. இந்நிதியைக் கொண்டு, இத்திட்டத்தின் முதற் கட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லம் அமைக்கப் பட்டு வருகிறது.

தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் முதன் முதலில் செங்கற்பட்டு மாவட்டம் பரனூரில் துவங்கப் பட்டது. இரண்டாவது இல்லம் தென்னார்க்காடு மாவட்டம்

உளுந்தூர்ப் பேட்டைக்கருகில் வெள்ளையூரில் எழுந்துள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தின் தோற்றம்



உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் ரூபாய் 7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இல்லம் 20 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இவ்வில்லத்தில் 500 முதல் 750 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் வாழ முடியும். இந்த இல்லத்தில் 22—1—1972 அன்று வரை, 103 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தாங்களாகவே விரும்பி வந்து சேர்ந்துள்ளனர். இவ்வில்லத்தைத் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் 22—1—1972 அன்று திறந்துவைத்தார்கள்

### முதல்வர் வணங்கும் தெய்வம்

விழாவிற்குத் தலைமை தாங்கிய தமிழ்நாடு அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் பேசியதாவது :—

'' குழந்தை பாலுக்கு அழுகிறது. பத்துக்காசு கொடுங்கள் என்று ஒரு பெண் பிச்சை கேட்டால், 'எட்டப்போ' என்று சொல்லிவிட்டுக் காரிலே போகும் சீமான்கள் நிறைந்தநாடு தான் இது. ஏழைகளுக்கு உதவ மனமில்லாமல் ஆண்டவனுக்குக் கும்பாபிஷேகம் செய்கிறவர்கள் இங்கு இருக்கிறார்கள்.

'' ஆனால், ஏழைகளைக் கலைஞர் தெய்வமாகக் கருதுகிறார். பண்டித நேரு அவர்கள் சாதாரண மனிதர்களைத்தான் நான் வணங்குகின்றேன் என்றார். அதையும் மிஞ்சி, டாக்டர். கலைஞர் அவர்கள் தொழுநோயாளிகளை வணங்குகின்றார்.''

இவ்வாறு அமைச்சர் சத்தியவாணி முத்து அம்மையார் கூறினார்.

தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு உடை வழங்கி, உரையாற்றினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

'' உலகத்திலே வேறு எந்த உயிரினங்களிலும் பிச்சைக்காரர்கள் கிடையாது. விலங்குகள், பறவை இனங்களிலும் பிச்சைக்காரர்கள் கிடையாது. சமுதாயத்தில் எல்லா மனிதரையும் சந்திக்கலாம். ஆனால், பிச்சைக்காரர்களைச் சந்திப்பது அலட்சியமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு அரசு அவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற மக்களைப் பற்றி இதற்கு முன் யாரும் சிந்திக்கவில்லை; பிச்சைக்காரர்களை வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம் வேறு எவருக்கும் வரவில்லை. அவர்கள் கண்களில் இந்தப் பிச்சைக்காரர்கள் படவில்லை. அண்ணா வழி வந்த கலைஞர் அவர்கள் தான் பிச்சைக்காரர்களுக்கு நல்வாழ்வு அளித்து வருகிறார்.''



### அடுத்த ஆண்டிற்குள் 6 இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார். அவரது உரை உள்ளத்தை நெகிழ்விப்பதாக இருந்தது. அதன் ஒரு பகுதியின் சுருக்கம் வருமாறு :—

'' தமிழகத்தில் 60,000 பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். இதில், கிட்டத்தட்ட 6,000 பேர் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். பிறக்கும் போது ஐந்து விரல்களோடு பிறந்தவர்கள், பின் ஒரு விரலை இழந்து விட்டு, இரண்டு விரல்களை நீக்கிக் கொண்டு அல்லது தனது விரல்களையெல்லாம் கட்டையாக்கிக் கொண்டு, தனது அழகு மேனியைத் தொழு நோயினால் கெடுத்துக் கொண்டு, உடல் கூனிக் குறுகி, வாழ்க்கையிலே எந்த விதச் சுவையுமில்லாமல் சீரழிந்து, 'ஏனெடுத்தோம் இந்த ஈன ஜென்மம்'' என்று ஆண்டவனைக் கேட்டுக்கொண்டு, 'போகும் காலம் எப்போது?' என்று புலம்பிக் கொண்டிருக்கிற ஜீவன்கள் 6,000 பேர் பிச்சைக்காரர்களாகத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அந்த 6,000 பேர் கேட்ட உதவியை முதற்கட்டமாக நாம் செய்தாக வேண்டும் என்ற அடிப்படையிலே நாம் திட்டத்தை வகுத்துக் கொண்டுதான் 6 இடங்களில் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் குடியமர்த்தும் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம்.

அடுத்த கட்டமாக மிச்சமுள்ள தொழு நோயில்லாத பிச்சைக் காரர்களை எல்லாம்

உறுதியான கட்டடங்கள்: கிராமங்களில்-1

SANKAR IC CEMENT




SANKAR IC CEMENT

கால்நடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை

# சங்கர் சிமெண்ட்

IS:269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

IS:269 ISI

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1446TM-R

சேர்ப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம். கட்டட வேலைகளெல்லாம் முடிந்த பிறகு தமிழ் நாட்டுத் தெருக்களிலே யார் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் எல்லாம் சட்டப்படி விடுதிகளிலே கொண்டுவந்து சேர்க்கப்படுவார்கள். கட்டாய முறை, யாரையும் துன்புறுத்துவதற்காக அல்ல; அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காகத்தான். சமுதாயத்தில் நடைபாதையில் நடைப்பிணம் போல், சாலையோரத்தில் வேலையற்றதுகளாய் ஒரு சமுதாயம், இன்றைக்கும் இருக்கின்ற ஒரு கொடுமையிலிருந்து அந்தச் சமுதாயத்தை மீட்டாக வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தக் காரியம் நடைபெறுகிறதே அல்லாமல், துன்புறுத்துவதற்காக அல்ல'' என்று முதல்வர் கலைஞர் அவர்கள் தெளிவுபடுத்தினர்.

### அதிகாரிகளாகப் பணியாற்றத் தயங்கமாட்டோம்

மேலும் தொடர்ந்து அவர் பேசுகையில், தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களைக் கண்காணித்துக் கொள்ள நியமிக்கப்பட்ட அதிகாரிகள், பொறுப்பினை ஏற்கத் தயங்குவது பற்றி மிகவும் வருத்தத்தோடு கூறியதுடன், 'அமைச்சர்களே அதிகாரிகளாகப் பணியாற்றத் தயங்க மாட்டோம்' என்றும் குறிப்பிட்டார். அவர் கூறிய கடமை உணர்ச்சி ததும்பும் வார்த்தைகள் :-

'' பிச்சைக்காரர் விடுதியிலே போய் அதிகாரியாக இருப்பதா? அதிலும் தொழுநோய் பிடித்தவர்கள் உள்ள இடத்தில் இருப்பதா ? என்று யாராவது கருதுவார்களேயானல், அவர்கள் படித்த படிப்பும் வீண் ! பெற்ற பட்டமும் பெறுகின்ற பதவியும் வீண் ! என்று எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படிப்பட்ட சோகச் செய்தி என் காதிலே விழுந்த காரணத்தினல் உறுதியோடுசொல்கிறேன்.

அப்படி அதிகாரிகள் மறுப்பார்களேயானல், அமைச்சர் பெருமக்களே முறை போட்டுக்கொண்டு, நாங்களே வந்து ஒருமாத காலம் அதிகாரிகளாகப் பணியாற்றுவோம் என்ற முடிவினை நாங்கள் எடுப்பதற்கு முன்பு, அதிகாரிகள், நண்பர்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு இந்தப் பணியினை ஆற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ''.



இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது, பொது மக்களின் உள்ளத்தை நெகிழ்வித்ததுடன், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வில் அவருக்கு உள்ள ஆர்வத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் அமைந்திருந்தது.

இதைப் பொது மக்கள் எழுப்பிய கையொலி உறுதிப்படுத்துவதாக இருந்தது.

### முதல்வர் விடுத்த அன்பு வேண்டுகோள்

'' சிறுதுளி பெருவெள்ளம் என்பதைப் போல் காசாக, ரூபாயாக, ஆயிரமாகத் தந்தாலும் சரி ; அனைவரும் இந்த நல்ல காரியம் வெற்றி பெற்ருக வேண்டும் என்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். 'விடுதியிலே சேர்ந்து தங்கள் உடல் நலத்தையும் பேணி, உழைக்க வேண்டும்' என்று இங்கு வலுவிலே வந்து சேர்ந்திருக்கிற பிச்சைக்கார நண்பர்களை, தாய்மார்களை, சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறேன் ! தமிழக அரசு எடுக்கின்ற இது போன்ற நல்ல பெரும் பணிக்குத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் அமோக ஆதரவு இன்று போல் என்றும் இருக்க வேண்டும் '' என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார் முதல்வர்.

இந்தப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் என்னையும் ஈடுபடுத்திக் கொண்டால் என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

'' என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் ? புறப்படுங்கள். உடனே உளுந்தூர்ப்பேட்டை சென்று செய்தி கொடுக்க வேண்டும் என்று நண்பர் கேசவன் குறிப்பிட்டார். கடவுளைக்கண்ட களிப்பில் கடமையைச் செய்யக் காற்றெனப் பறந்தோம்.

'' ஆலயங்களுக்குச் செல்வது வழக்கமில்லை; ஆண்டவனைத் தொழுவதும் பழக்கமில்லை; ஆனல், இதுபோன்ற பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் தான், நான் செல்கின்ற ஆலயம். அங்கே இருக்கின்ற நீங்கள்தான் நான் வணங்குகின்ற தெய்வங்கள்'' என்று பிச்சைக்காரர்களிடம் முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட உணர்ச்சி மிக்க வார்த்தைகள் என் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

சிப்பாய்க்கலகம் என்னும் சிந்தனை அரும்பு முன்னரே இந்திய விடுதலைப்போரை, ஆம், நாட்டின் மானங்காக்கும் போரைத் தொடங்கிவைத்த முதல் இனம் தமிழினம்; அந்தப் போரில் கனன்றெழுந்த தியாகத் தீயில் குதித்துத் துப்பாக்கிக் குண்டுகளை முத்தமிட்டும், தூக்கு மேடைகளில் தொங்கியும், சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்த முதல்இனமும் தமிழினமே ஆகும் !

இற்றைக்கு 180 ஆண்டுகட்கு முன்பே, கப்பம் கட்டுமாறு கும்பினி அதிகாரிகள் பயமுறுத்திக் கப்பம் வசூலிக்க முயன்ற நேரத்தில் '' கப்பமா? எதற்காக? வானம் பொழியுது! பூமி விளையுது ! மன்னவன் காணிக்கு வரி எதற்கு?'' என்று சீறியெழுந்தான் தென்பாண்டி நாட்டில் பாஞ்சாலங் குறிச்சியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த வீரபாண்டியக் கட்டபொம்மன்! அவன் வழி வந்தவர்கள்தான் ஊமைத்துரையும், மருது சகோதரர்களும்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த சிவகங்கைச் சீமையைச் சேதுபதி என்னும் தமிழ்மறக் குலவீரர் ஆண்டுவந்தார். இவர் 36 ஆண்டுக்காலம் வாழ்ந்தார். இவருக்குப் பிறகு சசிவர்ணத் தேவர் 25 ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்தார். இவருக்குப் பின் இவர் மகனை முத்துப் பெரிய வடுகநாத உடையணத் தேவர் பட்டம் சூட்டப்பெற்ருர். அந்த நேரம் ஆர்க்காட்டு நவாப்பின் 'காட்டுத் தர்பார் நடந்து கொண்டிருந்தது. தமிழ்நாடு கொள்ளை, கொலைகளுக்கு இரையானது. ஆங்கிலக் கும்பினியின் படைபலத்தைத் துணையாகக் கொண்டு சுதந்தரப் பறவைகளான தமிழகச் சிற்றரசர்களது நாடுகளைச் சூறையாடினன். அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேய வெறியர்களோடு ஆர்க்காட்டான் நடத்திய அட்டகாசம் கொஞ்ச நஞ்சமன்று.

இக்கொடுமைகளைக் கண்ட தமிழினம் கொதித்தெழுந்தது. இதன் விளைவு? 1772-ஆம் ஆண்டு ஜெனரல் ஸ்மித் என்பவன் மறவர் நாட்டின் மீது படையெடுத்தான்; அதாவது இராமநாதபுரத்தைத் தாக்கினன். பலரைக் கைது செய்து காவலில் வைத்தான். இராமநாதபுரத்தில் வெள்ளைப்படை வெற்றி பெற்ருலும், சிவகங்கையை அவனல் நெருங்கக் கூட முடியவில்லை. காரணம், முத்துவடுகநாதன் என்றுலேயே வெள்ளையருக்குக் கதிகலங்கியது. மேலும், சிவகங்கைச் சீமையின் அரணை விளங்கிய பெரிய மருது, சின்ன மருது என்னும் சகோதரர்களின் பெயர்களைக் கேட்டதும் அந்த வெள்ளைப் படை வெருண்டோடியது.

கருவிலே திருவுடையரான சகோதரர்கள் இருவரும் வீரத்தின் திருவுருவாய்க் காட்சியளித்தார்கள். எஃகு போன்ற உடல் வன்மையும், உள்ள உரமும் மிக்க அவர்களின் கம்பீரத் தோற்றம் பகைவரின் தொடை நடுங்கச் செய்யும்! வீர நெஞ்சிலே ஈரமும்

# நாளையத் தலைமுறை

இருந்தது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:—சின்ன மருது ஒருநாள் காட்டு வழியே சென்று கொண்டிருந்த பொழுது பசி மிகுதியால் களைப்புற்று மயங்கிக் கிடந்தார். அப்போது அங்குக் காவல் காத்துக் கொண்டிருந்த ஒரு கிழவி ஓடி வந்து, ''ஐயா, நான் ஏழை! என்னிடம் உங்கள் களைப்பைப் போக்க ஒரு பொருளும் இல்லை. காலையில் நான் குடித்த கஞ்சி மீதி இருக்கிறது. குடிக்கிறீர்களா?'' என்று கேட்டாள். கிழவியின் இனிய மொழியைக் கேட்ட சின்ன மருது, ''அம்மா, உங்கள் பெயரென்ன?'' என்று கேட்டார். அதற்கு அக்கிழவி, '' தாயம்மாள் '' என்ருள். ''ஆமாம். நீ தாய் அம்மாளே தான்! நீ தரும் கூழும் அமிழ்தம் தான் ...... ... கொண்டு வருக!'' என்று கூறிக் கிழவி தந்த கூழைக் குடித்துக் களைப்பு நீங்கினர். உடனே ஓலை ஒன்றெடுத்து அதில் முள்ளால் ஏதோ எழுதிக் கையெழுத்திட்டார். அது வெறும் ஓலையில்லை. ''இந்தக் கிராமம் தாயம்மாள் என்னும் இக்கிழவிக்கே உரியது என்ற சாசனம்!''

வீரமும், நெஞ்சில் ஈர ... மும் ஒருங்கே பெற்ற ... இச்சகோதரர்களைச் சோதி ... பபது போலிருந்தது ஆர்க்கா ... ட்டானின் ஆணவச் செயல். அவன் தூண்டுதலின் பேரில் ஜோசப் ஸ்மித் மிகுந்த செருக்கோடு கூலிப் பட்டாளங்களுடன் சிவகங்கைச் சீமையை முற்றுகையிட விரைந்து வந்தான். சும்மா இருக்குமா வீரப் படை ! வெகுண்டெழுந்தது. ''மன்னு! வரட்டும் வெள்ளைப் படை! இதோ இந்த வாளுக்கு நல்ல விருந்து வைக்கிறேம்!'' என்று வீரமுழக்கம் செய்தனர் சகோதரர்கள்.

எவரும் எளிதில் நெருங்க முடியாத காளையார் கோவில் காட்டில், முத்து வடுகநாதனும் அவன் மனைவியும் புகுந்தனர். இதையறிந்த ஆர்க்காட்டான், புதுக்கோட்டை மன்னனுக்குப் பணத்தாசை காட்டி மயக்கித் தமக்கு உதவும்படி வேண்டினன். வெள்ளைப்படை கர்னல் பான் ஷோர் என்பவன் தலைமையில் விரைந்து வந்தது. தமிழ்த் தாயின் மானங் காக்கத் துணியாத ஒரு கயவன், காளையார் கோவில் அரணைக் காட்டிக் கொடுத்துவிட்டான். நவாப்பின் படையும், கும்பினிப் படையும் அரணுக்குள் புயலெனச் சீறிப் பாய்ந்தன. நாகமென வெகுண்டெழுந்தான் முத்துவடுகநாதன். ''வெள்ளைப் படையை இல்லையென ஆக்குங்கள் ! துரோகிக் கூட்டத்தைத் தூளாக்குங்கள் ! வெட்டுங்கள் ! குத்துங்கள்'' என்ற அவனது வீர முழக்கம் காடெல்லாம் எதிரொலித்தது. அந்த ஒலி வெள்ளைப் படையையும் கிலி பிடிக்க வைத்தது.

வீராங்கனை வேலுநாச்சி கொடியேந்திக் குதிரை மீதேறி வந்து தமிழ்ப்படைக்கு ஊக்கமூட்டிக் கொண்டே, எதிரிகளின் தலைகளைப் பந்தாடினள். வெள்ளையன் வெருண்டான். என்ருலும் உச்சக் கட்டத்தை அடைந்தது அப்போர். ஆயுதபலம் நிறைந்த வெள்ளைப் படையினர் பீரங்கிகளால் கோட்டையைத் தகர்த்தனர்.





# வீரம் விளைந்த மருதிருவர்

கோட்டை வாயில், பகைவர் வசமாயிற்று! உடனே சின்ன மருது, ''அரசே! தப்பிவிடுங்கள்; பிறகு படை திரட்டித் தாக்குவோம்!'' என்றான். ஆனால் முத்துவடுகநாதனோ ''முடியாது; என் உடலில் இறுதிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை பகைவனை எதிர்த்தே திருவேன்!'' என்று கூறியபோது வெள்ளையர் அவனை நாற்புறமும் சூழ்ந்து தாக்கினர். அனைவரையும் ஒருவனாகவே நின்றுபோராடிய அவனது வீரத்தைக் கண்டு வெள்ளையரே திகைத்தனர். என்றாலும் தமிழ் மானம் காத்தவன் மார்பில் துரோகிகளின் குண்டு பாய்ந்தது. முத்துவடுகநாதன் வீரமரணம் எய்தினான்.

வேலுநாச்சியும், மருது இருவரும் திண்டுக்கல்லுக்கு விரைந்து சென்றார்கள். வெள்ளையரை ஒழிக்கத் திட்டமிட்டிருந்த ஐதர் அலி அங்கு அவர்களை வரவேற்றான்.

நவாபின் நய வஞ்சகத்திற்கு இராமநாதபுரமும், சிவகங்கையும் பலியாயின. மருது இருவர், வேலுநாச்சி ஆகியோரின் நிலையை எண்ணி மக்கள் கொதித்தெழுந்தனர். மருது இருவர் மறைமுகமாக மக்களிடம் தொடர்பு வைத்துக் கொண்டார்கள். மக்களும் மறைவாகக் கப்பம் செலுத்தினார்கள். இதனால் ஆர்க்காட்டானின் வாயில் மண் விழுந்தது. அவனால் சல்லிக்காசு கூட மக்களிடமிருந்து வசூலிக்க இயலவில்லை. கடைசியில் ஒன்றும் புரியாமல் மறவர் நாடுகளை அவர்களிடமே ஒப்படைத்தான் நவாபு.

சிவகங்கைக்கு வேலுநாச்சி அரசியானாள். மருது இருவர் அமைச்சரானார்கள். நாளடைவில் மருது சகோதரர்களே அரசரானார்கள். வீரத்திலகம் வேலுநாச்சி காலமானார். இந்தச் சமயத்தில் வீர பாண்டியக் கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை அங்குவந்து சேர்ந்தான்.

மருது சகோதரர்களிடமிருந்து அரசைக் கைப்பற்ற வெள்ளையரும், நவாபும் சதி செய்தனர். மருது சகோதரர்களைப் பல விதத்திலும் மிரட்டினர். இதற்கெல்லாமா மருது சிங்கங்கள் பணிந்து விடும்? அவர்களிடம் இருபதாயிரம் வீரர்கள் கொண்ட படை இருந்தது. ஈட்டி, வாள் வேல் போன்ற போர்க்கருவிகள் ஏராளமாக இருந்தன. இதற்கு மேலாகத் தாய்நாட்டுப் பற்று மேலோங்கி இருந்தது. காட்டிக்கொடுக்கும் துரோகிகள் மட்டும் இல்லாமல் இருந்தால், எப்போதோ வெள்ளைப்படை தமிழ் மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டு இருக்கும்.

1801-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள் மருது இருவருக்கும், கும்பினிப் படைக்கும் போர் தொடங்கியது. பழமனேரி, சிறுவயல், காளையார் கோவில், கமுதி, நாகலச்சேரி, திருப்பாச்சேத்தி முதலிய இடங்களில் கடும்போர் நடந்தது. வெள்ளைப்படையின் பெரிய அதிகாரிகள், சிப்பாய்கள் முதலானோரை வெட்டி மலைபோல் குவித்தது தமிழர் படை. கும்பினிப்படையினர் தாம் எண்ணியபடி மருது இருவரையும், ஊமைத் துரையையும் கைது செய்ய முடியவில்லையே என்று ஏங்கினர்.

படை வலிமையால் இவர்களை வெல்ல முடியாத வெள்ளையர் வதந்தி, குழப்பம் பலவற்றை மக்களிடையே பரப்பிக் கலகத்தை உண்டு பண்ணினர். இதற்குப் பலியாகி, மக்கள் மானம் காத்த மறவர்களைக் காக்காமல், வெள்ளையருக்கு அவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். கும்பினிப் படை காடுமலையெல்லாம் தேடி மருது இருவரையும், ஊமைத்துரையையும் கைது செய்தது.

காரைக்குடியிலிருந்து மதுரை செல்லும் வழியிலுள்ள திருப்பத்தூர்க் கோட்டையில் மருது சகோதரர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றனர் வெள்ளையர்கள். ஊமைத்துரையைப் பாஞ்சாலங் குறிச்சியிலேயே தூக்கிலிட்டுக் கொன்றார்கள். தாய் நாட்டின் மானங்காத்த வீரர்கள் தூக்கிலிடப் படுவதைக் கண்ட தமிழ்த் துரோகிகள்மகிழ்ந்தனர். கூலிப்பட்டாளம் குதூகலித்தது. வெள்ளையரும், ஆர்க்காட்டு நவாபும் அகமகிழ்ந்தனர். ஆனால், ஆழ்கடல் உள்ளவரை அந்த மறவர் குலத்திலகங்களின் மாண்பு மறையாது! குறையாது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!

# இதோ இன்னொரு சாதனை!

தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!

நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதிய[illegible]தை!"

## தமிழ் நாட்டில் உருவாகிறது!

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள **பூத்துறை** என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில் எடுத்துக்காட்டாக விளங்கும் சிற்றூர்!

குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!

**பூத்துறை** போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்!




தமிழரசு

குடும்பநலத்துறை

இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

தமிழகத்தின் பதினான்கு மாவட்டங்களில் ஏழு மாவட்டங்கள் கடற்கரையோரம் அமைந்துள்ளன. அவற்றில் மிக நீண்ட கடற்கரைப் பகுதிகளைக் கொண்டது இராமநாதபுர மாவட்டம். சுமார் 160 மைல் நீளமுள்ள கடற்கரை அதற்குண்டு. இங்குக் கடல் அதிக ஆழமில்லை; கடலோரம் பவளப் பாறைகளும் சுண்ணாம்புப் பாறைப் படிவங்களும் அதிகம் உண்டு. ஆழமில்லா மடுக்கள் மிக உண்டு. பெரிதும் சிறியதுமான பல தீவுகள் கடற்கரையோரம் அமைந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை பதினேழு. அவற்றில் ஐந்து முதுகுளத்தூர் வட்டத்திலும், பன்னிரெண்டு இராமநாதபுரம் வட்டத்திலும் அமைந்துள்ளன.

1. **இராமேஸ்வரம்:** மிகப் பெரிய தீவு இராமேஸ்வரம். இத்தீவினை மண்டபத்துடன் பாம்பன் பாலம் இணைக்கிறது. இங்குப் புகழ்பெற்ற இராமேஸ்வரம் கோவில் உள்ளது. தீவின் தெற்கு முனையில் தனுஷ்கோடி அமைந்துள்ளது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆண்டின் எல்லாப் பருவங்களிலும் இங்குப் பயணிகள் வந்த வண்ணமிருப்பர். இத்தீவிலிருந்து இலங்கைக்குக் கப்பல் போக்குவரத்து உள்ளது.

2. **குருசடைத் தீவு:** இராமேஸ்வரத்திலிருந்து மிக அருகாமையில் 250 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு முத்துச் சிப்பி வளர்ப்பு நிலையம் ஒன்றும், மீன் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் உள்ளன.

3. **சிங்களத் தீவு:** குருசடைத் தீவிலிருந்து ஒன்றரை மைல் தொலைவிலுள்ளது. சிங்களத்திலிருந்து மீன் பிடிக்க வருபவர்கள் இங்குத் தங்கும் வழக்கம் உண்டு. அதனால், சிங்களத் தீவு என்று பெயர் பெற்றது. மீன் பிடித்தல் முக்கிய தொழில்.

4. **பூமரிச்சான் தீவு:** பாம்பனிலிருந்து நாலுமைல் தொலைவிலுள்ளது. நல்ல மேட்டுப்பகுதி. இது மூன்று பகுதிகளைக் கொண்டது. பெரியகண்டத் தீவு, நடுத் தீவு, பூமரிச்சான் தீவு என்ற பெயர்களைக் கொண்டது. இத்தீவுக்குப் பள்ளிவாசல் தீவு என்னும் ஒரு பெயருமுண்டு.

5. **மணலித் தீவு:** மண்டபம் கேம்பிலிருந்து நாலு மைல் தொலைவிலுள்ளது. இத்தீவின் சுற்றுப்புறம் ஆழமில்லாக் கடலைக் கொண்டது. இங்கு மீனவர்கள் மூங்கில் குச்சுகளைச் சதுரமாகக் கடலில் வரிசையாக நட்டு, வலைகளை அமைத்து மீன் பிடிப்பார்கள். இந்த முறைக்குக் களங்கட்டி மீன் பிடித்தல் என்று பெயர். இத்தீவில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் உள்ளன.

6. **முயல் தீவு:** மண்டபம் கேம்பிலிருந்து ஆறரை மைல் தொலைவில் உள்ளது. இத்தீவில் ஏராளமான முயல்கள் உள்ளன. இதனால் இத்தீவு முயல் தீவு என்று பெயர் பெற்றது.

7. **முளித்தீவு:** புதுமடத்திலிருந்து ஆறரைமைல் தொலைவில்




உள்ளது. முயல் தீவிலிருந்து ஆறு மைல் தூரம். இது வெறும் பாறை; இங்கு மக்கள் யாரும் வசிப்பதில்லை. இங்குச் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கிறார்கள்.

8. **வாலைத் தீவு:** முளித்தீவிலிருந்து ஒன்றரைமைல் தொலைவிலுள்ளது. இங்கு மீன்கள் அதிகம் கிடைக்கின்றன. இதற்கு வாலித்தீவு என்றும் வலைத்தீவு என்றும் பெயர்கள் உண்டு. இங்கு ஒரு ரோமன் கத்தோலிக்க மாதா கோவில் ஒன்றுண்டு. அதற்குக் கிட்டோரியம்மன் மாதா கோவில் என்று பெயர். இந்தத் தீவில் சுண்ணாம்புக்கல் பாறைகள் உண்டு.

9. **தலையாரித் தீவு:** கீழக்கரைக்குத் தென் கிழக்கே பத்து மைல் தொலைவிலுள்ளது. இங்கும் சுண்ணாம்புக்கல் பாறைகள் உள்ளன.

10. **அப்பாத் தீவு:** கீழக்கரைக்கு ஐந்து மைல் தொலைவு. பவளப் பாறைகள் இங்கு உண்டு. மனிதர்கள் இங்கு வசிப்பதில்லை.

11. **பூவரசன் ஹள்ளித் தீவு:** கீழக்கரைக்கு ஐந்தரை மைல் தொலைவிலுள்ளது. இத்தீவில் பூவரசன் மாங்கள் அதிகம். அதனால் இத்தீவு இப்பெயர் பெற்றது.

12. **பிள்ளையார் முனைத் தீவு:** பூவரசன் ஹள்ளித் தீவுக்கு முக்கால் மைல் தொலைவிலுள்ளது. இதற்குப் பாலயாமுனைத் தீவு என்றும் ஒரு பெயர் உண்டு. இங்கு மனிதர்குடியிருப்பு இல்லை.

13. **ஆனைப்பார் தீவு:** பிள்ளையார் முனைத்தீவுக்கு இரண்டு மைல் தொலைவிலுள்ளது. இது பாறைகள் மிகுந்த தீவு.

14. **நல்ல தண்ணீர்த் தீவு:** வாலி நோக்கத்திலிருந்து ஐந்து மைல் தொலைவு. இத்தீவில் மூன்றடி தோண்டினாலே நல்ல குடி தண்ணீர் கிடைக்கிறது. சவுக்குத் தோப்புகள் இங்கு அதிகம்.

15. **சுளித் தீவு:** நல்ல தண்ணீர்த்தீவிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ளது. மணற் பாங்கானது. வெறும் பொட்டல் வெளிதான்.

16. **உப்புத் தண்ணீர்த் தீவு:** சுளித்தீவிலிருந்து இரண்டேகால் மைல் தொலைவிலுள்ளது. மணற்பாங்கானது. ஆனால், இங்குக் கிடைக்கும் ஊற்று நீர் உப்புக் கரிக்கும். அதனால், இத்தீவு உப்புத் தண்ணீர்த் தீவு என்று பெயர் பெற்றது.

17. **கச்சத் தீவு:** இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே பத்து மைல் தொலைவிலுள்ளது. இதன் பரப்பு 285.20 ஏக்கர். அதன் சர்வே நம்பர் 1250. இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் ஆட்சி வரம்புக்குட்பட்டது. முன் காலத்தில் இராமநாதபுரம் ஜமீன்தார்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இங்கு ஒரு மாதா கோவில் உள்ளது. வாரத்திற்கொருமுறை அங்கு நடக்கும் தொழுகைக்குத் தங்கச்சி மடத்திலிருந்து ஒரு பாதிரியார் போய் வருவார். மீன்பிடித்தல் முக்கிய தொழில்.

# பேனா!





ஏர்ப்படை சுழன்றால் சோற்றின்
எழில்மணம் நிறையும்! வீரப்
போர்ப்படை சுழன்றால் மாற்றார்
பொடிப்பொடி யாவார்! வானில்
கார்முகில் சுழன்றால் நாட்டின்
கழனியோ சிரிக்கும்! நல்லோர்
கூர்ப்பேனா சுழன்றால் மண்ணில்
குவியாதா கருத்துச் செல்வம்?

வாள்செய்த செயலை மிஞ்சும்
'வால்டேரின்' பேனா வாற்றல்!
தாள்செய்த 'பிரஞ்சுப் போ'ரில்
துள்ளிய உடற்றுண் டங்கள்
வாள்செய்த செயல்தான்! அந்த
வாளினைச் சுழலச் செய்த
நீள்சக்தி முகிழ்த்த தெங்கே?
'நெருப்புப்பே' னாவில் அன்றோ?

தாற்றுக்கோல் தவறும் மாட்டைச்
சரியான வழிந டத்தும்!
ஊற்றுக்கோல் பிழைசெய் வோரை
உண்மைக்கே நடத்திச் செல்லும்!
நாற்றினை நிலத்தில் நட்டோர்
நன்மணி அறுத்தார்: தூய
ஊற்றுக்கோல் ஏட்டில் நட்டோர்
ஒப்பற்ற நூலைச் செய்தார்!






அறிஞர்க்கும் உலகத் திற்கும்
அமைந்ததோர் 'தூதன்'! உள்ள
நெறித்தமிழ்க் கவிஞ ருக்கோ
நிலைத்ததோர் 'செங்கோல்'! வாழும்
வெறிச்சாதிச் சனிய னுக்கோ
வெடித்திடும் நெடுந்'துப் பாக்கி'!
பறிபோன வரலாற் றுக்கோ
பழங்காட்சித் 'தூரி கைக்கோல்'!

எண்ணத்திற் குயிர்கொ டுத்தே
எழிலுடன் உலவ வைக்கும்!
கண்முன்னால் மறைந்தோர் தம்மைக்
காலமும் எதிர்நி றுத்தும்!
பெண்வாயின் தேனுங் கூடப்
பேழின் நிலைப்ப துண்டா?
அன்றைவோ மறைந்தார்; ஆனால்
அழிந்ததா பேனாச் செல்வம்?

ஆணவப் பட்டோர் செய்த
ஆதிக்கம் சாய்ந்த தேன், ஏன்?
கூனை தாழ்ந்த தோழன்
கோளரி ஆன தேன், ஏன்?
ஏனென்ற கேள்வி நூறு
எழுந்ததேன்? இவற்றிற் கெல்லாம்
பேனாதான் மந்தி ரக்கோல்!
பிழைஎன்போர் எங்கே? எங்கே?





கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.




இலங்கையின் வடக்கு எல்லையான மன்னார்பகுதியின் வடக்கு முனையையும், நமது நாட்டின் இராமேஸ்வரம் தீவிலுள்ள தனுஷ்கோடியின் தென்முனையையும் இணைக்கும் ஒரு பூபாகம் உள்ளது. இன்று அது கடலுக்கு அடியில் மூன்றடி அல்லது நான்கு அடி ஆழத்திற்கு நீரால் சூழப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் அதே பகுதி கடல் மட்டத்திற்கு மேல் ஒரு நீண்ட நிலப் பகுதியாக அமைந்திருந்தது. அதன் அகலம் சுமார் ஒன்றேகால் மைல் வரை இருந்தது. மணலும், கற்பாறைகளும் கொண்ட அப்பாதை வழி சுமார் முப்பது மைல் தூரத்திற்குக் கடலில் சென்று இந்தியா இலங்கை இரண்டு நிலப்பகுதிகளையும் இணைத்து நின்றது. கி.பி. 1480 ஆண்டு வரை இந்த நிலப்பகுதி வழியாக இலங்கைக்குப் போக்குவரத்து இருந்ததாகத் தெரிகிறது. பெரும்புயல் ஒன்று இந்த நிலப்பகுதியைப் பல இடங்களில் உடைத்துவிட்டது. கடல் நீர் மட்டமும் உயரஆரம்பித்தது. இப்பகுதி நீரில் மூழ்கிப்போயிற்று. தமிழிலக்கியங்களில் இதுதிருஅணை என்று குறிப்பிடப்படுகிறது வடமொழி இலக்கியங்களில் நலசேது என்றும், இராமசேது என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஆதாமை ஆண்டவன் கோபித்து வானுலகத் தோட்டத்திலிருந்து வெளியேற்றிய போது இந்தக்கரை வழியாக அவன் இலங்கையில் வந்து தஞ்சமடைந்ததாகப் பழைய கிறித்துவ, இஸ்லாமிய தொன்னூல் வழக்குகள் உள்ளன. இந்த நில வழியை ஆங்கிலேயர் 'ஆடம்ஸ் பிரிட்ஜ்' என்று அழைத்தனர்.

இந்த ஆதாம் பாலம் இப்போது புகழுக்குரியதாக ஆகப் போகிறது. ஏனெனில், அங்குதான் சேதுசமுத்திரக்கால்வாய்த் திட்டம் அமைய இருக்கிறது. மன்னார் வளைகுடாவையும், பாக் விரி குடாவையும் பிரிக்கும் இந்த மணற் கற்பாறைகளின் வழியாக ஒரு கால்வாய் அமைக்கப் போகிறார்கள். இப்படி அமைக்கும் கால்வாய் வழியாக இந்தியா வரும் கப்பல்கள் இனி இலங்கையைச் சுற்றிச் செல்லாமலே இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்குக் குறைந்த தூரத்தில் அடைய முடியும். இது ஆசியாவின் சூயஸ் கால்வாயாக அமையவிருக்கிறது.

மன்னார் வளைகுடாவையும் பாக் விரிகுடாவையும் பிரிக்கின்ற மணற்கற் பாறைகளின் வழியாக ஒரு கால்வாய் அமைக்கத் திட்டமிட்டு, மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால், கால்வாய் அமைக்கப் பட்டால், மேற்குக் கரை—கிழக்குக் கரைத் துறைமுகங்களுக்குச் சென்னையைப் பொறுத்தவரை சுமார் 370 மைல்களும்; விசாகப் பட்டினத்திற்கு சுமார் 304 மைல்களும், கல்கத்தாவுக்கு சுமார் 265 மைல்களும் குறையும்.

சேதுசமுத்திரக் கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு சிட்டகாங் போக 220 மைல்களும், இரங்கூன் போக 119 மைல்களும், சிங்கப்பூர் போக 42 மைல்களும் குறையும். கப்பல் போக்குவரத்து 20 விழுக்காட்டுக்குமேல் அதிகரிக்கக் கூடும். கால்வாய் வழியாக வந்துசெல்லும் அந்நியக் கப்பல்களுக்குக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணியும் கிடைக்கும். அது மட்டுமல்ல—இராமநாதபுர மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பேருதவியாக அமையும். கப்பல் போக்குவரத்தில் அது ஒரு கேந்திர மையமாகத் திகழும். உலகத்தின் கவனத்தை ஈர்க்கும். இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த சேது சமுத்திரக் கால்வாயை 'ஆசியாவின் சூயஸ்' என்றால் அது மிகைபடக் கூறியதாகாது.



## மீன் விருந்து

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆண்டுதோறும் பிடிக்கப்படுகின்ற மீன், மற்றைய கடல்படு பொருள்கள் ஏறக்குறைய 2,200,000 டன்னிலிருந்து 2,400,000 டன் வரையிலும் கிடைக்கின்றன. இங்கு ஆண்டுதோறும் ஏறக் குறைய 1,500,000,000 இராத்தல் அல்லது பிடிக்கப்படுகின்ற மொத்த மீனின் நான்கில் ஒரு பங்கு தகர டப்பிகளில் அடைக்கப்படுகின்றன. உலர்த்துதல், உப்பிடுதல், ஊறு காயாக்குதல் போன்ற முறைளில் ஆண்டுதோறும் இங்கு 150,000,000 இராத்தல் மீன்கள் பக்குவப்படுத்தப்படுகின்றன. எலும்பு நீக்கப்பட்ட மீன்கள் ஆண்டுதோறும் 340,000,000 இராத்தல் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வகை மீன் உணவு சிறந்த விருந்தாகக் கருதப்படுகிறது.

# ஊரே திரண்டது உளுந்து விதைக்க....



"நாம் அதிகமாக உற்பத்தி செய்துகொடுக்கும் ஒவ்வொரு மணித் தானியமும் ஒரு துப்பாக்கிக் குண்டுக்குச் சமம்! ஒவ்வொரு குவிண்டால் விளை பொருளும் ஒரு பீரங்கிக்குண்டுக்குச் சமம்! ஒவ்வொரு டன் உணவுத் தானியமும் ஒரு டாங்குக்குச் சமம். எனவே, நெருக்கடி நிலை நிலவி வருகின்ற இந்த நேரத்திலே, எல்லா வகையிலும் அதிக அளவில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நம் நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரும் முன்வரவேண்டும். ஏர் முனை விழா நடைபெறும் இந்த நேரத்திலே, 'ஒரு அங்குல நிலத்தைக் கூடத்தரிசாகப் போடமாட்டேன். வசதிக் கேற்ப ஏதாவது பயிரிடுவேன்' என்ற உறுதி மொழியை உழவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று ஏர்முனை விழாவில் உரையாற்றிய இளைஞர் அணியைச் சேர்ந்த இளங்கோ வேண்டுகோள் விடுத்தார்.

"நீங்க சொல்வதெல்லாம் சரிதான். ஆனால், சம்பா அல்லது தாளடி நெல் அறுவடை செய்ய இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது. அதன் பிறகு, அந்த நிலங்களில் ஏதேனும் பயிரிடலாம் என்றால் தண்ணீர் வசதி கிடையாது. நெல் அறுவடைக்குப் பிறகு நிலத்தைத் தரிசாகப் போடுவதைத் தவிர வேறு வழியே இல்லை. இப்படி இருக்கையில் 'ஒரு அங்குல நிலத்தைக் கூடத் தரிசாகப் போடமாட்டேன்! ஏதேனும் பயிரிடுவேன்' என்று எப்படிங்க உறுதி மொழி எடுத்துக் கொள்வது? உறுதிமொழி எடுத்துக் கொண்டால் அதை நிறைவேற்ற வேண்டாமா? அதற்கு வழி சொல்லுங்கள்" என்றார் ஏர்முனை விழாவிற்குத் தலைமை தாங்கிய ஊராட்சி மன்றத் தலைவர் உலகநாதன்!

"தண்ணீர் வசதி இல்லையே என்று கவலைப்படாதீர்கள்! தண்ணீர் பாய்ச்சாமலேயே சாகுபடி செய்து விடலாம். அது மட்டுமல்ல. நான் சொல்லப்போகும் சாகுபடி முறைக்கு உழவும் செய்ய வேண்டியதில்லை. உரமும் இட வேண்டியதில்லை. என் பேச்சை நம்பி, நான் கூறும் முறையில் சாகுபடி செய்தால் 90 நாட்களில் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலிருந்தும் குறைந்தது ரூபாய் 150 நிகர இலாபம் பெற முடியும்" என்றார் இளங்கோ.

"அதெப்படிங்க முடியும்?" என்று வியப்புடன் கேட்டனர் பலர்.

"நெல் அறுவடைக்கு 10 நாட்கள் முன்பாக 'ஆடுதுறை-1 உளுந்து' அல்லது 'ஆடுதுறை-1 பச்சைப் பயறு' விதைகளை ஏக்கருக்கு 9 கிலோ வீதம் நெல் வயலில் தூவி விடவேண்டும். அவ்விதைகள் நெல் வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே முளைத்து விடும். நெல் அறுவடையின்போது 2 அல்லது 4 இலைகளுடன் செடிகள் காணப்படும். பிறகு அச்செடிகள் வயலில் உள்ள ஈரத்தைக்கொண்டும், பனியின் ஈரத்தைக் கொண்டும் வளர்ந்து காய்த்துவிடும். விதைத்த 30-ஆம் நாள் களைஎடுக்க வேண்டும். பூச்சிகளைத் தடுக்க, ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும் கலந்து, 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 2 தடவை தூவினால் போதுமானது. ஆடுதுறை-1 பச்சைப் பயறு 80 நாட்களிலும், ஆடுதுறை-1 உளுந்து 90 நாட்களிலும் அறுவடைக்கு வந்துவிடும். அறுவடை முடிந்தபின் செடிகளை, அடுத்துப் பயிரிடும் குறுவை நெல்லுக்குத் தழை உரமாகப் பயன்படுத்தலாம்" என்றார் இளங்கோ.

"இது மிகவும் நல்ல யோசனை தான். எனக்குக் கூட இப்பத்தான் நினைவுக்கு வருகிறது. இளங்கோ அவர்கள் கூறியது போல் பலர் தஞ்சாவூருக்குப் பக்கத்தில் உளுந்து விதைத்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். தண்ணீர் பாய்ச்சாமலேயே ஏக்கருக்கு 2 அல்லது 3 மூட்டை உளுந்து கிடைக்கும் என்று கூறினார்கள். நாமும் உளுந்து அல்லது பச்சைப் பயறு விதைத்தால் பலன் பெறலாம். அதற்கு உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை" என்றார் உலகநாதன்.

"நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறோம்" என்று ஒப்புதல் தெரிவித்தனர்.

"ஆடுதுறை-1 பச்சைப் பயறு விதைத்தால் ஏக்கருக்கு 200 கிலோவும், ஆடுதுறை-1 உளுந்து விதைத்தால் ஏக்கருக்கு 180 கிலோவும் மகசூல் கிடைக்கும். விதைகளுடன் நுண்ணுயிர் கலந்து விதைத்தால் இன்னும் அதிக மகசூல் கிடைக்கும். எனவே, உங்கள் ஊரில் உள்ள 300 ஏக்கர் நன்செய் நிலத்திலும் நெல் அறுவடை முடிந்தபின் ஆடுதுறை-1 பச்சைப் பயறு அல்லது ஆடுதுறை-1 உளுந்து விதைக்க நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும்" என்றார் இளங்கோ.

"விதைகள், மருந்துகள் வாங்குவதற்குப் பணம் இல்லை என்று சிலர் சொல்வார்களே! எப்படிங்க 300 ஏக்கரிலும் விதைக்க முடியும்?" என்று கேட்டார் உலகநாதன்.

"பணமுடை உள்ளவர்களுக்குப் பணம் உள்ளவர்கள் கடன் கொடுத்து உதவலாம். அல்லது ஊராட்சி மன்றம் கூடக் கடன் கொடுத்து உதவலாம். கடன் தேவைப்பட்டவர்களிடமிருந்து மனு எழுதி வாங்கிக் கொண்டு, அவர்களுக்குத் தேவையான விதைகளையும், மருந்தையும் ஊராட்சி மன்ற நிதியிலிருந்து வாங்கிக் கொடுக்கலாம். இவ்வாறு செய்ய ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதி பெறவேண்டும். அறுவடை முடிந்தவுடன், கடன் பெற்றவர்களிடமிருந்து கடன் தொகையையும், அதற்குரிய



ஆடுதுறை—1. உளுந்து.

வட்டியையும் வசூலித்துக்கொள்ளலாம். இதுபோல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும் கடன் கொடுத்து உதவலாம்'' என்றார் இளங்கோ.

''ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டுவிடலாம். ஆனால், ஊராட்சி ஒன்றியத்தில் அனுமதி பெறக் காலதாமதமாகுமே'' என்று கூறி விட்டுத் தன்னருகில் அமர்ந்திருந்த கூட்டுறவுச் சங்கத் தலைவர் சண்முக சுந்தரம் அவர்களைப் பார்த்தார். ஊராட்சி மன்றத் தலைவரின் குறிப்பை உணர்ந்து கொண்ட சண்முக சுந்தரம், ''கடன் தேவைப் படுகிறவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கடன் கொடுத்து உதவுகிறோம். ஆனால், கடன் பெறுபவர்கள் மகசூலை எங்களிடமே விற்றுவிட வேண்டும். இவ்வாறு செய்வதால், கூட்டுறவுச் சங்கத்திற்கும் இலாபம் கிடைக்கும்; அந்த இலாபம் உறுப்பினர் அனைவருக்கும் பயன்படக்கூடும்'' என்றார்.

''உங்கள் ஊராட்சி மன்றத் தலைவரும், கூட்டுறவுச் சங்கத் தலைவரும் உங்கள் அனைவருக்கும் உதவி செய்யக் காத்திருப்பதால், இந்த ஊரில் உள்ள நன்செய் நிலம் 300 ஏக்கரிலும் ஆடுதுறை-1 பச்சைப் பயறு அல்லது ஆடுதுறை-1 உளுந்து விதைக்க நீங்கள் அனைவரும் தயாராக வேண்டும். உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலரிடம் சொல்லி, உங்களுக்கு வேண்டிய விதைகளையும், மருந்தையும் இங்கேயே கொண்டு வந்து கொடுக்க ஆவன செய்கின்றேன்'' என்று கூறி இளங்கோ தன் உரையை முடித்தார். அடுத்து ஊர்நல ஊழியர் உலகநம்பி நன்றி கூறினார். ஏர்முனை விழா இனிது முடிந்தது.

அடுத்த பத்தாவது நாள், அந்த ஊரே ஒருங்கு கூடி, கோட்டாட்சித் தலைவர் தலைமையில் நெல்வயல்களில் ஆடுதுறை-1 உளுந்து, ஆடுதுறை-1 பச்சைப் பயறுகளை விதைத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்கப் பக்கத்து ஊர்களிலிருந்தும் பலர் திரண்டு வந்திருந்தனர்.

''ஊர் ஒன்று பட்டு உளுந்து, பச்சைப் பயறுகளை இதுபோல் விதைத்தால், நாட்டில் நிலவும் பருப்புப் பற்றாக் குறையும் மறைந்து, உளுத்தம் பருப்பு, பச்சைப் பருப்புகளின் விலையும் குறைந்து விடும். அதன்பயனாய் நாட்டு மக்களுக்கும் புரதச்சத்து மிகுந்த உணவு கிடைத்து, வலிவோடும் பொலிவோடும் வாழ்வார்கள். இத்தகைய அரிய பணிக்கு வழிகோலிய இளைஞர் அணியைச் சேர்ந்த இளங்கோவைப் பாராட்டுகிறேன்'' என்று கோட்டாட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஆனால், இளங்கோ துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே எதிரியைத் தாக்க முன்னேறும் போர் வீரனைப் போல், நெல் வயலில் 'ஆடுதுறை-1 உளுந்து' விதைகளை விதைத்துக்கொண்டு வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார்.

கிராமப்புற வேலை வாய்ப்புத் தி

இரண்டு கோடித் தி என்றழைக்கப்படும் இச் வேலை வாயப்புத் திட்ட கீழ் இராமநாதபுர மாவட் மிகவும் சிறப்புறும் என் சிறிதும் ஐயம் இல்லை. திட்டம் சிறப்புடன் நிறைவே றப்படுவதற்கென உதவி ஆட் தலைவர் ஒருவர் நியமிக்கப் டிருக்கிறார்.

தமிழக முதல்வர் கலைஞர் அ களால் டிசம்பர் 1970ல் வத்தி யிருப்பில் தொடங்கி வைக் பட்ட இத்திட்டத்தின் பயனா இதுவரையில் போக்குவரத் வசதியே சிறிதும் இல்லா இடங்களில் எல்லாம் பு சாலைகள் போடப்படுகின்றன சீர்படாமல் இருந்த சாலைக கப்பிரோடு போடப்படுவது மூலம் சீரபடுத்தப்படுகின்றன குளங்கள் ஆழப்படுத்தப்பட் வருகின்றன. பெரிய நீர் பாசனத் திட்டங்களும், சிறி நீர்ப் பாசன வசதிகளும் நிறை வேற்றப்படுகின்றன. மண் வளப் பாதுகாப்புப் பணிகளு இத்திட்டத்தின் கீழ் செய படுத்தப்படுகின்றன். இவை தவிர, புதிய காடுகள் அமை கப் பெறுவதற்கான முயற் களும் மேற் கொள்ளப்பட் வருகின்றன. 1970–71லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தி டம் நான்காண்டுகளில் நிறை வுறும் என எதிர்பார்க்கப்படு கிறது.

மேலும், இந்தச் சிறந்த திட் டத்தின் பயனாக 4 ஆண்டுக் காலங்களிலும் கிராமப் புறங் களில் உள்ள ஏழை, எளியவர் களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்தத் திட்டத் தினால், பின் தங்கிய மாவட்ட மான இராமநாதபுர மாவட் டம், சாலை வசதி இல்லாத இடங் களில் சாலைகள் அமைக்கப்பட்டுப் பாசன வசதி இல்லாத இடங்கள் பாசன வசதி பெறு வதுடன், மண்வளப் பாதுகாப் புக்கும் இடம் பெற்று, புதிய காடுகள் அமைக்கப்பட விருப்ப தாலும் இத்திட்டத்தினால் பல துறை முன்னேற்றங்களை அடைந்து சிறந்து விளங்கும் என்பது உறுதி.


அண்ணன் காட்டிய வழி
16
அப்படியா... கிடைச்சுடுச்சா? அப்ப. . முத்து! நான் முக்கிய வேலையாப் போகணும்... எல்லாரும் இருக்காங்க தனியா வர்றேன்...
நல்ல நேரத்தில் வந்தே செந்தாமரை நம்ப திட்டப்படி நான் மன்னிப்புக் கேட்க இருந்தேன்
நான் அப்பா மேலே சந்தேகப்பட்டேன்; நல்ல வேளை என் புத்தகத்திலேயே இருந்தது!
கதை: நம்பியின்தம்பி. படம்: குமார்
புரிந்ததா முத்து! வேலனுடை சூழ்ச்சிகளிலே, கிளைமாக்ஸ் இப்பத்தான் ஆரம்பம். கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே மன்னிப்புக் கேட்க வந்தான்; இப்ப திடீர்னு மாறிட்டான்!
எனக்கும் ஒண்ணும் புரியலே! காரணமில்லாமே மன்னிப்புக் கேட்க வந்தான் இப்ப...
முத்து! இப்பொழுதாவது கொஞ்சம் விழிப்போட இரு!
என்னை என்ன செய்யச் சொல்றீங்க?
நாங்க சொல்றதைக் கேட்கச் சொல்றோம்! தேவையில்லாமே நம்மை எதிரியா நினைச்சு நடக்கிற வேலனுக்குப் புத்தி புகட்டணும்னு சொல்றோம்
இப்படியே பேசிக்கிட்டு இருக்க வேண்டாம் வாங்க போவோம்!
எங்கே?
எங்கே? என்ன? இப்படிக் கேட்கிறதுன்னா எங்க கூட வரவேண்டாம்
தம்பிகளா! உங்க எல்லாரையும் எங்கே எங்கே தேடுறது... ஒரு பெரிய தவறு நடக்க இருக்குது! நீங்க எல்லாரும் சேர்ந்து தடுக்கணும்
தவறு? யாராலே எதுக்கு?
முதல்லே என்னாலே ஆரம்பிச்சப்ப உங்க அண்ணாவாலே நிறுத்தப்படுது!


உங்களுக்கு எல்லா விஷயத்தையும் விவரமாச் சொல்லிடுறேன் கேளுங்க!
நகரத்திலிருந்து நான் இங்கே வந்த பொழுது ஒரு முறை உங்கள் திருவள்ளுவர் மன்றக் கூட்டத்தைக் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது! கொஞ்சம் தொலைவிலிருந்து கேட்டேன். அப்பவே உங்களில் யார் யார் எப்படிப்பட்டவர் என்ற முடிவுக்கு வந்து விட்டேன்!
நான் இங்கே குடிவந்த பிறகு என் குழந்தைகளும் வேலனும் நண்பர்கள் ஆனார்கள். செல்வனையும் செந்தாமரையையும் செல்லமாக வளர்த்ததாலே வந்த கெடுதல்களைப் புரிஞ்சிக்கிட்டேன் முன்னை நுள்ளானே எடுப்போமுன்னு நினைச்சேன்
நான்தான் முத்துவின் அப்பாவிடம் போய் முத்துவை ராஜினாமாச் செய்யும்படிக் கேட்டுக்கிட்டேன் இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்னு கேட்டுக்கிட்டேன்
முத்து ராஜினாமாச் செய்ததிலே என்ன லாபம்? இது அண்ணாவுக்குத் தெரியாதா?
யாருக்குமே தெரியாது! முத்துமேலே ஏதோ வெறுப்பா இருக்காங்க... வேலைக்குப் பொறுப்பு வந்தாத் திருந்துவான் திருந்துவாங்கன்னு நினைச்சேன் ஆனால் பயங்கரமாகெடுதல்களைச் செய்யத் தொடங்கிட்டாங்க
அப்படிப் பயங்கரமா என்ன செய்துட்டாங்க?
செய்யப் போறாங்க... அந்தத் திட்டத்தை ஒரு காகிதத்தில் எழுதி வைத்திருந்ததை நான் மாற்றிவிட்டேன். அதைத் தமிழாசிரியர் செந்திலிடம் விழாத் திட்டம்னு கொடுத்திட்டாங்க!
அண்ணாவுக்குத் தெரிஞ்சிருக்குமே?
தெரிஞ்சிருக்கும்னு முதல்லே பயந்தாங்க ஆனால்... இப்ப அண்ணாவே எப்படியோ செல்வனுக்குக் கிடைக்கும்படிச் செய்திட்டாரே!
அப்படி என்னதான் பயங்கரமாத் திட்டம் போட்டிருந்தாங்க?
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

**வேலையின் பெயர்:**—செங்கற்பட்டு மாவட்டம், பரனூரில் தொழு நோய் பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுக்காக எட்டு டார் மிட்ரி பிளாக் (2 யூனிட்) கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் 3-3-1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

"ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை—ரூபாய் 4,800.
"ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலை வரைப்படங்களுடன்—ரூ.20·70.
ஒப்பந்தப்புள்ளி முடிக்கவேண்டிய காலம்—4 மாதங்கள்.

"ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 16-2-1972 தேதி முதல் 1-3-1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். "ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D. Remittances, III—Other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts, under State Sales Tax Act—General Sales-Tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வங்கியிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப் படும் ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள் செயற் பொறியாளர் பொ.ப.து., கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சத விதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப்பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலயத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தின் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**கே. எஸ். இராமசுவாமி,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1

(த. 64)

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

பாம்பன் வட்டம்

ந. க. எண். 33057/71/வ 3, தேதி 31—1—1972.

**தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட** வேலைகட்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் திருமானூர் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தஞ்சாவூர் அலுவலகத்தில் 23—2—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 43/0 மைல் 26/7-ல் பாலம் அமைத்தல்—கட்டுத்தொகை ரூ. 9,000

ஒப்பந்தங்கள் அன்று மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் நமூனுக்கள் வரை படங்கள் முதலியவற்றைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 25.90 செலுத்தி 15-2-1972 முதல் 22-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத் தொகையைத் தனிக்கோட்டப் பொறி யாளர், திருமானூர் பால வேலை தஞ்சாவூர் தனிக்கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக்கோட்டப் பொறியாளர் திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் பெயரில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப்பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**கு. சிவானந்தம்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த 68)

---

## பயிற்சி

---

## தொழில் வணிகத் துறை

களிமண் பொம்மைகள், பதுமைகள் தயாரிக்க, சென்னை பெரம்பூரிலுள்ள அரசாங்கக்களிமண் பொம்மைகள் உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற 21-2-1972-ஆம் தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக, கீழ்க்கண்ட முகவரியில், மனுக்கள் வரவேற்கப் படுகின்றன.

பயிற்சிக் காலம் 1 வருடம். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு மாதம் ரூ. 40 மட்டும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். மனுதாரர் கள் 18–35 ஆண்டிற்கு இடையே உள்ள வயதுடையவர்களாகவும், 3-வது பாரம் அல்லது 8-வது ஸ்டாண்டர்டு தேர்ச்சிப் பெற்றவர்களா கவும் இருத்தல் வேண்டும். மொத்தம் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை 10 (பத்து) ஆகும்.

மனுக்கள் வெற்றுத் தாளில் தங்களின் வயது, படிப்பு, முகவரி முந்தைய அனுபவம், "ஜாதி, மதம், தொழில் முதலியவற்றை குறித்து, "தொழில் கண்காணிப்பாளர், களிமண் பொம்மைகள் உற் பத்தி மற்றும் பயிற்சி நிலையம், 27, கிருஷ்ணதாஸ் ரோடு, பெரம்பூர், சென்னை-12 அவர்களுக்கு நேரடியாக அனுப்ப வேண்டும்.

**தொழில் வணிக இயக்குநர்,**
**சென்னை-5.**

(த. 69)

## மறு ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 23-2-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1 தேசிய நெடுஞ்சாலை எண் 45, சென்னைதிருச்சி-திண்டுக்கல் சாலை மைல் 113 கடில நதியின் மீது பாலம் திரும்பக் கட்டுதல். | 45,300 |
| 2 தேசிய நெடுஞ்சாலை எண் 45, சென்னை திருச்சி திண்டுக்கல் சாலையில் மைல் 44/3 (கி.மீ. 72/8) பாலம் திரும்பக் கட்டுதல். | 2,490 |
| 3 தேசிய நெடுஞ்சாலை எண் 45, சென்னை திருச்சி திண்டுக்கல் சாலையில் கி.மீ. 194/6 சிறு பாலம் திரும்பக் கட்டுதல். | 1,210 |

ஒப்பந்தப் புள்ளிகள் 23-2-1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் சென்னை—25 அலுவலகத்தில் 16-2-1972 முதல் 22-2-1972 முடிய விற்பனை வரி உட்பட ரூ. 25·88 கட்டி பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர், (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் கிண்டி அதிகார எல்லைக் குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலுள்ளும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.).

(த. 65)

## வேலை வாய்ப்பு

### கிராம நல உள்ளாட்சித் துறை

தமிழ்நாடு கிராம சேவக் சர்வீஸில் 150 இரண்டாவது நிலை கிராமசேவக்குகளை நியமனம் செய்வதற்குத் தகுதியுடைய ஆண்களிட மிருந்து 1972 மார்ச் மாதம் 31-ஆம் தேதி மாலை 4-30 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கல்வி யோக்கியதாம்சங்கள்:—

அபேட்சகர்கள் செகண்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட் பரீட்சையில் அல்லது சமமான பரீட்சையில் தமிழில் குறைந்தது தேர்வு எண் 40 பெற்றுத் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

உயர்நிலைப்பள்ளி கல்வி இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட (Post Basic Lower) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

அரசியல் தியாகிகளாக இருந்தால், எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

மாஜி ராணுவ வீரராக இருந்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேறி இருக்க வேண்டும். அல்லது இந்திய படை இரண்டாவது வகுப்பு (Indian Army class II standard) தேறியிருக்க வேண்டும்.

வயது—

அபேட்சகர்களின் வயது 1-7-1972-ஆம் தேதியில் 16 வயது மேற்பட்டும் 25 வயதுக்குட்பட்டும், இருக்கவேண்டும். ஷெடியூல்டு வகுப்பினருக்கும், ஷெடியூல்டு மலைஜாதியினருக்கும் மட்டும் 16 வயதுக்கு மேற்பட்டும் 30 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம்—

விண்ணப்பத்திற்குரிய கட்டணம் ரூபாய் 5 ஆகும். பின் தங்கிய வகுப்பாருக்கும், ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், ஷெடியூல்டு மலைஜாதியினருக்கும் இடைக்கால பாட்சையில் தேறியிருந்தால் (Intermediate Examination) அல்லது சென்னை அல்லது அண்ணாமலை சர்வ கலாசாலையில் பட்டம் பெற்றிருந்தால் விண்ணப்பக் கட்டணம் கட்டத் தேவையில்லை.

சம்பளம்—

இரண்டாம் நிலை கிராம சேவகர்களுக்குரிய சம்பளம் ரூ. 200—5—250—10—300 ஆகும்.

விண்ணப்பப் பத்திரங்கள் மற்ற விவரங்கள் வேண்டுவோர் தமது முகவரி எழுதப்பட்ட, போதிய தபால்தலை ஒட்டிய உறையுடன் கிராம வளர்ச்சி இயக்குநர், குறளகம், எஸ்பிளனேட், சென்னை-1 என்ற விலாசத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

இயக்குநர்,
கிராம வளர்ச்சி

சென்னை-1,
18-1-1972
(த.66)

## ஒப்பந்தப் புள்ளி

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

என் 15, XXII m/72, தேதி 24—1—72,

வேலையின் பெயர்:—மரையிடப்படாத, இரும்புக் குழாய்கள் வழங்குதல்.

(1) 8-200 மி.மீ., விட்டம்..........500 மீட்டர்.
(2) 10-250 மி.மீ., விட்டம்..........400 மீட்டர்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர்சார்பில், நிலநீர் இயக்குநர், அவர்களால் மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 22-3-1972 அன்றுமாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில், மாலை 3-30 மணிக்கு அவ்வமயம் அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(1) முன்வைப்புத் தொகை—ரூ. 5,000.
(2) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10, விற்பனை வரி—ரூ. 0·40 காசு.

(3) வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.
(4) ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்—1-2-1972 முதல் 20-3-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்கவியலாதது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works remittances III other remittances" to the Credit of Hydrogeologist, Ground water Division, Thanjavur, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரித் தொகையானது, அதே சலானில்

"XII Sales Tax (b) receipts under state sales Tax Act, General Sales Tax. என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்படவேண்டும். மேற்குறித்த செலானைக் கொடுத்த பின்பு தான், "ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். வேறு எந்த விதமான தொகையளிப்பும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

சா. பஞ்சநதம்,
நில நீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்
10-எ, தண்டபாணி தெரு,
தி. நகர், சென்னை-17.
(த. 67)

## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர் :—

ஆலந்தூர் குடிநீர் வழங்கு திட்டம்—பிரிவு II—முதல் நிலை—பகுதி II—சோன் III-பி-க்கு, 14·0 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் மேற்கண்ட வேலைக்கென, உரிய துறைக்கான வடிவத்தில் முத்திரை மிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உரிய பிரிவைச் சார்ந்த அல்லது ஒத்த அரசு அமைப்புகளில் பதிவு செய்யப்பட்ட "ஒப்பந்ததாரர்களிட மிருந்து, மேற்பார்வைப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) வட்டம், சென்னை, அவர்களால், எண் 52, கங்குரெட்டி சாலை, எழும்பூர், சென்னையிலுள்ள அவர்தம் அலுவலகத்தில், 6-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிறகு, அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) வட்டம், சென்னை, அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை :—ரூ. 7,070.

(கருவூலச் சலான் வடிவிலோ அல்லது ஒப்பந்தப் படிவத்தில் குறிப் பிட்டுள்ளபடி ஒத்துக் கொள்ளக்கூடிய டெபாசிட் வடிவத்திலோ இருக்க வேண்டும்.)

3. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை :—ரூ. 10·35.

ஒப்பந்தத்திற்கான விலை, நிருவாகப் பொறியாளர் (மக்கள் நல் வாழ்வுப் பொறியியல்) கோட்டம் சென்னை, அவர்தம் கணக்கில் "P. W. III O.R. and Sales Tax XII D. Sales Misc. 1 General Sales Tax" என்ற தலைப்பில் தனித்தனிச் சலானில் செலுத்த வேண்டும்.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்குமிடம்:—நிருவாகப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்), கோட்டம், எண் 1,14, எட்வார்டு எலியட்ஸ் சாலை, சென்னை-4 அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

5 வேலை முடிக்கவேண்டிய காலம்:—9 மாதங்கள்

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
சென்னை-8.

52, கெங்கு ரெட்டி
சாலை, சென்னை-5.

(த. x)

---

## திருப்பூர் நகராட்சி

மேற்கண்ட வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 4—3—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையருக்காக நகராட்சிப் பொறியர் அவர்களால் நகராட்சி அலுவ லகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பங்கள் மற்றும் இதர நிபந்தனைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனியே ரூ. 2.07 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| எண். | வேலை விவரம். | மதிப்பீடு. | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | பெருமாநல்லூர் ரோடு நெசவாளர் காலனி வீதிகளுக்குத் தார் போடுதல். | 39,900 | 1,000 |
| 2 | கவுண்டநாயக்கன்பாளையம் ரோடுக்குத் தார் போடுதல். | 27,600 | 690 |
| 3 | இராயபுரம் ஆரம்பப்பள்ளி மேற்கு வீதி மற்றும் ராயபுரம் மத்திய வீதிகளுக்குத் தார் போடுதல். | 20,600 | 515 |

ஆணையர்.

(த. 56)

## நில நீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 14 XXI/M3/72.

வேலையின் பெயர் : துளையிடும், கிணறு வெட்டும், எந்திரங்களுக்கான துளையிடும் உபகரணங்கள், பொறிகள் மற்றும் குழாய்களுக்கான உபகரணங்கள்—வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர் களால் மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கள் மேற்கண்ட அலுவலகத்தில் 20-3-1972 அன்று மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால், மேற் கண்ட அலுவலகத்தில், அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு அவ்வமயம், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலை யில் திறக்கப்படும்.

1. முன் வைப்புத்தொகை:—ரூ. 15,000.
2. ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களின் விலை:—ரூ. 15; விற்பனை வரி 0·60 காசு.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்:—3 மாதங்கள்.
4. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்குங்காலம் :—1-2-1972-லிருந்து 1-3-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எக் குறித்தியிலும் திருப்பி யளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில், "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித் தொகையானது அதே சலானில், "XII Sales Tax (b) Receipts Under State Sales Tax Act, General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்பு தான், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

10-எ, தண்டபாணித் தெரு, தியாகராயநகர்,

சென்னை-17.

(த. 61)

---

## இடமாற்றம்

### மின்சார வாரியம்

மேட்டூர் மின் அமைப்பு

மேட்டூர் அணை

சேலம் வருவாய்ப் பிரிவு துணைத் தலைமைக் கணக்காயர் அலுவலகம், உதவிப் பொறியாளர் (கட்டுமானம்), இளம் பொறியாளர் (கட்டுமானம்), மேற்பார்வையாளர், சிவில் (தனி) ஆகிய அலுவலகங்கள் பொன்னம்மா பேட்டை புதுவீதியில் உள்ள 2-ஆம் நெம்பர் கட்டடத்தில் இது வரை இயங்கி வந்தன. இந்த அலுவலகங்கள் 6-12-1971-ஆம் தேதியி லிருந்து சேலம்-7, வெங்கடேசபுரம் எக்ஸ்டென்சன், செட் காலனி, 3/711 என்னுள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றன என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஷை பொன்னம்மாபேட்டை கட்டடத்தில் இயங்கி வந்த கோட்டப்பொறி யாளர் (கட்டுமானம்) அலுவலகம் 8-12-1971-ஆம் தேதி முதல் சேலம் நெத்திமேடு மின்சார துணை நிலையத்தில் (சப்-ஸ்டேஷனில்) இயங்கி வருகிறது என்பதையும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி

### விழுப்புரம் நகராட்சி

1972-73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க் குறிப்பிட்டுள்ளவைகள் வழங்க விழுப்புரம் நகராட்சி நிருவாக அதிகாரியவர்களால் 19-2-1972 சனிக் கிழமை மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அன்று மாலையே 4¼ மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நிருவாக அதிகாரி அவர்கள் ஒப்பந்தக் காரர்கள் முன்னிலையில் திறப்பார்கள். ஒவ்வொன்றிற்கும் தனித் தனியே ஒப்பந்தப் புள்ளிகள் தரப்படவேண்டும்.

| | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| (1) மாடுகளுக்குப் பருத்திக்கொட்டை .. .. .. | 100 |
| (2) மாடுகளுக்குப் பச்சரிசி தவிடு .. .. .. | 100 |
| (3) மாடுகளுக்குச் செக்கு மணிலாப்பிண்ணாக்கு .. .. | 100 |
| (4) அச்சுவேலை செய்து தருதல் .. .. .. | 100 |
| (5) மாடுகளுக்கு லாடம் அடித்தல் .. .. .. | 20 |
| (6) ஸ்டேஷனரி சாமான்கள் வழங்குதல் .. .. | 100 |
| (7) சுத்தமான பசுவின்பால் .. .. .. .. | 25 |
| (8) ரொட்டி வழங்குதல் .. .. .. .. | 15 |
| (9) அடுப்புக்கரி வழங்குதல் .. .. .. .. | 10 |
| (10) சுண்ணாம்பு நீர் வழங்குதல் .. .. .. | 20 |
| (11) படல்கள், தட்டுக்கூடை முதலியன வழங்குதல் .. | 50 |

மேற்கண்ட விதிகள் முதலானவைகளை நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

விழுப்புரம்,
24-1-1972.

பெ. இ. பத்மநாபமேனன்,
நகராட்சி ஆணையர்.

(த. 17)

## ஏலம் விளம்பரம்

### விருத்தாசலம் நகராட்சி

1972-73-ஆம் வருடத்திற்கு விருத்தாசலம் நகராட்சியில் கீழ்க்கண்ட குத்தகைகளை அனுபவிக்கும் பாத்தியதையை 25-2-1972-ஆம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 3-00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அதிகாரி அவர்களால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகளையும் மற்ற விவரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| | செலுத்த வேண்டிய கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 வாரச்சந்தை .. .. .. .. .. | 150 |
| 2 வாய்க் கால்நடை சந்தை .. .. .. .. | 200 |
| 3 தினசரி காய்கறி, மச்ச சந்தை .. .. | 100 |
| 4 செல்வராசு பேருந்து வண்டி நிலையம் .. .. .. | 100 |
| 5 ஆடு அறுக்கும் தொட்டி .. .. .. .. | 50 |
| 6 சாணி எரு குத்தகை— | |
| 1 வாரசந்தை, வாரக் கால்நடைச் சந்தை சாணி எரு .. .. | 50 |
| 2 ஆடு அறுக்கும் தொட்டி எரு .. .. .. | 25 |
| 3 மாட்டுத் தொழுவத்தில் சேரக்கூடிய சாணி எரு .. | 50 |
| 7 பத்திரிகைகள் (17-3-1971 முதல் 31-3-1972 முடிய) .. | 10 |

(குத்தகைக் காலம் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய)

நகராட்சி அலுவலகம்,
விருத்தாசலம்,
19-1-1972.

வி. கணேசன்,
தனி அதிகாரி.

(த. 10)

## ஒப்பந்தப் புள்ளி

### திருநெல்வேலி நகராட்சி

1972-73/1, 2-ஆம் ஆண்டிற்கு வண்டி வரி, வாகனவரி லைசென்ஸ் தகடுகள் சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 7-3-1972 செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மாலை 4-00 மணிக்குப் பிறகு வரப்பெறும் ஒப்பந்தங்கள் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்தத்துடன் பொறுப்புத் தொகை ரூ. 25 காசோலையாகவோ, ரொக்கமாகவோ செலுத்த வேண்டியது. மேற்படி ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு ஆணையாளர்கள் அல்லது அவர்து அதிகாரம் பெற்றவர்களால் அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். தகடுகளின் அளவுகள், மாதிரித் தகடுகள் ஆகியவற்றின் விவரங்களை வரைபடத்துடன் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெ. ரா. கனகசபாபதி,
ஆணையாளர்.

திருநெல்வேலி நகராட்சி,
25-1-1972.

(த. 19)

## ஒப்பந்தப் புள்ளி

### நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கூறைநாடு (தஞ்சை மாவட்டம்)

தலைமையாசிரியர், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கூறைநாடு (தஞ்சை மாவட்டம்) அவர்களால் அடியிற் கண்ட மரச் சாமான்கள் வழங்க 29-2-1972 பிற்பகல் 3 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளப்படும். விவரங்களை நேரிலோ அஞ்சல் வழியாகவோ இப்பள்ளியிலிருந்து வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 1. இரண்டு மாணவர்கள் உட்காருவதற்கான சாய்வு மேஜை .. | 45 |
| 2. நாற்காலிகள் .. .. .. .. | 12 |
| 3. மேஜைகள் .. .. .. .. .. | 12 |

என். சேதுராமன்,
தலைமை ஆசிரியர்.

(த. 47)

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு அமைச்சக சர்வீஸ், ஊராட்சி வளர்ச்சி யூனிட்டில் அசிஸ்டன்ட்ஸ் மற்றும் அக்கவுண்டன்ட் ஆகிய 139 பதவிகள் நியமனத்திற்கு ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் 5 ஆண்டு பணிக்கான மொத்த சர்வீஸ் உள்ள, தலைமை எழுத்தர்கள், எழுத்தர்கள், டைபிஸ்ட்டுகள் மற்றும் கேசியர்களிடமிருந்து 9-3-1972 மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம் :—ரூ. 250—10—400 மாதம் ஒன்றுக்கு.

தகுதி :—(1) குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(2) தலைமை எழுத்தர் அல்லது எழுத்தர் அல்லது டைப்பிஸ்ட் அல்லது கேசியராக 5 ஆண்டுகளுக்குக் குறையாத சர்வீஸ் இருக்க வேண்டும்.

(3) ஊராட்சி வளர்ச்சித் துறை அலுவலகர் மற்றும் ஊராட்சி வளர்ச்சி அக்கவுண்டண்ட் தேர்வு ஆகிய துறைக்கான தேர்வில் (Departmental Test) தேறி இருக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய சர்விசில் டைப்பிஸ்ட் மற்றும் கேசியராக இருந்தால், 5 ஆண்டு மொத்த சர்விசில் முறையே ஒரு வருடம், இரண்டு வருடத்திற்குக் குறையாமல் எழுத்தராகப் பணியாற்றிருக்க வேண்டும்.

முழு விவரங்கள் மற்றும் மனுப்படிவங்களையும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0·35 காசு நால் அஞ்சல் வில்லையும் மற்றும் 0·05 காசு அகதிகள் நிவாரண வில்லையும்) ஒட்டப்பட்டு நால் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 51)

## பழனி நகராட்சி

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர், பழனி நகராட்சி அவர்களால் பழனி நகராட்சி தண்ணீர் விநியோக இலாக்காவுக்கான கருவிகளும் தளவாடங்களும் (Tools and Plant) ரூ. 5,000 மதிப்புக்குத் தேவைப்படுகின்றது. ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளிக்கும் ரூ. 100 பொறுப்புத் தொகையுடன் 28–2–1972-ஆம் தேதி அன்று மாலை 4–00 மணிக்குள் அனுப்பி வைக்கவேண்டியது. ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே மாலை 4–30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரங்கள் கருவிகளின் வகை, பிரிவு வாரியாக நகராட்சிப் பொறியர், பழனி அவர்களுக்கு எழுதிக் கேட்டால் அனுப்பி வைக்கப்படும்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 49)

---

## இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், லிமிடெட்.
## க்யூ. 816

### 165, வக்கீல் புதுத் தெரு, மதுரை-1.

இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், காரைக்குடி, பரமக்குடி, சிவகெங்கை ஆகிய இடங்களில் அரசினர் கணக்கில் இருக்கும் இரசாயன உரத்தைச் சாக்கு மாற்றி சம எடை கட்ட புதிய காலிச்சாக்குகள், பாலதீன் பைகள் வழங்க முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகின்றன.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-2-1972-ஆம் தேதி மாலை 3 மணிக்குள் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர், பஞ்சாயத்து அபிவிருத்திப் பிரிவு 110, அழகர் கோவில் ரோடு, மதுரை என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர்கள் எங்கள் சங்க அலுவலகத்தில் ரூ. 500 கட்டுத் தொகை செலுத்தி ஒப்பந்தப் புள்ளியுடன் ரசீதையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சாக்குகள் அல்லது பாலதின் பைகள் அல்லது இரண்டிற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கலாம். மூட்டைகளைச் சாக்கு மாற்றி நிறுத்து சம எடை கட்டி தைத்துக்கொடுக்க தனியாகக் கொடுக்கலாம்.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் ஒப்புக்கொண்ட தினத்திலிருந்து 10 தினங்களுக்குள் வழங்க வேண்டிய மொத்த காலிச் சாக்குகளையும், பாலதீன் பைகளையும் மேலே குறிப்பிட்ட இடங்களில் வழங்கி விடவேண்டும். தவறினால் ஒப்பந்தக் கட்டுத் தொகையைப் பறிமுதல் செய்வதோடு மறு ஒப்பந்தம் போடுவதால் ஏற்படும் செலவு, விலை வித்தியாசம் முதலியவற்றால் ஏற்படும் நட்டத்திற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் ஒப்புக்கொண்ட மூன்று தினங்களுக்குள் ரூ 2·25 ஸ்டாம்பு பத்திரத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்ரிமெண்டு எழுதிக் கொடுக்க வேண்டும். தேவைப்படும் சாக்கு ரகம்தான் வாங்கப்படும். எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளுபடி செய்யக் கலெக்டர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

### ஒப்பந்தப் புள்ளி மாதிரி

சாக்கு, பாலதீன் பைகள் வழங்கவும் சாக்கு மாற்றி எடைகளை நிறுத்து முடித்து அட்டியல் போட்டுக்கொடுக்கவும்.

| விவரம். | சமாராகத் தேவைப்படும் அளவு. | எண்ணம் 1-க்கு விலை விகிதம். |
| --- | --- | --- |
| I | | |
| 1 ஹெஸ்யன் சாக்கு 36" 22" .. .. | 15,000 | .. |
| 2 பாலதின் பை 38"—24"—150 கேஜ் .. | 15,000 | .. |
| 3 கோணிப்பையில் பாலதின் பை போட்டு சாக்கு மாற்றி நிறுத்து மூட்டை 1-க்கு 50 கிலோ வீதம் எடை கட்டித் தைத்து அட்டியல் போட்டுக் கொடுக்க (சணல் செலவு உட்பட) மூட்டை 1-க்கு கூலி. | .. | .. |

ஒப்பந்தம் ஒப்புக்கொண்ட பின்பு மேற்கண்ட விலைக்கு சாக்கு, பாலதின் பை வழங்கவும் மேற்கண்ட கூலிக்கு நிறுத்துத் தைத்து அட்டியல் போட்டுக்கொடுக்கவும் சம்மதிக்கின்றேன்.

இடம்: ஒப்பந்ததாரர் கையொப்பம்.

தேதி:

இதர விவரங்கள் சங்க அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

துணைப்பதிவாளர்-செயலாளர்.

(த, 49)

---

## பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 23,150-ல் 8 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரவர்கள் 28—2—1972 மாலை 4·00 மணி வரை வரவேற்கப்படுகிறது. தகுந்த கட்டுத் தொகையில்லாத ஒப்பந்தப் புள்ளிகள் எவ்வித முகாந்திரமின்றி நிராகரிக்கப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4·30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 46)

---

## எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறை

"புதுக்கோட்டை, அரசுக் கிளை அச்சகத்திலிருந்து 1972–73-க்கு, தேவையற்ற காகிதங்களை வாங்கி எடுத்துச் செல்லும் ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால் 4—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில், பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத் தபாலில் எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மிண்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். வேறுவகையில் அனுப்பக் கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுது பொருள் அச்சக இயக்குநர், சென்னை-1, அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர் அலுவலகம், சென்னை-1.

இயக்குநர் பொறுப்பு.

(த.42)

---

"சேலம், அரசு மண்டல அச்சகத்திலிருந்து 1972–73-க்கு, தேவையற்ற காகிதங்களை வாங்கி எடுத்துச் செல்லும் ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால் 3—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத் தபாலில், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மிண்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக்குறிப்பிட்டு அனுப்பவேண்டும். வேறு வகையில் அனுப்பக்கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர் அலுவலகம், சென்னை-1.

இயக்குநர் பொறுப்பு.

(த. 43)

## அறிவிப்பு

### தொழில் நுட்பக் கல்வித்துறை

தமிழ்நாடு மாநில பொறியியல்—தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு சிவில், மெகானிக்கல், மின்சாரவியல்—பொறி இயலிலும் துணி உற்பத்தியிலும் (Textile manufacture) புகுமுக தொழில் நுட்பப் படிப்பு, புகுமுக தொழில் நுட்பப் (டெக்ஸ்டைல்) படிப்பு இவைகளில் டிப்ளமாத் தேர்வுக்கு, ஆஜர் ஆவதற்கு சில பாடங்களுக்கு விதிவிலக்கு, 1972–ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்படுகிறது. 1972 அக்டோபரிலிருந்து தேர்வுகள் போர்டு நடத்தும் மேற்கண்ட தேர்வுகளுக்குச் சேரும் பிரைவேட் கேண்டிடேட்கள் யாவரும் இனிமேல் தங்கள் கல்வித் தகுதி எதுவாக இருந்த போதிலும் புகுமுகத் தொழில் நுட்பப் படிப்புத் தேர்வுகளுக்கு (Theory — Practical) எல்லாப் பாடங்களுக்கும் ஆஜராக வேண்டும்.

சென்னை–25.

தலைவர்,
தேர்வு போர்டு.

(த. ஆர். 44)

## ஒப்பந்தப் புள்ளி

### ஆலந்தூர் நகராட்சி.

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் 23–2–1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மேற்கொண்டு தேவையான முழு விவரங்களையும் விரிவான ஒப்பந்தப் புள்ளி அறிக்கையையும் ரூ. 5-15 மட்டும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம். | தோராய மதிப்பீட்டுத் தொகை. | பொறுப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 பக்தவத்சலம் நகர் பகுதியிலுள்ள ரோடுகளுக்கு தார் சாலை அமைக்க | 1,00,000 | 3,232 |
| 2 வானுவம்பேட்டை பகுதியிலுள்ள ரோடுகளுக்கு தார் சாலை அமைக்க | 1,00,000 | 4,098 |

வீ. ஆர். வரதராசன்,
ஆணையர்.

ஆலந்தூர்,
சென்னை-16,
30–1–1972.

(த.54)

## ஒப்பந்தப் புள்ளி

### எழுதுபொருள் அச்சகத் துறை

"மின்ட், அரசு அச்சகம் மற்றும் அதனுடைய சென்னை நகர கிளைகளிலும் தேக்கி வைக்கப்பட்ட பிரஸ் கட்டிங்ஸ்களை வாங்கி எடுத்துச் செல்லுவதற்கு 1971–72-ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால், 1–3–1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில், பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத் தபாலில், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1, அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். வேறு வகையில் அனுப்பக்கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1, அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

எழுது பொருள் மற்றும்
அச்சக இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### கோவை நகராட்சி.

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பிவைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள 28—2—1972-ஆம் தேதி மாலை 3–30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான நிபந்தனைகள், ஷெட்யூல் பாரங்கள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி பொதுப் பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | பட்டியல் தொகை. | கட்டுத் தொகை. | ஷெட்யூல் பத்திரத்தின் விலை. | முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. காசு. | |
| (1) கோவை ஆர். எஸ். புரத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 4 அறைகள் கொண்ட தற்காலிகக் கட்டடம் கட்டுதல். | 35,000 | 875 | 10–35 | 3 மாதங்கள். |
| (2) ஆர். எஸ். புரத்தில் உள்ள இடுகாடு மைதானத்தை சுற்றிலும் மதிற் சுவர் கட்டுதல். | 39,890 | 998 | 5–18 | 3 மாதங்கள். |

ஆணையர்.

(த. 14)

## ஏல விளம்பரம்

### பழனி நகராட்சி

பழனி நகராட்சி மன்றத்திற்குப் பாத்தியப்பட்ட தினசரி வார சந்தையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் பாத்தியதை, பெருந்து நிலையத்தில் உள்ள சைவ, அசைவ உணவு விடுதிகள் மற்றும் சின்ன கடைத் தெருவில் உள்ள 16 கடைகள் திண்டுக்கல் ரோடிலுள்ள 27 கடைகள், மற்றும் பெருந்து நிலையத்தில் உள்ள கடைகள், அடிவாரம் ரோடிலுள்ள 12 கடைகள் மற்றும் 15 பெட்டிக் கடைகள், ஆட்டடிச்சாலை, பெருந்து நிலையத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் பாத்தியதை ஆகியவைகளை 1972–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி காலை 10 மணி முதல் தேவைப்பட்டால் அடுத்து வரும் வேலை நாட்களிலும் நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரிகளால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். மற்றும் 1972–73 வருடத்திற்கு பொருள்களை சப்ளை செய்வதற்கான விலைப்புள்ளிகளும் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதி மாலை 4–00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். ஏலங்கள் அனைத்தும் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ஆம் தேதிய ஏல நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாகும். மேலும் விவரங்கள் வேண்டுவோர் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

க. அ. சுப்பிரமணியம், பி. ஏ.,
ஆணையர்.

பழனி நகராட்சி,
20—1—1972.

(த. 6)

## ஏல விற்பனை

கீழே குறிப்பிட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் துறையைச் சேர்ந்த போலீஸ் லாரி, மதுரையிலிருக்கும் இராமநாதபுரம் ஆயுதப் படை காவல் துறை மைதானத்தில் 22–2–1972-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இது சம்பந்தமாக மற்ற விவரங்களை மதுரையிலிருக்கும் இராமநாதபுர மாவட்ட ஆயுதப்படை உதவி காவல்துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து தெரிந்து கொள்ளவும்.

போலீஸ் லாரி எம். டி. ஆர். 3725—பெட்போர்ட்—1961 பெட்ரோல் வண்டி—ஹச். வி. எம்.

கோ. செல்வராஜ்,
மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்,
இராமநாதபுரம் (இ) மதுரை.

(த. 98)

## விளம்பரம்

### திருவண்ணாமலை நகராட்சி

இந் நகராட்சியின் எல்லைக்குள் சொத்துக்களின் பேரில் விதிக்கப்படும் சொத்துவரி விகிதங்களை 1—4—1972 முதல் அடியில் கண்டவாறு மாற்றியமைத்து விதிக்க 15—12—1971-ஆம் தேதிய 871 (3) எண்ணுள்ள இந்நகரமன்ற தீர்மானத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விகிதங்களைச் செய்தித்தாளிலும், நகரமன்ற அலுவலக விளம்பரப்பலகையிலும், நகரமன்ற எல்லைக்குள் முக்கிய இடங்களிலும், தண்டோரா மூலமும், விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

| | தற்போது உள்ள வரி விகிதம். | 1—4—1972 முதல் விதிக்கப்படவிருக்கும் வரி விகிதம். |
|---|---|---|
| | சதவிகிதம். | சதவிகிதம். |
| பொதுச் சுகாதாரங்களுக்கு .. .. .. | 10½ | 7 |
| **தண்ணீர்**, சாக்கடை வரி .. .. .. | 5¾ | 7¼ |
| கக்கூஸ் வரி .. .. .. | 2¼ | 2¼ |
| கல்வி வரி .. .. .. .. | 5 | 5 |
| விளக்கு வரி .. .. .. .. | 1½ | 3 |
| | 25 | 25 |

மேற்படி திருத்தம் செய்யவிருக்கும் வரி விகிதத்தின் பேரில் ஆட்சேபணையோ அல்லது ஆலோசனையோ கூற விருப்பம் உள்ளவர்கள் எழுத்து மூலம் 10—3—1972-ஆம் தேதிக்குள் நகராட்சி ஆணையருக்கு எழுதித் தெரிவிக்க அறிவிக்கப்படுகிறது.

நகராட்சி அலுவலகம்,
திருவண்ணாமலை,
31—1—1972.

**டி. ஏ. பி. இராமகிருஷ்ணன்,**
ஆணையர்.

(த. 55)

## ஒப்பந்தப் புள்ளி

### எழுதுபொருள் அச்சகத் துறை

" திருச்சிராப்பள்ளி, அரசு மண்டல அச்சகத்திலிருந்து 1972–73-க்கு தேவையற்ற காகிதங்களை வாங்கி அகற்றுவதற்கான ஒப்பந்தப் புள்ளி " என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால், 4—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத்தபாலில், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும், வேறு வழியில் அனுப்பக் கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர்
அலுவலகம், சென்னை-1.

**டி. சண்முகம்,**
இயக்குநர் பொறுப்பு.

(த. 44)

## ஒப்பந்தப் புள்ளி

### குழந்தைகள் நல சென்னை நகரக் குழு (கவுன்சில்) சென்னை-13

குழந்தைகள் நல இல்லம், சென்னை-13க்கு, 1972–73-ஆம் ஆண்டிற்கு "உணவுப் பொருட்கள், சில்லரைப் பொருள்கள், மற்றவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்ட உறையில், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 21—2—1972 மாலை 4.00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில், அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் விவரங்கள், குழந்தைகள் நல இல்ல அலுவலகம், 81, சூரிய நாராயண செட்டி தெரு, சென்னை-13-ல் எல்லா வேலைநாட்களிலும், ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 3 + விற்பனை வரி 3 சதவிகிதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது.

**வி. என். சுப்பராயன்,**
செயலாளர், குழந்தைகள் நல சென்னை நகரக்குழு.

24—1—1972.

(த. 40)

## வேலை வாய்ப்பு

### மின் வாரியம்

தமிழ்நாடு மின்வாரியத்தில, நேரடி முறை நியமனத்துக்காக, கீழ்க் குறிப்பிடப்பட்ட 3-வது வகுப்புப்பணி பதவிகளுக்காக, குறிப்பிடப்பட்ட படிவத்திலான மனுக்கள், தலைவர், தமிழ்நாடு மின்வாரியம் அவர்களால் 10—3—1972 மாலை 5.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

1. 24 இளநிலைப் பொறியாளர்கள் (சிவில்) ரூ. 300—25—650.
2. 50 இளநிலைப் பொறியாளர்கள் (மெகானிகல்) ரூ. 300—25—650.
3. 25 இளநிலைப் பொறியாளர்கள் (டெலி-கம்யூனிகேசன்) ரூ. 300—25—650.
4. 75 ட்ரேசர்கள் ரூ. 110—8—150—10—250.

தகுதி :—

இளநிலைப் பொறியாளர் (சிவில்):—பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற இந்திய யூனியனிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்திலாவது சிவில் பொறியியல் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதி.

இளநிலைப் பொறியாளர் (மெகானிகல்):—பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற இந்திய யூனியனிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்திலாவது மெகானிகல் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதி.

இளநிலைப் பொறியாளர் (டெலி-கம்யூனிகேசன்):—பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற எந்தப் பல்கலைக்கழகத்திலாவது டெலி-கம்யூனிகேசன் பொறியியல் அல்லது எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேசன் பொறியியல் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதி.

வயது:—மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவில் ஏதாவதொன்றில் இளநிலைப் பொறியாளர் பதவிக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் அல்லாத மற்ற வகுப்பினர் 1—7—1972 அன்று 28 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கக்கூடாது.

ட்ரேசர்கள்:—ஜியோமிட்ரிகல் ட்ராயிங், பில்டிங் ட்ராயிங் மற்றும் எஸ்டிமேடிங் மற்றும் ஃப்ரி ஹேண்டு அவுட்லைன் மற்றும் மாடல் ட்ராயிங் ஆகியவற்றில் லோயர் கிரேடு அரசுத் தொழில் நுட்பத் தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு உரிமை பெற்றவரால் வழங்கப்பட்ட முழுமையான உயர்நிலைப்பள்ளி விடுப்பு சர்ட்டிபிகேட்டில், கீழ்க் குறிப்பிடப்பட்ட பாடங்களில், குறிப்பிட்ட சராசரி மதிப்பெண்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். சிறப்புப் பாடமாக சேர்ந்திருக்க வேண்டும்.

ஏ. விஞ்ஞானம் மற்றும் ட்ராயிங் 30 சத விகிதம்.

பி. அப்ளைடு சயின்ஸ் அண்டு செய்முறைப் பயிற்சி 30 சத விகிதம்.

அல்லது

மற்ற சமமான தகுதிகள்.

வயது:—1—1—1973 அன்று 28 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கக் கூடாது. 1—7—1972 அன்று 18 வயது பூர்த்தியாகாதவர்கள், நேரடி முறை நியமனத்திற்கான பதவிகளுக்குத் தகுதியுடையவர்கள் அல்ல.

முழுவிவரங்கள், தகுதி, வயது, மற்றவைகள், அடங்கிய அறிவிப்பு நகலை மற்றும் குறிப்பிடப்பட்ட மனுவடிவம் ஆகியவைகளை, மின்சாரத் தலைமைப் பொறியாளர், 157, அண்ணா சாலை, சென்னை-2 அவர்களுக்கு 23 செ.மீ. × 10 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 20 காசு நூல் அஞ்சல் வில்லையும் 5 காசு அகதிகள் நிவாரண வில்லையும் (20 + 5 காசு) ஒட்டப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பி பெறலாம்.

**சி. ஜி. ரங்கபாஷ்யம்,**
தலைவர், மின் வாரியம்.

(த. 21)

## திருத்தம்

### தென்காசி நகராட்சி

ஒப்பந்தப் புள்ளித் திருத்தம் எண் 1/71-72, ஸ்டேஷனரி, மற்றும் இதரச் சாமான்கள் வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட சாமான்கள் வழங்க ஒப்பந்தப் புள்ளி கொடுப்பதற்கான கடைசி நாள் 15—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி என்பதை 28—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளிகள் 28—2—1972-ம் தேதி மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும்.

ம. சண்முகம், பி.ஏ.

1—2—1972. ஆணையர்.

(த. 52)

## ஏல விளம்பரம்

### ஸ்ரீரங்கம் நகராட்சி

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் இதனடியில் கண்ட 1 முதல் 3 வரையில் உள்ள அயிட்டங்களை அவற்றிற்கு எதிரில் குறிப்பிட்டுள்ள காலவரைக்கு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியத்தை 8—3—1972-ஆம் தேதி புதன்கிழமையன்று காலை 10 மணி முதல் ஸ்ரீரங்கம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள், கட்டுத் தொகை முதலியன சம்பந்தப்பட்ட விவரம் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(1) நகராட்சிக்குச் சொந்தமான 6·43 ஏக்கர் விஸ்தீரணத்தில் உள்ள சீமைப்புல்லை 1—4—1972 முதல் 31—3—1975 முடிய வெட்டிக் கொள்ளும் உரிமை.

(2) நகராட்சிக்குச் சொந்தமான கறிக்கடைகள், மீன்கடை, பெட்டிக்கடை, முதலியவற்றை 1—4—1972 முதல் 31—3—1973 முடிய ஒரு வருட காலத்திற்கு அனுபவிக்கும் பாத்தியத்தை, மாம்பழ மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் பாத்தியதை மற்றும் பல பட்டரை மார்க்கெட் கட்டணம், பஸ் ஸ்டாண்டு கட்டணம் வசூலித்தல் முதலியவைகளை 1—4—1972 முதல் 31—3—1973 முடிய ஒரு வருட காலத்திற்கு அனுபவிக்கும் பாத்தியதை.

(3) நகராட்சிக்குச் சொந்தமான பஸ் தரும் மரங்களை 1—4—1972 முதல் 31—3—1975 முடிய மூன்று வருடங்களுக்கு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியத்தையும், ஸ்ரீரங்கம் முனிசிபல் சர்வே வார்டு 2 எண் 2424/1 மற்றும் 2470/1-ல் முறையே 0·24 + 0·41 உள்ள நஞ்சை நிலங்களில் நெல் பயிரிட்டு பயனை 1—4—1972 முதல் 31—3—1975 முடிய அனுபவித்துக் கொள்ளும் பாத்தியத்தையும்.

ஆணையர்.

(த. 53)

## ஒப்பந்தப் புள்ளி

### எழுதுபொருள் அச்சகத் துறை

"விருத்தாசலம், அரசு மண்டல அச்சகத்திலிருந்து 1972-73-க்குத் தேவையற்ற காகிதங்களை வாங்கி எடுத்துச் செல்லும் ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால், 3—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத்தபாலில் எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும். வேறு வகையில் அனுப்பக்கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் அச்சக இயக்குநர், சென்னை-1, அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர்
அலுவலகம், சென்னை-1,
22—1—1972.

(த. 41)

## ஒப்பந்தப் புள்ளி

### நீதிமன்றக் கட்டடம், மதுரை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மதுரை டவுன் செங்குளம் உள்வாயில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய துவிச் சக்கர வண்டி நிலையத்தை (Cycle Stand) நடத்துவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed Tenders) மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் 11-3-1972 மாலை 2 மணி முடிய ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் 11-3-1972 மாலை 3 மணி அளவில் மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்த ஷரத்துகள், இதர நிபந்தனைகள் முதலிய விவரங்களை மதுரை மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. கோபிநாத்,
மதுரை மாவட்ட நீதிபதி.

மதுரை மாவட்ட நீதிமன்றம்,
மதுரை-20, 11-1-72.

(த. 18)

## ஏலம்

### தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம் : அரசாங்க தடி மண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும் : 21 & 22—2—1972 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 1,500 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச் சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி,
தென் பிரிவு.

(த. 34)

## ஒப்பந்தப் புள்ளி

### தருமபுரி நகராட்சி

கீழக்கண்ட நகராட்சி வேலைகளுக்காக 25—2—1972-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ அல்லது தபாலிலோ கோரி பெறலாம்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| 1 நகராட்சியில் சாக்கடை வேலைகள், கான்கிரீட் தளம் போடுதல், தடுப்புச்சுவர் கட்டுதல், சில்லரை பராமரிப்பு வேலைகள் (மொத்தம் 22 வேலைகள்). | ரூ. 80,200. | ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டில் 5 சதவிகிதம். |

எஸ். காளியப்பன், எம்.ஏ.,
ஆணையர்.

(த. 36)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை) சென்னை வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23—2—1972 அன்று மாலை 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வ. எண். | வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனு இடைக்குமிடம். |
|---|---|---|---|
| 1. | புதுப்பாளையத்திலிருந்து பாலூர். பெரிய எலச்சேரி மீனலூர். கனை இலுப்பை வழியாக காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் சேரும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 0.0 முதல் 6.0 வரை. | 2,490 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை. |
| 2. | புதுப்பாளையத்திலிருந்து பாலூர், பெரிய எலச்சேரி மீனலூர், கனை இலுப்பை வழியாக காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் சேரும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 6.0 முதல் 12.0 வரை. | 2,370 | ஷை |
| 3. | புதுப்பாளையத்திலிருந்து பாலூர், பெரிய எலச்சேரி மீனலூர், கனை இலுப்பை வழியாக காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் சேரும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 12.0 முதல் 17.2 வரை. | 2,110 | ஷை |

ஒப்பந்தங்கள் 23-2-1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள் நமூனுக்கள், வரைப் படங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை,) திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 25.88 செலுத்தி 10-2-1972 முதல் 22-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ் வங்கி"யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும். உறுதிப் பத்திரங்கள் அரசினரால் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் தான் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ்ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ. கி.)

சென்னை-25,
1—2—1972.

(த. 88)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 8-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| | கும்பகோணம் ஆண்கள் கல்லூரியில் பௌதீகத்துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல். | கும்பகோணம் ஆண்கள் கல்லூரியில் இரசாயன பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல். | கும்பகோணம் ஆண்கள் கல்லூரியில் கணிதத்துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல். |
|---|---|---|---|
| (1) ஒப்பந்தத் வகை .. .. .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை |
| | ரூ. | ரூ. | ரூ. |
| (2) பிணைப்பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப் படும்.) | 5,300 | 6,500 | 6,500 |
| (3) ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ.ப.து. செலுத்துந் தொகை III மற்றைய செலுத்துந் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம் திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும். | 30 | 30 | 30 |
| (4) விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனைவரி பி.பற்று சீட்டு மாநில விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனைவரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | 1·05 | 1·05 | 1·05 |
| (5) கால அளவு .. .. .. | 12 மாதங்கள். | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |
| (6) ஒப்பந்தப் பத்திரம் இடைக்க ஆரம்பிக்கும் நாள் | 21-2-72. | 21-2-72. | 21—2—72. |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து.
தஞ்சாவூர். வட்டம், தஞ்சாவூர்.

(த. 89)

## ஏல விற்பனை

### காவல் துறை

ந. க. எண்: 84375/டி. 2/71

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள், 1972-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 24-ஆம் தேதி, வியாழக்கிழமை, காலை 10.30 மணி அளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 22-2-1972 செவ்வாய்க்கிழமையன்றும், 23-2-1972 புதன் கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

நகர காவல் ஆணையர்,

காவல் ஆணையாளர் அலுவலகம்,
சென்னை-8.
(த. 90)

## ஒப்பந்தப் புள்ளி

### பவானிசாகர் நகரியம், கோவை மாவட்டம்

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கையொப்பம் செய்தவரால் அல்லது அவரால் அதிகாரம் பெறப்பட்டவரால், 25-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை பவானிசாகர் நகரிய அலுவலகத்தில் அலுமினம் பெரிக் கிரேடு " ஏ " ( Alumina Ferric Grade A ) விநியோகம் செய்வதற்கு பெறப்படும். அவை மாலை 4-30 மணிக்கு அன்று அங்கு வந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

மற்ற ஒப்பந்த விவரங்கள் அலுவலகத்தில் எழுத்து மூலம் அல்லது நேரில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலா,ம்.

ச. ராமசாமி,
நிருவாக அதிகாரி.

பவானிசாகர்,
24—1—1972.
(த.58)

## ஏல விற்பனை

### விழுப்புரம் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதியுடன் முடிவடையும் ஓராண்டுக் காலத்திற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான மகாத்மா காந்திரோடு, பண்டிட் ஜவகர்லால் நேருரோடு கீழ்ப்பெரும்பாக்கம் காய்கறி, மீன் நாளங்காடி, பேருந்து நிலையம், அங்குள்ள குளியல் அறைகளை மற்றும் திரு.வி.க. ரோடில் உள்ள வண்டிப்பேட்டை ஆடுமாடு அடிக்கும் தொட்டிகள் ஆகியவிடங்களில் கட்டணம் தண்டிக் கொள்ளும் உரிமையும், பேருந்துநிலைய வெற்றிலை பாக்குக்கடை, பழக்கடை, மரப்பெட்டிகள், பூக்கடைகள், தார்சு கட்டடக் கடைகள், மற்றும் இதர இடங்களில் உள்ள மரப்பெட்டிக் கடைகள், கீழ்ப்பெரும்பாக்கம் சண்முகப் பெருமாள் தெருவில் கதவு எண். 24 உள்ள தார்சு கட்டடம், ஆகியவைகளை அனுபவித்துக் கொள்ளும் உரிமையும், கீழ்ப்பெரும்பாக்கம் புல்பண்ணையில் புல் அறுவடை செய்து கொள்ளுதல், அங்குள்ள தென்னை மரங்களில் கள் இறக்கிக் கொள்ளுதல் ஆகிய உரிமைகளையும், நகராட்சி மாட்டுத் தொழுவத்தில் விழும் சாணி உரங்களை எடுத்துக் கொள்ளும் உரிமையும் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25—2—1972 தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் அல்லது பின்னால் ஒத்திவைக்கப்படும் தேதியிலும் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்க விழைவோர் வட்ட ஆட்சியரால் அளிக்கப்படும் சொத்துச் சான்றிதழுடன் கட்டுத்தொகை செலுத்தி ஏலம் கேட்கலாம். மற்ற விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
விழுப்புரம்,
1—2—1972

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

(த.59)

## ஒப்பந்தப் புள்ளி

### திண்டுக்கல் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குத் தேவையான கீழ்க்காணும் தண்ணீர் சுத்திகரிப்புப் பொருள்கள் வழங்குவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையரால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 3-3-1972-ஆம் நாள் மாலை 4-00 மணி வரை இந்நகராட்சி அலுவலகத்தில் பெறப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க விரும்புகிறவர்கள், ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய பொறுப்புத் தொகையைச் செலுத்தி தனித்தனியே ஒப்பந்தப்புள்ளிகள் தர வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நேரிலோ, தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

டெபாசிட் :

1. குளோரின் ( Liquid Chlorine )—ரூ. 100.
2. படிகாரம் (Sulphate of alumina ferric) —ரூ. 100.
3. பிளீச்சிங் பவுடர் (Stable Bleaching Powder) —ரூ.100.

ஆணையர்.

திண்டுக்கல்,
3–2–1972.
(த. 79)

## ஒப்பந்தப் புள்ளி

### மாநிலப் போக்குவரத்துத் துறை சென்னை-2

ஏலம் விடுபவர்கள் நியமனம்

இத்துறையில், சென்னை போக்குவரத்துப் பணிமனை, திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்குப் பழைய மற்றும் உபயோகமற்ற வண்டிகள் ( Condemned ), போக்குவரத்திற்கு உதவாது தேங்கிக் கிடப்பவை, மற்றவைகளுக்கு ஏலம் நடத்துவதற்கு, அங்கீகாரம் பெற்ற ஏலம் விடுபவர்களை நியமனத்திற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத்துறை இயக்குநர், சென்னை-2 அவர்களால், 15-3-1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை நமூனக்கள், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மாநிலப்போக்குவரத்துத்துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் அலுவலக நேரத்தில் கட்டணமின்றிப் பெறலாம்.

இயக்குநர்,
மாநிலப் போக்குவரத்துத்துறை,
சென்னை-2.

(த. 104)

## ஏல விற்பனை

உணவுப் பொருள் வழங்குதுறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், 18 டன் அரிசி, 25-2-1972 அன்று ஈ.டி. மில்ஸ் காம்பவுண்டு அரசு கூடவுன் ( godown ), சூளை, சென்னை-7-ல் உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒரு அலுவலரால், பொது ஏலத்திற்கு விற்கப்படும்.

விற்பதற்கான அரிசியின் அளவு, வகை பற்றிய விளக்கம், நிபந்தனைகள், உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையர் அலுவலகம், ஈ.டி. மில்ஸ், சென்னை-7-ல் ரூ. 5.20 செலுத்திப் பெறலாம். தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

உதவி ஆணையர்,
(உணவுப் பொருள் வழங்கு)
சென்னை-7.

(த. 86)

## ஏல விற்பனை

### கும்பகோணம் நகராட்சி

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேரு காய்கறி சந்தை, காமராஜ் காய்கறி சந்தை, பிர்மன் கோயில் காய்கறி சந்தை, மீன் சந்தை, ஆடடிக்கும் இடங்கள் ஆகியவற்றில் கட்டணம் தண்டும் உரிமை, சாம்ப சிவபுரம் பேருந்து நிலையங்களில் பேருந்துகளுக்குக் கட்டணம் தண்டும் உரிமை, பேருந்து நிலைய டாக்சி ஸ்டாண்டில் டாக்சிகார்களுக்குக்கட்டணம் தண்டும் உரிமை, நகராட்சிகள் சட்டம் 270-வது பிரிவின் கீழ் நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலை ஓரங்களில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் தண்டும் உரிமை, நகராட்சி மாட்டுக் கொட்டிலில் விழும் சாணியை எடுத்துக் கொள்ளும் உரிமை, காவிரி ஆற்றில் தோணிவிடும் உரிமை, நேரு காய்கறிச் சந்தையின் பக்கத்திலும், காமராஜ் காய்கறிச் சந்தையின் பக்கத்திலும் சைக்கிள்கள் நிறுத்தி வைப்பதற்குக் கட்டணம் தண்டும் உரிமை முதலியவைகளை 1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்கு ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் எல்லோரும் அறிய 24-2-1972-ம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

இதர விவரங்களை அலுவலகத்தில் நேரிலோ அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

ஜே. தனராஜ் டேனியல்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
கும்பகோணம்,
3—2—1972.
(த. 75)

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 28—2—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு உடைக்கப்படும். நகரமன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

| வேலை விவரம். | | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 சேர்மன் சிவசாமி பூங்காவில் வாசகசாலை கட்ட | .. | 165 |
| 2 குரூஸ்பர்னாந்துபுரம் பூங்காவில் வாசகசாலை கட்ட | .. | 165 |

கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.பி.இ.,
பொறியாளர்.

தூத்துக்குடி,
2—2—1972.
(த. 76)

## உதகை கோட்டம்

அரசாங்க சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு வேலைகள்.

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் உதகை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை, பணித்துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் உதகை கோட்டத்திற்குட்பட்ட அரசாங்க சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டிற்கான எல்லா பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) உதகை அவர்களால் அவர்களது அலுவலகத்தில் 15-3-1972-ஆம் நாள் பிற்பகல் 2-00 மணி வரை) அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972 அன்றே பிற்பகல் 2-15 மணிக்கு ஒப்பந்ததாரர் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் உதகை (நெ. கி. ப.) கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கு ரூ. 3·11 (எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது) வீதம் கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 1—3—1972 முதல் 14–3-1972 வரை விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் 15—3—1972 ஒப்பந்த நாளன்று கொடுக்கப்படமாட்டாது.

கட்டுத்தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது. கட்டுத்தொகை கோட்டப் பொறியாளர், (நெ. கி. ப.) உதகை அவர்கள் சார்பில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டை (செலான்) ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்கள் கோட்டப் பொறியாளரின் சார்பில் மாற்றி யதும், பாங்க் டிராப்டும் கட்டுத் தொகையாக பெற்றுக் கொள்ளப்படும். பாங்க் காரண்டி முன்வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் மேற்படி பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். அப்படி வைக்கத் தவறினால் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் வருமானவரி ,விற்பனைவரி சான்றிதழ் ஆகியவைகளை ஏற்கனவே சமர்ப்பிக்காமலிருந்தால் அவைகளை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பாவிடில் அவர்களுடைய ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாகும்.

வேலை விவரங்கள், ஒவ்வொரு வேலைகளுக்கும் முன்வைப்புத் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டவணை, இவ்வலுவலக அறிவிப்புப் பலகையிலும், ஒவ்வொரு உதவிப் பொறியாளர் பிரிவு அலுவலர் அலுவலக அறிவிப்புப் பலகைகளில் 1—3—1972-ஆம் நாளிலிருந்து விளம்பரப்படுத்தப்படும்.

பி. ராஜகோபால்,
கோட்டப் பொறியாளர் (நெ.) உதகை.

(த. 92)

---

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை–2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால்,2—3—1972 வியாழன் பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—நிலக்கோட்டை குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—வார்ப்பிரும்பு, பி.வி.சி., மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களைப் பகிர்வு முறைக்கெனப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை—கே. 2.

முன் வைப்புத் தொகை—ரூ. 1,110 (ரூபாய் ஒரு ஆயிரத்து நூற்றுப் பத்து மட்டும்.)

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை:—ரூ. 5·18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை–2 பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்டப் நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி, 29–2–1972 செவ்வாய் மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர், வடிகால் வாரியம்.

மதுரை-2,
28-1-1972.
(த. 93)

---

## மின் வாரியம்
## பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம்

சாற்றுக் குறிப்பு எண் : SEG-BB. 51

தமிழ்நாடு மின் வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் "தமிழ்நாடு மின் வாரியம்—பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம் 1972–73 முதல் 1973–1974 வரை நிலக்கரி கையாளுதல், தற்காலிகமான தொழிலாளிகளைக் கொடுத்தல் (Coal Handling and supply of Casual labour from 1972–1973 to 1973–1974) சாற்றுக் குறிப்பு எண் SEG-BB 51 எனவும் மற்றும் தேதி, ஒப்பந்ததாரரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டு கீழ் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் 15–3–1972 அன்று பிற்பகல் 1–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒவ்வொன்றிற்கும் ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) (திருப்பித்தரப்படமாட்டாது.) தலைமைக் கணக்காயர் பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம், சென்னை-12 என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாகவோ (Money Order) அல்லது நேரிலோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பிரதி வாங்குவதற்கான பணத்தை பண அஞ்சல் மூலமாக தமது முகவரியையும், சாற்றுக் குறிப்பு எண்ணையும் (Specification) தெளிவாக குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்கு சேர்ப்பிக்கப்படாவிட்டால் அல்லது தாமதமாகக் கிடைத்தால் அல்லது வழியில் காணாமல்போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட ஒப்பந்தப் பிரதிகள் மற்றொருவர் பயன்படுத்தக் கூடாது. ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லா வற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு அதிகாரம் உண்டு.

இந்த வேலைக்கான கட்டுத் தொகை (Earnest money deposit) ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). இத்தொகையை ஒப்பந்தப் புள்ளிகள் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும். கட்டுத் தொகையைச் செலுத்தாமல் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட உரிய தாள்களில் அனுப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறித்த தேதியும், நேரமும் கடந்த பின் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
பேசின்பிரிட்ஜ், அனல் மின் திட்டம்,
சென்னை-12,

(த. 94)

## திண்டுக்கல் நகராட்சி

1972–73.

இந்நகராட்சிக்குச் சொந்தமான, வாரச் சந்தை, தினசரி காய்கறிச் சந்தைகள், ஆடு அடிக்கும் இடம் ( sheep slaughter house ) மீன் மார்க்கெட், கறிக்கடைகள், வாரச் சந்தைகளில் விழும் சாணம் எடுக்கும் உரிமை, நகராட்சி மாட்டுத் தொழுவத்தில் விழும் சாணங்கள் எடுக்கும் உரிமை, ஆட்டு கொலைச்சாலைகளில் விழும் கழிவுச் சாணம், உதப்பிகள் எடுக்கும் உரிமை, திண்டுக்கல் நகராட்சி ரோடு ஓரங்களில் உள்ள 13 சிமிண்ட் விளம்பரப் பலகைகளில் விளம்பரம் செய்யும் உரிமை, பள்ளிவாசல் சந்தில் உள்ள நகராட்சி கடைகளில் கட்டணம் தண்டும் உரிமை, டாக்சி ஸ்டாண்டில் கட்டணம் தண்டும் உரிமை பழநி ரோட்டில் உள்ள நகராட்சி லாரி நிலையத்தில் கட்டணக தண்டும் உரிமை, ஒடுக்கம் நீரேற்று நிலையத்தில் உள்ள புல் பூண்டுகள் விளைவையும் அங்குள்ள மரங்களின் பலனையும் அனுபவிக்கும் பாத்தியத்தைக்கும் மேற்கு ரதவீதி காய்கறி மார்க்கட்டில் உள்ள 12 கடைகள் அனுபவிக்கும் பாத்தியதைக்கும் நகராட்சி பள்ளிகளின் சுவர்களில் உள்ள 250 விளம்பர போர்டுகள் விளம்பரம் செய்யும் உரிமைக்கும், ஆத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன் தரும் மரங்களில் விலையை அனுபவிக்கும் உரிமைக்கும், நகராட்சி எல்லைக்குட்பட்ட பலன் தரும் மரங்களின் விளைவை பயன்படுத்திக் கொள்ளும் உரிமைக்கும், மத்திய பஸ் நிலையத்தில் உள்ள 2-ம் நெம்பர் செய்தித்தாள் புத்தக்கடை, 3-ம் நெம்பர் வெற்றிலை பாக்கு ஸ்டேஷனரி கடை, மத்திய பஸ் நிலையமதில் உள்ள 4-ம் நெம்பர் பழக்கடையும், பூக்கடையும் அனுபவிக்கும் பாத்தியதைக்கும், நகராட்சி பயணிகள் தங்கும் இல்லத்தில் உள்ள காலி நிலத்தில் பயிரிடும் உரிமைக்கும், ஐசலேசன் வார்டு காம்பவுண்டில் உள்ள காலி நிலத்தைப் பயிரிடும் உரிமைக்கும், ரயில்வே ஸ்டேசன் ரோடில் உள்ள மூன்று மரப்பெட்டிக்கடைகள் அனுபவிக்கும் பாத்தியதைக்கும், மத்திய பஸ் நிலையத்தில் உள்ள 11 பஸ் டிக்கெட் கொடுக்கும் அறைகள் அனுபவிக்கும் பாத்தியதைக்கும், மணிக்கூண்டு கடை தென்புறம் உள்ள கால்கள் ஊன்றி விளம்பரம் செய்யும் உரிமைக்கும் நாளது 23-2-1972-ம் தேதி புதன் கிழமை காலை 10 மணிக்கு மேல் நகராட்சி அலுவலகத்தில் ஆணையரவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

மற்றும் நகராட்சிக்குத் தேவையான பால், ரொட்டி, லீக்கோ கரி, மாட்டுத் தீவனங்கள், நீர்த்த சுண்ணாம்பு, ஸ்டேஷனரி சாமான்கள், பெட்ரோல், டீசல் முதலியவைகளும் சப்ளை செய்யவும், வண்டிகளின் டயர், டியூப்களை வல்கனைசிங் செய்யவும், மாடுகளுக்கு லாடம் அடிக்கவும், பிரிண்டிங், பைண்டிங் செய்யவும் மூடிய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 24-2-1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஏலம் 1972-73-ஆம் ஆண்டு ஏல விதிகளுக்குக் கட்டுப்பட்டது. மற்ற விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

பி. வீரகேசவன், பி.ஏ., பி.காம்.,
ஆணையர், திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல்,
2–2–1972.

(த-105)

## ஏல விற்பனை

இணை மாநில கனிப்பொருள் ஆய்வாளர் அலுவலகம்,
தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

கிண்டி, தொழிற்பேட்டை, சென்னை-32-ல் உள்ள இணை மாநில கனிப்பொருள் ஆய்வாளர் அலுவலகத்தில் இரண்டு "காலிக்ச் துணைப்பொறிகள், பம்புகள் அதைச்சார்ந்த தளவாடங்கள் முதலியவை 6—3—1972 அன்று பிற்பகல் 2 மணி அளவில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் 10-30 மணியிலிருந்து 5-00 மணி வரை 4—3—1972-க்குள்ளாக விற்பனைவரையறைகளையும், நிபந்தனைகளையும் நேரடியாகவோ அல்லது விண்ணப்ப நமூனாவுடன் சுயமுகவரியிட்ட 25 காசு. அஞ்சல் தலையுடன் கூடிய உறையுடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்

இணை மாநில கனிப்பொருள் ஆய்வாளர்.

(த-102)



## தூத்துக்குடி நகராட்சி

1972-73-ஆம் வருடத்திற்கு இந்நகராட்சியின் கால்நடைகளுக்குத்தேவையான வைக்கோல், பருத்திவிதை, கடலைப்புண்ணாக்கு, அரிசி தவிடு, பச்சைப்புல் முதலியன வழங்கவும் மாடுகளுக்கு லாடம் அடிக்கவும் துப்புரவு வேலைகளுக்கு நீத்தின சுண்ணாம்பும் மருத்துவ விடுதிகளுக்குத் தேவையான உடைவிறகு ரொட்டி, ஈர்க்குமார் தகரப்போணி, ஆகிய ஜாமான்கள் வழங்கவும், பிரசவ விடுதிகள் தங்கும் விடுதிகளிலுள்ள துணிகளைச் சலவை செய்வதற்கும் நகராட்சியால் பிரசுரம் செய்யப்பட்டுள்ள 18—1—1972-ஆம் தேதிய வருடாந்திர ஒப்பந்த நோட்டீஸில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, மூடி, சீல்வைத்த ஒப்பந்தப் புள்ளிகளை அதற்குக் குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை சால்வன்ஸி அத்தாட்சியுடன் 1972-ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 23-ம் தேதி புதன் கிழமை மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையரின் நேர்முக உதவியாளரால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்றையத் தினம் மாலை 4–30 மணிக்கு ஆணையரின் நேர்முக உதவியாளரால் திறக்கப்படும். மற்ற விவரங்கள் அலுவலக வேலை நேரங்களில் வேலை நாட்களில் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

பி. ஹமீதலி, பி.ஏ., பி.எல்.,
ஆணையர்.

(த·72)

## அறிவிப்பு

## திருவாரூர் நகராட்சி

திருத்தப்பெற்ற தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 1920-ஆம் வருடத்திய 5-வது சட்டம் 80-வது பிரிவின் கீழ் பிரசுரிக்கப்படுகிறது.

நகராட்சி எல்லைக்குள் இருக்கும் எல்லாக் கட்டடங்கள் அதை சார்ந்த நிலங்களுக்கும் (விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் நிலங்கள் தவிர) கீழ்க்கண்டவாறு விளக்கு வரியை 1920-ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 5-வது சட்டம் 78 (3) பிரிவின் கீழ் 1—4—1972 முதல் உயர்த்தி விதிப்பதென்று இந்நகர் மன்றம் 30—9—1971 தேதிய 832 என் தீர்மானத்தில் முடிவு செய்திருப்பதால் இது விஷயமாக 30—3—1972 தேதி முடிய உள்ள கால அளவிற்குள் எழுத்து மூலமாக வரப்பெறும் ஆட்சேபணைகளை நகராட்சி மன்றத்தால் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

| வரி விபரம். | அரை வருட வரி. |
|---|---|
| விளக்கு வரி .. .. | நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்லாவித கட்டடங்களுக்கும் அதை சார்ந்த நிலங்களுக்கும் வருட வாடகை மதிப்பில் $2\frac{1}{2}$ சதவிகிதத்திலிருந்து $3\frac{1}{2}$ சதவிகிதம். |

க. பெ. அன்பானந்தன்,
ஆணையாளர்.

நகராட்சி அலுவலகம்,
திருவாரூர்,
29—1—1972.
(த·73)

## ஒப்பந்தப் புள்ளி

## ஈரோடு நகராட்சி

இந்நகராட்சியின் உபயோகத்திற்குத் தேவைப்படும் ஒலிபெருக்கிச் சாதனங்கள் ரூ. 2,800 மதிப்பில் வழங்க 2—3—1972-ந் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

ஈரோடு,
3—2—1972.
(த.74)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

திருச்சிக் கோட்டம்.

தமிழக ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும் திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பிராந்தியத்தில் உள்ள விளாங்குடி முத்துவாஞ்சேரி சாலையை மேம்பாடு செய்யும் வேலைக்கான மூடிய அரக்கு முத்திரை இடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்த அறிவிப்புகள் (டெண்டர்கள்) திருச்சிராப்பள்ளி கோட்டப்பொறியாளர் அவர்களால், அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிவரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக கடிகாரத்தின்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக் கொண்ட ஒப்பந்த அறிவிப்புகள் அன்றையத் தினமே பிற்பகல் 4-15 மணி யளவில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப் பட்டியல்களும், பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும், மேற்படி விவரக் குறிப்புகளும், திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் (1—3—1972 முதல் 14—3—1972வரை) (இருநாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலின் அடக்கவிலை, விற்பனைவரி உள்பட ரூ. 10.35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தைந்தும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும், திருப்பித்தர இயலாது. 15—3—1972-ஆம் தேதி ஒப்பந்தப் பட்டியல்கள் விற்கப்பட மாட்டாது.

முன்வைப்புத்தொகை திருச்சிராப்பள்ளி (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் "ரெவின்யூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத் தவிர கோட்டக் பொறியாளர் பெயருக்கு வாங்கப் பட்ட பன்னிரண்டாண்டுத் தேசிய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், ஷெட்யூல் வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்திரவாதங்களும், டிமாண்டு டிராப்டிகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் முன்வைப்புத் தொகைக்காக பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வங்கி உத்தரவாதமாக இருப்பின் அவைகள் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். முன்வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | ஒப்பந்த மதிப்பு. | கட்டுத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1. விளாங்குடி முத்துவாஞ்சேரி சாலையை மேம்பாடு செய்தல்— | | | |
| கி.மீ. 11·6—14·0 | 39,100 | 980 | ஆறு மாதங்கள் |
| 2 ஷை கி.மீ. 14·0—18·0 | 46,100 | 1,160 | ஷை |
| 3 ஷை கி.மீ. 18·0—20·0 | 33,500 | 840 | ஷை |
| 4 ஷை கி.மீ. 20·0—22·0 .. | 34,400 | 806 | ஆறு மாதங்கள் |
| 5 ஷை கி.மீ. 22·0—24·0 .. | 35,900 | 900 | ஷை |
| 6 ஷை கி.மீ. 24·0—26·0 .. | 36,500 | 920 | ஷை |
| 7 ஷை கி.மீ. 26·0—28·8 .. | 35,600 | 890 | ஷை |

எம். டி. பால்மாணிக்கம்,
கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப.)

(த. 60)

## தூத்துக்குடி நகராட்சி

1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள ஒரு வருடத்திற்கு நகராட்சியின் எல்லைக்குள் மின்விளக்குகள் இல்லாத தெருக்களில் ஒளி தருவதற்கு 200 மெழுகுவர்த்தி ஒளியுள்ள பெட்ரோமாக்ஸ் விளக்குகள் சுமார் 100 எண்ணிக்கை தினசரி மாலை 7 மணி முதல் இரவு 1 மணி வரை எரிய வைப்பதற்கு நாள் வாடகை வீதத்தில் வழங்க 28—2—1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை ஆணையரவர்களின் நேர்முக உதவியாளரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–30 மணிக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் திறக்கப்படும்.

கட்டுத் தொகையான ரூ. 1,000-க்கு செக் அல்லது டிமாண்ட் டிராப்டுடன் அல்லது முனிசிபல் கஜானாவில் கட்டியதற்குரிய ரசீதுடன் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். மற்றவை நிராகரிக்கப்படும் என்பதையும் அறியவும்.

இதர விவரங்களுக்கு அலுவலகப் பொறியர் அவர்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 57)

## மன்னார்குடி நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம்நாள் முதல் 1973-ஆம்ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் முடிய உள்ள காலவரைக்கு மன்னார்குடி நகராட்சிக்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள், எலக்ட்ரிக் சாமான்கள், மாடுகளுக்குத் தேவையான பருத்திவிதை, புண்ணாக்கு, வைக்கோல் மற்றும் நகராட்சி மகப்பேறு நிலையத்திற்குத் தேவையான விறகு, கரி, கன்ஸர்வன்ஸி உபயோகத்திற்குத் தேவையான கூடை, கயிறுகள், வாளிகள், மண்வெட்டிகள், வழங்க ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகிறது.

அச்சடித்தல், மாடுகளுக்கு லாடம் அடித்தல் ஆகியவைகளுக்கும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர், பொறியர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் 25–2–1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவோர் அதற்குரிய கட்டுத் தொகையை செலுத்தி நேரிலோ அல்லது தபால் மூலமோ மேற்படி காலத்திற்குள் கொடுக்கலாம்.

இதர விவரங்கள் நேரிலோ அல்லது எழுதியோ பெற்றுக்கொள்ளலாம்.

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

மன்னார்குடி,
1-2-1972.

(த. 78)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

### திருச்சி வட்டம்

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொது பணித்துறை திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. வேலையின் பெயர் .. .. | கேந்திரிய வித்யாலயா, மத்திய அரசு பள்ளிக்கான கட்டடங்கள்—சிறு படைக்கல திட்ட எல்லைக்குள்—கட்டுதல்—திருச்சி. |
| 2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி, மற்றும் நேரம். | 15-3-1972—மாலை 3-00 மணி |
| 3. பிணைப் பொறுப்புத் தொகை .. | ரூ. 15,000 (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்). |
| 4. ஒப்பந்த முறை .. .. .. | மொத்தத்தொகை. |
| 5. முடிக்க வேண்டிய காலம் .. | பன்னிரண்டு மாதங்கள். |
| 6. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| 7. விற்பனை வரி .. .. .. | ரூ. 0-88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்). |
| 8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 6—3—1972. |
| 9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். | 15—3—1972 மாலை 3-30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில்: "XXXVII Public werks-State Revenue-Miscellaneous" "XII Sales-Tax (b) Receipts Under State Sales Tax Act- General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப்பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 70)

## விளம்பரம்

### வாணியம்பாடி நகராட்சி

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 78 (3) பிரிவுகளின்படி விளம்பரம் செய்யப்பட்டது.

வாணியம்பாடி நகராட்சி மன்றத்தின் 30—11—1971-ஆம் தேதிய 462 எண் தீர்மானத்தின்படி தற்பொழுது அமலிலுள்ள சொத்துவரியில் விளக்கு வரி 3 சதவிகிதத்திலிருந்து 3¼ சதவிகிதம் உயர்த்த 1—4—1972 முதல் கீழ்க்கண்ட வரிவிகிதத்தில் விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி அரையாண்டிற்கு.

| | ஒரு அரையாண்டிற்கு தற்போதைய வரி விகிதம். சதவிகிதம். | 1—4—1972 முதல் ஒரு அரையாண்டிற்கு விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதம். சதவிகிதம். |
|---|---|---|
| 1 சொத்துவரி .. .. .. | 3½ | 3½ |
| 2 மலம் அகற்றும் வரி .. .. | 3½ | 3½ |
| 3 விளக்குவரி .. .. .. | 3 | 3¼ |
| 4 கல்வி வரி .. .. .. | 2½ | 2½ |
| 5 நீர்அளிப்பு வரி .. .. .. | 4 | 4 |
| 6 சாக்கடை வரி .. .. .. | 1 | 1 |
| | 17½ | 17¾ |

இவ்வரி விகித உயர்வு உத்தேசத்திற்கு வரிசெலுத்துவோர் யாருக்கேனும் ஏதாவது ஆட்சேபணை இருந்தால் அதனை இந்த விளம்பரம் வெளியிட்ட 30 நாட்களுக்குள் நகரமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளலாம்.

பா. புருஷோத்தமன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்
வாணியம்பாடி.
29—1—1972.

(த. 81)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்: மதுரையில் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் தங்கும் விடுதிக்கான அரசினர் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1-3-1972 மாலை 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு,மாலை 4.00 மணிக்குத் திறக்கப்படும். 21-2-1972 முதல் 28-2-1972 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
முன்வைப்புத் தொகை—ரூ. 3,900.
முடிக்கவேண்டிய காலம்—6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பிதரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W. Remittances—III other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி ரூ. 0.75 (காசுகள் எழுபத்தைந்து மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (d) Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்வைப்புத் தொகையும் கருவூலச்சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு வகையிலோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் டிமாண்ட் டிராப்டுகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத்தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மதுரை வட்டம்,
மதுரை-2.

(த. 91)

## ஏல விற்பனை

### தென்காசி நகராட்சி

**இந்நகராட்சியின் பராமரிப்பிலிருந்துவரும் கீழே கண்ட சொத்துக்களை யும் குத்தகைகளின் லைசென்ஸையும் அனுபவிக்கும் உரிமையை இதன் அடியிற் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 29—2—1972-ஆம் தேதியன்று காலை 10-30 மணி முதல் மறுபடி ஒத்திப்போடும் தினங்களிலும் இந் நகராட்சி அலுவலகத்தில் வைத்து ஆணையாளரால் அவர்களால் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றவர்களாலோ அனைவரும் அறிய பகிரங்க ஏலம் விடப்படும்.**

| வரிசை எண்ணும் குத்தகை விவரமும். | கட்டுத் தொகை. | குத்தகை கால அளவு. |
|---|---|---|
| | ரூ. | |
| 1 நகராட்சி மேலப்புலியூர் வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 300 | 1—4—1972 முதல் 31—3—1973 முடிய. |
| 2 ஆடறுப்பு மனையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 200 | 1—4—1972 முதல் 31—3—1973 முடிய. |
| 3 நகராட்சி மட்டன் ஸ்டால்களை அனுபவிக்கும் உரிமை (ஸ்டால் ஒன்றுக்கு). | 50 | 1—4—1972 முதல் 31—3—1974 முடிய. |
| 4 பேருந்து நிலையத்திலுள்ள காபி ஹோட்டல் நடத்தும் உரிமை. | 500 | ஷை |
| 5 பஸ் நிலயத்திலுள்ள இனிப்பு குளிர்பான ஸ்டாலை அலுவலக நிபந்தனைகளுக்குட்பட்டு அனு பவிக்கும் உரிமை. | 200 | ஷை |
| 6 பஸ் நிலயத்திலுள்ள ஸ்டால்களை அனுபவிக்கும் உரிமை (ஒவ் வொன்றுக்கும்). | 50 | ஷை |
| 7 நகராட்சி எல்லைக்குள் சேரக்கூடிய பன்றி சாணி உரங்களை நிபந் தனைகளுக்கு உட்பட்டு அப்புறப் படுத்தும் பாத்தியதை. | 500 | ஷை |
| 8 நகராட்சிப் பேருந்து நிலயத்தில் நிறுவப் பட்டிருக்கும் விளம்பர போர்டுகளை அனுபவிக்கும் பாத்தியதை. | 50 | ஷை |
| 9 மேலப்புலியூர் வாரச்சந்தையின் முன்பக்கமுள்ள 11 கட்டடங்களை அனுபவிக்கும் பாத்தியதை (கட்டடங்கள் ஒவ்வொன்றுக் கும்). | 50 | ஷை |

மற்ற ஏல நிபந்தனைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**ம. சண்முகம், பி.ஏ.,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தென்காசி,
29—1—1972.

(த. 71)

## ஒப்பந்தப் புள்ளி

### கிருஷ்ணகிரி நகராட்சி

கிருஷ்ணகிரி நகராட்சி கீழ்க்கண்ட வேலைகளை அலுவலக நிபந்தனை கள்படி செய்து முடிக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—2—1972 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் 23—2—1972 அன்று அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 25—2—1972-ஆம் நாள் மாலை 4-30 மணிக்கு நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் அப்போது ஆஜராகியுள்ள ஒப்பந்த தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்களை நகராட்சி பொறியாளரிடம் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ள லாம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீடு. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. சென்னை ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 2. பெங்களூர் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 3. நேதாஜி ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 4. மகராஜகடைத் தெருவில் தடுப்புச் சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 5. காந்திஜி ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 6. சப்ஜெயில் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 7. சேலம் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட. | 8,000 | 400 |
| 8. அலுவலகத்தின் பின்புறம் மற்றொரு அலுவலகக் கட்டடம் கட்ட. | 8,000 | 400 |

**துரை குருநாதன், பி.ஏ., பி.டி.,**
ஆணையர்.

(த. 83)

## ஒப்பந்தப் புள்ளி

### கோயம்புத்தூர் நகராட்சி

1972–73 இரு அரையாண்டுகளுக்கு வாகன மிருகவரி பிரிவுக்கான எண்ணுடன் கூடிய பூச்சுள்ள வில்லைகள் விநியோகம் செய்வதற்காக முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 3—3—1972 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

தேவையான வில்லைகள் எண்ணிக்கை அளவு, நிறம் மற்றும் இதர நிபந்தனைகளை இலவசமாக விண்ணப்பத்தின் பேரில் பெற்றுக்கொள்ள லாம்.

**ஆணையர்.**

(த. 82)

## ஒப்பந்தப் புள்ளி

### மன்னார்குடி நகராட்சி

கீழேகண்ட நகராட்சி வேலைகளுக்காக 28—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை கீழ் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, அஞ்ச லிலோ கோரிப் பெறலாம்.

| வேலையின் விவரம். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத்தொகை |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டட வேலைகள் (8 வேலைகள்). | 41,300 | ஒவ்வொரு வேலைக் கும் மதிப்பீட்டு தொகையில் 5சத விகிதம். |

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி,
3—2—1972.

**கோ. முருகன், பி.ஏ.,**
ஆணையர்,

(த. 80)

## ஏல விற்பனை

### தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட நீர் தாங்கி வண்டி எம்.எஸ்.ஒய். 0973 (ஜி.எம்.ஸி. 1951 மாடல் வண்டி) சென்னை எழும்பூர் மார்ஷல்ஸ் சாலை 17-ஏ எண்ணில் உள்ள கோட்டத் தீயணைப்பு அலுவலகத்தில் 19—2—1972 அன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இவ்வண்டியை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம்

**எஸ். அமிர்தலிங்கம்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்.

(த. ஏ. 1)

## ஒப்பந்தப் புள்ளி

### ஸ்டான்லி மருத்துவமனே, சென்னே

1—4—1972 முதல் 30—9—1972 வரையிலான 6 மாத காலத்திற்கு மருந்துகள், டிரஸ்ஸிங்குகள் கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவை களை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்ட படிவங்களில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் அவர் ஆணைப்படியும் அவர் உத்தரவுப்படியும் பின், அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனே, சென்னே அவர்களால் 25—2—1972 பிற்பகல் 2மணி வரை வரவேற்கப்படுகின்றன. குறிப்பிட்ட படிவங்கள் வேண்டுவோர் அதற்குரிய கட்டணம் ரூ. 2 ஐ (ரூபாய் இரண்டு மட்டும்) XXIII Medical. K. Micellaneous Receipts என்ற கணக்கு தலைப்பிலும், மற்றும் விற்பனை வரி ரூ. 0-07ஐ (ஏழு காசு மட்டும்) XII Sales Tax Receipts General Sales Tax என்ற கணக்கு தலைப்பிலும் செலுத்திக் கோரிக்கை மனுவுடன் மேற்சொன்னபடி செலுத்தி பெற்ற இரண்டு செலான்களையும் இணைத்து அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையின் மெடிகல் ஸ்டோர்ஸ், சென்னே அவர் களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஜி. பிரபு,
டீன்,
(கண்காணிப்பாளர்), அரசினர் ஸ்டான்லி
மருத்துவமனே, சென்னே-1.

(த. 95)

---

## அறிவிப்பு

தமிழரசு பத்திரிகை 1—2—1972 இதழில் தக்கலை கல்வி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வேலை நியமனத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டிருந்த செய்தி இந்த அறிக்கையினல் நீக்கப்பட்டிருக்கிறது என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்த அறிக்கையினல் தெரிவிக்கப்படுகிறது. இந்த அலுவலகத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திற்குரிய விண்ணப்பம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முன்னரே 1—2—1972—தமிழரசு இதழில் வெளியிட்டிருந்த அறிக்கை இதனல் நீக்கப்படுகிறது.

ஆர். சீனிவாச கோபாலன்,
மாவட்டக் கல்வி அலுவலர்,
தக்கலை.

(த. 99)

---

## ஏல விளம்பரம்

மாதவரம் அரசாங்கப் பால் பண்ணையில் உபரியாக உள்ள கால் நடைகளை (கறவை மற்றும் கறவை மறந்த பசுக்கள்) பகிரங்கமாக ஏலத்தில் 23—2—1972 தேதியன்று (புதன்கிழமை) காலை 10-00 மணி யளவில் விடப்படும். காப்புத் தொகையாக ஏலம் கேட்பவர்கள் ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) ஏலம் கேட்கும் முன்பாகக் கட்டவேண்டும். மேலும் அதிகபட்ச ஏலம் கோரி முடிந்தவுடன் கேட்கப்பட்ட தொகையில் ¼-ல் பங்கு உடன் செலுத்திவிட வேண்டும். தவறினல் குறிப்பிட்ட கால் நடைகள் மறுபடியும் ஏலத்தில் விடப்படும்.

மற்ற விதிமுறைகளுக்குக் கண்காணிப்பாளர், அரசினர் பால்பண்ணை, சென்னே-51 அவர்களை அணுகவும்.

குமார. கோமேதவேலு,
ஆணையர்.

(த. 96)

---

## ஏல விளம்பரம்

### காவல் துறை

கீழ்க்கண்ட காவல்துறை ஜீப் 25—3—1972 அன்று காலை 11 மணிக்கு வேலூர் ஆயுதப்படை அலுவலகத்தின் எதிரில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வண்டி எண்:—எம். டி. ஜே. 3405.

வகையும் தயாரிப்பும்:—வில்லீஸ் ஜீப்.

2. மேற்கண்ட வண்டியை வேலூர் ஆயுதப்படை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

3. விற்பனை நிபந்தனைகளை வேலூர் ஆயுதப்படை வாகனப் பிரிவு ஆய்வாளரிடமிருந்து தெரிந்துக் கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்,
வேலூர் (வ. ஆ.)

(த. 85)

---

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தமிழ்நாடு பொதுப்பணித்துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர், அவர் களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9—3—1972—ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்காணும் வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

| பிரிவு எண்ணும், வேலையின் பெயர் விவரமும். | பிணைத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங் களின் விலை. | விற்பனை வரி. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி தாலுக்காவிலுள்ள ஈர வாய்க்கால் வடிகாலைச் சீர்திருத் துதல். | 2,450 | 10 | 0·35 |

விதிமுறைகள்—

1. ஒப்பந்தப் பத்திரங்கள் 25—2—1972-ஆம் தேதியிலிருந்து தஞ்சாவூர் காவிரி வளர்ச்சிப் பணி வட்ட தனி மேற்பார்வைப் பொறியாளர் அலுவ லகத்தில் கிடைக்கும்.

2. பிணைத் தொகை திருத்துறைப்பூண்டி, திட்ட ஆய்வுக் கோட்டச் செயற் பொறியாளர் அவர்கள் கணக்கில் சேரும்படி அரசாங்கக் கருவூலத்தில் "ரெவினியூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில்" பொதுப் பணித் துறை III மற்றைய வரவினங்கள்" என்ற தலைப்பில் திருத் துறைப்பூண்டி திட்ட ஆய்வுக் கோட்ட செயற்பொறியாளர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் "XII விற்பனை வரி—பி. வரவினங்கள்/ மாநில விற்பனை வரிச் சட்டம்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் 7—3—72 தேதிக் குள் தனி மேற்பார்வைப் பொறியாளரது நேர் உதவியாளர் காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

அ. சேஷாத்ரி
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

(த. 87)

# தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்துவிட்டது. மங்கல ஒலி எங்கும் ஒலிக்கிறது. வருகிற ஆண்டுகளின் ஒரு 'தை'யில் உங்களது செல்வமகளின் திருமணம் நடைபெறும். அதற்கென சென்ற ஆண்டுகளில் நீங்கள் சேமித்தது எவ்வளவு?

திருமணச் சேமிப்பும், பாதுகாப்பும் ஒருங்கே பெற ஆயுள் இன்சூரன்ஸில் ஒரு திட்டம் உள்ளது.

லைப் இன்ஸ்யூரன்ஸ்
கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா.



EP.LIC.17.71

## தென்காசி நகராட்சி

1972-73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட விவரப்படி அயிட்டம் வாரியாக சாமான்கள் சப்ளை செய்யத் தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களால் 15—2—1972-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4·00 மணி வரை மூடிமுத்திரையிட்ட கவர்களில் ஒப்பந்தங்கள் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4·30 மணிக்கு ஒப்பந்த தாரர்களின் முன்னிலையில் பகிரங்கமாய் உடைக்கப்படும். அவ்வமயம் ஒப்பந்த தாரர்களோ அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டு களோ நேரில் ஆஜராகலாம். ஷை ஒப்பந்தத்தின் பொது நிபந்தனை களையும் மற்ற விவரங்களையும் தெரிந்துகொள்ள விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

### விவரம்

| அயிட்டம் என்னும் சப்ளை இனமும். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளை செய்தல் .. .. | 100·00 |
| 2 லைப்பாய் சோப்பு சப்ளை செய்தல் .. .. .. | 10·00 |
| 3 வாகனுதி, பிராணிகள் வரித்தகடுகள் சப்ளை செய்தல். | 5·00 |
| 4 மாடுகளுக்கு லாடம் அடித்தல் .. .. .. | 5·00 |
| 5 வைக்கோல் கட்டுகள் சப்ளை செய்தல் .. .. .. | 100·00 |
| 6 மாட்டுத் தீவனம், பருத்தி விதை, கடலைப்புண் ணாக்கு, தவிடு (நெல் தவிடு), உப்பு முதலியன சப்ளை செய்தல். | 100·00 |
| 7 சுண்ணும்புத்தூள் சப்ளை செய்தல் .. .. .. | 5·00 |
| 8 பாரங்கள், பதிவேடுகள், நோட்டீஸ்கள் அச்சடித்தல் .. | 150·00 |
| 9 பாட்டில்கள் சப்ளை செய்தல் .. .. .. .. | 10·00 |
| 10 டிராக்டருக்கு ஆயில் வகையறுக்கள் சப்ளை செய்தல் .. | 25·00 |
| 11 கன்ஸர்வன்சி பெரிய தண்ணீர் வண்டிகள் பழுது பார்க்க. | 25·00 |
| 12 பொதுப்பணி, தண்ணீர் விநியோகப் பிரிவிற்குத் தேவையான சாமான்கள் சப்ளை செய்தல். | 50·00 |
| 13 நகரமைப்புப் பிரிவிற்குத் தேவையான சாமான்கள் சப்ளை செய்தல். | 50·00 |

சண்முகம், பி. ஏ,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தென்காசி, 20—1—1972.

(த. 18)

## ஏல விளம்பரம்

### ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சி மாவட்டம் கரூர் வட்டம் தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழே குறிப்பிட்ட சந்தைகள், பரிசல் துறைகள், 1972-73-ஆம் ஆண்டிற்கு வரி வசூல் செய்யும் பாத்தியதையை 23—2—1972-ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்குத் தாந்தோணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களாலாவது அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலாவது பகிரங்கமாக ஏலம் விடப் படும். ஏல நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் நேரிலாவது அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

| சந்தைகளின் பெயர் | கட்ட வேண்டிய கட்டுத் தொகை. |
|---|---|
| 1 உப்பிடமங்கலம் கால்நடை, சில்லரை வாரச் சந்தை .. | 1,000 |
| 2 வெள்ளியணை வாரச் சந்தை .. .. .. .. .. | 200 |

| பரிசல் துறைகள் | |
|---|---|
| 1 கோயம்பள்ளி பரிசல் துறை .. .. .. .. | 25 |
| 2 புலியூர் பரிசல் துறை .. .. .. .. .. | 25 |

எஸ். நரசிம்மன்,
ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி.

வி. சி. கதிர்வேலு,
பெருந்தலைவர்,
ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி.

(த.7)

## தேனி-அல்லிநகரம் நகராட்சி
### (மதுரை மாவட்டம்.)

1972 ஏப்ரல் முதல் 1973 மார்ச்சு முடிய ஓராண்டுக் காலத்திற்கு தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குக் கீழ்க்கண்ட இனங்கள் விநியோகம் செய்ய உரிய ஒப்பந்தம் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4—00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) சுண்ணும்புத்தூள் விநியோகம் செய்தல்.
(2) நகராட்சி பொதுச் சுகாதார, சாக்கடை மற்றும் கக்கூஸ் வண்டி களுக்கு மாடுகள் வாடகைக்கு விநியோகம் செய்தல்.
(3) எழுது பொருள்கள் விநியோகம் செய்தல்.
(4) வண்டி மற்றும் வாகனுதி வில்லைகள் விநியோகம் செய்தல்.

நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கா. முகமது இப்ராஹிம், பி. ஏ.,
தனி அலுவலர்.

தேனி,
17—1—1972.

(த.33)

## கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர் கோவை நகராட்சி, என்று விலாசமிட்டு அனுப்பிவைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—72-ஆம் தேதி மாலை 3—30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் திறக்கப் படும். இவ்வேலைகளுக்கான நிபந்தனைகள், ஷெட்யூல் பாரங்கள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்திப் பொதுப்பணிப் பொறியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | பட்டியல் தொகை. | கட்டுத் தொகை. | ஷெட்யூல் பாரத்தின் விலை. | முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | |
| 1 கோவை ஆர். எஸ். புரத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 4 அறைகள் கொண்ட தற்காலிகக் கட்டடம் கட்டுதல். | 35,000 | 875 | 10·35 | 3 மாதங்கள் |
| 2 ஆர். எஸ். புரத்தில் உள்ள இடுகாடு மைதானத்தைச் சுற்றிலும் மதிற் சுவர் கட்டுதல். | 39,890 | 998 | 5·18 | 3 மாதங்கள். |

ஆணையர்

(த.5)

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கோடிக்கரையில் ஒரு ஆய்வாளர் மாளிகை கட்டுதல்

பார்வை—இவ்வலுவலக எண். 15083/71/வ3/8—12—1971

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 24—2—72 அன்று மாலை 3-00 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 23—2—1972 அன்று மாலை 5-00 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் எவ்வித மாறுதலும் இல்லை.

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 20)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்,
### அண்ணாசாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில் நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2, அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு, மந்தவெளி பேருந்து நிலையத்திலுள்ள இரண்டாவது நெம்பர் ஸ்டால் குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், போக்குவரத்து இல்லத்தில், நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் 21—2—1972, 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும் இந்த 2 நெம்பர் ஸ்டாலில், வியாபாரம் நடத்தப்படுவது "பலவகைப் பொருள் விற்றல்" காபி, டீ, தவிர (General Merchants) ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம் ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 21—2—1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

மானேஜிங் டைரக்டர்.

(த. 22)

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—வடார்க்காடு மாவட்டம், செங்கத்தில் அரசினர் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 29—2—1972வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 29—2—1972 மாலை 3·00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 11—2—1972 முதல் 25—2—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதுமில்லை.

கே. எஸ். இராமசுவாமி,

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கற்பட்டு—வடார்க்காடு
பெருவட்டம், வேலூர்.

(த. 23)

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடார்க்காடு மாவட்டம் வாலாஜா பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 24—2—1972வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 24—2—1972 மாலை 3 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் பட்டு, அதே நாள் மாலை 3-15 மணியளவில் அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 9—2—1972 முதல் 22—2—1972வரை. அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதும் இல்லை.

கே. எஸ். இராமசுவாமி,

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கற்பட்டு—வடார்க்காடு
பெருவட்டம், வேலூர்.

(த. 24)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால்) வாரியம் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசின் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர். பி.டி.ராஜன், ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 29—2—1972 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3·30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | .. .. .. | கோவில்பட்டி குடிநீர்த்திட்டம்—முதல்நிலை—நீர்கொணரும் குழாய்ப்போக்கு—450 மி.மீ. விட்டமுள்ள எல்.எ. பிரிவு வார்ப்பிரும்புக் குழாய்களை 29840 மீட்டரிலிருந்து 35875 மீட்டர்வரை பதித்தலும் இணைத்தலும். |
| ஒப்பந்த வகை | .. .. .. | மொத்தத் தொகை. |
| முன் வைப்புத் தொகை | .. .. | ரூ. 2,030 (ரூபாய் இரண்டாயிரத்து முப்பது மட்டும்). |

(இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் எதாவது ஒரு வடிவில் கோவில் பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கபட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு. .. எட்டு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை .. ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட.)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 25—2—1972 வெள்ளிக் கிழமை மாலை 5 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை—2,
22—1—1972.

(த. 25)

## ஒப்பந்தப் புள்ளி

சென்னை மாவட்டத்தில் சர்வே எல்லைப் பிரிப்புக் கற்கள் வழங்குவதற்காக புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது பற்றிய அறிவிப்பு.

சென்னை மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலும் உள்ள டிவிஷன்களிலும் கிராமங்களிலும், நில உரிமை ஆவணங்களைப் பராமரிக்கவும், முறையான சர்வேக்காகவும், ஒப்பந்தத்தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள வரை அளவுகளின்படி எல்லைக் கற்களை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர், சர்வே, நில ஆவணங்கள், சென்னை–14 மற்றும் சென்னைக் கலெக்டரின் தனி உதவியாளர் (சர்வே) அவர்களாலும் ஆணைப்படி கோரப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறைகளின் மேலே "சென்னை மாவட்டத்தில் சர்வே எல்லைப் பிரிப்பு கற்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள்" என்று குறிப்பிடப்பட்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு முகவரி இடப்பட்டு, திரு. எஸ். முகம்மது மூசா, எம்.ஏ., துணை இயக்குநர், சர்வே நில ஆவணங்கள் மற்றும் சென்னைக் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (சர்வே) சென்னை–14 அவர்களிடம் தரப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 1972 மார்ச்சு 9 மாலை 4.00 மணிக்குள் வந்து சேரவேண்டும். அவை அதே நாளில் மாலை 4.00 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில், சர்வே நில ஆவணங்கள் அலுவலகம், எண். 4, பாலாஜி நகர் முதல் தெரு, ராயப்பேட்டை, சென்னை–14–ல் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) கட்டுத் தொகை அரசுக் கருவூலத்தில் கட்டி செலானை ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து அனுப்ப வேண்டும். ஏற்கப் பெறாத மற்ற ஒப்பந்தப்புள்ளி தாரரின் கட்டுத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதும் திருப்பித் தரப்படும். ஒப்பந்தப்புள்ளி ஏற்கப் பெற்றவர் தமது செலவில் ஒப்பந்தத்தை எழுதி முடிக்க வேண்டும். கட்டுத் தொகை ரூ. 500 ஒப்பந்த நிறைவேற்றத்துக்கு ஜாமீன் தொகையாக வைக்கப்படும். யாது காரணம் பற்றியோ, நிறைவேற்றித்தரத் தயங்கினாலோ அல்லது ஒப்பந்த நிபந்தனைப்படி கற்களைத் தரத் தவறினாலோ அவர்களுடைய கட்டுத் தொகை அரசாங்கம் மேற்கொண்டுவிடும். அத்துடன் அரசுக்கு ஏற்பட்ட மொத்த நட்டத்தில் எஞ்சிய பகுதி அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிதாரர் ஒவ்வொருவரும் ஒப்பந்தப்புள்ளியுடன் சொத்துப் பற்றி, கிராம அதிகாரியால் அல்லது நகராட்சி உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர் போன்ற பொறுப்பானவர்களால் தரப்பட்ட சொத்துச் சான்றிதழை இணைக்க வேண்டும். அத்துடன் வருமானவரி விற்பனை வரி இளியரன்ஸ் சான்றிதழ்கள் வைக்கப்பட வேண்டும். அறிவிப்பில் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யாத ஒப்பந்தப் புள்ளிகள் சில தகாதவையாகக் கருதப்பட்டுத் தள்ளப்படும்.

முந்திய கட்டுத் தொகைகளோ அல்லது வேறு பிராந்தியங்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளோ இதற்காக கணக்கில் கொள்ளப்படாது. ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக ஒரு மாதம் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு எப்போது வேண்டுமானாலும் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட சென்னைக் கலெக்டரின் தனி உதவியாளர் (சர்வே) மற்றும் உதவி இயக்குநர், சர்வே நில ஆவணங்கள், சென்னை–14 அவர்களுக்கு உரிமை உண்டு. ஒப்பந்தத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்திலிருந்து விடுபட அனுமதியிராது. ஒப்பந்தக்காரர் அதற்குப்பின் ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ள விரும்பினால் எழுத்து மூலமாக ஒப்பந்தத்திலிருந்து ஒரு மாத முன்னறிவிப்பிற்குப் பின்பு விடுபடலாம். ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியிருந்தால கட்டுத் தொகையை முழுதுமாகவோ அல்லது பகுதியாகவோ மேற்கொண்டு விடுவதற்கு அரசுக்கு உரிமை உண்டு. நில சர்வே ஆவணங்கள் உதவி இயக்குநர், சென்னை–14 மற்றும் சென்னை கலெக்டரின் தனி உதவியாளர் அவர்களுடைய முழு திருப்திக்கு ஏற்ற வண்ணம் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றிய பின்பே கட்டுத் தொகைப் பணம் திருப்பித் தரப்படும்.

கற்கள் நல்ல கருங்கற்களாய் இருக்கவேண்டும். வட்ட தாசில்தார்களிடமிருந்து அல்லது சர்வே நில ஆவணங்கள் இன்ஸ்பெக்டர்களிடமிருந்து தேவைக் குறிப்பு வருவதை ஒட்டி ஒரு மாத காலத்திற்குள், அதில் குறிப்பிட்டுள்ள அளவு கற்களை ஒப்பந்தக்காரர்கள் வழங்க வேண்டும். ஒப்பந்தக்காரர், முதலில் வட்ட தலைமைச் சர்வேயர் ஒவ்வொரு மாதமும் 20–ம் தேதி தெரிவிக்கும் வண்ணம் போதுமான கற்களைக் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். நகரத்துணை சர்வேயர்கள் கோருகின்றபடி எல்லா கற்களிலும் அம்புக் குறியிட்டுக் குறிப்பிட்ட கல்வகைகளுக்கு எளிய வகையில் துளையும் இட்டு வேலை இடத்தில் கற்களை வழங்க வேண்டியது ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பு. சம்பந்தப்பட்ட வட்டத் தலைமைச் சர்வேயரால் கற்கள் தேர்வு செய்யப்படும். ஆய்வின்போது குறிப்பிட்ட வரையறைப்படி இல்லாத தரம் குறைந்ததுமான கற்கள் நிராகரிக்கப்படும். வேலை இடத்தில் வழங்கப் பெறும் கற்களுக்கு, ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதத்தில் பணத்தை ஒப்பந்தக்காரர் அந்த இடத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். அல்லது சம்பந்தப்பட்ட தாசில்தார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எல்லா வகை கற்களுக்குமான விலைப்புள்ளிகள் கூட்டாகப் பரிசீலிக்கப்படும், மாவட்டம் முழுவதற்குமாகத் தேவைப்படும் கற்கள்வகைகளின் மொத்த மதிப்பு, ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பதற்கான அடிப்படையாக அமையும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு முன்பணம் எதுவும் தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளியில் எந்த விலை விகிதத்தில் கற்களை வழங்கத் தயார் என்பதைக் குறிப்பிட வேண்டும். வண்டிச் செலவும் அதிலேயே அடங்கி விடவேண்டும். மாவட்டம் முழுவதற்கும் ஒரே சீரான விலை விகிதம் இருக்க வேண்டும்.

எந்தக்காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ நிராகரிக்கவோ, உதவி இயக்குனர், சர்வே, நில ஆவணங்கள் மற்றும் சென்னைக் கலெக்டரின் தனி உதவியாளர் அவர்களுக்கு உரிமை உண்டு. மாவட்டத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களை எடுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு. ஒப்பந்தம் சம்பந்தமாக கருத்து வேறுபாடு ஏற்படுமானால், ஒப்பந்தக்காரர் சென்னைக் கலெக்டரின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியவராவார்.

கற்கள் பற்றிய விவரம் :—

| | கற்கள் வகை. | மெட்ரிக் முறை அளவுகள். | | |
|---|---|---|---|---|
| 1 | திடோட லேட் கற்கள் | 90 செ.மீ. | 22.5 செ.மீ. | 22.5 செ.மீ. |
| 2 | தியோட லேட் கற்கள் | 45 செ.மீ. | 20.0 செ.மீ. | 20.0 செ.மீ. |
| 3 | பீல்டு கற்கள் .. | 60 செ.மீ. | 15.0 செ.மீ. | 15.0 செ.மீ. |
| 4 | செயின் சர்வே கற்கள் | 30 செ.மீ. | 15.0 செ.மீ. | 15.0 செ.மீ. |

(த. 30)

எஸ். முகமது மூசா,
துணை இயக்குநர்,
சர்வே நில ஆவணங்கள்.

## ஏல விற்பனை

தஞ்சாவூர் மாவட்டம், கீவளூர் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எம்.எஸ்.ஒய். 7786, 29–2–72 அன்று பிற்பகல் 3 மணிக்கு தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி அலுவலரால் (2) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்கண்ட ஜீப்பைப் பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(த. 15)

ஜி. சேதுராமன்,
மாவட்ட வளர்ச்சி அலுவலர் (2)
பனகல் கட்டடம், தஞ்சாவூர்.

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மதுரை டவுன் செங்குளம் உள்வாயில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய சைவ உணவு விடுதியை ( Canteen ) நடத்துவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed tenders) மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் 11–3–1972 மாலை 2 மணி முடிய ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி அடங்கியிருக்கும் உறையின் மீது "மதுரை நீதிமன்றக் கட்டடத்தில் சைவ உணவு விடுதியை 1–4–1972 முதல் 31–3–1973 முடிய நடத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று தவறாமல் குறிப்பிடவேண்டும். டி ஒப்பந்தங்கள் 11–3–1972 மாலை 3 மணி அளவில் மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் இதர நிபந்தனைகள் முதலிய விவரங்களை, மதுரை, மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. கோபிநாத்,
மதுரை மாவட்ட நீதிபதி.

மதுரை மாவட்ட நீதிமன்றம்,
மதுரை–20, 11–1–1972.

(த. 16)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 23—2—1972 அன்று பிற்பகல் 3·30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்

| எண்ணும் வேலையின் பெயரும் | கட்டுத் தொகை | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம் |
|---|---|---|
| மதுரை மாவட்டம் | | |
| 1 தனிச்சியம்—அலங்கா நல்லூர்சாலை (சிமெண்ட் தளம் போடுதல்) அபிவிருத்திவேலை கி.மீ. 3/0—6/0. | ரூ 7,000 | கோட்டப் பொறியாளர், (நெ. கி. ப.) மதுரை-2. |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை இராமப் பொறியியல் பணித் துறை) மதுரை-2 விலாசத்திலிருந்து 14—2—1972 முதல் 22—2—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல்நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இதுதவிர 10 வருட தற்காப்பு கட்டுத் தொகை அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு கட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது நிர்வ பேங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அல்லது அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ. கி. ப. திருச்சிராப்பள்ளி-1)

(த. 27)

---

## பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், நிர்வாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2, அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு, பெரம்பூர் பேருந்து நிலையத்திலுள்ள கடை நெம்பர் 3, குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22—2—1972 மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அந்தக் கடையில் "துணிவகை ரகங்கள் விற்பது" வியாபாரம் நடத்தப்பட வேண்டும். ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியன, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 22—2—1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

மானேஜிங் டைரக்டர்

(த. 28)

---

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தனி மேற்பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் அவர்களால் 24—2—1972 மாலை 4-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. .. | தஞ்சாவூரில் திட்ட விடுதி கட்டுதல். |
| ஒப்பந்த வகை .. .. .. | எல்.எஸ் |
| வேலைக்கான பிணைப்புத் தொகை .. | 2,200. |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை .. | ரூ.20. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில் பி டபிள்யூ III ஒ.ஆர். என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்

விற்பனை வரி .. .. .. ரூ 0·70

விற்பனை வரியை அரசினர் கருவூலத்தில் XII Sales Tax b. receipts Under State Sales Tax Act—General Sales Tax என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி 10—2—1972 முதல்

மற்ற விதி முறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அ. சேஷாத்திரி, பி.இ.
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 29)

---

## சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1—3—1972 தேதி பிற்பகல் 3·00 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் ( By Registered Post Ack. due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல்......................க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியோ அந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளி" என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 2—3—1972 முற்பகல் 10-30 மணிக்குள் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவு, இதர பொருட்களின் விவரக் குறிப்புகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

பி. குப்புசுவாமி,
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
"குறளகம்," 8வது மாடி,
சென்னை-1.

22—12—1971.

(த. 31)

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் தமிழக பொதுப் பணித்துறை, தஞ்சாவூர் மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 24—2—1972 மாலை 3·00மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான "மூடி. முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள்" பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. | தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், சித்தாதிக்காடு கிராமத் தருகில் அம்புலியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல். |
| ஒப்பந்த வகை .. .. .. | K-2. |
| வைப்புத் தொகை .. .. (கருவூலச் செலான் உருவில்). | ரூ. 4,800. |
| ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. .. | ரூ. 20. |

(அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை III மற்றைய தொகை என்னும் தலைப்பில் செயற்பொறியாளர், பட்டுக்கோட்டை அவர்களின் கணக்கின் பேரில் கட்ட வேண்டும்).

| | |
|---|---|
| 5 விற்பனை வரி .. .. .. | 0·70. |

(அரசினர் கருவூலங்களின் XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு —மாநில விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனைவரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.)

| | |
|---|---|
| 6 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். | 10—2—1972. |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 26)

## தூத்துக்குடி நகராட்சி

இந்நகர் வி.இ. ரோட்டிலிருந்து பங்களா தெரு வரையில் உள்ள தெற்கு சம்பந்தமூர்த்தித் தெரு ரோட்டிற்கு தார்ரோடு போட வேண்டிய கல்; சால் முதலிய சாமான்கள் வழங்கும் வேலைக்கு மூடி.முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 28—2—1972 அன்று மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வேலைக்கு முன் வைப்புத் தொகை ரூ. 86.

கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.,பி.இ.,
பொறியர்.

தூத்துக்குடி,
20—1—1972.

(த. 12)

## மின்சார வாரியம்

அறிக்கை 9/71-72.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பைக்காரா திட்டத்திற்கு தேவையான 20 ஏடுகளையும் தாள்களையும் அச்சடித்துக் கொடுப்பதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 21—2—1972-ஆம் நாள் பிற்பகல் 4·00மணியளவில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன.

விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் பிரதிகளைப் பெற ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) வரிகள் உட்பட கட்டணத்தை நேரிலோ அல்லது பண விடைத்தாள்கள் மூலமாகவோ தலைமைக் கணக்காயர், செலவினம் பகுதி மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பைக்காரா மின்திட்டம், டாடாபாத், கோயம்புத்தூர்-12 அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் தவறிவிட நேரிட்டால் அதற்கு எக்காரணம் முன்னிட்டும் இவ்வினாகா பொறுப்பு ஆகாது.

காலம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எவ்வித காரணமும் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளிகளைப் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமை உண்டு

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின்திட்டம்,
டாடாபாத், கோயம்புத்தூர்-12

(த. 13)

## நில நீர் இயக்குநர் அலுவலகம்

எண் 13/XVII /MI /72/

வேலையின் பெயர்—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்கு "ஹைட்ரோலாஜிகல்" தளவாடங்கள் அளித்தல் (Hydrological equipments)

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேலே குறிப்பிட்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்கண்ட அலுவலகத்தில், 8—3—1972 அன்று மாலை 3 மணிக்குள், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால் மேற்கண்ட அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு அச்சமயம், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1 முன்வைப்புத் தொகை .. | ரூ. 6,500. |
| 2 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ... | ரூ. 10. |
| விற்பனை வரி .. .. .. | ரூ. 0·40. |
| 3 வேலையை முடிக்க வேண்டிய காலம். | 4 மாதங்கள். |
| 4 ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம். | 20—1—1972 முதல் 3—3—1972 வரை. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பி அளிக்க இயலாதது) அரசாங்க கருவூலக (Treasury) அல்லது ரிசர்வ் வங்கியில் (Reserve Bank) "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பிட்டு, நிருவாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித்தொகையானது, அதே சலானில் "XII Sales Tax b. receipts under State Sales Tax Act. General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்க கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய சலானை அளித்த பின்புதான், ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநாதம்,
இயக்குநர், நிலநீர்.

19 ஏ. தண்டபாணிதெரு,
சென்னை-17

(த. 32)

## மீனவர் பயிற்சி நிலையம், குளச்சல்

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீனவர் பயிற்சி நிலையத்தில், நவீன மீன்பிடி பயிற்சிக்கான (10 மாத காலம்) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பயிற்சிக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, பயிற்சிகாலத்தில் மாதம் ரூ. 50 வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பங்கள் 1—3—1972 மாலை 5 மணிவரை மீன்துறை உதவி இயக்குநர் மீனவர் பயிற்சி நிலையம், குளச்சல் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்கள் மேற்கூறிய உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

ச. சே. ஆரோக்கியசாமி,
மீன்துறை துணை இயக்குநர்,
தூத்துக்குடி.

(த. 11)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

21 வகையான புத்தகங்களையும் பாரங்களையும் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால், மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செய்தித்தாளில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ சீப் அக்கவுண்ட்ஸ் எக்ஸ்பெண்டிசர்/திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிக்கேஷன் எண்ணைக் குறிப்பிட்டும், ஒப்பந்தப் பாரப்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. பண அஞ்சல்கள் முடிவுத்தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்பு வரைதான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சலில் தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின்வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிக்கேஷன் எண் ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்பவேண்டும். மேற்படி ஒப்பந்தப் பாரங்கள் பிறருக்கு மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் பாரங்கள்1—2—1972 லிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ள வரை குறைந்த விலை ஒப்பதந்தத்தையோ அல்லது வேறு ஒப்பந்தத்தையோ அனுமதிக்கத் தான்வேண்டும் என்று கட்டுப்படுத்தாது என்பதையும் அறிவிக்கப்படுகிறது.

**மேற்பார்வை மின்பொறியாளர்,**

திருநெல்வேலி மின் திட்டம், திருநெல்வேலி.

(த. 37)

## ஏல விற்பனை

### நெடுஞ்சாலை கிராமப் பொறியல் பணித்துறை

**எண்: 13816/71, பி-3, நாள் 24—1—1972**

இவ்விலாகாவிற்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள உபயோகத்திற்கு லாயக்கற்ற உருளையை (ரோலர்) 1972-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி புதன் கிழமை பகல் 11 மணிக்குப் புதுக்கோட்டை (நெடுஞ்சாலை) போக்குவரத்து மற்றும் இயந்திர உதவிப் பொறியாளர் அவர்களால் புதுக்கோட்டை அரசினர் நெடுஞ்சாலைத் தொழிற் பட்டறையில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

2. அந்த உருளையை (ரோலர்) தொழிற் பட்டறையில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையிடலாம்.

1. பி. எஸ். எப் உருளை (ரோலர்) (எச்.டி. 21·709)

3. ஏலம் கேட்பவர்கள் வைப்புத் தொகை (டிபாசிட்) ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) உதவிப் பொறியாளரிடம் ஏலம் ஆரம்பிக்கும் முன் கட்ட வேண்டும், இத் தொகை ஏல முடிவில் திரும்பக் கொடுக்கப்படும்.

4. ஏலம் எடுத்தவர் முடிவான ஏலத்தொகையில் 25 சதவிகிதம் (இருபத்தைந்து சதவிகிதம்) ஏலம் விடப்பட்டவுடன் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையும் விற்பனை வரியும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டவுடன் உருளையைத் தன்வசம் எடுத்துக்கொள்ளும்போது செலுத்த வேண்டும்.

**கோட்டப் பொறியாளர்,**

(நெ.கி.ப.) புதுக்கோட்டை.

(த. 38)

## மறுஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை மாவட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23—2—1972 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலை விவரமும். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தநமூனா கிடைக்குமிடம். |
|---|---|---|
| | ரூ. | |
| 1 அம்மாபாளையம் புதுப்பாளையம் சாலைக்கு கி.மீ. 0·0 முதல் 5·0 வரை கருங்கல் பரப்பித் தார் போடுதல். | 2,510 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை. |
| 2 அம்மாபாளையம் புதுப்பாளையம் சாலைக்கு கி.மீ. 5·0 முதல் 11 வரை கருங்கல் பரப்பித் தார் போடுதல். | 3,845 | ௸ |

ஒப்பந்தங்கள் 23—2—1972 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25·88 செலுத்தி 10—2—1972 முதல் 22—2—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்க அலுவலகத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ் வங்கி"யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும். உறுதிப் பத்திரங்கள் அரசினரால் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் தான் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**ஜி. ஜார்ஜ் ஜேகப்,**

மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.).

சென்னை—25,
25—1—1972.

(த. 39)

## ஏல விற்பனை

### கோவை நகராட்சி

நகர சபையிலுள்ள துலைக் கிணறுகளில் பொறுக்க சுமார் 25 பம்பு செட்டுகள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 2—3—1972 மாலை 3 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 3·30 மணிக்கு அவைகள் பொறியாளர்களால் திறக்கப்படும்.

நிபந்தனைகளும் மற்ற விவரங்களும் ரூ. 2·08 நகர சபைக் கஜானாவில் செலுத்திப் பொறியாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 9)

**ஆணையர்,**

## ஒப்பந்தப் புள்ளி

### குற்றால நகரியம்

மூடி முத்திரையிட்டு ஒட்டப்பட்ட மேலுறையுடன் கூடிய அதற்கான செட்யூல்டு ஒப்பந்தங்கள் 28-2-1972-ஆம் தேதி மாலை 4 மணிவரையிலும் நிருவாக அதிகாரியால் கீழ்க்கண்ட ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே பெற்றுக்கொள்ளப்படும். அச் செட்யூல்டு ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் அதற்கான குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகையை நகரிய கருவூலத்தில் செலுத்திய அத்தாட்சி இணைக்கப்பட்டிருக்க வேண்டும். நகரியக் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தம் கொடுத்தவர்கள் வேலை உத்தரவு கிடைத்ததும் குறிப்பிட்ட கெடுவுக்குள் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுப்பதுடன் அந்தந்த வேலைக்கான காப்புத்தொகையையும் செலுத்தி விடவேண்டும்.

ஒப்பந்த செட்யூல்டுகள் நகரிய அலுவலகத்தில் 28—2—1972-ஆம் தேதி மாலை 2 மணி வரையிலும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ரூ. 5 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்கள் நகரிய அலுவலகத்தில் நகரியப் பொறியரிடம் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலை பெயர் விவரம். | மதிப்பீடு. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 தென்காசி சாலை நக்கு விடுதியின் பக்கம் ஒரு உணவு விடுதி கட்டுதல். | 24,800 | 540 |
| 2. லெட்சுமி புரம் கிழக்குத் தெருவுக்கு தார் ரோடு போடுதல். | 5,500 | 540 |
| 3 லெட்சுமிபுரம் கிழக்குத் தெருவுக்கு தடுப்புச் சுவர் கட்டும் வேலை. | 6,000 | 150 |

சா. நா. பழனிச்சாமி,
நிருவாக அதிகாரி.

(த.4)

---

## ஏல விற்பனை

### நாகர்கோவில் நகராட்சி

இந்த நகராட்சி பண்டகசாலையில் சேமித்துள்ள உபயோகமற்ற கீழ்க்கண்ட பொருள்கள் 28—2—1972-ஆம் தேதி காலை 10 மணிக்கு, கிருஷ்ணன் கோவில், நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில், ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஏலத்தில் விடப்படும். ஏலக் கட்டுப்பாடுகளை நகராட்சி அலுவலகத்தில் நேரிலோ, மனுச் செய்தோ, பெற்றுக்கொள்ளலாம்.

1. காலி சிமெண்ட் சாக்குகள் .. .. .. 17,327
2. காலி தார் டிரம்கள் .. .. .. 189
3. காலி பிளீச்சிங் பவுடர் டிரம்கள் .. .. 56
4. ஸ்டீல் டேங் (500 காலன் கொள்ளளவு) .. 2

மற்றும் பித்தளை, செம்பு, இரும்பு—தகடுகள் விதியோகமற்ற உபரி பொருள்கள்.

இதற்கு விரிவான விபரங்கள் வேண்டுபவர் நகராட்சி பொறியர் அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

பி. தங்கவேலு,

நகராட்சி அலுவலகம்,
நாகர்கோவில்.

ஆணையர்.

(த.3)

---

## ஒப்பந்தப் புள்ளி

### புளியங்குடி நகராட்சி

அடியிற்கண்ட வேலைக்கான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தம் 21—2—72-ஆம் நாள் மாலை 4-30 மணி வரை புளியங்குடி நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்தங்கள் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்றும் இது சம்பந்தமான தகவல்கள் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலை விவரம். | மதிப்பீடுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| 1. நகராட்சி தினசரி சந்தையும் கடைகளும் கட்ட. | 98,000 | 2,450 |

நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி, 28—1—1972.

(த.2)

கே. கே. அப்துல்சுக்கூர்,
ஆணையர்.

---

## ஒப்பந்தப் புள்ளி

### விருத்தாசலம் நகராட்சி

1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள கால அளவிற்கு விருத்தாசலம் நகராட்சிக்குத் தேவையான கீழ்க்காணும் பொருள்களை சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி தனி அதிகாரிகள் அவர்களால் 6—3—1972-ஆம் நாள் திங்கட் கிழமை மாலை 4 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்படும். இது சம்பந்தமான முழு விவரங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வழங்க வேண்டிய பொருள்கள் | | செலுத்த வேண்டிய கட்டுத் தொகை. | |
|---|---|---|---|
| (1) | (2) | ரூ. | |
| 1. ஸ்டேஷனரி பொருள்கள் .. .. .. .. | | 200 | 00 |
| 2. மாட்டுத்தீவனங்கள் .. .. .. | | 275 | 00 |
| 3. சுண்ணாம்பு நீர் .. .. .. .. | | 25 | 00 |
| 4. மின்சார சாமான்கள் .. .. .. .. | | 25 | 00 |
| 5. குடி நீர் சப்ளை சாமான்கள் .. .. .. | | 100 | 00 |
| 6. அச்சு வைப்பிடும் வேலைகள் .. .. .. | | 25 | 00 |
| 7. வாகனங்கள் விநியோகம் .. .. .. .. | | 20 | 00 |
| 8. பெட்ரோமாக்ஸ் விளக்குகள் (200 பயர் காண்டில் கள் வாடகைக்கு) | | 50 | 00 |
| 9. பொதுச் சுகாதாரத்திற்கு தேவையான சாமான்கள். | | 70 | 00 |

வி. கணேசன்,

நகராட்சி அலுவலகம்,
29—1—1972.

தனி அதிகாரி

(த.1)

---

## ஏல விற்பனை

### வனத்துறை

21—2—1972-ஆம் தேதி காலை 10·00 மணியிலிருந்து மேட்டுப்பாளையம் அரசினர் மரக்கிடங்கில், மத்திய கோவை மாவட்ட வன அலுவலரால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலராலோ கீழ்க்காணும் தடி மரத்துண்டுகள் பொது ஏலத்தில் விடப்படும்.

1. தேக்கு : 532—266·716 கன மீட்டர்.
2. ஈட்டி : 206—105·351 கன மீட்டர்.
3. கருமருது : 12—12·105 கன மீட்டர்.
4. வேங்கை : 26—12·561 கன மீட்டர்.
5. அயினி : 7—9·303. கன மீட்டர்.
6. அல்பிசு : 32—12·066 கன மீட்டர்.
7. நீர்க் கடம்பை : 4—1·715 கன மீட்டர்.

மற்ற விவரங்களுக்கு, மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை, கோவை-18 அல்லது வனச்சரக அலுவலகர், அரசினர் மரக்கிடங்கு மேட்டுப்பாளையத்திற்கோ, தொடர்பு கொள்ளவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர்,
மத்திய கோவை.

(த. 35)



தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள் தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, உ. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

## ஏல விற்பனை

மதுரை கலெக்டர் அலுவலகம், கள்ளர் சீரமைப்புப் பிரிவைச் சேர்ந்த எம்.டி.யு. 6868, 15-63-எச்.பி. 1958 மாடல் ஜீப் 23-7-1972 தேதி மாலை 3 மணிக்கு மதுரை கலெக்டர் அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் கேட்பவர்கள் மேற்கொண்டு தகவல்களைப் பெறுவதற்கு மதுரை கள்ளர் சீரமைப்புத் தனித்துணைக் கலெக்டரிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. மகாலிங்கம்,
தனித்துணைக் கலெக்டர்,
கள்ளர் சீரமைப்பு,

மதுரை-20.
28-1-1972

(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி

### பொறியியல் பணித்துறை

**வேலையின் பெயர்:**—அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள இருதயநோய் சிகிச்சைப் பகுதியில் ஏழாவது தளத்தின் முன் பகுதியில் அறுவைச் சிகிச்சை அரங்கு அமைத்தல்.

தமிழக அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் 23—2—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். 23—2—1972 மாலை 3-15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கை வட்டம், அவர்களால் ஒப்பந்தப் பத்திரங்கள் திறக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

2. முன் வைப்புத் தொகை—ரூ. 4,000.

3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 20 + விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதம்.

4. முடிக்க வேண்டிய காலம்—3 மாதங்கள்.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் (மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், சென்னை, செங்கை வட்டம்) கிடைக்கும் காலம் 15—2—1972 முதல் 23—2—1972 வரை.

6. ஒப்பந்தப் பத்திரங்கள் பெறப்படும் கடைசி நாள்—23—2—1972 மாலை 3-00 மணி வரை

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை "P.W.D. Remittances III—Other Remittances" என்ற தலைப்பில் கோட்டப் பொறியாளர் கட்டடக் கோட்டம்-2, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலங்களிலோ(அ) ரிசர்வ் வங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய விற்பனை வரி மேற்கண்ட சலானில் XII Sales Tax under the State Sales Tax Act-Gonl. Sales Tax என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலங்களிலோ, ரிசர்வ் வங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்கண்ட சலானைக் கொடுத்த பின்னர் வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ஒரு போதும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர் சென்னை, செங்கை வட்டம் அவர்கள் ஒப்பந்தப் பத்திரங்களை எவ்விதக் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கற்பட்டு வட்டம்.

த(. 97)


CHETTINAD BRAND

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :

**செட்டிநாடு சிமெண்ட்**
**கார்ப்பரேஷன் லிமிடெட்**

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256
பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி: 'CEMENT' போன்: 144.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

## நெடுஞ்சாலே கிராமப்பணித்துறை

சென்னே வட்டம், சென்னே-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலே), சென்னேவட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலேகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் கிண்டி,சென்னே-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23-2-1972 அன்று மாலே 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலேயின் விவரமும். | முன் வைப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1. திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலேயில் கி.மீ. 0·5 முதல் 1·5 வரையில் தார் சாலேயை அகலப் படுத்துதல். | 5,900 |
| 2. திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலேயில் கி.மீ 1·6 முதல் 2·6 வரையில் தார் சாலேயை அகலப் படுத்துதல். | 4,470 |
| 3. திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலேயில் கி.மீ. 4·0 முதல் 6·4 வரையில் தார் சாலேயை அகலப் படுத்துதல். | 2,100 |

ஒப்பந்தங்கள் 23–2–1972 அன்றே மாலே 3.15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனேப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர், சைதைஅவர்கள்அலுவலகத்தில் விற்பனே வரியுட்பட ஒவ்வொரு வேலேக்கும் ரூ. 25.88 கட்டி 16–2–1972 முதல் 22–2–1972வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளமுன்வைப்புத்தொகைகளேக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலே கிராமப்பணித்துறை), சைதை அதிகார எல்லேக் குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ""ரெவின்யூ டெபாசிட்" என்ற தலேப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலே கிராமப் பணித்துறை), சைதை பெயரில் செலுத்திச் செலுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணேத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினுல் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலேயும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனேக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

மேற்பார்வைப்பொறியாளர்,
(நெடுஞ்சாலே) சென்னே வட்டம்,

சென்னே-25, 31-1-1972.

(த.100)

## நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் துறை

## தேசிய நெடுஞ்சாலே வேலேகள் (மதுரை வட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலேக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளே மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலே), மதுரை, அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை–2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 23—2—1972 ம் தேதி (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3–30 மணிவரையில் (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3–35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண்ணும் வேலேயின் பெயரும். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| | ரூ. | |
| 1. மதுரை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ் சாலே 7 கி.மீ. 157–170 சாலேயை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 28,900 | கோட்டப் பொறியாளர் (தேசியநெடு நெடுஞ்சாலே), மதுரை–2. |
| 2. சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ் சாலே 7 கி.மீ. 278-6-345·2 சாலேயில் உள்ள வனேவுகளேச்சீராக்குதல். | 44,650 | கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலே திருச்சி கோட்டம் திருச்சி–2. |
| 3. சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ் சாலே 7 கி.மீ. 355–375 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 48,000 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனே வரி உட்பட ரூ. 20-70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம், (தேசிய நெடுஞ்சாலே), மதுரை–2, கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலே) திருச்சிக் கோட்டம், திருச்சி-2 என்ற விலாசத்திலிருந்து 11—2—1972 முதல் 22—2—1972 வரையிலான வேலே நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனே விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலே) அதிகார எல்லேக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலேப்பில் செலுத்தியதற்கான செலானே ஒப்பந்தப்புள்ளியுடன் இணேத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருடத்தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங் களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்ட்டு களும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளேச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணேத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலே)
மதுரை–2.

(த.101)

## வருவாய்த் துறை

கோவை சந்திப்பு ரயில் நிலேயம், வடகோவை ரயில் நிலேயம் இவை களில் அரசுக் கணக்கில் வரும் நெல், அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் சர்க்கரை மைலோ மற்றும் இதர தானியங்களே வடகோவையில் உள்ள அரசாங்கக் கிடங்கிற்கு கொண்டு செல்லுதல். மற்றும் அவைகளேக் கையாளுதல் முதலான வேலேகளே மேற்கொள்ள 1—4—1972 முதல் 31—3—1973-ஆம் தேதியுடன் முடிவாகும். 1972–73-ஆம் ஆண்டிற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளே அடியிற் கையொப்பமிட்டவரால் கோரப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்களே 6—3—1972-ஆம் தேதி திங்கட்கிழமை காலே 11 மணிக்குள் மாவட்ட ரெவின்யூ அதிகாரி அலுவலகத்தில் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். மற்ற தகவல்களே அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 6—3—1972-ஆம் தேதி திங்கட்கிழமை மாலே 3 மணிக்கு மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களால் திறக்கப்படும்.

மாவட்ட ரெவின்யூ அதிகாரி,
கோவை.

(த. 84)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித் துறை, காவிரி வளர்ச்சிப்பணி வட்டம் தஞ்சாவூர்

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தமிழ்நாடு பொதுப்பணித் துறை, காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 2-3-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க் கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

| பிரிவு எண்ணும், வேலையின் பெயர் விவரம். | பிணைப்புத் தொகை. | பத்திரங்களின் விலை. | விற்பனை வரி. |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ஏ. 60 கந்தப்பரிச்சனூர் வாய்க்காலையும் இதன் கிளை வாய்க்காலையும் அபிவிருத்தி செய்தல் :— | | | |
| 1. பி. 1. எல்லைக் கரை வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களையும் சீர்திருத்தம் செய்தல். | 1,150 | 10 | 0·35 |
| 2. பி. 2. சித்த மல்லி வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களான சி2, சி6 வாய்க்கால்களைச் சீர்திருத்தம் செய்தல். | 1,350 | 10 | 0·35 |
| 3. பி. 3. பலவாறு வாய்க்காலையும் இதன் கிளை வாய்க்கால்களான சி1, சி2, சி4, சி4ன் டி3, டி8, சி6, சி9 மற்றும் சி10 ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல். | 2,650 | 10 | 0·35 |
| 4. பி 12. நமன்குறிச்சி வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களான சி1, சி2, சி6, சி2ன் டி5 ஆகியவற்றைச் சீர்திருத்தம் செய்தல். | 1,350 | 10 | 0·35 |
| 5. பி 14. கையலூர் வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களான சி1,சி2,சி4 ஆகியவற்றைச் சீர்திருத்தம் செய்தல். | 1,020 | 10 | 0·35 |
| 6. ஏ. 60. கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 0·100 கிலோ மீட்டர் முதல் 3·060 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலை மதகுகள், வடிகால் மதகுகள், குழாய் மதகுகள் அமைத்தல். | 1,650 | 10 | 0·35 |
| 7. ஏ. 60. கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 3·060 கிலோ மீட்டர் முதல் 8·130 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலை மதகுகள், வடிகால் மதகுகள், குழாய் மதகுகள் அமைத்தல். | 1,100 | 10 | 0·35 |
| 8. ஏ. 60 கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 8·130 கிலோ மீட்டர் முதல் 10·400 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலை மதகுகள், வடிகால் குழாய் மதகுகள் அமைத்தல் . | 800 | 10 | 0·35 |
| 9. ஏ. 60. கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 10·400 கிலோ மீட்டர் முதல் 13·220 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலைமதகுகள், வடிகால் மதகுகள், குழாய் மதகுகள் அமைத்தல். | 1,000 | 10 | 0·35 |

விதிகள் :

1. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்—5-2-1972.

2. பிணைப்புப் பணம் (E.M..D) செயற்பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்ட வேண்டும்

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் பொதுப்பணித் துறை செலுத்துத் தொகைIII. மற்ற வரவினங்கள் என்னும் தலைப்பில் செயற் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் என்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் XII விற்பனை வரி, பி. வரவினங்கள் மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்த வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைப்பதற்கான விண்ணப்பம் 29-2-1972ஆம் தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின்நேர்முக உதவியாளர், காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அ. சேஷாத்ரி,
தனி மேற்பார்வைப்பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

(த.98)

## ஏல விளம்பரம்

## சேலம் நகராட்சி

1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 25-ஆம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11 மணிக்கு சேலம் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட கடைகளையும் பேருந்து நிலைய போஸ் மைதான சில்லரைக் கடைகளின் தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமையையும் அதனதனுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளகாலத்திற்கு குத்தகைக்கு வைத்துக் கொள்ள நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பலரறிய ஏலம் விடப்படும்.

| | குத்தகைக் காலம். |
|---|---|
| 1. (1) பேருந்து நிலைய வடபுறம், மேற்குப்புறம் எல்லைச் சுவற்றின் பின்புறம் கட்டப்பட்டுள்ள சிமெண்டு ஓட்டைக் கூரைக்கடைகள் 51.<br>(2) பேருந்து நிலைய எஸ்ஸோ பங்கிற்கும், வடபுறம் வேலியைச் சேர்ந்தாற் போல் 10 திறந்த வெளிக்கடைகள்.<br>(3) நகரப் பேருந்து நிலையத்தின் பயணிகள் நிற்கும் மனையின் கீழ்ப்புறமுள்ள திறந்த வெளிக்கடைகள் 4 ஆகியவற்றில் கடைகள் வைத்து வியாபாரம் செய்பவர்களிடமிருந்து தினசரிக் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | ஒப்படைக்கப்படும் நாள் முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு. |
| 2. சேலம் போஸ் மைதானத்தில் உள்புறம் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 21 கடைகளையும் (முன்புறம் 8 அடி வராந்தாவுடன் சேர்த்து) போஸ் மைதானத்தில் ஆங்காங்கே உள்ள தற்காலிக சிறு கடைகளையும், தள்ளு வண்டிகள், பேருந்துகள், வேன், வாடகை கார் ஆகியவற்றை நிறுத்துபவர்களிடமும் தினசரிக் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | ஒப்படைக்கப்படும் நாள் முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு. |
| 3. கிருஷ்ண ராஜேந்திரா தங்கல் மனையின் கீழ்ப்புறமுள்ள 5 (1, 2, 4, 5, 6) கடைகள். | 1-4-1972 முதல் 31-3-1975 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு. |

இதர விவரங்களுக்கு ஆணையரை அணுகவும்.

பெ. அரங்கசாமி,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம், சேலம்,
4-2-1972.

(த. 77)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.



# நமது கோரிக்கை

தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

# நமது கோரிக்கை

தமிழக முதல்வர்

டாக்டர் மு.கருணாநிதி

தமிழரசு

16—2—1972 இதழின்

இலவச இணைப்பு

# பதிப்புரை

கடந்த 22—1—1972 அன்று சட்ட மன்ற மேலவை, சட்டப் பேரவை இவைகளின் கூட்டுக் கூட்டத்தில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்தும், திருத்தங்கள் தந்தும் பல உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் ஆற்றிய உரைகளுக்குப் பின்னர் 31—1—1972-ல் தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள், காலையில் சட்டப் பேரவையில் ஒரு மணி நேரமும், மாலையில் சட்டமன்ற மேலவையில் ஒரு மணி நேரமும் ஆற்றிய பதிலுரைகளைத் தொகுத்து 'நமது கோரிக்கை' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளோம்.

எழுப்பப்பட்ட பல வாதங்களுக்கும் உரிய பதில்கள் அடங்கியுள்ள இச்சிறு நூல் வழக்கம்போல் 'தமிழரசு' இதழின் இணைப்பாக வழங்கப்படுகிறது.

சென்னை
10—2—1972

செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

# நமது கோரிக்கை

## சட்டப் பேரவையில் முதல்வர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ஆளுநர் பெருமகனார் அவர்கள் சட்டப் பேரவை, சட்ட மேலவைக் கூட்டுக் கூட்டத்திலே ஆற்றிய உரையினையொட்டி இந்த மாமன்றத்தில் இதுவரையிலும் நிறுவனக் காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட 49 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிவித்திருக்கிறார்கள்.

ஆளுநர் அவர்களுடைய உரையின் தொடக்கத்தில், ''நமது முப்படையினரின் வீரதீரத்தாலும், நமது பிரதம மந்திரி அவர்களின் ஒப்புவமையற்ற பதட்டமடையாத தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது'' என்று போரின் முடிவு குறித்துப் பொறுப்போடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.



ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிய பொழுது இதிலே நாட்டின் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் தமிழ் நாட்டு முதலமைச்சரையும் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் இப்படியெல்லாம் 'பர்சனலிட்டி கல்ட்' வளர்க்கப்படக்கூடாது என்று தெரிவித்தார்கள்.

ஒருவேளை இதனையொட்டித்தானோ என்னவோ நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளுக்கும் வீரர்களுக்கும் மாத்திரம் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, இந்திய அரசாங்கத்திற்கு என்று மட்டும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாருடைய பெயரும், பாதுகாப்பு அமைச்சர் போன்றவர்களுடைய பெயரும் விடப்பட்டு இருக்கிறதோ என்று நான் கருதுகிறேன்.

ஆனால், இது அண்மையில்தான் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எடுக்கப்பட்ட முடிவாக இருக்கும் என்று கருது கிறேன். போர் முடிந்தவுடன் இந்த மாமன்றத்தில் நாம் ஒரு தீர்மானம் எடுத்த பொழுது உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், "திருமதி இந்திரா காந்திக்குக் கிடைத்த வெற்றி தாய்க்குலத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி" என்று சொன்னார்கள்.

நான்கூடச் சொன்னேன், தாய்க்குலத்தின் பெருமையை உலகம் எல்லாம் உணர்ந்தும் நீங்கள் தாமதமாக உணர்ந் ததற்காக நன்றி என்று. இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் 'பர்சனால்டி கல்ட்' என்ற வகையிலே—அவ்வளவு புகழ்ந்த காங்கிரஸ் கட்சியினர் திடீரென்று திருமதி இந்திரா காந்தி அவர்களைப் புகழ்வதே 'பர்சனால்டி கல்ட்' என்று குறிப்பிடுவது வியப்புக்கும் வேதனைக்கும் உரியதாக இருக் கிறது.

திருமதி அனந்தநாயகி: நாங்கள் பாராட்டவேண்டிய நேரத் திலே பாராட்டினோம். நீங்கள் அதையே வைத்து விளம் பரம் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். அதுதான் 'பர்ச னால்டி கல்ட்'; திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் பாராட்ட வேண் டிய நேரத்திலே பாராட்டாமல் இருப்பதே கிடையாது.

முதல்வர் கலைஞர் : இந்த அருமையான கருத்தை அப்படியே திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் முதலமைச்சரைப் பாராட்டுகின்ற பாவத்தை அவர் எங்கும் செய்ததாகத் தெரியவில்லை.




இந்த உரையில் போர் வீரர்களின் குடும்பத் தினரைப் பற்றிக் குறிப் பிட்டு, அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவியளிக்கத் தமிழ்நாடு அரசு பல நடவடிக்கை களை மேற்கொண்டுள்ள தெனக் கூறிக்கொள்வ தில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று தமிழ்நாடு அரசைப் பற்றித் தான் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல் நல்லவேளையாக என்னுடைய பெயர் இதிலே குறிப்பிடப்படவில்லை என் பதும், முதலமைச்சர் என்னும் வார்த்தை இந்த இடத் திலே வரவில்லை என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

ஆனால், பிரதமர் திருமதி இந்திரா காந்தி மட்டுமே பாராட்டப்பட்டிருக்கிறாரா என்றால் இல்லை. இரவீந்திரநாத் டாகூர் அவர்கள் குறிப்பிட்ட பொன்மொழியை எடுத்துக்காட்டி, ''இழிக்கப்பட்ட இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் தங்கள் தன் மானத்தை நிலைநாட்டியுள்ளது மட்டுமின்றி, தங்கள் நாணயத்தையும் காப்பாற்றி ஜனநாயக அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளனர்'' எனக் கூறிக்கொள்வதில் நாம் பெருமைப்படலாம் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ''இந்தியாவில் புகலடைய வேண்டி வந்தது. இலட்சக்கணக்கான மக்கள் அவதியால் அல்லலுற்று ஓடிவந்தபோது அஞ்சேல் என அவர்களுக்குத் தஞ்சமளித்துக் காப்பாற்றுவதற்கு இந்த நாடு முழுவதும் ஓரணியாகத் திரண்டு நின்றது'' என்று நாட்டு மக்கள் ஓரணியாகத் திரண்டதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அடுத்து, ''இந்திய மக்கள் அனைவரும் மனமார்ந்த ஒத்துழைப்பு நல்கியிராவிட்டால் நமக்கு ஏற்பட்ட சுமையினைத் தாங்க ஆதாரங்கள் அனைத்தையும் திரட்ட முடியாமற் போயிருக்கும்'' என்று இந்திய மக்களைத் தன் உரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

அந்த உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற அடிப்படையிலே எழுந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் இந்த நேரத்தில் நானும் மீண்டும் ஒரு முறை தமிழ் நாட்டின் சார்பாக இந்தப் போரின் வெற்றிக்கு முழு முதல் காரணமாயிருந்த முப்படைத் தளபதிகளையும், வீரர்களையும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களையும், பாதுகாப்பு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்களையும், இந்த வெற்றிக்கு ஈடு கொடுக்கின்ற அளவில் ஓரணியிலே நின்ற நம்முடைய நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒரு முறை பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்ளுவதிலே நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

வீர மரணம் அடைந்த தமிழ்நாட்டுப் போர் வீரர்களின் குடும்பங்களுக்கு உரிய உதவிகள் உடனடியாகச் சென்று சேரவில்லை என்ற கருத்து இங்கே பேசிய சில உறுப்பினர்களால் இரண்டொரு நாட்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தப் போரில் மாண்ட வீரர்களின் எண்ணிக்கை இதுவரையிலே கிடைத்த ஒரு கணக்கின்படி 98 பேராகும். 98 பேரோடு இந்தக் கணக்கு நின்றுவிடுமா என்றால் நிற்காது; அதனால்தான் இது வரையிலே கிடைத்த கணக்கின்படி என்று நான் குறிப்பிட்டேன். அந்த 98 பேரில் 61 பேரின் குடும்பங்களுக்குக் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வீதம் தமிழக அர

சு

ஏற்கெனவே அறிவித்தபடி அந்த உதவித் தொகை அளிக்கப் பட்டாகிவிட்டது.

மீதமுள்ள குடும்பங்களில் சரியான வாரிசுதாரர் யார் என்பதைப் பரிசீலனை செய்கின்ற அந்த வகையிலே சற்றுக் காலதாமதம் ஆகிறது. அதுவும் விரைவில் வழங்கப்படப் பரிசீலனைகள் முற்றுப்பெறும்.

சமதர்ம சமுதாயத்தை நோக்கி. . .

ஆளுநர் பெருமகனுரின் உரையில் குறிப்பிட்டிருக்கின்ற பல கருத்துக்கள் அல்லது தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல திட்டங்கள் சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் வகையிலே இருந்திடவில்லை என்று இங்குப் பேசிய உறுப்பினர்கள் சிலர் கோடிட்டுக் காட்டினுர்கள்.




30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்த உச்ச வரம்பினை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று ஆக்கியிருப்பது சமதர்மத் திட்டத்தின் அடிப்படையில்தான் என்பதை அப்படிப் பேசிய உறுப்பினர்கள் அறிவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

அது மட்டுமல்ல. கரும்புக்கு, மேய்ச்சல் நிலங்களுக்கு இதுவரையிலேயிருந்த விதிவிலக்கு அகற்றப்பட்டதாக இந்த அரசு முடிவெடுத்து அறிவித்திருப்பதும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்பதை எடுத்துக் காட்டும் ஓர் அடையாளம் தான்.

அது மட்டுமல்ல. ஏற்கெனவேயிருந்த உச்சவரம்பின் காரணமாகத்தப்பித்துக்கொள்ளும் வகையிலே நாட்டிலே பலபேர் பினுமி என்னும் அளவிற்குச் சட்டத்திலேயிருந்து மறைந்து கொள்ளச் செய்திருக்கும் ஏற்பாடுகளையெல்லாம் கவனித்த தோடு, அதிலிருந்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதன் அடிப்படையில் அந்த பினுமிதாரர்களையெல்லாம் பிடிக்கின்ற வகையிலேயும் இந்த அரசு நல்ல முயற்சிகளிலே ஈடு்படும் என்று நான் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறேன்.

சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். வெகு அண்மையிலே நடைபெறவிருக்கும் நிலச் சீர்திருத்தம் பற்றிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இவைகளைப் பற்றியும் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றியும் நாம் விவாதிக்க இருக்கிறோம். அதில் தரப்படும் கருத்துக்களின் அடிப்படையில் நல்ல முடிவுகளைத் தமிழ் நாட்டில் நிலச் சீர்திருத்தத்தையொட்டி எடுக்க இருக்கிறோம்.

இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கான அடையாளங்களே தவிர வேறு அல்ல.



பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்லாண்டுக் காலமாக இருந்த பிரச்சினை அவர்களுடைய குடியிருப்பு மனைகள் அவர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்படாமல்இருந்ததாகும்.

அதை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததற்கிணங்க அந்தக் குடியிருப்பு மனைகளைத் தஞ்சை மாவட்டத்திலேயிருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி அதைச் செயல் படுத்திக்கொண்டு இருக்கிறோம். அதுவும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு சென்று கொண்டிருக்கிறது என்பதற்கேற்ற அறிகுறியேயாகும்.

10 பேருந்துத் தடங்களுக்கு மேல் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று வரையறுத்து அதற்கு ஓர் உச்ச வரம்பினைக் கொண்டு வந்து, டி. வி. எஸ். , எஸ். ஆர். வி. எஸ்., ஏ. பி. டி., ராமன் அண்ட் ராமன் போன்ற பெரிய பஸ் நிறுவனங்களையெல்லாம் தேசிய உடைமையாக ஆக்கியிருப்பதும் இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கி விரைந்து நடைபோடுகிறது என்பதற்கான அடையாளங்களேயல்லாமல் வேறல்ல.

நம்முடைய சென்னை மாநகரத்திலே 600 குடிசைப் பகுதிகளை 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக மாற்றியமைத்துக் குடிசைவாழ் மக்களுக்கு நல்ல கல் வீடுகளைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடு தொடங்கப்பட்டு இதற்கு 40 கோடி ரூபாய் செலவழிப்பது என்று திட்டமிடப்பட்டு இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் குடிசைகளாகயிருந்த இடங்களில் நல்ல கல் வீடுகளும், மாடிக் கட்டடங்களும் அமைக்க ஏ பாடுகள் செய்யப்பட்டு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள்.

இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு நடை போட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களே தவிர வேறல்ல.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு

தமிழ்நாட்டினைப் பல ஆண்டுக் காலமாக அலைக்கழித்து வரும் பிரச்சினை, பிச்சைக்காரர்களின் தொல்லை. பிச்சைக்காரர்களால் மக்களுக்கு ஏற்படும் தொல்லை மட்டுமல்ல, பிச்சை எடுப்பவர்களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள், இந்த இரண்டு தொல்லைகளிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும்–பிச்சைக்காரர்களைக் காப்பாற்றும் முறையில் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டில்தான் பிச்சைக்காரர் மறுவாழ்வுத்' திட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இந்த ஆண்டு 3 விடுதிகளையும், தொடர்ந்து பல விடுதிகளையும் தமிழ்நாட்டில் அமைக்க நாம் எடுத்திருக்கும் முறை இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்கிறது என்பதற்கான அடையாளமே தவிர வேறல்ல.

### பின்தங்கியோர் நலன்

பின் தங்கியோர் நலனுக்காக 1966—67-ல் மாநில அரசின் சார்பாகச் செலவழிக்கப்பட்ட தொகை 91 இலட்சம் ரூபாய். ஆனால் 1971—72-ல் அவர்களுடைய நலனுக்காக அது 3 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

### அரிசன முன்னேற்றம்

அதே நேரத்தில் அரிசன மக்களுக்காக 1966—67-ல் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கு—நலனுக்கு, மாநில அரசின் சார்பாக 3.59 கோடி ரூபாய் என்றிருந்தது, 1971—72-ல் 5·3 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அருமை நண்பர் திரு வடிவேல் அவர்கள் அன்றைக்குப் பேசும் பொழுது குறிப்பிட்டார்கள், 3 கோடி ரூபாயை 5 கோடியாக உயர்த்தியிருப்பதைப் பாராட்டுகிறேன்; அதே நேரத்தில் அரிசன மக்களின் தொகையும் உயர்ந்திருக்கும் என்பதை முதலமைச்சர் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். நான் உடனடியாக அந்தப் புள்ளி விவரங்களைத் தேடிக் கண்டுபிடித்தேன்.

1966—67-ல் 3 கோடியே 59 இலட்சம் ரூபாய் அந்த மக்களுக்காக, அரிசன மக்களுக்காகச் செலவழிக்கப்பட்ட பொழுது இருந்த மக்கள் தொகை 60.6 இலட்சம் பேர்.

60.6 இலட்சம் அரிசன மக்கள் இருந்த பொழுது 3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1971—72-ல் 73.96 இலட்சம் தான் அரிசன மக்கள் இருக்கிறார்கள். ஆக, 13 இலட்சம் பேர்கள்தான் ஜனத் தொகையில் உயர்ந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 2 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவி, மாநில அரசின் சார்பில் உயர்த்தப்பட்டிருக்கிறது.

### விவசாயக் கடனும் வட்டியும்

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு குறையைச் சொன்னார்கள். 'கிராமத்தில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன்கள் போய்ச் சேருவதிலே அவர்கள் தரவேண்டிய வட்டித் தொகை அதிகமாக இருக்கிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து நீங்கள் 3 சதவிகிதம் வட்டிக்குப் பெற்று அதை 9 சதவிகிதம் வட்டிக்குப் கிராமப்புறத்து விவசாயிகளுக்குத் தருகிறீர்களே. அது நியாயமல்ல' என்று எடுத்துரைத்தார்கள்.

நான் அவர்களைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நிலைமையை விளங்கவைக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட அந்த வட்டி விகிதம் பழைய வட்டி விகிதங்கள் ஆகும். புதிய வட்டி விகிதங்கள், குறுகிய காலக் கடனுக்கு ரிசர்வ் வங்கியில் இருந்து மாநில வங்கிக்கு 4 சதவிகிதம் வட்டி என்ற வகையில் பணம் தரப்படுகிறது.

இதற்கு நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அந்த 4 சதவிகிதம் மாநில வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குச் செல்லும்போது 4.5 சதவிகிதமாக மாறுகிறது. அது மாவட்ட வங்கியிலிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்குச் செல்லும் போது 6.5 சதவிகிதமாக மாறுகிறது. கூட்டுறவுச் சங்கத்திலிருந்து விவசாயிக்குச் செல்லும்போது 8.7 சதவிகிதமாக அந்த வட்டி மாறுகிறது.

இப்படி அதிகமாகிறதே என்று கேட்டால் இந்த மூன்று கட்டங்களிலும் ஏற்படுகிற நிர்வாகச் செலவுகள், சங்கத்திலே பங்கு வைத்திருக்கக் கூடியவர்களுக்குத் தரப்படுகின்ற டிவிடெண்ட் போன்றவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே, 3 சதவிகிதம் 9 சதவிகிதம் ஆயிற்று என்று சொல்வது சரியல்ல. 4 சதவிகிதம் என்பது 8.70 சதவிகிதமாக மாறுகிறது. அது மூன்று கட்டங்களிலுள்ள நிர்வாகச் செலவுகளின் காரணமாக இப்படி உயர்ந்திருக்கிறது.

அதே நேரத்தில் அந்த விவசாயிகள் வெளியே கடன் வாங்கினால் எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டும்? எவ்வளவு அதிகமான வட்டி கொடுக்க வேண்டுமென்பது உறுப்பினர்கள் அறியாத ஒன்று அல்ல. கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கிராம விவசாயிகள் இந்தக் கடனைப் பெறுவதால் அவர்கள் பயனடைகிறார்களே அல்லாமல் வேறல்ல.

### மின் கட்டணம்

பொதுவாகப்பேசிய எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பலரும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டதைப் பற்றிக் குறை கூறினார்கள். குறை கூறினார்களே அல்லாமல் அதை வன்மையாகக் கண்டித்தார்கள் என்று நான் சொல்லமாட்டேன்.

மின் கட்டணம் உயர்வு விவசாயிகளைப் பொறுத்தவரையில் 1·2 காசுதான் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 10·8 காசு என்று இருந்ததை 12 காசு என்று நாம் உயர்த்தியிருக்கிறோம். இப்படி உயர்த்திய பிறகும் மின் வாரியத்திற்கு 6, 7 கோடி நஷ்டம் வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு மாநிலங்களில் இதைவிட மின் கட்டணம் விவசாயிகளுக்கு அதிகமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மகாராஷ்ட்ராவில் 18 காசு; பீகாரில் 18 காசு; குஜராத்தில் 16 காசு; ஹரியாணவில் 16 காசு; அஸ்ஸாமில் 16 காசு; உத்தரப்பிரதேசத்தில் 15 காசு; ஆந்திராவில் 12 காசு; மைசூரில் 12 காசு.

கேரளாவில் குறைவாக இருக்கிறது என்று கேட்கக் கூடும். கேரளாவில் இறவைப்பாசனம் அதிகமில்லை. கிணற்றுத் தண்ணீரை எடுத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் நிலைமை இல்லை. அது மாத்திரமல்ல, 'டிஸ்ட்ரிபியூஷன்' செலவும் கேரளாவில் அதிகமில்லை.

ஆகவே, 1·2 காசு என்ற அளவுக்கு நாம் மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பது பெரிய உயர்வு அல்ல என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். ஆளுநர் உரையில் கைத்தறியாளர்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று குறிப்பிட்டார்கள். இது வழக்கமாக நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்திலிருந்தே சொல்லுகின்ற ஒரு சம்பிரதாயம் உண்டு.

### கைத்தறியாளர்களுக்குக் கணிசமான உதவி




ஆளுநர் உரையில் எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்பது இயலாத காரியம். தமிழ் நாட்டில் இருக்கும் எல்லாப் பிரச்சினையையும் பற்றி ஆளுநர் உரையில் சொல்லுவது என்றால் ஆளுநர் ஒரு மூன்று நாட்கள் இந்த மாமன்றத்தில் நின்றுகொண்டிருக்க வேண்டிய கஷ்டம் அவருக்கு ஏற்படும். அந்த அளவுக்குப் பெரிய புத்தகத்தைப் படிக்க வேண்டியிருக்கும். அப்போதும் சில விஷயங்கள் விட்டுப் போய் விடக்கூடும்.

ஆளுநர் உரையில் சொல்லப்படாத விஷயங்களை எடுத்துச் சொல்லத்தான் மாமன்றத்திலே விவாதமே நடக்

கிறது. ஆகவே, எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் விவாதிப்பதற்கு விஷயமே இல்லாமல் போய் விடக்கூடும் என்பதால் சில விஷயங்கள் விட்டு வைக்கப்படுகின்றன.

கைத்தறியாளர்களைப் பொறுத்தவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டதொகை 750 லட்சம் ரூபாய். இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1,060 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழு கோடி ரூபாய்க்குப் பதிலாக, பத்து கோடி ரூபாய் அளவுக்கு நெசவாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே மாத்திரம் 1967—68 முதல் செயல்படுகின்ற முதன்மையான திட்டமாக, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக, அரசே நேரடியாகப் பங்கு கொள்ளும் திட்டமாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலதனத்தில் அரசே பங்கு கொள்கின்ற அளவுக்குத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் காரணமாகப் பயனடைந்த சங்கங்கள் 469. இதற்காக 26 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அரசு உதவி செய்கின்ற காரணத்தால் ரிசர்வ் வங்கியில் இருந்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வசதி அளித்து, அவை வளர்ச்சியடைந்திருக்கின்றன. அந்த வளர்ச்சியைப்பார்க்கும்போது 1966—67-ல் 371 லட்சமாக இருந்தது 1971—72-ல் 606 லட்சம் என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.




புது ரகத் துணிகளை உற்பத்தி செய்யப் புதிய நவீன முறைகளைக் கையாண்டு நெசவாளர்கள் பயிற்சி பெறப் புதிய பயிற்சி நிறுவனங்கள் 1969—70-ல் தொடங்கப்பட்டு, ஆண்டு தோறும் அதிலே நூற்றுக்கணக்கானவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

அதற்காக இதுவரை செலவாகியிருக்கும் தொகை மாத்திரம், 1969 முதல் 1971 வரை 11 லட்சம் ரூபாய் ஆகும். அதிலே 1969—70-ல் 353 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். 1970—71-ல் 2160 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். 1971—72-ல் 2,500 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 5,013 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இப்போது நெசவாளர்களுக்கு இருக்கும் முக்கியக்குறை பாடு — அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கிற ஊதியத்தைவிடத் தனியாரிடத்தில் வேலை செய்கிற நெசவாளர்களுக்குக் கிடைக்கிற ஊதியம் குறைவாக இருக்கிறது என்பதாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் தரப்படுகின்ற ஊதியத்தை வரையறுத்து நிர்ணயிப்பதும், கூட்டுறவுக்கு வெளியில் உள்ள நெசவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பதும் அவசியம் என்று இந்த அரசு கருதுகிற காரணத்தால், அதற்காக என்று குழு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் குழு இந்த ஊதிய விகிதத்தைப் பற்றி விரைவில் அறிவிக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த




மாமன்றத்தின் மூலமாக நெசவாளர் குடும்பங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

### தொழில் தகராறுகளும் கழக அரசும்

தொழில் தகராறுகளைப்பற்றி இந்தமன்றத்தில் விரிவாகப் பேசப்பட்டது. நமது திரு பொன்னப்ப நாடார் அவர்களும் வழக்கத்திற்கு மாருகக் கொஞ்சம் வேகமாகக் கூட அதைப் பற்றிப் பேசி விளக்கங்களைத் தந்திருக்கிருர்கள்.

தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை திராவிடமுன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பெரும்பாலான தொழில் தகராறுகள் பேசித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலே அரசு எப்போதும் வீண் கவுரவப் பிரச்சினையாக எந்த நேரத்திலும் பார்த்தது கிடையாது என்பதைத் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நன்ருக உணருவார்கள்.

ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று வன்முறைச் செயல்கள் நடைபெறுகிற அளவுக்கு நிலைமை போயிருக்கலாம். ஆனுல்,

மொத்தத்தில் பார்த்தால் கடந்த நாலைந்து ஆண்டுகளாகத் தொழில் தகராறுகள் பெரும்பாலும் பேசியே தீர்க்கப் பட்டிருக்கின்றன.

பெரியவர், அன்புக்குரிய மணலி கந்தசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள்—'அன்புக்குரிய' என்றுசொல்லுவ தால் யாரும் சந்தேகப்பட வேண்டாம்—அவர்கள் என் னுடைய அன்புக்கும், மதிப்புக்கும் கூட உரியவர்கள்.

அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். அவர் களுடைய வயதுக்குமேல் ஆவேச உணர்ச்சியோடு, 'அந்தத் தலைவர்களுடைய அரசியலை வெறுக்கிறேன்; ஆனால், அப்படி அவர்கள் அடிபட்டதை எல்லாம் கண்டிக்காமல் இருக்க முடியாது' என்று சொன்னார்கள்.

எந்தக் காரணத்திற்காக, யார் அடிபட்டாலும் காய முற்றாலும், அதற்காக வருந்தாத எஃகு உள்ளம்—கல் மனம் நம்மில் யாருக்கும் இல்லை. நம் தமிழ்நாட்டின் அரசியலில் அதைத்தான் நாம் போற்றிப் பாதுகாத்து வருகிறோம். யார்யார்அடிபட்டார்கள் என்ற விவரத்தைச் சொன்னார் கள்.

ஆனால், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு சுந்தரம் அவர்களை விட்டுவிட்டார்கள். அதைச் சொன்னால் அவர் களுடைய கட்சியைப்பற்றிச் சொல்வதாக வந்துவிடும் என்று அவர்கள் விட்டுவிட்டார்களோ என்னவோ?

நான் அதை விட்டுவிட்டால் அவர்கள் ஒருவேளை கோபித்துக் கொள்ளக்கூடும் என்று அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவருக்கும் சேர்ந்து நான் வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

அதே நேரத்தில் பெரியவர் மணலி போன்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 54 தொழிலா ளர்கள், தொழிலாளர்களாலேயே தாக்கப்பட்டு மருத்துவ மனையில் இருக்கிறார்களே, அவர்களைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் பெரியவருடைய வார்த்தை யில் இரு புறத்திலும் அனுதாபம் பிறந்திருக்கிறது என்று மகிழ்ந்திருக்கக்கூடும்.

ஒருவேளை நேரம் போதாத காரணத்தால் அவசரத்திலே அவர்கள் விட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேனே அல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர் களானாலும், கம்யூனிஸ்ட் தொழிலாளர்களானாலும், காங்கிரஸ் தொழிலாளர்களானாலும் வேறு எந்தக்

கட்சியைச் சார்ந்த தொழிலாளர்களானாலும் அவர்களுக்காக அனுதாபப்படக்கூடிய பரந்த மனம் படைத்த தொழிற் சங்கத் தலைவர்தான் திரு மணலி கந்தசாமி என்பதை நன்ருக அறிவேன்.

அவர்களிடத்திலே எனக்கு ஒரு தனி மரியாதை உண்டு. எனக்கு மட்டுமல்ல. பேரறிஞர் அண்ணு அவர்களுக்குக்கூட அவர்களிடத்திலே ஒரு நல்ல மதிப்பும், மரியாதையும் உண்டு. ஏன் அந்த மரியாதை, மதிப்பு வைத்து இருக்கிருேம் என்ருல்—அவர் பேசும் போது சொன்ஞர்—'திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஆயிரம் குற்றங்கள் இருந்தாலும் நாங்கள் காமராஜரோடோ அல்லது இராஜாஜியோடோ என்றைக்குமே சேர்ந்துவிட மாட்டோம்' என்று.

அவர் அப்படிச் சொன்னது எங்களுக்கு உறுதி மொழி அளிப்பது மாதிரி இருந்தாலும், அவர்கள் கட்சியில் இருக்கும் பிளவு மனப்பான்மைக்கு விட்ட ஓர் எச்சரிக்கை என்றும் அதை நான் நினைக்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு தூய உள்ளம் அவருக்கு இருக்கிற காரணத்தால்தான், அவர்களிடத்திலே எங்களுக்கு என்றைக் குமே ஒரு தனி மரியாதையும் மதிப்பும் உண்டு.

ஆகவே, தொழில் தகராறுகள் பேசித் தீர்க்கப்பட வேண்டு மென்ற அளவில் இந்த அரசு தங்களுடைய கடந்த கால நடவடிக்கைகள் மூலம் மெய்ப்பித்துக் காட்டி வருகிறது. அதற்கு ஏற்பத் தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த அர சோடு மேலும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன், அந்த யூனியனின் தலைவர் தொழிலாளியாக இருக்க வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் கருத் தைப்பற்றிப் பல தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

நான் இப்போதே உடனடியாகப் பதில் சொல்ல விரும்பாமல், அந்தத் தலைவர்களின் கருத்துக்களைப் புறக்கணிக்கக் கருதா மல் அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், அவை களை ஆராய்ந்து, அடுத்து நடைபெற இருக்கின்ற சட்டமன்றக் கூட்டத்தில்—நம்முடைய நிதி நிலை அறிக்கை விவாதிக்கப் படுகின்ற கூட்டத்தில், அதுபற்றிப் பேசலாம் என்று கருது கிறேன்.

ஆகவே, எல்லாருடைய கருத்துக்களையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அதுபற்றிப் பிறகு மீண்டும் ஒருமுறை விவாதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சேலம் இரும்பாலைத் திட்டம்

சேலம் இரும்பாலையைப் பற்றி எல்லாக் கட்சியின் தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலை இவ்வளவு தாமதப்படுவதற்கு என்னென்ன காரணங்கள் என்று கேட்டார்கள். தேர்தல் காலத்தில் சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டிவிட்டு, தேர்தலில் வெற்றி பெற்று விட்டார்கள் என்று சொன்னார்கள் திரு பொன்னப்ப நாடார் அவர்கள்.

சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் விழா நடத்துகிறபோது, தேர்தல் வரும் என்று ஜாடையாகக் கூடத் தெரியாது. இது எல்லாம் அவர்களுடைய பழைய வழக்கம். திருச்சிக்கு அருகேயுள்ள திருமானூரில் பெரிய பாலம் ஒன்று கட்டுவதற்காகத் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அப்போதிருந்த முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் திருமதி இந்திரா காந்திக்குத் தந்தி கொடுத்து, சாங்ஷன் வாங்கி அடிக்கல் போட்டார்கள். அடிக்கல் அப்படியே இருந்தது.

அந்தப் பக்கமாகப் போன சில பேர், இது ஏதோ காளியோ, மாரியம்மனோ என்று கருதி, அதற்கு மஞ்சள் பூசி, பொட்டு வைத்து, தேங்காய் உடைத்த பிறகுதான், ஆஹா, இது அடிக்கல், இது தேர்தல் நேரத்திற்காகப் போடப்பட்டு இருக்கலாம் என்று விஷயம் புரிந்தது. அந்தப் பாலம் கட்டப்படாமலேயே இருந்தது. இப்படி நீங்கள் செய்யத் தவறியதையெல்லாம் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது.

சேலம் இரும்பாலையைப் பொறுத்த வரையில், அது ரூ. 300 கோடிக்கு நடைபெற வேண்டுமென்ற வாதத்தில் நாம் எப்போதும் பின்வாங்கியது இல்லை. அதிலிருந்து பின் வாங்கப் போவதுமில்லை.

நாம் மகிழ்ச்சியடையத்தக்க அளவுக்கு விரைவில் அந்தத் திட்டம் நாம் கோருகிற வகையில் தொடங்கப்படவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அரசு விளம்பரங்கள்

சில குறைபாடுகள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டன. பத்திரிகைகள் எல்லாம் மிரட்டப்படுகின்றன. பத்திரிகை களுக்கு விளம்பரங்கள் எல்லாம் கொடுக்கப்படுவதில்லை. ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்குத்தான் தரப்படுகின்றன என்ற செய்திகளெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டன.

ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் விளம்பரங்கள் கொடுப்பது என்ற முறையில் இந்த அரசு நடந்து கொள்ள வில்லை. 'தமிழரசு' பத்திரிகையில் குத்தகை, ஒப்பந்தம் ஆகிய விளம்பரங்கள் வரும் என்று அறிவித்து அரசு ஆணை பிறப் பித்த அதே நேரத்திலே அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் சில அவசர நிலையை ஒட்டி வேறு பத்திரிகைகளிலும் வெளியிடலாம் என்று சேர்க்கப்பட்டிருக் கிறது.

அதற்கொப்ப, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் மாத் திரம் 200-க்கு மேற்பட்ட விளம்பரங்கள்—திரு ஹண்டே அவர்கள் எடுத்துக் காட்டியது போல—தரப்பட்டு இருக் கின்றன. ஆளும் கட்சிப் பத்திரிகையான 'முரசொலி'க்கு 90 விளம்பரங்களும், 'இந்து' பத்திரிகைக்கு 115 விளம்பரங் களும், 'மெயில்' பத்திரிகைக்கு 150 விளம்பரங்களும், 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகைக்கு 50-க்கு மேற்பட்ட விளம் பரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சிப் பத் திரிகைகளுக்கு மட்டும் அந்த விளம்பரங்கள் தரப்படவில்லை என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

திரு ஹண்டே : முரசொலியின் தரமும்—நவசக்தி, நாத்திகம் போன்றவற்றின் தரமும் ஒன்று என்று நான் நினைக்கிறேன். என்னைத் தாக்கிய முரசொலிக்கு விளம்பரம் ; அரசாங் கத்தைத் தாக்கும் பத்திரிகைகளுக்கு ஏன் விளம்பரம் தரக் கூடாது?

முதல்வர் கலைஞர் : தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில் இந்து ஆகிய பத்திரிகைகள் கூடத்தான் அரசாங்கத்தை விமர்சனம் செய்கின்றன. விமர்சனம் என்பதற்கு அர்த் தம் புரியாமல் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

திரு ஹண்டே: நான் தனிப்பட்ட முறையில் தாக்கப்பட்டேன். சட்ட மன்றத்தில் பேசியவற்றுக்காக நான் உளறுவாயன் என அழைக்கப்பட்டேன், முரசொலி நடக்கும் விதம் அது. அது, எனது தொகுதி வாக்காளரையும் தாக்கியது.

அப்படி என்னைத் தாக்கிய பத்திரிகைகளுக்கு விளம்பரம்; அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் மற்றப் பத்திரிகை களுக்கு விளம்பரம் இல்லையா? நேரடியான பதில் இன்னும் கிடைக்கவில்லை.

முதல்வர் கலைஞர்: ஒருவரை விமர்சனம் செய்வதற்கும், அவதூருகச் செய்திகளை வெளியிடுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. பத்திரிகைக்காரர்கள் மிரட்டப்படுகிருர்கள்; பழிவாங்கப்படுகிருர்கள் என்றெல்லாம் இங்கே மாத்திரமல்ல, காங்கிரஸ் கட்சி செயற் குழு கூட அப்படித் தீர்மானம் போட்டு இருப்பதாக அறிகிறேன்.

ஆனல், அரசாங்கத்தை, அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதுகிற எந்தப் பத்திரிகை மீது இந்த அரசு வழக்குப் போட்டு இருக்கிறது? அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதாமல், அவதூருன விஷயங்களை எழுதுகிற நேரத்தில், அதற்குப் பதில் அளித்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது, நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் தங்களை நிரபராதிகள் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளாகிருர்கள்.

ஆகவேதான், முதலிலே 'நவசக்தி' பத்திரிகை மீது வழக்குப் போடப்பட்டது—1967-ல் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில். அப்போது நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேன். மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறவர்கள் எல்லாம் தலையிலே ஹெல்மெட் போட்டுக் கொள்ள வேண்டும். அதைப் பற்றிப் பொது மக்கள் அபிப்பிராயம் என்ன என்று அறிந்து, பல மருத்துவர்கள் சொன்ன யோசனையின் பேரில்-ஹெல்மெட் போட்டுக் கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டால் தலையில் அடிபட்டால்கூட —உயிருக்கு ஆபத்து இருக்காது என்பதை உணர்ந்து, பொது மக்கள் அபிப்பிராயம் அறிய ஓர் அறிக்கை விடப்பட்டது.

அந்தப் பத்திரிகைக்காரர்கள் என்ன எழுதிஞர்கள் தெரியுமா? குல்லாய் போடுகிருர் கருணுநிதி என்று எழுதி, யாரோ ஹெல்மெட் விற்பவனுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுப்பதற்காக இப்படி மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் எல்லாம் ஹெல்மெட் போட வேண்டுமென்று சொல்கிருர் கருணுநிதி என்று எழுதப்பட்டது. அதை எதிர்த்துத்தான் வழக்காடி, அந்த வழக்கிலே அதை எழுதிய அதனுடைய ஆசிரியருக்கும் அதனுடைய உரிமையாளருக்கும் ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டு, அதை அவர்கள் கட்டியிருக்கும் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

அதைப் போலவே இன்னொரு பத்திரிகை, இவர்கள் சந்தித்தால் எனும் தலைப்பில் ஆபாசக் கற்பனை செய்து எழுதியதன் காரணமாக வழக்கு நடத்தி—'ஜெயக்கொடி' பத்திரிகைமீது—பத்திரிகை ஆசிரியருக்கு 3 திங்கள் சாதாரணச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தலைமை செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார். உயர் நீதி மன்றத்திலும் அது உறுதி செய்யப்பட்டது.

'தமிழ்நாட்டைப் பங்கு போடுகிறார்கள் தி.மு.க. மந்திரிகள்' என்று ஒரு செய்தி வந்தது. அதை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டு அந்தச் செய்திக்குத் தீர்ப்பளித்தார்கள். அமைச்சர்கள் வழக்கு மன்றத்துக்குச் செல்ல நேரிட்டது. அதிலும் பத்திரிகையாளர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்.

அதற்குப் பிறகும், ஏமாந்த மக்களைக் கற்பழிக்க களவாட, குடித்துவிட்டுக் கும்மாளம் போட அவர்களுக்கு வாக்களித்து விட்டார்கள் என்ற தலைப்பிலே ஒரு பகிரங்கமான செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டு இருந்தது, அதுவும் அதே 'ஜெயக்கொடி' பத்திரிகைதான், அதன் மீது வழக்குப் போடப்பட்டு அதன் ஆசிரியர் தண்டிக்கப்பட்டார்.

பிறகு 'நாத்திகம்' பத்திரிகையில் மந்திரிகள் சொத்துக் கணக்கு என்கிற தலைப்பில் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்றை எழுதினார்கள். வழக்குப் போடப்பட்டு 3 திங்கள் சாதாரணச் சிறைத் தண்டனையும் ரூ. 1,000 அபராதமும் விதித்து செஷன்ஸ் நீதிமன்றத்திலும் உயர் நீதி மன்றத்திலும் தீர்ப்பு அளித்தார்கள்.

பிறகு அதே 'நாத்திகம்' பத்திரிகை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் டாக்டர்கள் எமதர்பார்! சவக்கிடங்கில் சேர்க்கப்பட்ட பெண்மணி பிரசவித்தாள் என்ற தவறான செய்திகளை வெளியிட்டது. அதற்கு வழக்குத் தொடரப்பட்டு, 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று செஷன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்து உயர் நீதிமன்றமும் அதனை உறுதி செய்தது.

இப்படியே பல அவதூறான விஷயங்கள். இப்படி 9 தடவை வழக்குப் போடப்பட்டது.

ஒவ்வொரு வழக்கிலும் அபராதம் கட்டினார்கள். அல்லது சிறை சென்றார்கள். அல்லது மன்னிப்புக் கேட்டார்கள்; என்கின்ற அளவுக்குப் பத்திரிகை ஆசிரியர்கள் மீது வழக்குப் போடப்பட்டது. அல்லாமல், இந்த அரசாங்கத்தின் தேசிய

உடைமைக் கொள்கை தவறானது என்று அரசாங்கத்தின் பக்கமோ, அல்லது அமைச்சர்களின் பக்கமோ, அல்லது எங்களுடைய பேச்சுக்களை விமர்சித்தார்கள் என்பதற்காக யார் மீதும் எந்த வழக்கும் போடவில்லை. ஆனால் அவதூறான செய்திகளை வேண்டுமென்றே வெளியிட்ட பத்திரிகைகள் மீது வழக்குகள் போடப்பட்டன.

திரு ஹண்டே அவர்களைப் பற்றி முரசொலியில் உளறுவாயன் என்று எழுதியிருந்தால் நான் உளறுவாயன் இல்லை, நன்றாகப் பேசக்கூடியவன் என்று முரசொலியின் மீது வழக்குப் போடலாம்.

அடுத்தது கோவை மில்களைத் திறப்பது பற்றிய பிரச்சினை. இங்கு அதைப் பற்றி அக்கறை உள்ளவர்களால் பேசப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய பெரிய பிரச்சினைகளில் அக்கறை உள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். கோவை மில்களைத் திறப்பது தொழிலாளர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்ப.......

திரு ஹண்டே: ஆளுங்கட்சிக்கு மட்டுமே விளம்பரம் கொடுப்பது ஏன்?

முதல்வர் கலைஞர்: விளம்பரங்கள் கொடுப்பது அரசாங்கத்தின் முடிவுதான்.

(மீண்டும் திரு ஹண்டே பேச எழுந்தார். அவைத் தலைவர் அவரை அமரும்படி கூறினார்.)

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது, போன்ற பெரிய பிரச்சினைகளைப்பற்றிக் கவனிக்கின்ற பெரியவர்கள் பல பேர் இங்கே இருக்கிறார்கள்.

### யானை வேட்டைக்குச் சென்றோர் முயல் வேட்டையாடமாட்டார்

அவர்கள் எல்லாம் யானை வேட்டைக்குச் செல்கிற நேரத்தில் முயல் வேட்டை ஆட மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எழுப்பியிருக்கின்ற குறிக்கோள்களில் ஒன்று, மூடிய ஆலைகளைப் பற்றிய பிரச்சினை ஆகும்.

ஒரு முறை அந்தத் தொடர்புடைய ஓர் அமைச்சர் 'நீங்கள் விமானம் ஏறுவதற்கு முன்பாக 3 மணிக்கே இந்த உத்தரவு போட்டு உங்களுக்கு நான் அனுப்புகிறேன்'




என்று கூடச் சொன்னார்கள். விமானம் தான் வந்தது. உத்தரவு இது வரை வரவில்லை.

இப்போது மூடப்பட்ட 6 ஆலைகளை எடுத்துத் திறந்து நடத்த வேண்டுமானால், சோம சுந்தரா மில்லில் நடைமுறை மூலதனம் 26.30 லட்சம் ரூபாய், அதை நவீன இயந்திர மயம் ஆக்குவதற்கு ரூ. 28.50 லட்சம்.

காளீஸ்வரர் மில்ஸ் 32 லட்சம், நடைமுறை மூலதனம் நவீன இயந்திர மயமாக்க ரூ. 27 லட்சம்.

கோயமுத்தூர் மில்லுக்கு 60 லட்சம். நடைமுறை மூலதனம். நவீன இயந்திர மயம் ஆக்குவதற்கு ரூ. 80 லட்சம்.

ஆக மொத்தம் நடை முறை மூலதனம் 118 லட்சம் ரூபாய்.

நவீன இயந்திர மயம் ஆக்க ரூ. 132 லட்சம் தேவைப் படுகிறது.

மாநில அரசு இந்த 3 மில்களைத் திறக்க நம்முடைய சதவிகிதம் 49 : 51 என்பதில் 49 என்கின்ற பங்கு நாம் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று மாநில அரசின் சார்பாகச் சம்மதம் கொடுத்திருக்கிறோம்.

சோமசுந்தரா ஆலை இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று மத்திய அரசு கூறுகிறது. மற்ற இரண்டு மில்களின் இயந்திரங்களின் மதிப்பீட்டுக்கு முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய அரசு நமக்குக் கூறியிருக்கிறது.

அடுத்து 3 மில்கள். பங்கஜா மில் நடை முறை மூலதனம் ரூ. 26 லட்சம் தேவை. பாலமலை ரங்கநாதர் மில்லுக்கு நடைமுறை மூலதனம் 8·62 லட்சம் தேவை. இவைகளை அவசரச் சட்டத்தின் கீழ் எடுக்க மத்திய அரசாலே நடப்பதற்குக் காரணம் இருக்கிறது. ஆகவே உயர் நீதி மன்றத்திலே அந்த வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த மில்களைப் பற்றிய (லிக்விடேஷன் செய்ய) உயர்நீதி மன்றத்தின் உத்தரவு பெறப்படும். அதற்குப் பிறகுதான் எடுத்துக் கொள்ளலாம்.

செங்கோட்டையில் இருக்கிற பலராம வர்மா டெக்ஸ்டைல் மில்லின் நடைமுறை மூலதனம் 9·40 லட்சம் ரூபாய். இதை நவீன இயந்திர மயமாக்க ரூ. 30.25 லட்சம், நம்முடைய பங்கை நாம் செலுத்தத் தயார் என்று சொல்லி விட்டோம். ஆனால், அவர்கள் செலுத்தா விட்டால் 2·3 கோடி பணம் போனால் போகிறதென்று மாநில அரசு எடுத்து நடத்துங்களேன் என்று சொல்லத்தான் நமது திரு தங்கமணி அவர்களின் உதடுகள் துடிக்கின்றன என்பது எனக்குப் புரிகிறது.

ஆனால் அந்த அளவுக்கு நிதி வசதி இருக்கிறதா என்பது ஒன்று. நிதி வசதி இருந்தாலும் மத்திய அரசு அனுமதியில்லாமல் செய்ய முடியுமா என்பது ஒன்று. இன்றைக்கு இருக்கிற ஐ. டி. ஆர். ஆக்ட்படி மத்திய அரசு அதை ஏற்று மாநில அரசுக்கு அனுமதி கொடுத்தால்தான் நம்மால் எடுத்து நடத்த முடியும்.

இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினை அந்த அளவுக்கு, முக்கால் பகுதிக்கு மேல் மத்திய அரசு தொடர்புடைய பிரச்சினையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அந்தக் காரணத்திற்காக அவர்கள்

எடுத்துக் காட்டியதைப் போல் கோவையில் இருக்கும் கட்சிச் சார்பற்ற எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் ஒரு கிளர்ச்சியிலே ஈடுபட வேண்டும் என்கிற போர்க் கொடியை உயர்த்த இருக்கிறார்கள்.

அது ஓர் அறப்போர்தான் என்றும், அது அமைதியான போர்க்கொடி என்றும் நான் குறிப்பிடலாம். ஆனால், இந்தப் போர்க் கொடி உயர்த்துவதற்கு முன்பாக மத்திய அரசு, ஒரு நல்ல செய்தியை மாநில அரசின் மூலமாக கோவை மில் தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கும் என நான் நம்புகிறேன்.

அதை மத்திய அரசு உடனடியாகச் செய்யவேண்டும் என இந்த மன்றத்தின் சார்பாகவும் தொழிற்சங்கத் தலைவர்கள் சார்பாகவும் இங்கே இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் சார்பாகவும் மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

### விலைவாசி ஏற்றமும் வாங்கும் சக்தியும்

விலைவாசியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. விலைவாசி எல்லாப் பொருட்களுக்கும் உயர்ந்துவிடவில்லை, விலைவாசியினுடைய உயர்வு அல்லது தாழ்வு என்கிற புள்ளி விவரங்களையெல்லாம் நான் வைத்திருக்கிறேன். என்றாலும், அவைகளை இங்கு விவரமாக எடுத்துச்சொல்வதற்குநேரமில்லை என்று கருதுகிறேன். ஆகவே அடுத்த கூட்டத்தொடரில் விலைவாசிகளைப் பற்றி நான் எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

உதாரணமாக மிளகாய், புளி, எண்ணெய்—தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய்—போன்ற பொருட்களுக்கு விலை நல்ல அளவுக்கு இன்றைக்குக் குறைந்து இருக்கிறது.

அரிசியின் விலையும் குறையத் தொடங்கியிருக்கிறது. நாம் அரிசியே கிடைக்காத ஒரு காலத்தில் வாழ்ந்து இப் பொழுது, அரிசி கிடைக்கின்ற ஒரு காலத்திற்கு வந்திருந் தாலும், அதிலே ஏற்பட்ட சில நிலவரங்களின் காரணமாக அரிசி விலை உயர்ந்திருக்கிறது. என்றாலும் அது வெகு விரைவிலே, பிப்ரவரியிலே, அரிசியின் விலை வீழ்ச்சியடையும் என்ற ஒரு நல்ல செய்தியை நாம் காண முடியும். சில பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ரூபாய் இருந்தது போன ஆண்டு. இந்த ஆண்டு 3 ரூபாய் என்று ஆகிவிட்டதை மாத்திரம் நாம் கணக்கிலே வைத்துக்

அரசியல் துறை அதிகாரங்களும் நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டும் என்ற ஆசையில் அல்ல. மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்.''

இது 1971-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாகும். அரசியல் சட்டம் அதற்காகத் திருத்தப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையினை உள்ளடக்கிய தேர்தல் பிரகடனமாகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தேர்தல் அறிக்கை கூட நாட்டின் அடிப்படை ஒற்றுமைக்கு உள்ளடங்கிய வகையில் —மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வரும் விதத்தில் அரசியல் சட்டத்திலுள்ள மத்திய—மாநில உறவுகள் பற்றிய பிரிவைத் திருத்திட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

இதையேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் நாம் அப்பொழுதே வெளியிட்டிருக்கிறோம். அதே நேரத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும், ''மைய-மாநில அரசுகளின் துறைகள் பட்டியல் விவரமாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் உண்மையான அதிகாரம் மத்திய அரசின் கையிலேதான் இருக்கிறது. மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகளின் உத்தரவுகள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றே அமல்படுத்தப்படவேண்டியிருப்பதால் உண்மையான மதிப்புக் கிடையாது. பொருளாதாரச் சம்பந்தமான எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருப்பதால் மாநில அரசு மத்திய அரசிடம் கையேந்தும் நிலை இருக்கிறது. பொருளாதாரத் திட்டங்களும், வேளாண்மைத் திட்டங்களும் மத்திய அரசின் தயவை எதிர்பார்த்தே நடக்க வேண்டியிருக்கின்றன.''

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போது மத்தியில் குவிந்திருக்கும் ஏராளமான அதிகாரக் குவியல் மாநிலங்களின் ஜனநாயக உரிமைகளைப்பறித்து ஒரு போலீஸ் ஆட்சியை உருவாக்கும் ஒரு பயங்கரமானநிலை உருவாகும் என்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை செய்கின்றது என்கிற அளவில் மார்க்சிஸ்ட்டுகள் தமது தேர்தல் அறிக்கையைத் தொடங்கி இப்படி முடித்திருக்கின்றார்கள்.

## மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

அதைப் போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1967 மார்ச் திங்கள் 19-ஆம் தேதி வெளியிட்ட கருத்துக்களை அப்பொழுது 'கல்கி' பத்திரிகையிலே தலையங்கமாக எழுதியிருக்கிறார்கள். தலைப்பே "உண்மை சமஷ்டி வருக வருகவே" என்பது. அதிலே எழுதியிருக்கிறார்கள்: திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஒரு பிரதேசத்திற்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் இல்லை என்றும் மேலெழுந்த வாரியாகச் சிலர் நினைத்துவிடலாம். அவர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படையை இராஜாஜி அவர்களே தெளிவு செய்திருக்கிறார். அதாவது:—

"எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுவாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக டெல்லி சர்க்கார் அமைய வேண்டும் என்ற அகில இந்தியப் பிரச்சினையையே திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடிப்படையாகக் கொண்டது.

"ஒரே சர்க்கார் நாடு முழுதும் ஆள்வதை யூனிடரி முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை (பெடரல்) சமஷ்டி முறை என்றும் சொல்லுவார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுகிறது என்றாலும் மத்திய சர்க்கார் பெருந்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகர சபையின் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

"இந்தியா போன்ற பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புக்களை மத்தியிலே மாத்திரம் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கியாளும் கொடுமையும் சேர்கிறது.

"இப்படிப்பட்ட ஆட்சிக்குத் தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பு உருவமே திராவிட முன்னேற்றக் கழகம். அது தேசப் பிரிவினைக் கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியாகும்" இது 19—3—67ல் அறிஞர் அண்ணா அவர்களுடைய முகப்புப் படத்தைத் தாங்கிய கல்கி இதழில் வெளிவந்தது.

அது மாத்திரமல்ல. இன்னும்கூடத் தீவிரமாக இராஜாஜி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி அப்பொழுது 'நம்நாடு' பத்திரிகையில் எடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்கிறார், "பாரத சர்க்காருக்கே எல்லாப் பலமும் அதிகாரமும் ரத்த ஓட்டமும் சென்றுவிடுவது பிரதேச முன்னேற்றத்

திற்குப் பாதகம் விளைவிக்கும். திராவிடம் என்பது தென்னுட்டின் பெயர். அதன்முன்னேற்றத்தை முக்கியமாகக் கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். திராவிடம் என்ருல் உடனே ஜாதித் துவேஷம், பிராமணத் துவேஷம் என்று எண்ணத் தோன்றும். அதற்குக் காரணங்களை ஆராயத் தேவையில்லை. ஆகவே, திராவிடத்தை, ஜனகணமன என்ற பாட்டில் சொல்லப்பட்ட திராவிடத்தைக், கவனித்துக் காத்துவருவோமாக. இதை, ஜாதி துவேஷக் கூட்டத்தாருக்கு மானியமாக விட்டு விடாமல் எல்லாரும் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டும்'' என்று இராஜாஜி அவர்கள் திராவிடத்திற்கே எடுத்துச் சொல்லி இருக்கிருர்கள்.

இவ்வாறு கட்சி ஒன்ருக இருக்கும் போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்வேண்டும் என்றும் கூட்டணியிலேயிருந்து பிரிந்துபோன பிறகு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டியதில்லை என்றும் கூறுவது கட்சியின் பொதுக் கொள்கைக்குக் கேடு அளிக்கின்ற செயலாகும்.

''ஒன்ருக இருந்தீர்கள். சொன்னேன்'' என்ருல் அப்படிச் சொல்லப்படுகின்ற கொள்கைகளுக்கு எந்த விதமான மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விடும்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று முன்னுள் தலைமை நீதிபதி திரு கே. சுப்பாராவ் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு கே. சந்தானம் அவர்கள் எடுத்துச்சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று முன்னுள் கேரள முதலமைச்சர் திரு நம்பூதிரிபாட் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சுதந்திராக் கட்சியின் ஒரிசா முதல்வர் சிங் தேவ் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு காமராஜ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று டாக்டர் ஆர். சி. கூப்பர் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; மாநில சுயாட்சி வேண்டும் என்று திரு பி. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச்சொன்ன ஆதாரங்களை, சுதந்திராக் கட்சியின் நண்பராக இருக்கிற திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்னல் சொல்லி இருக்கிருர்கள்.

முன்பு ஒன்ருக இருந்த போது அது. இப்போது இல்லை என்ருர்களே! இப்போதும் திரு சாமிநாதன் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

**திருமதி அனந்தநாயகி :** மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. அதற்காக இவ்வளவு ஆதாரங்களைத் தேடிக் கொண்டு வந்து பேசியிருக்கவேண்டியதில்லை. ஆனல், அது பிரிவினையில் கொண்டு போய் விட்டுவிடக் கூடிய அளவில் இருக்கக் கூடாது என்பதைத் தான் சொல்கிறேம். உங்களுடைய மாநாட்டு வரவேற்பிலே உள்ள செய்தி அப்படி இருக்கிறது.

முதல்வர் கலைஞர் : இவ்வளவு சுலபமாகப் புரியும் என்றிருந்தால், நான் வேலை மெனக்கெட்டுப் போய் இவ்வளவு ஆதாரங்களையும் தேடிக் கொண்டு வந்திருக்க வேண்டியதில்லைதான். (பலத்த சிரிப்பு.)

## மாநில சுயாட்சியும் மாநிலப் பிரிவினையும்

ஆனல் திருமணம் என்று சொன்னவுடன் குழந்தை பிறந்து விடுமே; குழந்தை பிறந்தால் தாயின் உயிருக்கு ஆபத்து வந்து விடுமே; தாயின் உயிர் போய்விடுமே என்று நினைத்துக் கொண்டிருந்தால் நாட்டில் திருமணமே நடைபெருது போய்விடும். அதைப் போலத்தான் மாநில சுயாட்சி என்று சொன்னவுடனே மாநிலப் பிரிவினை கேட்கிருர்கள் என்று நினைக்கிறீர்கள்.

எவ்வாறு திருமணம் என்றவுடன், குழந்தை பிறந்து விடும்; குழந்தை பிறந்து விட்டால் தாயின் உயிர் போய் விடும் என்ற பயம் ஏற்படுகிறதோ, அதைப் போலத்தான் மாநில சுயாட்சி என்றதும், பிரிவினை ஏற்பட்டுவிடும்; இந்தியா உடைந்து விடும்; சின்ஞபின்னமடைந்து விடும் என்று நினைப்பதும் என்பதைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இன்றைக்கு, இந்தியா பலவீனப்படக் கூடாது; இந்தியா சிதறிவிடக் கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறேம். திராவிட நாடு பிரிவினை கேட்ட நேரத்திலே, எங்களை யார் யார் எதிர்த்தார்களோ, எங்கள் மீது யார் யார் குற்றஞ் சாட்டிஞர்களோ அவர்களை எல்லாம் விட இன்றைக்கு நாங்கள் ஒருபடி மேலே சென்றிருக்கிறேம் என்பதைச் சந்தேகவாதிகளுக்கு விளக்கிட விழைகின்றேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானல், 1969-ஆம் ஆண்டு எங்களையெல்லாம் ஆளாக்கி விட்ட பேரறிஞர் அண்ணு அவர்கள் மறைந்துவிட்ட நேரம்—அண்ணு அவர்களைப் பிரிந்து ஆருத் துயரில் நாங்கள் எல்லாம் மூழ்கியிருந்த நேரம். நாடு நெருக்கடியான நிலையில் இருந்தது.

## மத்திய அரசுக்கு உட்பட்ட மாநில சுயாட்சி

எங்களுக்குப் பிரிவினை எண்ணம் இருக்குமானால் அந்த நேரத்திலே நாங்கள் பிரிவினையை வலியுறுத்தி யிருப்போம். ஆனால் நாங்கள் செய்ததென்ன? திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்தினோம். திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்தால், மத்தியிலே அரசு கவிழும். அப்போது இந்தியா இருந்த நிலையில் மத்தியிலே ஆட்சி கவிழ்ந்தால், இந்தியா உடைபடும்; சிதறுண்டு சின்னா பின்னமாகும். அந்த நிலையை நாங்கள் விரும்பாததால் திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப் படுத்தினோம்.

அந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே இருந்த சிலர், நாங்கள் திராவிட நாடு பிரிவினைக் கேட்ட போது எங்களை எதிர்த்த வர்கள், எங்கள் மீது குற்றஞ் சாட்டினவர்கள், '' திராவிட நாடு பிரிவினை கேட்டீர்களே! இப்போது இந்திரா காந்தி யின் பின்னால் ஏன் செல்கிறீர்கள்? உங்கள் கொள்கையை இப்போது வலியுறுத்துவதுதானே?'' என்று எங்களைத் தூண்டி விட்டார்கள்.

அவர்கள் தூண்டி விட்ட மாதிரி, அந்த நேரத்தில் நாங்கள் பிரிவினைக் கோரிக்கையை—திராவிட நாடு கோரிக் கையை வலியுறுத்தி யிருந்தால் இந்தியா பலவீனப்பட்டி டிருக்கும். திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்திருக்கும். இந்தியப் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்பட் டிருக்கும். ஓர் அமைதியற்ற நிலை ஏற்பட்டிருக்கும். அதன் காரணமாக இந்தியாவே தூள்தூளாகப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரம் வலுப் பெற்றதால் இந்தியா உடைபடாமல், அமைதி குலையாமல், பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாமல் இருந்தது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் பங்கு உண்டு என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிட விரும்புகிறேன்.

இதை நாங்கள் நன்றி எதிர்பார்த்துச் செய்யவில்லை. கைம்மாறு கருதி நாங்கள் இதைச் செய்யவில்லை. எங்க ளுடைய தூய நட்பின் அடிப்படையிலேதான் இதைச் செய்தோம்.

திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலு விழக்கச் செய்து, மத்திய அரசைக் கவிழ்த்து, மாநில சுயாட்சி பெறவேண்டும் என்பதல்ல கழக அரசின் நோக்கம். அப்படிப்பட்ட அரசியல் இலாபம் தேடுபவர்கள் நாங்களல்ல என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

எனவே, திருமதி இந்திரா அம்மையாரின் அரசுக்கு உறு துணையாக இருந்து, மத்திய அரசுக்கு உட்பட்ட மாநில சுயாட்சி பெற்று, மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற வேண்டு மென்ற இந்த வேண்டுகோளுக்கு—இந்தக் கோரிக்கைக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்குமென்ற உறுதியோடு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

## சட்ட மன்ற மேலவையில் முதல்வர்

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே!

தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் வகையில் மேலவையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 29 உறுப்பினர்கள் தங்களுடைய ஆழ்ந்த கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நேற்றைய தினம் நம்முடைய நண்பர் திரு சாமிநாதன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு தீர்மானமும் அதனை ஒட்டி ஒரு விவாதமும் நடைபெற வேண்டுமா என்று கேட்டு அதைப் பிரச்சினையாக்க நான் விரும்பவில்லை—ஒரு கேள்விக்குறியாக எழுப்ப விரும்புகிறேன் — என்று பேசியிருக்கிறார்.

சில நேரங்களில் எந்தக் காலத்திலோ எழுப்பப் படுகின்ற கேள்விகள் பிறிதொரு காலத்தில் பதிலுக்குரிய வைகளாகின்றன என்பதனை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறோம். அவர், மாநிலங்களுக்கு அதிக அதி காரங்கள் வேண்டுமென்கிற கருத்தின் அடிப்படையில் இந்தக் கேள்விக் கணையைப் பூட்டியிருப்பார் என்று கருதுகிறேன்.

### மரபு காப்போம்

ஆனால், நான் அதற்கு வைக்கின்ற வாதம் எல்லாம் குடியரசுத் தலைவர் நாடாளு மன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் இரண்டும் சேர்ந்த அவர்கள் கூட்டத்தில் உரை ஆற்றிய பிறகு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் என்ற வகையில் குடியரசுத் தலைவர் அவர்களுடைய பேச்சுக்கு நன்றி தெரிவிக்கின்ற அந்த மரபு இப்பொழுதும் டெல்லியில் இருந்து வருகிறது. மத்திய அரசில் இருந்துவருவதுபோல் நானும் நம்முடைய ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு மரபை அநாவசியமாக இழந்து விடாமல் அதைக் கொஞ்ச காலத்திற்குக் கட்டிக் காப்பாற்றுவதுதான் முறை என்று கருதுகிறேன்.



நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையில் அரசினுடைய கொள்கைகளை — திட்டங்களை விமர்சிப்பதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லாக் கட்சியினுடைய தலைவர்களுக்கும் ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது என்ற நிலையில் நன்றி தெரிவிக்கும்தீர்மானத்தை ஒரு விவாதத்திற்குரியதாக்கி அனைவரும் சேர்ந்தே நன்றி தெரிவிப்பது என்ற அளவில் திருத்தங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுவது என்ற ஒரு நல்ல மரபை நாம் பெற்றிருக்கிறோம்.

அந்த அடிப்படையில்தான் இந்த ஆண்டும் ஆளுநர் பெருமானுடைய உரையின்மீது மேலவையில் பல கட்சிகளுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை ஒட்டி—நான், அவைகளெல்லாம் எவ்வளவு உண்மையின் அடிப்படையில் கூறப்பட்டன என்ற ஆராய்ச்சிக்குப் போக விரும்பாமல், எந்த உணர்ச்சியின் அடிப்படையில் அவை கூறப்பட்டன என்ற அளவில் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### அசைக்க முடியாதவை

நம்முடைய உறுப்பினர்கள் திரு தாமோதரன் அவர்களும் திரு சாமிநாதன் அவர்களும் ஆற்றிய உரைகளில் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டிய புள்ளி விவரங்கள் யாரும் அசைக்க முடியாதவை. உள்ளபடியே இந்த மாமன்றத்தில் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் அளவுக்கு அவை அமைந்திருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்களும் ''இன்றையத் தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தை முன்னேற்றக் கழகம் புதியதாகக் கொண்டுவரவில்லை; அதே எண்ணத்தை நாங்கள் தீர்மானமாக வடித்து எடுத்திருக்கிறோம். 1970-ஆம் ஆண்டிலேயே அப்படி ஒரு தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ்கமிட்டியிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும் நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்'' என்று எடுத்துச் சொன்னது உள்ளபடியே பாராட்டத்தக்க—வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நண்பர் திரு சாமிநாதன் மிக அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறியது போல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்கின்ற பிரச்சினை தி. மு. கழகத்திற்கு மட்டும் உரிய பிரச்சினை என்று என்றைக்கும் எடுத்துக்காட்ட விரும்பியதில்லை.

எல்லாக் கட்சியினரும் சேர்ந்து இந்த நல்லகாரியத்திலே ஈடுபட்டு இந்த மாநிலத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்களை, தேவைப்பட்ட அதிகாரங்களை நிலைத்த அதிகாரிகளைப்பெற வேண்டுமென்று வாதாட வேண்டுமென்ற கொள்கையை உடையதுதான் திராவிட முன்னேற்ற கழகம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதைப் பற்றி என் பேச்சில் இறுதியாக மேலும் குறிப்பிடலாம் என்ற எண்ணத்தில் முதலிலே ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் போரில் இந்திய நாட்டினுடைய வெற்றியைக் குறித்தும் அந்த வெற்றிக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களைக் குறித்தும் பாராட்டி அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வீரர்களுக்கு உதவி

போரின் வெற்றிக்கு நாட்டினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய ஆற்றலும், பரபரப்பற்ற, பதட்டமற்ற ராஜதந்திரப் போக்கும் முக்கியமானகாரணங்கள் என்பதை ஆளுநர் பெருமான் அவரது உரையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அதைப்போலவேஇந்திய மக்கள் ஒரணியில் திரண்டு நின்று, ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவாலை எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டு வெற்றி நடைபோட்டிருக்கிறார்கள் என்பதையும் ஆளுநர் அவர்கள் அவரது உரையில் வெற்றிக் களிப்புப் பொங்கியெழுமளவுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்.

போரில் வீரமரணமடைந்த போர் வீரர்களுடைய குடும்பங்களுக்கு இந்த அரசு தக்க—உரிய உதவிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று எடுத்த முடிவுக்கேற்பவும், அறிவிப்புக் கேற்பவும் செய்து வருகிறது. இந்திய மண்ணைக் காப்பாற்றுவதற்கு—எதிரிகளை வீழ்த்திவிரட்டி அடிப்பதற்கு, இது வரையில் நமக்கு வந்திருக்கின்ற கணக்கின்படி, தமிழ் நாட்டுப் போர்வீரர்கள் 98 பேர் மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள். அவர்களிலே 61 குடும்பத்தினருக்கு, அரசின் சார்பிலே ரூ. 5,000 வீதம் உடனடியாக அளிக்கப்பட்டிருக்கின்றது. மீதம் உள்ள போர் வீரர்களின் குடும்பங்களிலே அந்தப் பொருளுதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வாரிசுகள் யார் என்பது பரிசிலனையில் இருக்கின்றது என்ற காரணத்தினால், அந்த உதவிகளை அவர்களுக்கு உடனடியாகச் செய்ய முடியாத அளவிற்கு இருந்தாலும் ,விரைவில் அந்தப் பரிசிலனைகள் முடிந்து அவர்களுக்கு அந்த உதவிகளைத் தந்துவிட முடியும்—தந்துவிட வேண்டும் என்ற வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதையும் நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர் காரைக்குடி திரு சா. கணேசன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஆளுநர் அவர்களது உரையில், நடந்து முடிந்த பாகிஸ்தான் —இந்தியா யுத்தத்தினைப் பற்றித்தான் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே அல்லாமல், இந்த அரசு என்னென்ன காரியங்களைச் செய்தது, என்னென்ன காரியங்களைச் செய்ய இருக்கின்றது என்பதெல்லாம் குறிப்பிடப்படவில்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்திலும், அல்லது மாற்றார் சாதித்த சாதனைகளைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய கட்டத்தில் நின்ற நேரத்திலும் இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாய சமதர்மத்தினை முன் நிலையில் வைத்து, அந்த வழியில் மக்களை அழைத்து செல்லவும், அரசு நடத்திச் செல்லவும் தயாராக உள்ளது என்ற அறைகூவலை நாட்டில் பிரகடனப்படுத்தியது.

இதைத்தான் நமது நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்களும் பேசும்பொழுது எடுத்துக் காண்பித்தார்கள். மிக முக்கியமான கொள்கைகளுக்காக—விரும்பியதை அடைய வேண்டிய பல்வேறு கோரிக்கைகளுக்காக மக்கள் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்—இந்த ஆட்சியை அரசு பீடத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்கு ஏற்ற வகையில்தான், இந்த அரசு நாட்டிலுள்ள சாதாரண மக்கள், சாமானியமான மக்கள், ஏழை எளி

யவர்கள் கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகள் அவர்கள் மனம்களிக்கத் தக்க அளவிற்கு, பாட்டாளிகளும் தொழிலாளர் களும் இன்ன பிறரும் இறும்பூதெய்தத் தக்க அளவிற்குச் சட்டங்கள் பலவற்றைத் தீட்டியும் பலவற்றினை நிறை வேற்றியும் உள்ளது என்பதையும் அவைகளெல்லாம் சாதனைப் பட்டியலிலே குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும் இந்த மாமன்றம் நன்கு அறியும்.

## சேலம் இரும்பாலை

சேலம் இரும்பாலை பற்றி இங்கே உறுப்பினர்களெல்லாம் பேசியிருக்கிறார்கள். சேலம் இரும்பு உருக்காலையைப் பொறுத்த வரையில் இதற்கான முயற்சிகள் நீண்ட காலமாக நடைபெற்று அண்மையிலேதான் தொடக்க விழா நடத்தி வைக்கப் பெற்று இன்னும் இந்தத் திட்டம் தொடங்கப்படாமல் இருப்பது உள்ள படியே வருந்தத்தக்க ஒன்று என்றாலும், அண்மையில் டில்லியிலே அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத் தில், ஆளுநர் அவர்கள் உரைக்குப் பிறகு நடைபெற்ற கூட்டத்தில், நம்முடைய அரசின் சார்பில் எடுத்துரைக்கப் பட்ட வாதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஜப்பான் நாட்டிலிருந்து வந்து, இங்கேயிருக்கின்ற கஞ்ச மலைத் தாதுவை எடுத்துச் சென்று அங்கே நாங்கள் இரும்பு உருக்காலையை நடத்த முடியும் என்று ஜப்பான் நாட்டுக் காரர்கள் துணியும்போது நாம் ஏன் துணியக்கூடாது என்ற வாதங்களை வைத்துக் கஞ்சமலைத் தாதுவை வைத்து இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற தமிழக அரசின் உறுதியான நிலையையும் இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் விரைவிலே சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கான நடவடிக் கைகள் சில மாதங்களில் ஆரம்பமாகும் என்பதற்கான அறி குறிகள் தோன்றிவிட்டன என்பதையும் நான் இந்த மன்றத் தில் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## மூடப்பட்டுள்ள ஆலைகளைத் திறக்க....

கோயம்புத்தூரில் மூடப்பட்டிருக்கிற ஆலைகளைப்பற்றி யெல்லாம் இங்கே எடுத்து சொல்லப்பட்டது. கோயம்புத் தூரில் ஏற்கெனவே 5 ஆலைகள் மூடப்பட்ட ஆலைகள்— தமிழக அரசின் சார்பில் ஏறத்தாழ 94 லட்ச ரூபாய் அள விற்கு இந்த ஆலைகளுக்காகப் பணம் போடப்பட்டு அவைகள் திறக்கப்பட்டன. இந்த 5 ஆலைகளுக்கு மத்திய அரசின் சார்பில் நமக்குத் தந்திருக்க வேண்டிய பாக்கி கிட்டத் தட்ட 20 லட்ச ரூபாய் இன்னும் கொடுபடாமல் இருக்கிறது. இதற் கிடையில் நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர் களும் டில்லிக்குச் சென்றபோது பலமுறை வலியுறுத்தி வந் திருக்கிறோம்.

நான் காலையிலேகூடப் பேரவையில் எடுத்துக் காட்டினேன், கோவையிலே எல்லாக் கட்சியினுடைய தொழிற்சங்கங்களும் இன்றைக்குப் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றன. ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் வேலை நிறுத்தம்—கிளர்ச்சி என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதில் முக்கால் பங்குப் பொறுப்பினை மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நமக்குக் கால் பங்குப் பொறுப்புத்தான்—என்றாலும் கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடவில்லை.

ஆனால் மாநில அரசு மேலும் மத்திய அரசோடு வாதாடிப் போராடி, நியாயத்தைப் பெறுவதற்கேற்றவகையில் இடையிலே கொஞ்சம் அமைதியான முறையிலே மாநில அரசை இயங்கவிட வேண்டியதுதான் தொழிலாளர்களுடைய கடமையாகும்.

ஏனென்றால் திரு ஆறுமுகசாமி எடுத்துக் காட்டியதுபோல் இதிலே அவசரப்பட்டுக் கிளர்ச்சிகளில் ஈடுபடுவார்களானால் அதன்மூலமாக நாம் கிளர்ச்சி நடத்தினோம் என்ற அளவிற்கு ஒவ்வொரு தொழிற் சங்கத்திற்கும் இதிலே அந்தத் தொழிற் சங்கம் ஈடுபட்டது என்ற நல்ல பெயர் கிடைக்கலாம். ஆனால், இதில் பெயர் கிடைப்பதைவிடப் பலன் முக்கியம். ஆகவே அந்தப் பலனை அடைய வேண்டியவர்கள் தொழிலாளர்கள். ஆகவேதான் மீண்டும் ஒருமுறை கோவையிலே உள்ள தொழிற் சங்கத் தலைவர்களையும், எல்லாக் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும்—இதிலே திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடைய தலைவர்களும் கலந்திருக்கிறார்கள்—எல்லாக் கட்சித் தொழிலாளர்களும் கலந்திருக்கிறார்கள்—நம்முடைய திரு ஆறுமுகசாமி அவர்களின் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்களும் கம்யூனிஸ்டுக் கட்சி, மற்றக் கட்சிகளுடைய தொழிற் சங்கத் தலைவர்களும் எல்லாம் கலந்திருக்கிறார்கள். மீண்டும் ஒரு முறை மத்திய அரசோடு பேசுவதற்கு நல்ல அவகாசம் மாநில அரசுக்குத் தரவேண்டும் என்று நான் அந்த தொழிற்சங்கங்களுடைய தலைவர்களையெல்லாம் மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## விலைவாசி ஏற்றமும் இறக்கமும்

விலைவாசியைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் அவர்கள் தந்த புள்ளி விவரங்களெல்லாம் தவறு—விலைவாசி நிரம்ப இறங்கியிருக்கிறது என்றெல்லாம் வாதிட விரும்பவில்லை.



ஆனாலும், அவர்கள் எடுத்துக் காட்டிய அளவிற்கு — அந்த அளவிற்கு — உயர்ந்திருக்கிறதா என்ற கேள்விக்கு நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அரிசியைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கொஞ்சம் விலை அதிகமாக இருந்தாலும் அடுத்து வருகிற சில வாரங்களில் விலை நிச்சயமாகக் குறைந்துவிடக் கூடும். நேற்றும், இன்றும், நேற்று முன்தினமும் சென்னையிலேயே அரிசி விலை நல்ல அளவிற்கு இறங்கிவிட்டிருக்கிறது என்று நமக்குச் செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

மற்றப் பொருள்கள்—துவரம் பருப்பு, அது வேறு மாநிலங்களிலிருந்து வருகிற காரணத்தினால் அதனுடைய விலை கொஞ்சம் ஏற்றமாகத்தானிருக்கிறது. அதே நேரத்தில் கடலைப் பருப்புப் போன்றவைகளின் விலை மிகக் குறைந்திருக்கிறது.

சென்னையில் சென்ற ஆண்டு ஒரு கிலோ கடலைப் பருப்பு 1—70 காசுக்கு வாங்கினால் இப்போது கூட்டுறவு சொசைடியில் 1—30 காசுக்கும், தனியார் கடைகளில் 1—32 காசுக்கும் வாங்க முடியும். அதேபோல செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் சென்ற ஆண்டு 1—30, 1—39, 1—40—க்கு வாங்கியிருந்தால் இந்த ஆண்டு 1—35, 1—40, 1—39 என்ற அளவிற்குத் தான் இந்த விலைகள் இருக்கின்றன.

அதைப்போலவே தேங்காயெண்ணெய் சென்ற ஆண்டு ஒரு லிட்டர் 9 ரூபாய்க்கு விற்றது; இந்த ஆண்டு 6—90 என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. வட ஆர்க்காட்டில் 9 ரூபாய் விற்றது 7—60 என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. தென்னார்க்காட்டில் 9—72-க்கு இருந்தது 6—50 என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. தேங்காயெண்ணெய் போலவே நல்லெண்

ணெய் விலையும் குறைந்திருக்கிறது. கடலையெண்ணெய் விலையும் குறைந்திருக்கிறது. மிளகாய் விலை குறைந்திருக்கிறது. சென்ற ஆண்டு சென்னையில் கிலோ 6 ரூபாய் விற்றது, இன்று இந்த ஆண்டு 3—60 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது.

புளி சென்ற ஆண்டு சென்னையில் புதுப்புளி 2—50, பழைய புளி 3—25 என்று இருந்தது. இந்த ஆண்டு 2—19 விலைக்குத் தனியார் கடைகளிலும், கூட்டுறவுக் கடைகளில் 2 ரூபாய் என்ற அளவிற்கும் புளி விலை குறைந்திருப்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் தரப்பட்டிருக்கின்றன. சர்க்கரை விலை கூடுதலாகியிருக்கிறது என்று குறை சொல்லப்பட்டது. ஆனால் சர்க்கரை நமக்கு ஆலையிலிருந்து கிடைக்கிற நேரத்தில் ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்று அவர்கள் விலை நிர்ணயித்தாலும் எக்சைஸ் டியூட்டி போன்றவைகள் 40 ரூபாய் சேர்ந்து டிரான்ஸ்போர்ட் 3 ரூபாய் சேர்த்து, ஹோல்சேல் மார்ஜின் 1-50, ரீடைல் மார்ஜின் 3 ரூபாய் சேர்த்து அட்மின்ஸ்ட்ரேஷன் சர்சார்ஜஸ் 2 ரூபாய் சேர்த்து மொத்தமாக 150 ரூபாய் என்று நமக்கு விநியோகிக்கப்படுகிற விலை 200 ரூபாய் அளவிற்கு வருகிறது. கிலோ இரண்டு ரூபாய் அளவிற்கு விற்க வேண்டுமென்று நாம் அரசின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்றாலும் அது அதிகமாகக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு மக்களிடத்தில் இருப்பதை அரசு உணர்கிறது.

300 ரூபாய் அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு 1 கிலோவும் அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 3 கிலோவும் சர்க்கரை வழங்கலாம் என்று இதுவரையில் இருந்தது. பொதுமக்களின் சங்கடத்தை உணர்ந்து இனிமேல் 300 ரூபாயும் அதற்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு இரண்டு கிலோ சர்க்கரை வழங்கவும்,

அதைப் போலவே அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 4 கிலோ சர்க்கரை வழங்கவும்சென்னையில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களின் நிலைமைகளுக்கேற்றவாறு ஆணை பிறப்பிப்பார்கள்—நடவடிக்கை எடுப்பார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விலை ஏற்றத்தைத் தடுக்க

விலையேற்றத்தைத் தடுக்கப் பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கவேண்டும். அதே நேரத்தில் பணப்புழக்கம் ஏழை எளிய மக்களிடத்தில் இருந்தாக

வேண்டும். ஏழை எளிய மக்களிடத்தில் பணப் புழக்கம் இருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அதற்குப் பல தொழிற்சாலைகள் அவர்களுக்கு அமையவேண்டும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அவர்களுக்கு அமைய வேண்டுமானால் அதற்கு ஏற்ற வகையில் தொழிற்சாலைகள் ஆங்காங்கு அமைப்பதற்கு உரிய வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### மாநில அளவில் உரிமைகள்

திரு தாமோதரன் அவர்கள் இங்கே சொன்னார்கள் ஒரு தொழிற்சாலையைப் பெற எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது, அது ரத்தாகிவிட்டதா வந்ததா என்ற தகவலைப் பெறவே எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்ற சங்கடமான வாதத்தை இந்த மன்றத்தில் கேட்டோம்.

ஆகவேதான் இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் சரிப் படுத்த வேண்டுமானால் நண்பர் திரு ராமனுதன் குறிப்பிட்டதைப் போல பூபாகத்தில் மத்திய அரசு ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு எல்லா இடங்களையும் தூரதிருஷ்டிக் கண்ணுடியால் பார்த்து நிலைமையைச் சரிப்படுத்த முடியாது. அதற்காகத்தான் மாநில அளவில் பல உரிமைகள் அந்தந்த மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இன்றைக்கு இந்த அரசின் சார்பில் 2000 பேருக்கு இளைஞர் அணியில் வேலை கொடுத்தோம். 6000 ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்தோம். 2000 பேரை பல அலுவல்களில் புதிய அலுவல்களை உருவாக்கிச் சேர்த்தோம். அதையெல்லாம்—நான் உணருகிறேன்—கடலில் பெருங்காயத்தைக் கரைத்தது போலத் தான். அதை நான் மறைக்க விரும்பவில்லை.

வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு இருக்கிறது. அதற்கான உதவிதான் தேவை. முழுமையாக அதை நிறைவேற்றும் அதிகாரம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அதற்கான வாய்ப்புகள் மாநில அரசுக்கு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. எனவேதான் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றாக வேண்டுமென்ற எண்ணத்தைத் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நாங்கள் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

அதைத்தான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே மாநிலங்கள் அதிக அதிகாரத்தைப் பெறத்தான் வேண்டுமென்று சொன்னார்கள்.

ஆனல், மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டுமென்று நாங்கள் சொல்கிற நேரத்தில் அது ஏதோ பிரிவினை

வாதமாக இருக்குமோ, ஏற்கெனவே திராவிடநாடு கேட்டவர்களாயிற்றே. அதையே மனத்தில் வைத்துக் கொண்டு கேட்கிறார்களோ-இது பிரிவினைக்குக் கொண்டுபோய்விடுமோ என்று எண்ணிப் பேசுவது முறையல்ல.

### கேட்டுப் பெறுவது நியாயம்

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுப் பெறுவது பிரிவினைவாதத்தை உடைப்பது; அதைத் தரமுடியாதுஎன்று மறுப்பது அத்தகைய பிரிவினைவாதத்தை வளர்ப்பது. இதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இதைப் புரிந்து கொண்டால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுகிற அந்தத் தத்துவம் எவ்வளவு பரிசுத்தமான இதயத்திலிருந்து—எவ்வளவு தூய்மையான உள்ளத்திலிருந்து புறப்படுகிறது என்பதை நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தர வேண்டுமென்று கூறுவதும் மாநில சுயாட்சி என்பதும் மக்களுடையே மனத்திலே, ஏன்? நமக்குள்ளேயே ஒரே கருத்தைத் தரக்கூடியதாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர்:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கும்போது ராஜராஜன் சிலையை வைக்க அதிகாரம்கொடு, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே குழாய் போட அதிகாரம் கொடு, இங்கே கோட்டையைச் சுற்றியுள்ள புல்லைச் செதுக்க அதிகாரம் கொடு, திரு ராமனுதன் சொல்லியதுபோல தெப்பக்குளத்தைச் செப்பனிட அதிகாரம் கொடு, தொழிற்சாலை துவக்க அதிகாரம் கொடு என்று ஒவ்வொரு அதிகாரமாகக் கேட்கிறோம் என்றால் அதுதான் உண்மை. அதையெல்லாம் சேர்த்து நாம் மொத்தமாகக் கேட்கிறோம்.

### மாநில சுயாட்சி

இவ்வளவு அதிகாரங்களைக் கொடு என்று ஒவ்வொன்றாகக் கேட்டு நமக்கு வாய் வலித்து, அவர்களுக்கும் காதுவலிக்கும் என்பதற்காகத்தான் மாநில சுயாட்சி என்ற தலைப்பில் கேட்கிறோம்.

திருமண விழாவில் பெண்ணுக்கு என்னென்ன வேண்டுமென்பதை தங்கக் காப்பு, பட்டுச்சேலை, வைர நகை என்று ஒவ்வொன்றாகக் கேட்டாலும், பெற்றாலும், மொத்தமாக அவற்றிற்குப் பெயர் சீர்வரிசை என்பது.

பெண்ணுக்கு நகை, சாமான்கள், நிலபுலன்கள் என்பதுதான் நாங்கள் சொல்கிற அதிகாரங்கள். அதைத் தான் நாங்கள் சீர்வரிசை கொடு என்று ஒரே வார்த்தையில் சொல்கிறோம். இதுதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடு என்பதற்கும் சுயாட்சிக்கும் உள்ள வேறுபாடாகும்.

ஏதோ மாநில சுயாட்சி என்பது சுய-ஆட்சி என்கிற வார்த்தை இருப்பதால் விடுதலை பெற்றுச் சுதந்தர நாடாக வேண்டும், மாநில சுயாட்சி பெற்றுவிட்டோம், கோட்டை கொத்தளங்களில் பறந்துகொண்டிருக்கிற அசோகச்சக்கரம் பொறித்த கொடியைக் கீழே இறக்கிவிட வேண்டுமென்று சொல்லுமளவிற்கு நாங்கள் மூடர்கள் அல்ல.

மாநில சுயாட்சி கேட்கிறவர்களில் தேசியப் பரம்பரையைச் சேர்ந்த—பலமுறை தேசியவிடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. இருக்கிறார் என்றால் அவரைப் பார்த்தாவது எங்கள் மீது உள்ள சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாதா?

## ஆட்சி மொழி

ஆட்சிமொழி என்று சொல்லுகிற காரணத்தால் புரிந்து கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கலாம். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஆட்சிமொழி என்று எங்கே சொன்னார்கள்? ஆட்சி மொழி என்றால் இந்தியா முழுமைக்குமா என்று சந்தேகம் வருமென்று பிராந்திய மொழிதான் ஆட்சி மொழி என்று இணைத்த காரணத்தால் வேறு மொழியை நாம் பெறுகிறோம் என்று பொருள் அல்ல. நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது என்று சொல்கிறோம். அதைப் போலத்தான் நம்முடைய மாநிலத்தில் நம்முடைய காலில் நின்று கொண்டிருக்க வேண்டும். அதைத்தான் சொல்கிறோம்.

## ஆறு அம்சத் திட்டமும் சுயாட்சியும் ஒன்றல்ல

மத்திய அரசு மாநில அரசைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஒரு அதிகாரத்தை வைத்துக் கொள்ள வேண்டாமென்று யாரும் குறிப்பிடவில்லை. படிப்படியாகப் பலமுறை நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். முஜிபுர் ரகுமானை பற்றிச் சொல்கிறார்களே என்று கேட்கிறார்கள்.

முஜிபுர் கேட்ட ஆறு அம்சத் திட்டத்திற்கும் முன்னேற்றக் கழகம் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

முஜிபுர் ரகுமான் மாநில சுயாட்சி என்ற அடிப்படையில் அவைகளைக் கேட்டார். அப்படிக் கேட்ட நேரத்திலேயே பாகிஸ்தானம் என்பது, ஆயிரம் மைலுக்கு அப்பால், கிழக்குப் பாகிஸ்தானும், இன்னொரு கோடியில் மேற்குப் பாகிஸ்தானும் இருக்கிறது; ஆகவே, இராணுவம் கூட எனக்குத் தனியாக வேண்டும். கரன்சி அடிக்கிற அந்த உரிமை கூட எனக்குத் தனியாக வேண்டும் என்றெல்லாம் முஜிபுர் ரகுமான் கேட்டார்.

நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—முஜிபுர் ரகுமான் கேட்ட ஆறு அம்சத் திட்டத்துக்கும், நாங்கள் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு என்று குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நாம் கேட்பது சுதந்தரம் அல்ல. முஜிபுர் ரகுமான் கேட்டதே கூடச் சுதந்தரம் அல்ல. சுதந்தரத்தில் போய் முடிந்ததற்கு யார் காரணம் என்றால், முஜிபுர் ரகுமான் அல்ல; யாகியாகான்தான்.

அவர் மாநில சுயாட்சிதான் கேட்டார், அவர் கேட்டது கொஞ்சம் காராசாரமானது. நாம் கேட்பதை விடக் கடுமையானது. மாநில சுயாட்சியை ஆதரிப்பது இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல; யார் யார் அதை ஆதரிக்கிறார்கள் என்பதை எல்லாம் அருமை நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் எடுத்து வைத்தார்கள் இந்த மன்றத்திலே பேசும்போது. நான்கூட அதைச் சட்டசபையில் படித்துக் காட்டலாம் என்ற எண்ணத்தோடுதான் அவர்களிடமிருந்து வாங்கிச் சென்றேன். அங்கே அதைப் படித்துக் கேட்க வேண்டிய முக்கியமானவர்கள் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமே கூட தன்னுடைய 1971-ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

அடுத்து 1971-ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இண்டியா—இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், இதே கருத்தைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதன் தலைவர்களில் ஒரு சிலருக்கு, ''என்ன, மாநிலத்துக்கு அதிக அதிகாரம் கேட்கிறார்களே, இது பிரிவினையில் கொண்டுபோய் விடுமோ'' என்ற பயம் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது

பத்திரிகையில் அவர்களுடைய அறிக்கைகளைப் படித்தேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்றால் சிலருக்குப் புரியாமலிருக்கலாம். அதுதான் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை.

(The Constitutional Provision relating to Centre-State relations should be provided for more powers to the State Consistent with the basic unity of the Country.)

—இது வலது கம்யூனிஸ்ட் கட்சியின்—இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தேர்தல் அறிக்கையாகும்.

இதைப் போல் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காக 4,5 பக்கங்கள் மத்திய மாநில உறவைப் பற்றியே அந்த அறிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தெரிவித்திருக்கிறார்கள்.

நான் கூடக் கேள்விப்பட்டேன். மைசூர் மாநிலத்தில் சோசலிஸ்ட் கட்சி தேர்தல் அறிக்கையில் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற அந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் 1971-ஆம் ஆண்டிலே அவர்கள் பதவி விலகிய பிறகு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதை நண்பர் சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

நான் இன்னும் சுவையான ஒன்றைச் சொல்லுவேன் திருவீரேந்திர பட்டீல் அவர்கள் பதவியில் இருந்தபோதே 1970-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி டெல்லிப் பட்டணத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அது அப்போது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. நம்மை விடக் கொஞ்சம் வேகமாகவே சொன்னார்கள். அந்த அளவுக்கு வேகமாகப் போக நாங்கள் தயாராயில்லை; நாங்கள் தயாராயிருக்கவும் மாட்டோம்.

''நிலைமை இப்படியேபோய்க்கொண்டிருந்தால், மாநிலங்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுமானால், டில்லியிலே இருக்கிற மாநிலங்களுக்குச் சொந்தமான மாளிகைகள்—கட்டடங்கள் மிக விரைவில் தூதுவர் ஆலயங்களாக மாறக் கூடும்.''

இப்படிச் சொன்னார்கள். இதற்கு என்னபொருள் என்று நான் விளக்காமலேயே புரிந்து கொள்வீர்கள். நான் விளக்குவதும் நல்லதல்ல என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு வீரேந்திர பட்டீல் அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் நிச்சயமாக உருவாகக்கூடாது என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்தியா பலவீனப்படக்கூடாது என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் பேசியதை சட்டப் பேரவையில் குறிப்பிட்டபோதுகூட—இன்றல்ல—இரண்டு நாட்களுக்கு முன், சுவாமிநாதன் அவர்கள் இருக்கிற கமிட்டியிலே உள்ளவர்தான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது தவறு என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்ற பொருள்படச் சொன்னார்கள். நான் நண்பர் திரு. சுவாமிநாதனுக்கு மற்றொரு போர்க் கருவியைத் தர விரும்புகின்றேன். அவர்கள் கட்சிக் கூட்டத்திலேயே அந்தப் போர்க் கருவியைப் பயன்படுத்தலாம்.

## இராஜாஜி சொன்னது....

1967-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 19-ஆம் நாள் கல்கி தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்;

''தி.மு.க. ஏதோ ஒரு பிரதேசத்துக்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் இல்லையென்றும் மேலெழுந்தவாரியாக சிலர் நினைத்து விடலாம். இவர்களுக்கு தி.மு.க.வின் அடிப்படையை ராஜாஜி தெளிவு செய்திருக்கிறார்''—''ராஜாஜியின் கருத்துக்கள் பின்னால் வருபவை.—''அதாவது ; எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுயாதினம் பெற்று, அவற்றின் சமஷ்டியாக தில்லி சர்க்கார் அமைய வேண்டும் என்கிற அகில இந்தியப் பிரச்னையையே தி.மு.க. தனது அடிப்படையாகக் கொண்டது. ஒரே சர்க்கார் நாடு முழுவதும் ஆளுவதை 'யூனிடெரி' முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை பெடரல் (சமஷ்டி) முறை என்றும் சொல்லுவார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுவது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகரசபையின் ஸ்தானத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புகளை மத்தியில் மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அத்தோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கி ஆளும் கொடுமையும் சேர்கிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே தி.மு. கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியே'' இது மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்ன கருத்து.

ஆகவே நண்பர் திரு சுவாமிநாதன் அவர்களுக்கு நல்லதோர் போர்க்கருவியாக இதை நான் அவர்களுடைய கரங்களில்

அளிக்கிறேன். (கைதட்டல்) அடுத்த கட்சிக் கூட்டத்தில் இதை வைத்துக்கொண்டு கட்சியில் வாதாடி வெற்றி பெறுவார் என்று திடமாக நம்புகிறேன்.

திரு கே. ராஜாராம்: இது எந்தத் தேதியில் எழுதப்பட்டது?

முதல்வர் கலைஞர்: 19—3—1967.

திரு கே. ராஜாராம்; அது 1967-ஆம் வருடம். அதனால்தான் அப்படி.

முதல்வர் கலைஞர்: நீங்கள் அப்படிச் சொல்லுவீர்கள் என்பதற்காகத்தான் நான் 1957-ஆம் ஆண்டில் அவர்கள் எழுதியதையும் கொண்டு வந்திருக்கிறேன். அது வெளியே தெரியவேண்டாம் என்றுதான் மறைத்து வைத்திருந்தேன்.

1957-ல் இதைவிடத் தீவிரமாக ''திராவிடத்தைக் காப்போம்'' என்ற தலையங்கத்தை 24—3—1957 கல்கியில் எழுதியிருக்கிறார்கள். திராவிட நாடே வேண்டும் என்று எழுதினார்கள். அப்போது எங்களுக்கும் அவர்களுக்கும் உறவு இல்லை.

உறவு இருக்கும்போது ஒரு கொள்கை என்பதும் உறவு இல்லாதபோது அந்தக் கொள்கையிலிருந்து மாறுவது என்பதும் நல்லதல்ல.

ஏனென்றால் எங்கள் அரசைப் பற்றி ஆயிரம் குறைகள் சொல்லலாம். நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது விலையேற்றத்தைப்பற்றிச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களுக்கு அரிசி போவதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று 1957-ல் எடுத்த முடிவில் அசையாமல் நின்றார்கள், அவர்களுடைய தலைவர்கள் அசைத்து விட்டார்கள் என்பதுதான் கவலைப் படத்தக்கதாகும். ஆனால் நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் போன்ற வாலிபமுறுக்கு உடையவர்கள், அவர்களைத் திருத்த வல்லவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள் 'முதலமைச்சர் அவர்கள் கவிழ்க்க முடியுமா என்றுகேட்கிறார்கள்; ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கவிழ்ப்போம் என்று சொல்கிறார்கள்' என்று சொன்னார்கள்.

இதிலே அவர்கள் ஒன்றை மாற்றிச் சொல்லிவிட்டார்கள். கவிழ்ப்போம் என்று சொல்லிய பிறகுதான், கவிழ்க்க முடியுமா என்ற கேள்வியைக் கேட்க முடியும். கவிழ்ப்போம் என்று சொல்லுவதற்கு முன்னலேயே, கவிழ்க்க முடியுமா என்று கேட்டுக் கொண்டு இருந்தால், இப்போதுதான் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலிருந்து முதலமைச்சர் வெளியே வந்திருக்கிருர் என்றுதான் கருதிக்கொள்வார்கள். நான் எங்கேயும் எங்களைக் கவிழ்க்க முடியுமா என்று பேசவில்லை. நண்பர் ஆறுமுகசாமியின் சொந்தக்காரர்தான் பேசினர். யார் என்று அவருக்கே தெரியும். பல இடங்களில் பேசியிருக்கிருர். அப்படிப் பேசிவிட்டு மதுரை மக்களை, திருச்சி மக்களைப் பார்த்து என்ன சொல்கிறீர்கள்; கருணநிதி அரசாங்கத்தைக் கவிழ்ப்போமா என்று கேட்டிருக்கிருர். அங்கேயிருந்த 5, 6 பேர்கள் 'கவிழ்ப்போம்'— 'கவிழ்ப் போம்' என்று சொல்லியிருக்கிருர்கள்.

## சீட்டுக் கட்டா, கலைப்பதற்கு?

கருணநிதி சர்க்காரைக் கலைக்கட்டுமா என்று கேட்டால், இது என்ன சீட்டுக் கட்டா, யார் வேண்டுமானலும் கலைத்துவிட? நான் கேட்கிறேன்: தமிழ் நாடு அரசாங்கத்தைக் கலைக்கிற அளவுக்கு என்ன அராஜகம் ஏற்பட்டு விட்டது? ஒரிசா நிகழ்ச்சியா, கேரளா நிகழ்ச்சியா, அரியாண நிகழ்ச்சியா, மத்தியப் பிரதேச நிகழ்ச்சியா?

அல்லது இங்கே கட்சிக்குள்ளே பெரிய கலாம் நடந்துவிட்டது, முதலமைச்சர் மாறிவிட்டார், யார் முதலமைச்சர் என்று தெரியவில்லை, ஆகவே கவிழ்த்துவிட்டோம் கலைத்து விட்டோம் என்று சொல்ல; அதை யாராவது எதிர்பார்ப்பார்களானல், அவர்கள் இலவு காத்த கிளி ஆவார்கள். அது எங்கள் கட்சிக்குள்ளே என்றைக்கும் நடக்காத காரியம். அதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட நிகழ்ச்சி எதுவும் நடைபெற்றுவிடாது. தமிழ் நாட்டில் தமிழ்நாட்டு அரசாங்கம் தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு என்ன அமளி ஏற்பட்டு விட்டது? முதுகுளத்தூரில் அது நடைபெற்ற காலத்தில் கூட தமிழ்நாட்டு அரசாங்கம் கலைக்கப்படவில்லையே. 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு புரட்சி நடைபெற்றதே அந்த நேரத்தில்கூடத் தமிழ்நாட்டு அரசாங்கம் கலைக்கப்படவில்லையே.

அப்போது உள்துறை அமைச்சராக இருந்த குல்ஜாரி லால் நந்தா அவர்கள் பாராளுமன்றத்தில் பேசியதாக, நான் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலிருந்து பத்திரிகையில் படித்துப் பார்த்தேன். 'இவ்வளவு பெரிய புரட்சி நடை பெற்றும் முதலமைச்சர், பக்தவத்சலம் மனம் தளராது பாறை போன்று நின்ருர்' என்று அவர்கள் குறிப்பிட்டிருக் கிருர்கள். பாறை என்று என்ன பொருள்படக் கூறினுர் களோ எனக்குத் தெரியாது. அப்படி அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆக என்ன காரணம் இந்த அரசைக் கவிழ்ப்பதற்கு? இன்றைக்கு என்ன ஏற்பட்டு விட்டது? ஏன் கவிழ்க்க வேண்டும்?

## 234 இடங்களையும் பிடிக்கும்

மாநில சுயாட்சி கேட்ட குற்றத்திற்காக, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்ட குற்றத்திற்காக கவிழ்க்கிருேம் என்ருல் கவிழ்க்கட்டுமே? கவிழ்த்தால் என்ன ஆகும்? ஆறு மாத காலம் திரு கே. கே. ஷா அவர்கள் நேரடி யாக ஆட்சி புரிவார். ஆளுநர் பெருமான் அவர்கள் எங்களுக்கு வேண்டாதவரா? கொஞ்ச காலத்துக்கு ஆண்டுவிட்டுப் போகட்டுமே. அதற்குப் பிறகு தேர்தல் கிடையாதா? அந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம், ''எங்களைக் கவிழ்த்தார்கள் பொதுமக்களே, தீர்ப்பு அளியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே, 234 இடங்களையும் பிடிக்கும்.

நாங்கள் என்ன அழிந்தா போவோம்?

இது என்ன சாக்கடையில் கொட்டப்படுகின்ற பாலா? சாக்கடையோடுபோய்விடும், எடுக்க முடியாது என்பதற்கு. நான் நேற்று ஒரு கூட்டத்தில் சொன்னேன். கடலிலே கவிழ்க்க முனைகின்ற கட்டுமரம் போன்றது திராவிட முன்னேற்றக்கழகம். கட்டுமரமாகவே இருப்பது கவிழாது. இது கப்பல் அல்ல கவிழ்ந்துவிட.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு கட்டு மரம். சாதாரண மக்களால், சாமான்யமான மக்களால், கிராமப்புற ஏழை மக்களால், பஞ்சைப் பராரிகளால், பாட்டாளி தொழி லாளிகளால், மொழி காத்திடப் போரிட்ட உத்தமர்களால் உருவாக்கப்பட்ட அரசு திராவிட முன்னேற்றக்கழக அரசு. அரசியல் நாகரிகத்தின் பிறப்பிடம் பேரறிஞர் அண்ணு அவர் கள், இந்தக் கழகத்தை 22 ஆண்டுக்காலம் வளர்த்தார்கள் என்ருல் நாடு மெச்ச நாநிலம் போற்ற இந்தக் கழகத்தை வளர்த்துச் சாமான்ய மக்களின் ஒரே பிரதிநிதியாக திராவிட

முன்னேற்றக்கழக அரசைக் கொலுவீற்றிருக்கச் செய்திருக்கிறார். அதைக் கவிழ்த்து விடுவோம் என்று சிலர் பேசுகிறார்கள் என்றால்—அப்படி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசமாட்டார்கள். அவர்களுக்கு ஜனநாயகம் தெரியும், அப்படிப் பேசுவது திரு ஜகஜீவன்ராம் அல்ல, திரு சவான் அல்ல, அவர்களெல்லாம் பொறுப்பான இடத்திலிருப்பவர்கள். திரு சி. சுப்பிரமணியம் அல்ல, அவரும் பொறுப்பான இடத்தில் இருப்பவர். ஆனால் இங்கே இருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் பேசுவது பெரியவர்கள் தலையில் போய் விழும். ஆகவே அவர்கள் உடனடியாகத் தலையிட்டு இப்படிப்பட்ட பேச்சுகள் தேவையில்லை என்று கூறுவது நல்லது.

முன்னேற்றக்கழக அரசின் பேரில் ஆயிரம் குற்றங்கள் கூறட்டும். யார் வேண்டுமானாலும் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவோம், கலைத்து விடுவோம் என்று கூறுவது முறையற்ற பேச்சாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொன்னால் பெரியவர் பக்தவத்சலத்தைப் போன்றவர்கள் சொல்கிறார்களாம்; இந்திரா காந்தி பெயரைச் சொல்லித்தானே 1971—ல் நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றீர்கள் என்று. அதே இந்திரா காந்தி பெயரைச்சொல்லி 1967—ல் நீங்கள் ஏன் வெற்றி பெறவில்லை என்று திருப்பிக் கேட்கமாட்டோமா? இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளலாம். 1971—ல் இந்திரா காந்தி பெயரைச் சொன்னோம், 1967—ல் திரு பக்தவத்சலத்தின் பெயரைச் சொல்லித்தான் வெற்றி பெற்றோம். இது நாடு அறியும். நாங்கள் தேர்தலுக்கு முன்பு அவர் பெயரைச் சொன்னோம். தேர்தலுக்குப் பிறகு திரு கருத்திருமன் போன்றவர்கள் சட்டமன்றத்தில் அவர் பெயரை அடிக்கடி சொன்னார்கள்—நாங்கள் இங்கே வந்துஉட்காரக் காரணமே அந்த மகான்தான் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பெயரைச் சொல்வது அப்படி ஒன்றும் அவமானகரமானதல்ல. ஏனென்றால் பெரிய ஜனநாயகவாதியான பண்டித நேருவின் திருச்செல்வியார் அவர்கள். இந்தியா பலவீனப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக்கழகமோ, இந்த அரசோ கருதியிருந்தால் நாங்கள் பலவீனப்படுத்தியிருக்க முடியும். எப்படி? திருமதி இந்திரா அரசுக்கு ஓர் ஆபத்து ஏற்பட்டபோது எங்கள் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த அம்மையார் பக்கத்தில் நின்ற காரணத்தால் அன்றைக்கு திருமதி இந்திரா அரசு நிலைத்தது என்பதை நாடு அறியும். அப்பொழுது பலபேர் எங்களைத் தூண்டிவிட்டுப் பார்த்தார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறீர்கள். ஏன் இப்பொழுது திருமதி

இந்திரா காந்தி அவர்களின் அரசைப் பலவீனப்படுத்தக் கூடாது என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு நான் சொன்ன பதில் மத்திய அரசு இருந்தால் தானே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கலாம். அதைக் கவிழ்த்துவிட்டு இந்தியாவைப் பலவீனப்படுத்திவிட்டு யாரிடத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது என்பதுதான்.

ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற எண்ணம், கொள்கை, இந்தியாவைப் பலவீனப்படுத்தும் கொள்கையாக இருந்திருந்தால் திருமதி இந்திரா அம்மையார் அரசுக்கு ஆபத்து வந்தபோது நாங்கள் எதிராக நின்றிருக்கக் கூடும். அப்படி நிற்காமல் நாங்கள் இந்திரா அம்மையார் அரசினைக் காப்பாற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பார்த்தாலே தெரியும். இந்தியா பலவீனப்படக்கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆழ்ந்த பற்றும் அழுத்தமான நம்பிக்கையும் உண்டு என்பதை எடுத்துக் காட்டத்தான் இந்த உதாரணத்தைச் சொன்னேனே தவிர,வேறு அல்ல.

### கோரிக்கையின் அடிப்படை

ஆகவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதுதான் மாநில சுயாட்சித் தத்துவமே அல்லாமல் மாநிலம் இந்தியாவிலிருந்து துண்டித்துக் கொண்டு—சுதந்தர நாடாக வாழவேண்டும் என்பதற்காக நாங்கள் இப்படிப்பட்ட கோரிக்கைகளைச் சொல்லவில்லை என்று கூறிக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு ராஜமன்னார் குழு அறிக்கையினைப் பற்றிக் கலந்து பேசவேண்டும் என்று சொன்னார்கள். அடுத்தக் கூட்டத் தொடரில் நாம் இதற்காகச் சில நாட்களை ஒதுக்கி ராஜமன்னார் குழு அறிக்கையைவிவாதித்த பிறகு அதற்குப் பிறகு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உட்காரவைத்து ராஜமன்னார் குழுவின் அறிக்கையில் எவ்வெவற்றை வலியுறுத்தலாம்,அரசின் சார்பில் என்று அனைத்துக் கட்சி அபிப்பிராயத்தைக் கேட்கத் தயாராக இருக்கிறேன்.ஏனென்றால் இன்றையத் தினம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையினைப் பார்த்தால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டாமென்று சொல்ல யாரும் தயாராக இல்லை. ஆகவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்றுதான் அனைவரும் சொல்லியிருக்கிறீர்கள். இது மிகுந்த மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

அந்த அடிப்படையில் ராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றி நாம் நீண்டதொரு விவாதம் நடத்தி விட்டு உறுப்பினர்கள் தருகின்ற நல்ல நல்ல கருத்துக்களை எல்லாம் சேர்த்துத் தொகுத்து அவைகளை யெல்லாம் முன்வைத்து அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் அதைப்பற்றி ஆலோசித்து, அவைகளையெல்லாம் நாம் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இந்த வகையில் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மற்றும் கூறப்பட்ட பல்வேறு விஷயங்களுக்கு இந்த அரசின் சார்பில் அவைகளுக்கெல்லாம் நல்ல நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற உறுதியினை அனைவருக்கும் அளித்து இந்த விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர் அனைவருக்கும் நன்றி கூறி, இந்த அளவில் விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு அரசினர் அச்சகம், சென்னை.